# தேவதை வந்துவிட்டாள்

லட்சுமி சுதா



# தேவதை வந்துவிட்டாள்

**லட்சுமி சுதா**

**அன்பு இல்லம்**
கே.கே.பி காம்ப்ளக்ஸ்
107/2, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : தேவதை வந்துவிட்டாள் |
| ஆசிரியர் | : வட்சுமி சுதா |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதற்பதிப்பு | : ஏப்ரல், 2011 |
| தாள் | : 11.6 Kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : கிரவுன் 1 x 8 |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 284 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| ால் வெளியிடுவோர் | : அன்பு இல்லம்<br>கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,<br>107/2, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை – 600 014. |

**விலை : ரூ. 110.00**

| | |
|---|---|
| ரி அச்சு | : ஸ்ரீராகவேந்திர லேசர் பிரிண்டர்ஸ்<br>9003181586 |
| டோர் | : எஸ்.எஸ். கிராபிக்ஸ்,<br>சென்னை – 14. |




# தேவதை வந்துவிட்டாள்

# தேவதை வந்துவிட்டாள்

## 1

நந்தவனக்
கரையில்
நான்
காத்து
இருக்கின்றேன்!
பூக்கள்
அழகாகச்
சிரிக்கின்றன!
தென்றல்
செல்லமாக

என்னை
வருடுகிறது !
பனியில்
தலை
துவட்டுகின்றன
மலர்கள் !
இயற்கை
அழகாக
மணப்பெண்
போல்
ரசிக்கும்படி
இருக்கிறது !
ஆனால்
என்
மனம்
தவிக்கிறது !
உன் வருகைக்காக
நான்
காத்து இருக்கின்றேன் !

“ஆராதனா... ஆராதனா... நாங்க எங்கே இருக் கண்டுபிடி பார்க்கலாம்,” என்று குழந்தைகளின் கட்டது.

று ‘அடையார் பூங்காவிற்கு’ கண்டிப்பாகப் தீரவேண்டும் என்று சஞ்சனாவும், தீபிகாவும்



அடம் பிடித்ததால் அவர்களை அங்கே அழைத்து வந்தாள் ஆராதனா.

ஞாயிற்றுக் கிழமை என்பதால் பூங்காவில் கூட்டம் ரொம்ப அதிகமாக இருந்தது. மார்கழி மாதத்தில் பின் பனி ஆரம்பமாகி விட்டது.

பனியுடன் சேர்ந்த காற்று குளிரை அதிகமாக்கியது. துப்பட்டாவால் போர்த்தியபடியே ஒரு மரத்தின் பின் குரல் வந்த திசை நோக்கி நடந்தாள் ஆராதனா.

“சஞ்சு குட்டி! தீபு குட்டி! நான் உங்களைக் கண்டு பிடிச்சிட்டேன் பாருங்க!” என்று உற்சாகமாகக் குரல் எழுப்பி னாள் ஆராதனா.

“ஏய்... ஜாலி... அக்கா நம்மளைக் கண்டுபிடிச்சிட் டாங்க... தீபு! நீ தான் எனக்கு சாக்லேட் வாங்கித் தரணும்!” என்றாள் சஞ்சனா சந்தோஷமாக.

“நான் தரமாட்டேன். ஆராதனா, நீ ‘டென்’ எண்ணி முடிக்கறதுக்குள்ள நம்மளைக் கண்டுபிடிக்கலை. நீ டுவென்டி கவுண்ட் செய்யும் போது தான் கண்டுபிடிச்ச.”

“ஸோ... நோ சாக்லேட் ஃபார் யூ. என்னை ஏமாத்த பார்க்கறியா... நோ சான்ஸ்!” என்று பழிப்புக் காட்டினா தீபிகா.

“அக்கா... பாரு... என்னை ஏமாத்தப் பார்க்கறா இ எனக்கு சாக்லேட் வேணும்!” என்று கண்ணைக் கச னாள் சஞ்சனா.

“கெ... அழாதே சஞ்சு... இப்ப என்ன. சாக்லேட் த வேணும். உங்க ரெண்டு பேருக்கும் நான் சாக்லேட் வா தரேன்.

ஆனால் இப்ப கிளம்பினாத்தான் சாக்லேட் உங்களுக்கு. ஓகேவா... பனியில் ரொம்ப நேரம் இருந்தா குளிர் ஒத்துக் காமல் அப்புறம் சளி வரும்.

ஸோ ரெண்டு பேரும் குட்கேர்ல்ஸா விளையாட்டை முடிச்சிட்டு கிளம்ப ரெடியாகுங்க. கமான்! பாஸ்ட்!" என்று கிளப்பினாள் இருவரையும் ஆராதனா.

"ஓகே... நாங்க ரெடி!" என்று கோரஸாக இரண்டு பேரும் கத்தினர்.

"தட்ஸ் குட். வாங்க போகலாம். ராமு தாத்தா காரில ரெடியா இருக்கார்!" என்று சொல்லியபடியே இருவரையும் கைபிடித்துக் கொண்டு அழைத்துச் சென்றாள் ஆராதனா.

சஞ்சனாவும் தீபிகாவும் அவளிடம் ரொம்ப நன்றா கவே ஒட்டிக் கொண்டார்கள். அந்தக் குழந்தைகளின் பேச்சி னாலும், கள்ளமில்லாத அன்பினாலும் என் வாழ்க்கை மாறிவிட்டது.

சூறாவளியால் அடித்துச் செல்லப்பட்டது போல் இருந்த என் வாழ்க்கை இவர்களால் தான் அமைதியாக அழகாக நதிபோல் ஓடிக்கொண்டு இருக்கிறது என னைத்தபடியே நடந்தாள் ஆராதனா.

"என்ன ஆராதனா... பேசாமல் வர... குழந்தைங்க ம்ப தொந்தரவு கொடுத்திட்டாங்களா..." என்றார் ராமு.

"சே... சே... அப்படி எல்லாம் ஏதும் இல்லை. சஞ்சு யாலும், தீபு குட்டியாலும் தான் என் வாழ்க்கைக்குப் அர்த்தம் கிடைச்சிருக்கு.

பழசை எல்லாம் மறக்க நினைக்கிறேன் தாத்தா. ல் முடியவில்லை... என்ன செய்வது? திடீரென நேர்ந்த



அதிர்ச்சி... அது தான் என் முகத்தில் அடிக்கடி தெரியுது போல!" என்றாள் மெலிந்த குரலில் ஆராதனா.

"ம்... கஷ்டம் தான் தாயி. என்ன செய்ய முடியும் சொல்லு? மேலே இருக்கறவன் தானே எல்லாத்தையும் நடத்தறான்.

நாம எல்லாரும் அவனால் ஆட்டி வைக்கப்படற பொம்மைகள். தலை எழுத்து தாயி. சின்ன வயசில பறி கொடுத்தா ரொம்ப கஷ்டம் தெரியாது.

பாவம் நீ... காலேஜ் படிக்கும் பொழுது பெத்தவங் களை விபத்தில் பறி கொடுத்திட்ட. உன் வாழ்க்கையில் நடக்க வேண்டிய நல்ல விஷயங்கள் எவ்வளவோ இருக்கு.

என்ன செய்யறது? உன் கல்யாணத்தைப் பார்க்க கொடுத்து வைக்கலை..." என்றார், கார் ஓட்டியபடியே ராமு.

குழந்தைகள் இருவரும் அலுப்பினால் தூங்கி விட்டனர். அதனால் இருவரும் பேசுவதற்கு வசதியா இருந்தது.

"தாத்தா... ஆனால் கெட்ட காலத்திலும் ஒரு நல் காலம்... எனக்கு இந்த வேலை கிடைத்தது. இல்லாவிட்ட என்ன ஆகியிருக்கும் என்று நினைத்துப் பார்க்க பயமாக இருக்கிறது.

ஆனால் மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என் அறிந்து கொள்ள எடைபோட எனக்குக் கற்று கொடு இந்த விபத்து தான்.

சொந்தங்கள், நண்பர்கள் என எல்லாருமே ஓடினார்கள். நான் அவர்களிடம் அடைக்கலமாகி வி என்ற பயம் அவர்களுக்கு...

அடைக்கலம் தரச் சிலர் தயாராக இருந்தனர். ஆனால் அவர்கள் என்னைப் பார்த்த விதம் என் மனதிற்கு ஒப்பவில்லை...” என்றாள் பெருமூச்சோடு ஆராதனா.

“ம்... காலம் கெட்டுக் கிடக்கு தாயி. என்ன செய்யறது... ஆனால் இந்த வீட்டிலேயும் முதலாளி அம்மா கிட்டே கொஞ்சம் ஜாக்கிரதையாத் தான் இருக்கணும்.

ஐயா தங்கமானவர்... இப்படித்தான் அமையும் போல...”

“தாத்தா... என் வேலை இந்தக் குழந்தைகளைப் ராமரிக்கறது... ரெண்டும் என்கிட்டே நல்லா ஒட்டிக்கிச்சு.

அது போதும் எனக்கு. தாரிணி அம்மா... அப்பப்ப ாவது சொல்லிண்டு தான் இருக்காங்க. அதை எல்லாம் ன் மனசில வெச்சுக்கறது இல்லை...”

“ஆமாம். அதுவும் நல்லது தான். இல்லேன்னா மனசு ப்படும். எப்பவும் நமக்குத் தேவையான விஷயத்தை துக்கணும். மத்ததெல்லாம் விட்டிடறது நல்லதுக்குத் ”

தற்குள் வீடு வந்திட பேச்சு நின்றது. கார் நின்ற ஸ்விட்ச் போட்டாற் போல் சஞ்சனாவும், தீபிகாவும் ழித்தனர்.

குட்டி, சஞ்சு குட்டி, வீட்டுக்குப் போகலாமா... டுச்சு.”

கலாமே... வீட்டுக்குப் போனவுடன் சாக்லேட். ன்று வாக்கு வாங்கிக் கொண்டபின்பு இறங்கினர்.

பெல்லை அழுத்தினாள் ஆராதனா. மணி விட்டது. டின்னருக்கு இன்று கெஸ்ட் வருவ சொன்னது நினைவுக்கு வந்தது.



அதற்குள் குழந்தைகளைத் தயார் செய்ய வேண்டும் என்று நினைத்தபடியே நின்று கொண்டு இருந்தாள் அவள்.

கதவைத் திறந்த தாரிணியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. போச்சு! நல்லா பாட்டு வாங்கப் போறேன் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் ஆராதனா.

“ஆராதனா... உனக்கு மூளை துளி கூட இல்லை. எவ்வளவு தடவை சொல்லியிருக்கேன் உன்னிடம்... குழந்தைகளை ரொம்ப நேரம் வெளியே விளையாட அழைத்துப் போகாதே என்று.

சே... இன்னிக்கு முகேஷ் வீட்டிற்கு வருகிறான். வீ எப்படி இருக்குது பார். கீதா இன்னும் சமையல் முடி பாடு இல்லை.

சின்னக் குரங்கு வேறு 'காள் காள்' என்று கத்திவி இப்பொழுது தான் ஓய்ந்தது. அவனையும் தூக்கிக் கொ போயிருக்க வேண்டியதுதானே...” என்று படபட தாரிணி.

“மேடம், இல்லை. பனி அதிகமாக இருந்தது. அ சஞ்சய் வேண்டாம் அப்படின்னு நினைச்சேன்... நான் கீதாவிற்குச் சமையலில் உதவி செய்யறேன். அ என்று அவள் முடிக்கும் முன்பு சீறினாள் தாரிணி.

“போ... போய் வேலையைப் பார்... அழைத்துக் கொண்டு போனால் உன்னால் என்ஜா முடியாது.

பெரிய பிசாசுகளை விளையாட விட்டு பாட்டுக்கு ஆனந்தமாக இருந்திருப்பாய். எனக்கு உன்னைப் பற்றி...” என்று சீறினாள் தாரிணி.

ஏதும் பேசாமல் தலை குனிந்து கொண்டு உள்ளே சென்றாள் ஆராதனா. தாரிணியைப் பற்றி அவளுக்கு ஒரு வருடமாக நன்றாகத் தெரியும்.

அவளிடம் பேசுவதால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. தாரிணியின் கோபம்தான் அதிகரிக்கும். அதனால் இந்த மாதிரி சமயங்களில் பேசாமல் இருப்பதுதான் உத்தமம் என்று அவளுக்குத் தெரியும்.

சமையல் அறைக்குள் சென்றவள் கீதாவிற்கு உதவி செய்யத் தொடங்கினாள். கீதாவிற்கு, பாவம்! வயது அறுபதிற்கு மேல் இருக்கும்.

வழக்கமான சமையல் என்றால் எப்படியாவது மேனேஜ் செய்து விடுவார்கள். ஆனால் இந்த மாதிரி டின்னர், கெஸ்ட், ஸ்பெஷல் சமையல் என்றால் கொஞ்சம் ஷ்டப்படுவார்கள்.

"நல்ல காலம் ஆராதனா... நீ வந்ததால வேலை கிரம் முடிஞ்சுது. இதோ இன்னும் பாயசம் மட்டும்தான் க்கி.

அது அடிபிடிக்காம கொஞ்சம் கிண்டிக் கொண்டு அடிபிடிச்சிடப் போகுது. நான் அதுக்குள்ள இந்த ட்டம்ஸ் எல்லாம் நீட்டா ஸெர்வ் செய்யற மாதிரி ன் பாத்திரத்தில் நிரப்பி வைக்கிறேன்," என்று லியபடியே எல்லாவற்றையும் அதற்கான பாத்திரங் ரப்பி டைனிங்டேபிளில் வைத்தாள்.

ன்ட்டீ! பாயசமும் ரெடி. நான் எடுத்துட்டு வரேன்..." சொல்லியபடியே ஒரு அழகான பீங்கான் ல் அதை ஊற்றினாள்.



"ஆராதனா! மசமசன்னு நிற்காதே... போய் அந்தப் பிசாசுகளை ரெடி செய். கெஸ்ட் வரும்பொழுது ஒழுங்காக பிஹேவ் செய்யச் சொல்.

ஏதாவது சேட்டை செய்தால் அப்புறம் நான் உன்னைச் சும்மா விடமாட்டேன்..." என்று எச்சரித்தாள் தாரிணி.

"ஓகே மேடம்... நீங்க கவலைப்படாதீங்க. தே வில் பி வெல் பிஹேவ்ட்..."

"சரி... நீ இந்த டிரெஸ்ஸில் முகேஷ் முன்னால் நிற்காதே. அப்புறம் உன்னை நான் சரியாகக் கவனிக்க வில்லை என்று தப்பாக நினைத்துக் கொள்வார்.

அதனால் வேறு ஏதாவது நல்ல உடையாக அணிந் கொள்... என்ன, புரிந்ததா..."

"ஓகே மேடம். இதோ ஒரு நொடியில் வந்து விடு றேன்..." என்று சொல்லிவிட்டுத் தன் ரூமிற்குச் சென்றாள்

அவள் அம்மா அவளின் பிறந்த நாள் பொ வாங்கிக் கொடுத்த அந்த நீலநிற சல்வாரை ஆசை எடுத்தாள் ஆராதனா.

அம்மா அவளுக்கு அளித்த கடைசி கிஃப்ட் அதற்குப் பின் அடுத்த பிறந்த நாளுக்கு அம் இல்லை. அப்பாவும் இல்லை.

ஒரு பெருமூச்சோடு பழசை எல்லாம் நினை உட்கார்ந்து இருந்தாள்.

"என்ன இவ்வளவு நேரமா... அலங்காரம். என்ன செய்யற... சீக்கிரம் வா!" என்று கத்தியபடியே இடித்தாள் தாரிணி.

"இதோ... வந்திட்டேன் மேடம்!" என்று குரல் கொடுத்தவள் வேகவேகமாக சுடிதாருக்கு மாறினாள்.

கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் ஆராதனா. அவளை மேலும் கீழும் பார்த்தாள் தாரிணி.

அவள் கண்களில் தெரிந்த கோபமும், பொறாமையும் ஆராதனாவிற்கு ஏனோ பயத்தைக் கொடுத்தது.

"என்ன, அலங்காரம் எல்லாம் தூக்கலா இருக்கு. முகேஷ் பெரிய நடிகன். உன்னை மாதிரி வேலைக்காரியை எல்லாம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டான்.

அதனால் கனவுலகத்தில் மிதக்காம ஒழுங்கா வேலையைப் பார். போ... சஞ்சய் அழறான் பார். அவனைக் கவனி..."

சஞ்சய்தான் அந்த வீட்டின் கடைக்குட்டி. ஆறு மாதக் குழந்தை. அவன் கைகால் உதைத்துக் கொண்டு, குப்புறப் டுக்க முயல்வதும், கட்டை விரலை வாயில் வைக்க முயல் தும் என அவன் செய்வதை எல்லாவற்றையும் ரசித்தாள், ராதனா எப்பொழுதும்.

தாரிணிக்கு ஏனோ குழந்தைகள் மீது அவ்வளவு டுதல் இல்லை. எப்பவும் வெளியே போவதுதான் ளுக்குப் பிடிக்கும்.

பார்டிஸ், கிளப் என்பவற்றில் அவள் பெரும்பாலான தைச் செலவிடுவாள். அவள் அப்படிச் செல்வதற்கு ம் குழந்தைகள் இடையூறு என நினைப்பாள் அவள்.

தனால் தான் குழந்தைகளைப் பார்ப்பதற்காக னாவை நியமித்தாள் தாரிணி. குழந்தைகளை எப்ப சு, குரங்கு என்றே அழைப்பாள்.



செல்லமாகக் கொஞ்சுவதோ, அவர்களை வெளியில் அழைத்துச் செல்லுவதோ அவளுக்குத் துளிகூடப் பிடிக்காது.

குழந்தைகளின் தந்தைக்குக் கப்பலில் வேலை. அதனால் எப்பொழுதாவது தான் வீட்டிற்கு வருவார். ஆறு மாதத்திற்கு ஒரு முறை அவர் வருவார்.

அதனால் தாரிணியைக் கேட்பார் இல்லை. அவள் வைத்தது தான் சட்டம் எப்பவும் வீட்டில். வேலைக்காரர் களை எப்பவும் ஏதேனும் சொல்லிக் கொண்டே இருப் பாள் அவள்.

ஆராதனாவிற்கு இதெல்லாம் புதிதாக இருந்தது. இங்கே வேலைக்கு வந்து சேர்ந்த பொழுது. அப்புறம் பழகிவிட்டது.

சுருக் சுருக் என நெஞ்சில் தைக்கும் வண்ணம் ஏதேனும் சொல்லுவதே அவளின் குணம் என்று நன்றாகப் புரிந்து கொண்டாள் ஆராதனா.

ஆனால் இன்று அவள் தன்னை மோசமாக திட்டியதை ஏனோ அவள் மனம் ஏற்க மறுத்தது. வ போற கெஸ்ட் யாராக இருந்தால் எனக்கு என்ன வந் நான் பாட்டுக்கு வழக்கம்போல என் வேலைகள செய்யப் போகிறேன். இதில் நான் நல்ல உடை அ தாலும் தப்பு, சுமாரான உடை அணிந்தாலும் தப்பு.

வேண்டாத மருமகள் கைபட்டால் குற்றம், பட்டால் குற்றம் என்பது போலத்தான் இருக்கிறது நிலை என்று நினைத்தபடியே குழந்தைகளை டின் ஏற்ற உடை அணிவித்துத் தயார்ப்படுத்தினாள் ஆ

"யார் இன்னிக்கு வராங்க... வீடே அமளி அக்கா? உனக்குத் தெரியுமா தீப்பு?" என்றாள் சஞ்ச

"வரப் போறது உங்க அம்மாவோட க்ளாஸ் மேட் அண்ட் காலேஜ்மேட். இப்போ படத்தில எல்லாம் ரொம்ப பாப்புலர் ஹீரோ..."

"ஓ... அப்படியா... அது யார் நமக்குத் தெரியாமல்? யார்? விவேக்கா..." என்றாள் சஞ்சனா.

அவள் சொன்னதைக் கேட்டுச் சிரித்தாள் ஆராதனா. குழந்தைகளுக்கு காமெடியன் யார் ஹீரோ யார் என்று ஏன் தெரியணும். அவர்கள் உலகத்தில் காமெடியன் தான் ஹீரோ என்று நினைத்துக் கொண்டாள்.

"விவேக் இல்லை... பெயர் முகேஷ் போல. எனக்குத் தெரியாது யார் என்று... சரி, இரண்டு பேரும் கண்ணாடி முன்னாடி பாருங்க...

டிரஸ் எப்படி இருக்கு? நல்லா அழகா இருக்கு. உங்க ரெண்டு பேர் டிரஸ் ஹேர் ஸ்டைல் எல்லாமே ஸூப்பரா இருக்கு."

"யூ ஆர் கரெக்ட். இந்த டோரா டிரஸ்ஸில் நாங்க ரெண்டு பேருமே ரொம்ப க்யூட். அடுத்த படத்தில நம்மளைக் கூப்பிடப் போறாங்கடி."

"என்ன அரட்டை அங்கே? டிரெஸ் செஞ்சு முடிச்சாச் சுன்னா ரூமில இருந்து வெளியே வாங்க. எப்பவும் தொணதொணன்னு பேசிகிட்டே... சே... சே..." என்று தாரிணியின் குரல் கேட்டவுடன் குழந்தைகள் பெட்டிப் பாம்பாக அடங்கினர்.

"ரெடி மேடம்... சஞ்சய்க்கு மட்டும் நேப்பி மாற்றி விட்டு வேறு உடை போட்டு விட்டு அழைத்து வருகிறேன்."

"சீக்கிரம் வா... அவர் வர நேரமாச்சு. சஞ்சய் அங்கேயே இருக்கட்டும். அது ஒரு பிசாசு. எப்ப பார் அழுவான்.



அவன் அழறதைக் கேட்டாலே எனக்குத் தலை வலிக்கும். இந்த இரண்டு வானரம் பத்தாதுன்னு அது வேற... சே! எல்லாம் என் தலையெழுத்து!" என்று அலுத்துக் கொண்டாள் தாரிணி.

# 2

பூக்களின்
முகவரி
தீயாக
எப்பொழுது
மாறியது?
உன்
கண்களைத்
தான்
சொல்கிறேன்
பெண்ணே!
ஒரு
வார்த்தை
தெரியாமல்
சொன்னதற்கு
என்ன
ஒரு

தண்டனை
எனக்கு ?
பூக்களம்
போர்க்களமாக
மாறியது
...............
எனக்கு
மட்டும்
புரிகிறது !
வலி என்
ஐம்புலன்களைத்
தாக்குகிறது
ஏன் ?

**ம**ணி எட்டு முப்பது என்று சுவர்க் கடிகாரம் உறுதி செய்தது. குழந்தைகள் உற்சாகமாக கெஸ்டிற்காகக் காத்துக் கொண்டு இருந்தனர்.

ஆராதனாவிற்கு டின்னர் எப்பொழுது முடியும் ன்று இருந்தது. அடுத்த நாள் சஞ்சனாவிற்கும், தீபிகா ற்கும் பள்ளி உண்டு.

டின்னர் லேட்டானால் குழந்தைகள் தூங்குவதற்கும் ஆகும். அடுத்த நாள் காலை தாமதாக எழுந்தால் ரிக்குப் போக முடியாது.

பள்ளிக்குப் போகாவிட்டால் தாரிணி கண்டிப்பாகக் தைகளைத் திட்டுவாள். பாவம், குழந்தைகள். அதற



காகவாவது இந்த முகேஷ் சீக்கிரம் வந்தால் தேவலை என்று நினைத்துக் கொண்டாள்.

வெளியே கார் சத்தம் கேட்டது. அவள் மனம் சற்றே நிம்மதியானது.

வாசலை நோக்கிப் பரபரப்பாக ஓடினாள் தாரிணி. அவளின் பரபரப்பு ஆராதனாவிற்கு ஆச்சரியமாகி இருந் தது. வரப் போவது விஐபி போல என நினைத்துக் கொண் டாள்.

"முகேஷ்... வா வா. இட்ஸ் நைஸ் டு ஸீ யூ. ஸச் எ ஃபேமஸ் ஹீரோ இன்னிக்கு என் வீட்டுக்கு டின்னருக்கு வந்திருக்கார்.

ம்... என்னாலே நம்பவே முடியலை. ஐயாம் ஜஸ்ட் எக்ஸைட்டட் முகேஷ்..."

"ஓ... கூல் தாரிணி. நீ இன்னும் மாறவே இல்லை. காலேஜில் எப்படி இருந்தியோ அப்படித்தான் இப்பவும் இருக்க. ஸோ ஹவ் இஸ் லைஃப்? பசங்க எப்படி இருக் காங்க? ராகேஷ் எப்ப வந்தான் லாஸ்ட்டா இங்க? அவனால எப்படி கடலிலேயே இருக்க முடியுதோ?

எனக்கு ஆச்சரியமா இருக்கு. ஒரு படத்துக்காக இரண்டு நாள் க்ரூஸ் கப்பலில் ஷூட்டிங் இருந்தது. காட் நான் பட்ட அவஸ்தை எனக்குத் தான் தெரியும்..."

"ஆமாம் முகேஷ். ராகேஷிற்குக் கப்பல் தா ஃபர்ஸ்ட் லவ். ஆறு மாசம் அங்கே தான் இருக்கார். அ புறம் இங்க ஒரு பத்து நாள் தங்குவார்.

தட்ஸ் ஆல். அப்புறம் மறுபடியும் கப்பல் த அவருக்கு அது பழகிடுச்சு. என்னால தான் முடிய இந்தப் பசங்களை வைச்சு சமாளிக்க..."

"ம்... உலகிலேயே கஷ்டமான விஷயம் குழந்தைகளை நன்றாகப் பராமரிப்பது தான். ஆனால் அது ரொம்ப ரசிக்கக்கூடிய விஷயம்..."

"வா முகேஷ். உட்கார்... சாப்பிடலாம். சஞ்சு, தீபு, ஹி இஸ் முகேஷ். ஸே ஹாய் டு ஹிம்..."

"ஹாய் அங்கிள்! ஹவ் ஆர் யூ? நீங்க வந்ததாலே தான் அம்மா எங்களை சஞ்சு, தீபுன்னு கூப்பிடறா. இல்லாட்டி எங்களைக் குரங்கு, பிசாசு அப்படின்னு தான் கூப்பிடுவா!" என்றாள் சஞ்சனா பட்டென.

தாரிணியின் முகம் இருண்டது. ஆராதனாவை முறைத்தாள்.

"ஏய் கெஸ்ட் கிட்டே எப்படி பிஹேவ் செய்யணும் அப்படின்னு நீ சொல்லித் தரலையா இதுங்களுக்கு? சே! உனக்குக் கொடுக்கற சம்பளம் தண்டம்."

முகேஷ் ஆராதனாவைப் பார்த்தான். அவன் பார்வை தன் மேல் அலட்சியமாகவும் அருவருப்பாகவும் படர்வதை அவள் உணர்ந்தாள்.

ஒரு புதியவன் முன்பு தாரிணி தன்னை அவமானப் ...த்துவதைச் சகித்து கொண்டு இருந்தாள் அவள்.

"ஆராதனா! வந்து ஸெர்வ் செய். மரம் மாதிரி ...காதே..."

"ஓகே மேடம்!" என்று பணிவாகச் சொல்லியபடி ...ள் அருகே வந்தாள் அவள்.

...கேஷின் பார்வை தன் மேல் பதிந்திருப்பதை ...ால் அறிய முடிந்தது. ஏனோ அவன் பார்வை ...ளைப் பதட்டமாக்கியது.



அவள் இதயத் துடிப்பு அதிகரித்தது. மெதுவாகக் கிண்ணங்களைக் கையில் எடுத்துத் தட்டில் வைத்தாள். அவனின் தட்டில் வைக்கும் பொழுது ஏனோ அவள் கரங்கள் நடுங்கின.

கடவுளே! நான் எதையும் கீழே போடாமல் இருக்க வேண்டும் என்று மனதிற்குள் வேண்டியபடியே பரிமாறிக் கொண்டு இருந்தாள்.

பேபி கார்ன் ஃப்ரை, ஃபிரெஞ்ச் ப்ரை, வெஜிடபிள் சூப் என்று ஸ்டார்டர்ஸ் ஒரு ரவுண்ட் முடிந்தது.

தாரிணியும், முகேஷும் பேசிக் கொண்டே சாப்பிட்டனர். அவ்வப்பொழுது அவன் சஞ்சுவோடும் தீபுவோடும் ஏதாவது பேசிக் கொண்டு இருந்தான்.

அடுத்து மெயின் கோர்ஸ், சப்பாத்தி, நான், பூரி, அதற்கு சைட்டிஷ் குருமா, நவரத்ன குருமா, கடாய் பனீர் என எல்லாவற்றையும் ஸெர்வ் செய்தாள்.

அப்புறம் ரைஸ் அயிட்டம்ஸ் - வெஜிடபிள் புல... பீஸ் புலவ், பிரியாணி என எல்லாமே தயாராக இருந்தது.

"முகேஷ்! நீ எப்படி நான் - வெஜ் சாப்பிடாம... இருக்க. இன்னும் நீ பழகிக்கலை... எப்ப சாப்பிடப் பே... சொல்.

இன்ஃபேக்ட் உனக்காகச் சுத்த சைவச் சமை... செய்வதற்கு ரொம்ப சேலன்ஜிங்கா இருந்தது."

"ஓ... அப்படியா. சின்ன வயசில இருந்தே ...டேரியன் ஃபுட் சாப்பிட்டு பழகியதால புதுசா பழக்... மாத்த முடியலை.

சாப்பாடு ரொம்ப பிரமாதம். இந்த மாதிரி ரிலாக்ஸ்டா சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு. தேங்க்ஸ் எ லாட் ஃபார் தி கிரேட் டின்னர்.”

“முகேஷ்! இட்ஸ் மை பிளஷர். ஆராதனா! டெஸர்ட் வை. சொன்னால் தான் ஸெர்வ் செய்வியா? நீயா ஏதும் செய்ய மாட்டியா?”

“இதோ மேடம்...” என்று சொல்லியபடியே கண்ணாடிக் கோப்பையில் பாயசத்தை நிரப்பினாள்.

பதட்டமாக இருந்ததால் சட்டெனக் கை வழுக்கியது அவளுக்கு. கண்ணாடிக் கோப்பையில் இருந்த பாயசம் கீழே விழுந்து டேபிள் க்ளாத்தை நனைத்தது.

முகேஷின் பான்ட்டிலும் சில துளிகள் பரவின. ...யந்தது போலவே நடந்து விட்டதே எனப் பதறினாள் ஆராதனா.

“முட்டாள்! அறிவு இல்லை... இப்படி ஸ்பாயில் ...ஞ்சிட்டியே!” என்று அவளைப் பளீரெனக் கன்னத்தில் ...றைந்தாள் தாரிணி.

“ஸாரி ஸார்... மேடம்! ஸாரி. நான் ஒரு நொடியில் ...ர் செஞ்சிடறேன்!” என்றாள் அழுகையை அடக்கிய ஆராதனா.

...முகேஷ்! ஸாரி. ஷி இஸ் ஆன் இடியட். உன் டிரெஸ் ...பிடுச்சா...”

...... நோ தாரிணி. லேசா தான் ஸ்பில் ஆயிருக்கு. ...சஞ்சா போயிடும்... டோண்ட் ஒரி... இட்ஸ் ஓகே ...ா.”



கடகடவென க்ளீன் செய்தாள் அவள். ஏனோ ரொம்ப அவமானமாக இருந்தது அவளுக்கு.

“அம்மா! அக்காவைத் திட்டாதீங்க. பாவம் அக்கா!” என்று சஞ்சு குரல் கொடுக்க, தீபுவும் ஒத்து ஓதினாள்.

“வாயை மூடிகிட்டு சாப்பிடுங்க. அதிகப்பிரசங்கித் தனமாகப் பேசாதீங்க...”

“அம்மா! வாயை மூடிகிட்டு எப்படி சாப்பிட முடியும். இது கூட உங்களுக்குத் தெரியலை. அங்கிள்! அம்மா படிக்கும் பொழுதும் இந்த மாதிரி தான் மக்கா இருந்தாங் களா...”

“சஞ்சு! அம்மாவை அப்படி எல்லாம் பேசக்கூடாது... நீ குட் கேர்ல் ஆச்சே!” என்றாள் ஆராதனா.

“தாரிணி... நீ குழந்தைங்க கிட்ட ரொம்ப சிடுசிடு வென்னு இருக்க. அதே மாதிரி தான் எல்லார் கிட்டேயும் இருக்க. இட்ஸ் நாட் குட் ஃபார் யூ. உன் பெர்சனாலிட்... மாறிவிடும். ஸோ கூலா இரு.”

தாரிணியின் முகம் சின்னதானது. எதையும் கண்... கொள்ளாமல் உள்ளே சென்றாள் ஆராதனா.

“யார் இது புது மெய்டா... ஹர் டிரெஸ் இஸ் ... ஷோயி ஏன் இப்படி ட்ரெஸ் போட அலவ் செய்... தாரிணி!” என்றான் முகேஷ்.

“ம்... நீ வருவாய் எனத் தெரியும் அவளுக்கு... தான் இப்படி. யூ ஆர் ஃபேமஸ் ரைட்... ஸோ எப்படி... உன்னை அட்ராக்ட் செய்ய ட்ரை செய்யறா போல.

வயது அப்படி முகேஷ். ஸோ டோண்ட் பாத... லீவ் இட்...” என்றாள் சிரித்தபடியே தாரிணி.

அதைக் கேட்ட ஆராதனாவிற்கு முகம் அவமானத்தால் சிவந்தது. அவள் அணிந்து இருந்த நீலச் சுடிதார் வேண்டாம். 'இதை அணிந்து கொள்' என ஒரு லாங் ஸ்கர்ட்டையும், டாப்ஸையும் கொடுத்தது தாரிணி.

அந்த ப்ளவுஸ் ரொம்ப பிடிப்பாக இருந்தது. முன்னால் கழுத்து வேறு லோவாக இருந்தது. இது வேண்டாம் என்று அவள் மறுத்த பொழுது வற்புறுத்தி அணியச் செய்தாள் தாரிணி.

சே! முகேஷ் தன்னைப் பற்றி எவ்வளவு கேவலமாக நினைத்துக் கொண்டான். ஏன் இந்த மாதிரி தாரிணி நடந்து கொள்கிறாள் என மனம் வெதும்பினாள் ஆராதனா.

"அங்கிள்! அக்கா ஒரு டிரெஸ் போட்டு இருந்தாங்க. அது அழகா இருந்தது. ஆனால் அம்மா அது வேண்டாம் அப்படின்னு சொன்னாங்க.

அப்புறம் இந்த டிரெஸ்ஸை அம்மா தான் கொடுத்து க்காவைப் போடச் சொன்னாங்க. அக்காவிற்கு இதைப் ாட இஷ்டம் இல்லவே இல்லை.

அம்மாதான் ஃபோர்ஸ் செஞ்சாங்க. பாவம் அக்கா!" று குட்டை உடைத்தாள் தீபிகா.

"ஏய்... சாப்பிட்டாச்சு இல்ல. உள்ளே போங்க!" என்று ள் தாரிணி.

கேஷைப் பார்த்தாள் தாரிணி.

ராம்ப பொய் பேசறாங்க இவங்க ரெண்டு பேரும். ஆல்வேஸ் ஸப்போர்டிங் ஹர்.

ள் ஏதோ சொல்லி பசங்களை மிரட்டி வைச்சி போல. அதான் இப்படி பிஹேவ் செய்யறாங்க... சே."



"ஓகே தாரிணி. கூல். தேங்க்ஸ் எ லாட் ஃபார் தி டின்னர்... அப்புறம் சஞ்சு அண்ட் தீபு! உங்களுக்காக நான் இந்த சாக்லேட்ஸ் அண்ட் டிரெஸ்ஸெஸ் வாங்கி வந்திருக்கேன். ஹோப் யூ லைக் இட்!" என்று ஒரு பாக்கெட்டை நீட்டினான்.

"உ... தேங்க்ஸ் எ லாட் அங்கிள். யூ ஆர் ஸோ ஸ்வீட். அப்புறம் சஞ்சய் பாப்பாவுக்கு எதுவும் வாங்கலையா?" என்றாள் தீபிகா.

அதைக் கேட்டு முகேஷ் கடகடவெனச் சிரித்தான். குழந்தைகள் மனம் களங்கமில்லாத ஒன்று என்று நினைத்துக் கொண்டான்.

"சஞ்சயை எப்படி மறப்பேன்... அவனுக்காக ஒ ஸ்பெஷல் பரிசு... எங்க அவன்?" என்றான் உற்சாகம முகேஷ்.

அதற்குள் தாரிணியின் கைப்பேசி சிணுங்க, அ அதை எடுத்துப் பேசத் தொடங்கினாள்.

"வாங்க அங்கிள். அந்த ரூம் தான் சஞ்சய் ப வோடது!" என்று அழைத்துச் சென்றனர் இருவரும்.

அந்த அறை அமைதியாக இருந்தது. அங்கே யிற்கு உணவு அளித்துக் கொண்டு இருந்தாள் ஆரா

அவனைக் கண்டவுடன் அவள் முகம் அவ தால் சிவந்தது. நல்ல காலம்! நான் வேறு உ அணிந்து கொண்டுள்ளேன்.

இல்லாவிட்டால் வேண்டும் என்றே நான் ஒ உடை அணிந்து இருப்பதாக அவன் நினைத்து வான் என்று எண்ணியவுடன் ஒரு நிம்மதிப் பிறந்தது அவளிடமிருந்து.

"அக்கா! அங்கிள் குட்டி. பாப்பாவிற்கு கிஃப்ட் வாங்கிட்டு வந்திருக்கார்."

"சஞ்சய் குட்டி! பிடி. இதைப் பிடி பார்க்கலாம்!" என்று ஒரு பொம்மையை அவனிடம் நீட்டினான்.

அதைப் பார்த்த சஞ்சயின் கண்கள் வியப்பால் விரிந்தன. வண்ணமயமாக இருந்த அந்தக் குடை போன்ற பொம்மையைப் பார்த்துச் சிரித்தான் சஞ்சய்.

"ஐயாம் ஸாரி... உன் உடையைப் பற்றி கமெண்ட் செய்ததற்கு..." என்றான் தணிவான குரலில் முகேஷ்.

"பரவாயில்லை..." என்றாள் மெல்லிய குரலில் ஆராதனா.

அவள் பால் புட்டியில் அவனுக்குப் பால் கொடுப்பதையே முகேஷ் பார்த்துக் கொண்டு இருந்தான்.

"குட்... இவன் உன்னோடு நன்றாகப் பழகி விட்டான். நைஸ் டு ஸீ..." என்று அவன் பாராட்டினான்.

அவள் லேசாகப் புன்முறுவல் சிந்தினாள். சஞ்சய் பால் முழுவதும் குடித்து முடித்த பின் மெதுவாக அவனைத் தோளில் போட்டு முதுகைத் தட்டிக் கொடுத்தாள்.

சஞ்சய் சின்னதாக ஒரு ஏப்பம் விட்டான். பின் கொட்டாவி ஒன்று விட்டான்.

"ஆ... குட்டி செல்லத்திற்குத் தூக்கம் வந்து விட்டதா... சஞ்சய் குட்டி... பட்டுக் குட்டி... பார், அங்கிள் உனக்காக என்னவெல்லாம் வாங்கி வந்து இருக்கார் பார்!" என்று கொஞ்சினாள்.

அதைக் கேட்டு சஞ்சய் பெரிதாகச் சிரித்தான். அதைப் பார்த்த முகேஷின் முகத்தில் புன்னகை பரவியது.



"நீ பேசறது எல்லாம் புரியுது பார் இவனுக்கு!" என்றான் சிறு பிள்ளை போல முகேஷ்.

"நான் இவன் பிறந்ததிலிருந்து இங்கே இருக்கிறேன். இவனுடன் நன்றாகப் பழக எனக்கு நான்கு மாதங்கள் ஆனது."

"ஓ... பரவாயில்லையே... இப்பொழுது நன்றாகவே ஒட்டிக் கொண்டானே..."

"அட... பையா... நனைத்து விட்டாயே..." என்று சொன்னவள் முகேஷைப் பார்த்தாள்.

"நான் இவனிற்கு நேப்பி மாற்ற வேண்டும்..."

"பரவாயில்லை... நீ மாற்று."

அங்கிருந்த கட்டிலில் சஞ்சயைப் படுக்க வைத்தாள் ஆராதனா. வேறு நேப்பி ஒன்றை எடுத்தாள். பழையதை எடுத்துவிட்டு, சுடுநீர் வெதுவெதுப்பாக வைத்து டவலால் ஒற்றி எடுத்து விட்டுப் புதிய நேப்பியைப் போட்டு விட்டாள்.

அவள் தட்டிக் கொடுத்தாள் சஞ்சயை மெதுவாக. அவன் கொஞ்ச நேரத்தில் தூங்கிவிட்டான்.

"ம்... நான் பார்த்ததிலேயே ரொம்ப அழகான விஷயம் இன்று இதுதான். சஞ்சய் உன்னிடம் ரொம்ப அழகாகப் பழகுகிறான்."

"இந்தா... இது உனக்கு!" என்று ஒரு சாக்லே டப்பாவை அவளிடம் நீட்டினான்.

"என்ன... என்ன இது..."

"ம்... குழந்தைகளுக்குப் பிடித்தமானது... சாக்லேட் டு லுக் லைக் எ கிட். அதனால் இது உனக்கு..."

"இ... இல்லை. வேண்டாம்..."

"இட்ஸ் ஓகே. நான் உனக்கென்று தனியாக ஏதும் வாங்கவில்லை. ஸோ ப்ளீஸ் டேக் இட்..."

"வேண்டாம்.. உங்களை மேடம் தேடப் போகிறார்கள்..."

"உனக்கு சாக்லேட் பிடிக்குமா... பிடிக்காதா?"

"பிடிக்கும்..."

"அப்புறம் என்ன தயக்கம்... வாங்கிக் கொள்."

"தேங்க்ஸ்!" என்று சொல்லியபடியே அதைத் தயக்கத்தோடு வாங்கிக் கொண்டாள் ஆராதனா.

"தட்ஸ் நைஸ். சரி. உன்னைப் பற்றிச் சொல்."

"என்ன... என்னைப் பற்றியா..?"

"ஆமாம். உன்னைப் பற்றித் தான். எப்படி இங்கே வேலைக்கு வந்தாய்?"

"மேடம் ஒரு விளம்பரம் கொடுத்து இருந்தார்கள். வேலைக்கு ஆள் தேவை என்று. அதைப் பார்த்தேன் நான். அப்ளை செய்தேன். மேடம் ஒரு நேர்முகத் தேர்வு மாதிரி வைத்தார்கள். அப்புறம் என்னை வேலைக்கு எடுத்தார்கள்..."

"ஓ அப்படியா? உன்னை மேடம் வேலையிலிருந்து நீக்கப் போகிறார்கள். நாளையிலிருந்து உனக்கு வேலை ஏதும் இல்லை.

அது உனக்குத் தெரியுமா? ஸாரி... இந்தச் செய்தியை உன்னிடம் சொல்வதற்கு... ஐயாம் ரியலி ஸாரி!" என்றான் மெல்லிய குரலில்.

ஆராதனாவின் முகத்தில் அப்பட்ட அதிர்ச்சி தெரிந்தது.

"ஐ ஸீ. நான்... நான்..." என்று மேலே தொடர முடியாமல் அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.



ஒரு அந்நியன் மூலம், புதியவன் மூலம் இந்த விஷயம் தெரிகிறதே எனக்கு என்று மனம் நொந்து போனாள் அவள்.

அவள் தொடர்ந்து அழுவதைப் பார்த்து அவன் மனம் இரங்கியது.

"ஸாரி... நான் உன்னைக் கஷ்டப்படுத்தி விட்டேன். எனக்கு ஏனோ தெரியவில்லை. உன்னைப் பார்த்தவுடன் இதைச் சொல்லிவிட வேண்டும் என்று தோன்றியது.

பாவம் நீ நாளைக்குக் காலையில் இந்தச் செய்தியைத் தனியாகத் தாரிணி மூலமாகத் தெரிந்து கொள்வது ஏனோ என் மனதிற்குப் பிடிக்கவில்லை."

அவன் சொன்னதைக் கேட்டவுடன் ஏனோ சுய பச்சாதாபம். அவள் அழுகை பெருகியது.

அவன் தன் பேன்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு வெள்ளைக் கைக்குட்டையை எடுத்தான்.

"ம்... முதலில் கண்ணைத் துடைத்துக் கொள்!" என்று அவளிடம் நீட்டினான்.

அதை வாங்கி, கண்களைத் துடைத்தாள் ஆராதனா. ஆனாலும் மனம் சமாதானம் அடையவில்லை.

"நீ... நாளை முதல் என்ன செய்யப் போகிறாய்... ஆராதனா..."

"எனக்கு... எனக்குத் தெரியவில்லை. எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை..."

"ம்... உன்னால் வேறு வேலையை உடனே தேடிக் கொள்ள முடியுமா... ஏதோ ப்ரச்சினை அதில் என்று தாரிணி சொன்னாளே..."

"ஓ... அதெல்லாம் கூட விருந்தினர் ஆன உங்களிடம் டிஸ்கஸ் செய்தார்களா..." என்றாள் வெறுப்பான குரலில் ஆராதனா.

"இல்லை... அவள் என்னிடம் மட்டும் சொன்னாள். நான் கெஸ்ட் இல்லை. ஐயாம் ஹர் ஃபிரண்ட்..." அவளுக்கு ஏனோ ஒரு வெறுமை மனதை ஆக்ரமித்தது. இவனுக்கு என்ன தெரியும். அடுத்தவர்கள் கஷ்டம் பற்றி. இவன் மேல் தட்டு வர்க்கத்தைச் சார்ந்தவன். என்னைப் பொறுத்தவரை இவன் ஒரு வேற்றுக் கிரகவாசி. அதனால் இவனிடம் பேசி எந்தப் பயனும் இல்லை. இவனால் தான் படும் சங்கடங்களைப் புரிந்து கொள்ள முடியாது என நினைத்தாள்.

ஆனால் அவன் முகத்தைப் பார்த்தவுடன் ஒன்று தெரிந்தது அவளுக்கு.

என்ன காரணம் என்று தெரியாமல் அவன் இடத்தை விட்டு நகர மாட்டான் என்று அவளுக்குப் புரிந்தது.

"நான் ஒரு காலேஜில் இரண்டு வருட டிப்ளமா கோர்ஸ் முடித்து இருக்கிறேன். அதற்குப் பின்பு ஒரு வருடம் ப்ரோபேஷன் பீரியட்.

நான் ஏதாவது ஒரு குடும்பத்தில் தங்கி ஒரு வருடம் ஒரு குழந்தையை நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பின்பு அந்தக் குடும்பத்தினர் ஒரு ரிப்போர்ட் தரவேண்டும்.

அதைப் பொறுத்துத் தான் எனக்கு டிப்ளமா சக்ஸஸா இல்லை பெயிலியரா என்று காலேஜில் உறுதி செய்வார்கள்.

அந்த ரிப்போர்ட் நல்படியாக இருந்தால்தான் எனக்கு சக்ஸஸ் சான்றிதழ் கிடைக்கும்!" என்றாள் கலங்கிய கண்களோடு.



"ஓ... அதற்குப் பின்புதான் நீ ரிஜிஸ்டர்ட் நர்ஸரி டீச்சர்... ரைட்..."

"ஆமாம்... ஆனால்... ஆனால் என்னால் ஆக முடியும் என்று தோன்றவில்லை..." என்றாள் மெல்லிய குரலில்.

"சரி... நர்ஸரி டீச்சர் என்றால் யூனிபார்ம்... எல்லாம் உண்டா..."

இது என்ன சம்பந்தமில்லாத கேள்வி என்பது போல் முறைத்தாள் அவள்.

"ம்... நாளை நாம் சந்திக்கும் பொழுது தயவு செய்து யூனிபார்மில் வந்து விடாதே..." என்றான் அவன்.

## 3

தினம்
தினம்
என்
வீட்டில்
மட்டும்
மழை!
பூக்களால்
நெய்த
அழகான
புடவை!

மேகக்
கூட்டம்
உனக்கு
மெத்தையாக!
நட்சத்திரக்
கம்பளம்
நீ
போர்த்திக்
கொள்ள!
நிலா
உன்
தலையணையாக!
எல்லாமே
காத்து
இருக்கிறது
உனக்காக!
வா
பெண்ணே!

"என்ன..." என்று அதிர்ந்தாள் ஆராதனா.

"ம்... நீ யூனிபார்மில் எப்படி இருப்பாய் என்று... நான் கற்பனை செய்து பார்த்தேன். பயம்மா இருக்கு.

ஸோ நாளைக்கு நாம் மீட் பண்ணும் பொழுது யூனிபார்ம் வேண்டாம்... ப்ளீஸ்."



"நடிப்பதை எல்லாம் படத்தில் வைத்துக் கொள்ளுங்கள். எனக்குப் புரியவில்லை... நாம் ஏன் சந்திக்க வேண்டும்..." என்றாள் சற்றே கோபமான குரலில்.

"ம்... ஐ நீட் யூவர் அட்வைஸ்... நான் நாளை விரிவாகச் சொல்கிறேன். இப்பொழுது நேரமாகிவிட்டது.

இந்த இடத்தில் நாளை என்னை வந்து பார். அப்புறம் தாரிணி ஏதாவது ப்ரச்சினை செய்தால் நான் அவளைச் சரிக்கட்டி விடுகிறேன்.

யூ டோண்ட் ஒரி. நாளையிலிருந்து உன் வாழ்க்கை நன்றாக இருக்கும்... அற்கு நான் கியாரண்டி!" என்று சொல்லியபடியே அவளிடம் விஸிட்டிங் கார்டை நீட்டினான்.

அவள் கார்டை வாங்கிக் கொண்டாள். அவள் உதடுகள் "தேங்க்ஸ்" என்று முணுமுணுத்தன.

"டேக் கேர்... ஸீ யூ டுமாரோ!" என்றவன் ஒரு ஐந்நூறு ரூபாய்த் தாளை அவளிடம் நீட்டினான்.

"வைத்துக் கொள்... தாரிணியைப் பற்றி எனக்குத் தெரியும். நாளை உனக்குத் தேவைப்படும்!" என்று அவள் கையில் திணித்துவிட்டு வேகமாக வெளியேறினான் முகேஷ்.

அவன் சென்ற பின்பு கூட அதிர்ச்சியில் இருந்து சுலபமாக அவளால் மீள முடியவில்லை.

நடப்பது எல்லாம் கனவா நிஜமா என ஒரு நொடி திகைத்தாள் அவள். கையில் இருந்த ரூபாய் நோட்டும், விசிட்டிங் கார்டும் கனவு இல்லை என்று உறுதிப்படுத்தியது.

தன்னைச் சமாளித்து கொண்டு சமையல் அறை நோக்கிச் சென்றாள் அவள்.

கீதாவிடம் நடந்ததை எல்லாம் சுருக்கமாகச் சொன்னாள் அவள்.

“சே... ஏன் தாரிணி இப்படி அல்பத்தனமாக நடந்து கொள்கிறாள்... கொஞ்சம் கூட இரக்கம் இல்லாமல் இது என்ன குணம்?” என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள் கீதா.

“பாவம் குழந்தைகள்... என்ன செய்யப் போகிறார்களோ..?”

“உன்னிடம் பிடித்ததே இந்தக் குணம் தான். எந்த நிலையில் இருந்தாலும் அடுத்தவர்களைப் பற்றிக் கவலைப்படுகிறாயே அது தான் உன் தனித்தன்மை.

உனக்குப் போய்க் கெடுதல் செய்ய நினைக்கிறாள் பார். சே... நினைக்க நினைக்க மனம் சமாதானம் அடைய மறுக்கிறது...”

“பரவாயில்லை... நடப்பதெல்லாம் நன்மைக்கு என்று நினைத்துக் கொள்ள வேண்டும்... உங்களை எல்லாம் நான் மிஸ் செய்வேன்...”

“ம்... நானும் தான். நீ கூடமாட நிறைய ஒத்தாசை செய்வாய்... எல்லாரும் அந்த மாதிரி கிடையாது. பாவம் குழந்தைகள்.

அவர்களை எல்லாம் நீ தாய் போல் கவனித்தாய். புதிதாக யார் வரப் போகிறார்களோ...”

“ம்... ஆனால் குழந்தைகள் சீக்கிரமே பழகி விடுவார் கள். அதனால் புதிதாக யார் வந்தாலும் கண்டிப்பாக ட்டிக் கொள்வார்கள் என்று தான் தோன்றுகிறது.”



“சரி... நீ நாளை முகேஷ் சாரை சந்திக்கப் போகிறாயே... அது தாரிணிக்குத் தெரியுமா?! என்ன சொல்லிவிட்டுப் போகப் போகிறாய்?”

“நாளைக்கு எனக்கு வார விடுப்பு நாள். அதனால் நாளைக்கு என் ஃபிரண்டைப் பார்க்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டு வெளியே கிளம்பப் போகிறேன்.”

“சரி ஆராதனா... பத்திரமாகப் போய்விட்டுத் திரும்பி வா. கண்டிப்பாக உனக்கு நல்ல வேலை அவர் மூலமாகக் கிடைக்கும்.”

“ரொம்ப தேங்க்ஸ். எனக்கும் நம்பிக்கை இருக்கிறது. சரி. தூங்கலாமா... மணி பதினொண்ணு ஆச்சே.”

“ஆமாம். பேசிகிட்டே இருந்ததில் நேரம் போனதே தெரியலை. படுத்தா தான் நாளைக்குக் காலையில வேலை செய்ய உடம்பு தயாராகும்.”

“படுக்கலாம் ஆராதனா. உன் நல்ல மனசிற்கு எல்லாம் நல்லபடியா நடக்கும்.”

புரண்டு புரண்டு படுத்த பொழுதும் தூக்கம் உடனே வரவில்லை அவளுக்கு. நாளையிலிருந்து தன் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று ஒரு பயம் படர்ந்தது அவளுள்.

அடுத்த நாள் காலை கண் விழித்தவுடனே வழக்கம் போல் அம்பாளைக் கண் முன் நிறுத்தி வழிபட்டாள் ஆராதனா.

இந்த நாள் நல்ல நாளாக இருக்க வேண்டும். அதற்கு நீதான் தாயே உதவி புரிய வேண்டும் என்று மனமுருகி வேண்டினாள். குளித்துவிட்டு ஒரு சுடிதாரை அணிந் பொழுது ஏனோ முகேஷ் யூனிபார்ம் பற்றிச் சொன்ன நினைவுக்கு வந்தது.

வெளியே ஹாலில் தாரிணி யாருடனோ ஃபோன் பேசிக் கொண்டு இருப்பது தெரிந்தது. அவளிடம் சொல்லிவிட்டுக் கிளம்ப வேண்டும் என்று நினைக்கும் பொழுது ஒரு பெருமூச்சு பிறந்தது.

“மேடம். குட்மார்னிங்! என் ஃபிரண்ட் வீட்டிற்கு நான் இன்னிக்கு வருவதாகச் சொல்லி இருந்தேன். அதனால் நான் போக வேண்டும்.

போய்ட்டு சாயங்காலம் வந்து விடுவேன் மேடம். குழந்தைகள் இன்னும் தூங்கிக் கொண்டு இருக்கிறார்கள். கீதா ஆன்ட்டி குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதாகச் சொன்னார்கள்.

இன்னிக்கு எனக்கு வார விடுப்பு மேடம். அதனால் தான் வருவதாக ஒத்துக் கொண்டேன்!” என்றாள் மெல்லிய குரலில் ஆராதனா.

“ம்... எல்லா முடிவும் நீயே எடுத்திட்டு அப்புறம் ஏன் எங்கிட்ட சும்மா ஒப்புக்கு சொல்ற. போ போ...

இன்னிக்கு சாயங்காலம் திரும்பி வரும் பொழுது உனக்கு எல்லாம் புரியும். போ...” என்றாள் வெறுப்பாக தாரிணி.

கண்களில் தேங்கி இருந்த அழுகையை அடக்கிக் கொண்டாள் ஆராதனா. சே... என்ன பெண் இவள் என்று தாரிணி மேல் கோபம் வந்தது.

கோபத்தை அடக்கிக் கொண்டு ஏதும் சொல்லாமல் வேகமாக வெளியேறினாள் ஆராதனா. கைப்பையில் பணமும் முகேஷ் கொடுத்த கார்டும் இருந்தது.

பஸ் ஸ்டாண்ட் நோக்கி நடந்தாள். பஸ் ஸ்டாண்டில் பேருந்திற்காகக் காத்துக் கொண்டு இருந்தாள். ஒரு கார்



அவளை உரசுவது போல் வந்து நின்றது. பயந்து போய்த் தள்ளி நின்றாள் ஆராதனா. கார் கதவை இறக்கி விட்டு உள்ளே வரும்படி சைகை செய்தான் முகேஷ்.

கூலர்ஸ் அணிந்து இருந்ததால் அவனைச் சட்டென அடையாளம் தெரியவில்லை அவளுக்கு.

“ஏறு ஆராதனா... சீக்கிரம்!” என்று அவளை அவசரப்படுத்தினான்.

கார் கதவைத் திறக்க முடியாமல் அவள் தடுமாறுவதைப் பார்த்து அவனே கார் கதவைத் திறந்து விட்டான்.

உள்ளே ஏறி உட்கார்ந்த ஆராதனா அவனை உற்றுப் பார்த்தாள்.

“என்ன ஆச்சு ஆராதனா? ஏன் அப்படி பார்க்கற?”

“இல்லை. நீங்கள் ‘கூலர்ஸ்’ போட்டு இருப்பதால் எனக்குச் சட்டென அடையாளம் தெரியவில்லை. அதனால் தான் நீங்களா என்று உறுதி செய்யப் பார்த்தேன்.”

அவன் அதைக் கேட்டுச் சிரித்தான்.

“ம்... பிரபலமாக இருந்தால் எப்பொழுதும் ப்ரைவசி இருக்காது. நான் யார் என்று அடையாளம் தெரியக் கூடாது என்று தான் இந்தக் கண்ணாடி.”

“ஓ... அப்படியா... ஏன் அவ்வளவு தொல்லை கொடுப் பார்களா உங்கள் விசிறிகள்?” என்றாள் ஆச்சரியமாக ஆராதனா.

“யெஸ். ஒரு நாள் என் வீட்டிற்கு ஒருவர் வந்தா நான் அவருடன் வெளியே வர வேண்டும் என்று வற்பு தினார்.

அன்றைக்கு எனக்கு வரிசையாக ஷூட்டிங் வேறு வர முடியாது என்று தன்மையாகச் சொன்னேன்.

அவர் பட்டென என் காலில் விழுந்து விட்டார். அவருக்கு வயது எப்படியும் அறுபது இருக்கும். அவ்வளவு பெரியவர் சட்டென என் காலில் விழுந்தவுடன் எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

அப்புறம் அவர் அழுதபடியே என் காலைப் பிடித்துக் கொண்டு கதறினார். அப்பொழுது தான் தெரிந்தது எனக்கு அவரின் உண்மையான பிரச்சினை.” என்றான் முகேஷ்.

“என்ன பிரச்சினை அவருக்கு? படத்திற்கு சான்ஸ் ஏதாவது கேட்டாரா...”

“இல்லை... அதெல்லாம் இல்லை. பாவம், அவர் பெண் என்னுடைய பரம விசிறியாம். அவளுக்குச் சமீப காலமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்திருக்கிறது.

புற்று நோய் அவளைத் தாக்கி, முற்றிய நிலையில் ஆஸ்பிடலில் சேர்த்து இருக்கிறார்கள். ஆனால் ரொம்ப முற்றிய நிலையில் இருப்பதால் ஏதும் செய்வதற்கு இல்லை என்று டாக்டர்கள் கைவிரித்து விட்டார்கள்.

அவள் என்னைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினாள் போல. அவள் ஆசையை நிறைவேற்றத் தான் அவர் என்னை வற்புறுத்தி அழைத்தார்.

அந்தப் பெண்ணிற்கு என்னைக் கண்டவுடன் அவ்வளவு மகிழ்ச்சி. அவள் கண்களில் தெரிந்த அந்த ஒளி, என் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத ஒன்று!” என்றான் நெகிழ்ச்சியாக முகேஷ்.



அவன் சொன்னதைக் கேட்டு அவள் கண்கள் கலங்கின. இவ்வளவு பிரபலமான ஸ்டாரா இவன் என ஆச்சரியப் பட்டாள் அவள்.

“என்ன ஆராதனா... ரொம்ப கொய்ட்டா ஆயிட்ட நீ பார்த்து இருக்கியா என் படம் ஏதாவது...”

“இல்லை... நான் படம் ரொம்ப பார்க்கறது கிடையாது. எனக்கு அதற்கு நேரமும் கிடையாது. ரொம்ப ஆர்வமும் இருக்கறது இல்லை.

ஸாரி! நான் உங்களை ஹர்ட் செய்திட்டேனா? உங்களுக்கு நிறைய விசிறிகள் இருப்பார்கள். ஸாரி... நான்...” என்று முடிக்க முடியாமல் திணறினாள் அவள்.

“பரவாயில்லை. எந்தப் பொய்யும் சொல்லாமல் நீ இயல்பாக இருப்பது எனக்குப் பிடித்து இருக்கிறது.

நீ நம்ப மாட்டாய். ஒரு பெண் இரவு பன்னிரண்டு மணிக்கு ஒரு நாள் என் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டினாள்.

அவள் வீட்டிற்குத் தெரியாமல் ஓடி வந்து விட்டாள் போல. அவளை நான் திருமணம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினாள்.

சின்னப் பெண். ஜஸ்ட் சிக்ஸ்டீன் ஈயர்ஸ் ஏஜ். அவளிடம் நல்லதனமாகப் பேசி அவளை ஒரு வழியாக வீட்டுக்கு அனுப்பி வைத்தேன்.

அவள் பெற்றோர்களிடம் பேசி அவளை வீட்டிற்குப் பத்திரமாக அனுப்பிய பின்பு தான் எனக்கு மூச்சே வி முடிந்தது...”

"அடக் கடவுளே... இவ்வளவு ப்ரச்சினைகளா உங்களின் வேலையில்? நடிகராக இருப்பதில் இவ்வளவு சிரமங்களா..."

"ம்... ப்ரைவஸி என்பதே கிடையாது. இரவு, பகல் என்று தொடர்ந்து ஷூட்டிங். இதெல்லாம் தான் எங்கள் வாழ்க்கையின் மறுபக்கம்.

ஆனால் மக்களுக்கு அந்த முகம் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்தது, லட்சக் கணக்கில் சம்பாதிக்கும் சினிமா நடிகர்கள், ஆடம்பர வாழ்க்கையில் உல்லாசமாக இருக்கும் நடிகர்கள்... அவ்வளவுதான்..."

"ம்... கஷ்டம் தான் இந்த வாழ்க்கை."

"பட். உனக்கு ஒரு ரிக்வெஸ்ட். என்னை நடிகனாகப் பார்க்காதே. ஐயாம் ஜஸ்ட் எ நார்மல் பெர்ஸன். ஸோ என்னை அப்படியே ட்ரீட் செய்."

"உ... அப்படியா? அப்ப நான் என் மனதில் இருப்பதை வெளிப்படையாகச் சொன்னால் உங்களுக்குப் பரவாயில்லையா..."

"ஓ... ஷ்யூர்... தட்ஸ் வாட் ஐ வாண்ட்!" என்றான் புன்முறுவலோடு முகேஷ்.

"நீங்கள் காரை ரொம்ப வேகமாக ஓட்டுகிறீர்கள். அது உங்களுக்குத் தெரியுமா என்று தெரியவில்லை. இப்பொழுது நீங்கள் ஓட்டுவதை வைத்துச் சொல்லவில்லை." என்றாள் ஆராதனா.

"அப்புறம்... நான் ஓட்டுவதை நீ எப்ப பார்த்தாய்?" என்றான் ஆச்சரியமாக முகேஷ்.



"இரண்டு மாதங்களுக்கு முன்பு நீங்கள் ஓ.எம்.ஆர் ரோடில் ரொம்ப விரைவாகப் போய்க் கொண்டு இருந்தீர்கள்.

நீங்கள் என்னை மோதுவது போல் அவ்வளவு விரைவாகப் போனீர்கள். நான் சட்டென ஒரு குழியில் தவறுதலாக விழுந்ததால் தப்பித்தேன்..."

"ஓகாட்! இஸ் இட் ஸோ? அது நான் தான் என்று எப்படி உனக்குத் தெரியும்..."

"ம்... உங்கள் கார் நம்பர் ஒன்று இரண்டு மூன்று நான்கு தானே. அதை நான் நன்றாகக் குறித்து வைத்து இருந்தேன் மனதில்.

அப்புறம் அந்த வண்டி யாருடையது என்று விசாரித்த பொழுது தெரிய வந்தது... உங்களுடையது என்று."

"ஓ... காட். என்னுடைய வண்டி தான் அது. எனக்கு காரை விரைவாக ஓட்ட ரொம்ப பிடிக்கும்.

எனக்கு மெல்ல ஞாபகம் வருகிறது. ஓம்.எம்.ஆர் ரோடில் நான் விரைவாக வண்டி ஓட்டியது.

ஒரு பெண் தடுமாறிக் கீழே விழுந்தாற்போல் ஞாபகம். அன்று ஒரு ஷூட்டிங்கிற்காக வேக வேகமாகப் போய்க் கொண்டு இருந்தேன்.

அதனால் என்னவென்று கேட்கக் கூட முடியவில்லை. ஐயாம் ஸாரி. வாட் டிட் யூ திங்க் லிட்டில் நர்ஸரி மிஸ் வென் தட் அரகண்ட் ஆக்டர் ஹேஸ் நாக்ட் யூ..." என்றான்.

"ம்... நான் உங்களை அப்பொழுது திமிர் பிடித் நடிகன் என நினைத்தேன். உங்களை நன்றாகத் திட்டினேன்

"ஓ.. ஹவ் ஸேட்! சரி. அது அப்பொழுது இப்பொழுது என்ன நினைக்கிறாய் என்னைப் பற்றி?"

"ம்.. எனக்கு உங்களைப் பற்றி ரொம்பத் தெரியாது. அதனால் ஏதும் சொல்ல முடியாது."

"சே... என் லக் அவ்வளவு தான் போல. ஸோ நீ இன்னும் என்னைத் திமிர் பிடித்தவன் என்று தான் நினைத்துக் கொண்டு இருக்கிறாயா?"

"ம்... ஐ ரிஸர்வ் மை ஜட்ஜ்மெண்ட்."

"ஓ... கமான். அதற்கு ரொம்ப நாள் எடுக்காதே. அப்புறம் நான் உன்னை வற்புறுத்தி ஜட்ஜ்மெண்டை எனக்குச் சாதகமாகத் தரச் செய்து விடுவேன்."

அவள் ஏதும் சொல்லாமல் முறுவலித்தாள்.

"தட்ஸ் குட். யூ லுக் லைக் எ ரியல் கிட் வென் யூ ஸ்மைல்... இட்ஸ் நைஸ்."

அவன் சொன்னதைக் கேட்டு அவள் முகத்தில் செம்மை படர்ந்தது.

"இப்பொழுது எங்கே போகிறோம் நாம்?" என்றாள் தன்னைச் சமாளித்துக் கொண்டு.

"ஏன் என்னுடன் வர உனக்குப் பயம்மா இருக்கா?"

"இ... இல்லை. எனக்குப் பயம் ஏதும் இல்லை. பட்... எங்கே போகப் போகிறோம் என்று தெரிந்து கொள்வது தப்பா என்ன?"

"ம்... நத்திங் ராங். வி ஆர் கோயிங் டு தி ஃபௌண்டன் ரெஸ்டாரண்ட் நீ அங்கே போயிருக்கியா இதற்கு முன் ஆராதனா?"



"நர்ஸரி மிஸ் எல்லாம் அங்கே போவது ரொம்ப கஷ்டம்."

"ஓ... ஐயாம் ஸாரி. நான் உன்னை ஹர்ட் செய்யக் கேட்கவில்லை. சில நேரம் அங்கே நிறைய பார்டிகள் நடக்கும்.

தாரிணி ஏதாவது பார்டி அங்கே வைத்து இருந்தால் நீ கலந்து கொண்டு இருப்பாயே என்று நினைத்துத் தான் கேட்டேன்."

"இல்லை. அந்த மாதிரி பார்டிஸ்க்கு எல்லாம் மேடம் மட்டும் போவார்கள்."

"உனக்கு ஆசையா அந்த பார்டிஸ் எல்லாம் போக வேண்டும் என்று..."

# 4

என்
விழியில்
ஒரு
பரவசம்!
நீல
வானம்
என்னும்
கடலில்

துள்ளிக்
குதிக்கும்
வெள்ளை
மீன்கள்!
ரசிக்கிறேன்
நான்!
நீயும்
நானும்
பேசிச்
சிரித்து
மகிழ்ந்த
கடற்கரை!
உன்னை
அடிக்கடி
எனக்கு
நினைவுபடுத்தும்
இடம்!
இது மட்டும் அல்ல!
எதைப் பார்த்தாலும்
நீ தான் தெரிகிறாய்
பெண்ணே!

"இல்லை... எனக்கு அதெல்லாம் பிடிக்காது. ஐ லைக் சில்ட்ரன் எ லாட். குழந்தைகளுக்காக ஒரு பள்ளிக்கூடம் றுவ வேண்டும் என்பது என் ஆசை..."



"ஓ... குட். தட்ஸ் எ நைஸ் வொண்டர்ஃபுல் ஐடியா. ஆல் தி பெஸ்ட்..."

"தேங்க்ஸ் எ லாட் ஸார்..."

"என்னது ஸாரா... நான் ஒன்றும் உன் பள்ளிக்கூடத்தின் பிரின்சிபால் இல்லை. அதனால் என்னை அப்படி எல்லாம் அழைக்காதே.

கால் மி முகேஷ்... பை தி பை என் கேர்ல் ஃபிரண்ட்ஸ் என்னை 'முகி' என்று தான் செல்லமாக அழைப்பார்கள்..."

"நான் ஒன்றும் உங்கள் ஃபிரண்ட் இல்லை - உங்களை அப்படி அழைக்க..."

"ஓ... ஹவ் ஸேட்... சே... எனக்கு லக் அவ்வளவுதான். இவ்வளவு அழகான லிட்டில் கேர்ல் என்னை ஃபிரண்ட் இல்லை... என்று சொல்லி விட்டாளே!" என்றான் கிண்டலாக.

"ப்ளீஸ் விளையாட்டெல்லாம் வேண்டாம். இப்பொழுது நாம் எங்கே போகிறோம்..."

"முதலில் 'தி பௌண்டென் ரெஸ்டாரண்ட் போய்ச் சாப்பிட்டு விட்டு பின்பு வீட்டிற்குப் போகலாம்.

என்ன, உனக்கு ஓகே தானே?"

"ம்... சரி... உங்கள் வீட்டில் எனக்கு ஏதாவது வேலை இருக்கிறதா?" என்றாள் மெல்லிய குரலில்.

"நீ வீட்டிற்கு வா முதலில். அங்கே போனவுடன் சொல்கிறேன்..."

"ஏன் இப்பொழுது சொல்ல மாட்டீர்களா... ப்ளீஸ்

"ஆராதனா... நான் ஒன்று சொல்கிறேன் என்றால் அதில் அர்த்தம் இருக்கும். ஸோ நான் சொல்வதைக் கேள்..."

"சரி... தேங்க்ஸ்."

அதற்குள் இறங்க வேண்டிய இடம் வந்ததால் பேச்சு தடைப்பட்டது. காரை நிறுத்திவிட்டு வந்தான் முகேஷ்.

"வா... ஆராதனா... திஸ் இஸ் மை ஃபேவரைட் ப்ளேஸ். கூட்டம் அதிகம் இருக்காது. க்வாலிடி ஆஃப் ஃபுட் ஆல்ஸோ வில் பி நைஸ்."

அந்த ரெஸ்டாரண்ட் ரொம்ப அழகாக இருந்தது. நிறைய வால் ஹேங்கிங், பெயிண்டிங், நீர் ஊற்று எனப் பார்க்க ரம்மியமாக இருந்தது.

"வாங்க ஸார்... மேடம் ப்ளீஸ் கம்..." என்றார் வரவேற்பு அறையில் இருந்த ஒருவர்.

"தேங்க்ஸ்!" என்று சொல்லிவிட்டு உள்ளே நுழைந்தான் முகேஷ்.

"உட்காருங்க ஸார். வந்து ரொம்ப நாளாச்சு!" என்றான் ஒரு வெயிட்டர்.

"ஆமாம். இங்கே வந்து இரண்டு மாதங்களுக்கு மேல் இருக்கும். நான் சென்னைக்கு வந்து ஒரு வாரம் தான் ஆகுது.

ஜப்பானில் இருந்தேன். ஷூட்டிங் ஒரு வழியாக முடிந்தது... ஹவ் ஆர் யூ?" என்றான் புன்முறுவலோடு முகேஷ்.

"ஐயாம் ஃபைன் ஸார்..." என்று சொல்லியபடியே மெனு கார்டை அவனிடம் கொடுத்தான்.



"ஆராதனா, பார்... உனக்கு இதில் எது பிடிக்குமோ, அதை ஆர்டர் செய்!" என்று அவளிடம் நீட்டினான்.

மெனு கார்டை வாங்கிப் பார்த்தாள் ஆராதனா. அதில் இருந்தது ஏதும் அவளுக்குப் புரியவில்லை. ஸவுத் இண்டியன் ஃபுட் ஏதும் அவள் கண்ணில் படவில்லை.

"நீங்களே வெஜிடேரியன் ஃபுட்டா ஆர்டர் செஞ்சிடுங்க. என் கண்ணில் ஏதும் படவில்லை!" என்றாள் மெல்லிய குரலில்.

"ஓ... ஐயாம் ஸாரி... இங்கே நார்த் இண்டியன் உணவு வகைகள் தான் ரொம்ப பாப்புலர். உனக்கு ஓகேவா. ட்ரை செய்து பார்.

நன்றாக இருக்கும். ருமாலி ரொட்டி இங்கே ரொம்ப ஃபேமஸ்."

"சரி... நான் அதையே சாப்பிடுகிறேன்."

"பட் அதற்கு முன்னால் சூப் ஐயிட்டம் இருக்கு. ஸ்வீட் கார்ன் சூப்... குடிக்கிறாயா..."

"தட்ஸ் ஓகே ஃபார் மி."

பேரரிடம் ஆர்டர் கொடுத்து விட்டு ரிலாக்ஸ்டாக கால் நீட்டி அமர்ந்தான் முகேஷ்.

"அப்புறம் உன்னைப் பற்றிச் சொல் ஆராதனா... உன் கூடப் பிறந்தவர்கள்... உன்... பேமிலி பேக் ரவுண்ட்."

"எனக்கு உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. வளர்ந்தது படித்தது எல்லாமே சென்னையில் தான். அப்பாவும் அம்மாவும் ஒரு வருடம் முன்பு ஒரு விபத்தில் இறந்து விட்டார்கள்!" என்று சொல்லும் பொழுது அவளுக்குக் கண்கள் கலங்கின. குரல் உடைந்தது.

"ஸாரி... நீ கஷ்டப்பட வேண்டும் என்று நினைத்து நான் இதைக் கேட்கவில்லை. உன்னைப் பற்றி எனக்கு ஏதும் தெரியாது. அதனால் தான்.

சிரமமாக இருந்தால் வேண்டாம்!" என்றான் மென்மையாக.

தன் கைக்குட்டையை அவளிடம் நீட்டினான். அவள் அதை வாங்கிக் கொண்டாள். அவளிடமிருந்து லேசான புன்முறுவல் வெளிப்பட்டது.

"என்ன ஆராதனா... வாட் இஸ் தி மேட்டர்? ஏன் சிரிக்கற? சொன்னா நானும் சிரிப்பேன் தானே..."

"ஓ... நத்திங். உங்கள் முன் நான் அடிக்கடி அழுகிறேன். பாஞ்சாலியைக் காப்பாற்ற வந்த கண்ணன் மாதிரி நீங்கள் உங்கள் கைக்குட்டையை நீட்டுகிறீர்கள்.

நாம் சந்தித்ததிலிருந்து அதுதான் நடக்கிறது. அதை நினைத்துப் பார்த்தேன். சிரிப்பு வந்தது..."

அதைக் கேட்டு அவனும் சிரித்தான்.

"தட்ஸ் குட். டமால்ன்னு என்னைத் தெய்வம் ஆக்கிட்ட. ஐயாம் ஆன் ஆர்டினரி பெர்ஸன். தட்ஸ் ஆல்.

அப்புறம் உன் அப்பா அம்மா இறந்த பின் நீ இந்த வேலையை ஏற்றுக் கொண்டாயா?"

"ஆமாம். விபத்து நடந்த பின் என்ன செய்வது என்றே எனக்குத் தெரியவில்லை. அப்பா சென்னையில் ஒரு துணிக்கடை வைத்து நடத்தி வந்தார்.

அது நஷ்டத்தில் ஓடுகிறது என்று எனக்கு அப்பா இறந்த பின்பு தான் தெரிந்தது. வங்கிக் கடன் வேறு இருந்தது.



வீட்டை விற்றுக் கடனை எல்லாம் அடைத்தேன். அப்பாவிடம் வேறு எந்தச் சேமிப்பும் இல்லாததால் அம்மாவின் நகை எல்லாம் பிஸினெஸிலேயே அப்பா இழந்து விட்டார்.

ஆனால் பணம் இல்லாத பொழுதுதான் மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று தெரிகிறது. நண்பர்கள் உறவினர்கள் எல்லாம் நடத்திய முறையே வேறு!" என்றாள் பெருமூச்சோடு ஆராதனா.

"தட்ஸ் ட்ரு. சரி. சூப் குடி. சூடாக இருக்கிறது. பார்த்துக் குடி..." என்று அவன் சொன்னவுடன் மீண்டும் அவள் கண் களில் இருந்து கண்ணீர்.

"ஏய்... என்ன ஆச்சு?" என்று அவன் பதறினான்.

சூடாக இருக்கிறது... பார்த்துக் குடி என்று சொன்னவுடன் என்றாள் கண்களைக் கைக்குட்டையால் துடைத்தபடி.

"ஓ... ஸாரி... இனி நான் சாப்பிட மட்டுமே வாயைத் திறக்கிறேன். மை லிட்டில் மிஸ்... போதுமா."

"இல்லை இல்லை... நீங்கள் எப்பவும் போல் இருங்கள். ஐயாம் ஸாரி. இப்படிச் சும்மா சும்மா அழுவதற்கு."

"ஓ... கமான் ஆராதனா. ஏன் இதற்கெல்லாம் ஸாரி சொல்கிறாய். அழுவது ஒரு உணர்வு. அதைக் கட்டுப் படுத்தக் கூடாது.

அது உடம்பிற்கு நல்லது இல்லை. இட் வில் காஸ் ஸ்ட்ரெஸ். ஸோ நீ எப்பவும் இருப்பதைப் போலவே இரு.

எனக்காக நீ மாற வேண்டாம். யாருக்காவும் நீ உன் ஒரிஜினாலிடியை மாற்றக் கூடாது..."

"தேங்க்ஸ்!" என்று சொன்ன பொழுது அவள் முக தெளிவாக இருந்தது.

முகேஷ் நல்லவன் தான் போல. இதுவரை என்னிடம் தப்பான பார்வை ஏதும் இல்லை. நிழல் உலகில் கதைக்காக அவன் எப்படி வேண்டுமானாலும் நடிக்கட்டும்.

பட் என்னிடம் ஒழுங்காக நடந்து கொள்கிறான். அதனால் இவனை நம்பலாம் என்று தான் உள்ளுணர்வு சொல்கிறது என்று நினைத்துக் கொண்டாள்.

அதற்குப் பின்பு இருவரும் ஏதேதோ பேசியபடி சாப்பிட்டு முடித்தனர்.

சாப்பிட்டு முடித்த பின்பு மணி என்ன என்று பார்த்தாள் ஆராதனா. கைக்கடிகாரம் மணி பத்து என்று உறுதி செய்தது.

“என்ன ஆராதனா... லேட் ஆயிடுச்சா?”

“இ... இல்லை... குழந்தைங்க என்ன செஞ்சுட்டு இருப்பாங்க அப்படின்னு யோசிச்சேன்...”

“உனக்கு அந்தக் குழந்தைங்கமேல ரொம்ப அன்பு. ஆனால் தாரிணி அதற்கு ஏத்த மாதிரி நடந்துக்க மாட்டேங்கறா.

ஐ டோண்ட் நோ ஓய். உன் போல் ஒரு பெண் அந்தக் குழந்தைகளைப் பராமரிப்பதற்குத் தாரிணி ஷுட் பி ஹேப்பி....”

“ம்... தெரியவில்லை. ஏன் என்னை அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்று தெரியவில்லை...”

“நீ அழகாக இருக்கிறாய். அதனால் தான் எல்லாம்... ஷி டஸ் நாட் லைக் யூ...”

“அது... அது என் குற்றம் இல்லை. அதோடு நான் குழந்தைகளைப் பராமரிக்க வந்தேன்.



நான் எப்படி இருந்தால் என்ன? அது ஏன் மேடமிற்குத் தெரியவில்லை...”

“குட் கொஸ்டின். பட் ஐ டோண்ட் ஹேவ் ஆன் ஆன்ஸர். இன்பேக்ட் தாரிணி ஏன் தன் குழந்தைகளைப் பார்க்க ஆள் வேண்டும் என்று நினைக்கிறாள்.

ஷி இஸ் நாட் வொர்க்கிங். ஹஸ்பெண்டும் நேவியில் இருக்கிறான். அப்புறம் இவள் ஏன் இப்படி நடந்து கொள்கிறாள்?

குழந்தைகளை அவளே தங்கமாகப் பார்த்துக் கொள்ளலாமே... ஷி இஸ் க்ரேஸி...”

“மேடமிற்கு குழந்தைகளைப் பிடிக்கும். பட் வெளியில் ஏதாவது வேலை அவர்களுக்கு இருந்து கொண்டே இருக்கும்.

அதனால் ஒரு ஆள் பொறுப்பாக இருந்து பார்த்துக் கொள்வது நல்லது என அவர்கள் நினைத்து இருக்கலாம்...”

“ஓ... கமான். தாரிணியை நீ விட்டுக் கொடுக்காமல் பேச முயற்சிக்கிறாய். பட் எனக்கு அவளைப் பற்றி நன்றாகத் தெரியும்.

ஷி இஸ் எ பார்டி அனிமல். அவளுக்கு எப்பவும் செலஃபரேஷன், பார்டி இதில் எல்லாம் ஆர்வம் அதிகம்.

அங்கு செல்லக் குழந்தைகள் தடையாக இருக்கும் அதனால் தான் அவள் குழந்தைகளைப் பார்க்க ஒரு ஆ போட்டு இருக்கிறாள்.

எனக்கு இதில் துளி கூட ஒப்புதல் இல்லை ஆராத வேலைக்குப் போகும் பெண்களுக்கு வேறு வழி இல்

அதனால் தான் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள கிரச். குழந்தைகள் காப்பகம் எல்லாம் நிறைய முளைத்து விட்டன.

ஆனால் தாரிணி போன்ற பெண்கள் வாழ்க்கையை அனுபவிக்கிறோம் என்று நினைத்துக் கொண்டு வாழ்க்கையைச் சீரழித்துக் கொண்டு இருக்கிறார்கள்...''

''நீங்கள் இப்படிப் பேசுவீர்கள் என்று நான் எதிர் பார்க்கவில்லை. செலபரேஷன்ஸ். பார்ட்டி இதெல்லாம் உங்கள் வாழ்க்கையில் சகஜம் ஆச்சே...''

''ம்... நீ சொல்வது கரெக்ட் தான். மீட்டிங் கான்பிரன்ஸ் இதெல்லாம் பிஸினெஸில் இருப்பவர்களுக்கு சகஜம்.

அதே மாதிரி சினிமா துறையில் இருப்பவர்களுக்கு ஊடகங்கள், விழாக்கள், செலபரேஷன் இதெல்லாம் ரொம்ப தேவை.

பட் இதெல்லாம் தாரிணி போன்ற பெண்களுக்குத் தேவை இல்லை. இட்ஸ் வேஸ்ட் ஆஃப் டைம் மணி அண்ட் எனர்ஜி...''

''ம்... அது அவர் அவர் விருப்பம். தனி மனிதச் சுதந்திரம் என்று ஒன்று இருக்கிறது...''

''ஓ... தி லிட்டில் மிஸ் நோஸ் அபௌட் தீஸ் திங்ஸ்; ஸர்ப்ரைஸிங்! உன் மேடமை விட்டுக் கொடுக்காமல் பேசுகிறாய்.

தட்ஸ் குட். வா. போகலாமா...'' என்றான் முகேஷ் கிண்டலாக.

'சரி' என்பது போல் தலை அசைத்தாள் ஆராதனா. சட்டெனத் தன் வாழ்க்கை இப்படி மாறிவிட்டதே என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.



முன்பின் தெரியாத ஒருவன். பிரபல ஃபிலிம் ஸ்டார். அவனுடன் நான் போகிறேன். எங்கே என்று தெரியவில்லை.

எதற்கு என்று தெரியவில்லை. ஆனால் அவனிடம் எனக்கு ஒரு நெருடலோ பயமோ தோன்றவில்லை. அதனால் தான் எந்த தயக்கமும் இன்றி அவனுடன் போக முடிகிறது என்று நினைத்தபடியே அவனைத் தொடர்ந்தாள் ஆராதனா.

ஆனால் அவள் கண்களில் அவன் சிரிப்பைத் தாண்டி ஏதோ ஒரு வலி தெரிந்தது. சொல்ல முடியாத வேதனை அவன் கண்களில் அவ்வப்பொழுது தோன்றி மறைவது போல் அவளுக்குத் தோன்றியது.

''சாப்பாடு எப்படி இருந்தது ஆராதனா?'' என்றான் கார் ஓட்டியபடியே முகேஷ்.

''சாப்பாடு ரொம்ப நன்றாக இருந்தது. திஸ் இஸ் தி ஃபர்ஸ்ட் டைம் ஐயாம் ஈட்டிங் எ ஃபுட் லைக் திஸ்... தேங்க்ஸ்.''

''ஓ... குட் நீ சாப்பாட்டை ரசித்துச் சாப்பிட்டாயே. ஐ லைக்ட் இட்... அதே மாதிரி நான் உனக்குக் கொடுக்கப் போகிற வேலையையும் ரசித்துச் செய்வாய் என்று நம்புகிறன்...''

''ம்... என்ன வேலை?''

''கொஞ்சம் பொறுமையாக இரு. இதோ இன்னு கொஞ்ச நேரத்தில் வீட்டிற்குப் போய் விடுவோம். அங் வந்த பின்பு உனக்குப் புரியும் என்ன வேலை என்று.''

''ஓ... சரி... நான் காத்திருக்கிறேன்.''

ஆராதனாவின் மனதிற்குள் என்ன வேலையாக இருக்கும் என்ற எண்ண ஓட்டம் தடையின்றி ஓடியபடி இருந்தது.

கண்டிப்பாக நல்ல வேலையாகத் தான் இருக்கும். இவன் வீட்டில் யார் யார் இருப்பார்கள்? எனக்குப் பாது காப்பாக இருக்குமா என யோசித்தபடியே இருந்தாள் அவள்.

"இறங்கு ஆராதனா... வீடு வந்து விட்டது." என்று முகேஷின் குரல் கேட்டவுடன் கனவுலகில் இருந்து விழிப்பது போல் விழித்தாள் அவள்.

"ஓ... வந்து விட்டதா?" என்று முணுமுணுத்தபடியே காரிலிருந்து இறங்கினாள் அவள்.

"யெஸ்... வா உள்ளே. நீ முதலில் வீட்டைப் பார். அதற்குப் பின்பு நான் உனக்கு எல்லாம் சொல்கிறேன்..."

வீட்டின் முன்பு இருந்த வண்ணமயமான மலர்கள் சூரிய ஒளியில் தகதகத்தன. மஞ்சள், சிகப்பு, ஆரஞ்சு, வெள்ளை, கத்தரி, என எல்லா நிறங்களிலும் இருந்த மலர்களை ரசித்தபடி நடந்தாள் அவள்.

பங்களாவின் பெயிண்ட் ஜன்னல்கள் எல்லாம் பளிச்செனப் பார்க்க ரம்மியமாக இருந்தன.

"வா ஆராதனா!" என அவனே கதவைத் திறந்தான்.

"நான் இங்கே எப்பொழுதாவது தான் வருவேன். ஒரு ஹவுஸ்கீப்பர் இருக்கிறார். அவர் தான் வீட்டைப் பரா மரிக்கிறார்."

"ம்... இட்ஸ் பியூட்டிஃபுல்!" என்றாள் விழிகளைச் சுழற்றியபடி ஆராதனா.

"தேங்க்ஸ் லிட்டில் மிஸ்... ஃபார் யூவர் காம்ப்ளி மெண்ட்ஸ்..."



அவன் சொன்னதைக் கேட்டு அவள் முகம் சிவந்தது.

"இந்த ரூமிற்கு வா..." என்று ஹாலைக் கடந்து ஒரு ரூமினுள் நுழைந்தான் முகேஷ்.

அவனைப் பின் தொடர்ந்தாள் அவள். வீட்டின் தரை வுட் நிறத்தில் ஆன டைல்ஸ்களால் இருந்தது. சுவர்கள் இள நீல நிறத்தில் பெயிண்ட் செய்யப்பட்டு இருந்தன.

அவன் அழைத்துச் சென்ற இடத்தில் இருந்து கார்டன் வியூ பார்க்க ரொம்ப அழகாக இருந்தது.

"ஓ... இது ரொம்ப அழகாக இருக்கிறது!" என்றாள் ஆராதனா.

வீட்டின் மூலையில் குளிர் காய்வதற்கு ஏற்றபடி நிறையச் சிறிய விறகுக் கட்டைகள் இருந்தன. அந்த ரூமின் சுவர்கள் மட்டும் பிங்க் நிறத்தில் இருந்தன.

அலங்கார விளக்குகள் எல்லாம் கலை வண்ணம் நிரம்பி இருந்தன. இது ஏதோ பெண்ணின் அறை என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் ஆராதனா.

அங்கே சுவரில் ஒரு அழகான பெண் ஓவியம் இருந்தது. அந்தப் பெண் முகத்தில் ஒரு ஈர்ப்புச் சக்தி இருந்தது.

கண்கள் ரொம்ப கவர்ச்சிகரமாக இருந்தன. முகமு ரொம்ப அழகாக இருந்தது. யாராக இருக்கும் இந் பெண் என்று யோசித்தபடியே இருந்தாள் அவள்.

சுவரில் இருந்த ஆயில் பெயிண்டிங்குகளைக் டிலும் அந்தப் பெண் ஓவியம் ரொம்ப அழகாக இருந்

"ம்... இந்தப் படத்தில் இருப்பவர்கள் என் அ பெயர் சுந்தரி. இது அவர்களுடைய ரூம் தான்."

"ஓ... அப்படியா... இது கண்டிப்பாக ஒரு பெண்ணின் ரூமாகத் தான் இருக்கும் என நினைத்தேன்.

இவர்கள் ரொம்ப அழகாக இருக்கிறார்கள். இந்த அறையும் ரொம்ப வித்தியாசமாக இருக்கிறது. இப்பொழுது உங்கள் அண்ணி எங்கே?"

அவன் முகத்தில் சட்டென ஒரு இறுக்கம் படர்ந்தது போல் தோன்றியது அவளுக்கு. அவன் கண்கள் கோபத்தால் பளபளத்தன.

"என் அண்ணி இப்பொழுது உயிரோடு இல்லை. என் அண்ணனும் உயிரோடு இல்லை. இருவரும் ஒரு கார் விபத்தில் இறந்து விட்டனர்..."

"ஓ... ஐயாம் ஸாரி. என் வாழ்க்கையில் தான் ஒரு டிராஜடி என்று நான் நினைத்தேன். பட் உங்கள் வாழ்க்கையிலும் இந்த மாதிரி ஒன்று நடந்திருக்கும் என்று நான் துளிகூட நினைக்கவில்லை!" என்றாள் மெல்லிய குரலில் ஆராதனா.

அங்கே சில நிமிடங்கள் ஒரு கனத்த மௌனம் நிலவியது.

அவனின் துக்கத்திற்கும் கண்ணில் தெரிந்த சோகத்திற்கும் இந்த விபத்து தான் காரணம் என்று நினைத்துக் கொண்டாள் அவள்.



## 5

என்
நண்பர்கள்
எல்லாம்
சிறுகதை
போல்
என்
வாழ்வில்
தொடங்கி
முடிந்து விட்டார்கள்!
பெண்ணே!
நீ
மட்டும்
ஏன்
தொடர்கதையாக
இருக்கிறாய்!
முடிவே
இல்லாமல்
எல்லையே
இல்லாமல்
நிபந்தனையே

இல்லாமல்
எப்படி
உன்னால்
அன்பைப்
பொழிய
முடிகிறது ?
உன்னை
வார்த்தைகளால்
வர்ணிக்க
முடியாமல்
தோற்றது மொழி !

அவனே தொடர்ந்தான். "ஆராதனா! என் அண்ணனும், அண்ணியும் குடும்பமாக என்னைப் பார்க்கத் தான் சென்னைக்கு வந்தார்கள்.

பெங்களூரிலிருந்து வரும்பொழுது தான் அவர்கள் கார் விபத்துக்கு உள்ளானது. அண்ணனின் மகன் பெயர் தருண். அவன் கார் பின் சீட்டில் இருந்து வெளியே தூக்கி எறியப்பட்டான்.

கார் அப்பளமாக நொறுங்கியது. எதிரில் வந்த லாரி யோடு மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது. அதிர்ஷ்ட சமாகத் தருண் வெளியே தூக்கி எறியப்பட்டதால் உயிர் ப்பினான்.

அண்ணாவும், அண்ணியும் அந்த இடத்திலேயே ர் இழந்துவிட்டனர். ம்... எனக்கென்று இருந்த உறவுகள் ணாவும், அண்ணியும் தான்.



இப்பொழுது இருப்பது தருண் மட்டுமே. ஆனால் அவனும்... அவனும்..." என்று முடிக்க முடியாமல தடுமாறி னான் முகேஷ்.

"தருண் உடம்பிற்கு ஏதாவதா... என்ன ஆச்சு?" என்றாள் மெல்லிய குரலில் ஆராதனா.

"ம்... தருணின் உடம்பில் எந்த ப்ரச்சினையும் இல்லை. ஆனால் இந்த விபத்து நடந்த பின்பு தருண் பேசுவதே இல்லை.

விபத்து நடந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. இப்பொழுது தருணிற்கு வயது ஆறாகி விட்டது. ஆனால் பேச்சே இல்லை ஆராதனா.

அதுதான் வேதனையாக இருக்கிறது. நன்றாகப் பேசிக் கொண்டு இருந்தவன் இப்பொழுது இப்படி இருப்பதைப் பார்க்க என்னால் முடியவில்லை!" என்றான் வருந்தும் குரலில் முகேஷ்.

அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. சிறுபிள்ளை போல் அவன் கண்கள் கலங்கி நிற்பதைப் பார்க்கும் பொழுது அவள் மனம் வேதனைப்பட்டது.

"தருண் இப்பொழுது எங்கே இருக்கிறான்..."

"இங்கே தான் வீட்டில் இருக்கிறான். நான் பட ஷூட்டிங்கிற்காக அப்பப்ப போக வேண்டி இருக்கிறது.

அதனால் தருணைப் பார்த்துக் கொள்ள ஒரு நல் ஆளாக நான் தேடிக் கொண்டு இருக்கிறேன். அப்பொழு தான் நான் உன்னைச் சந்தித்தேன்.

நீ தாரிணியின் குழந்தைகளை ரொம்ப நன்றா பார்த்துப் பார்த்துக் கவனிப்பதை நான் பார்த்துத் தி

தேன். அப்பொழுது தான் தாரிணி வேறு உன்னை வேலையில் இருந்து நீக்குவது பற்றிச் சொல்லிக் கொண்டு இருந்தாள்!" என்று சொல்லிவிட்டு அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்.

"டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள் தருணின் உடல் நலம் பற்றி? ஏன் பேச மாட்டேங்கறான் என்பதற்கு ஏதாவது விளக்கம் சொல்கிறார்களா?"

"ம்... அதிர்ச்சியால் இந்த மாதிரி சில நேரத்தில் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆனால் கனிவான உபசரிப்பு இருந்தால் சீக்கிரமாகப் பழைய நிலைமைக்கு வர வாய்ப்புகள் உள்ளன என்றுதான் சொன்னார்கள் எல்லா மருத்துவர்களும்."

"ஓ... அப்படியா... நான் தருணைப் பார்த்துக் கொள்வதற்கு டாக்டர்களுக்கு எந்த அப்ஜெக்ஷனும் இருக்காது தானே?

நான் ட்ரெயிண்ட் நர்ஸ் இல்லை. பட்... ஐ லவ் சில்ட்ரன். நான் கண்டிப்பாக என்னால் முடிந்த அளவு நன்றாகப் பார்த்துக் கொள்வேன் தருணை."

"ஓ... ஆராதனா... தேங்க்ஸ், தேங்க்ஸ் எ லாட்!" என்று சட்டென்று அவள் கைவிரல்களைத் தன் கையுடன் இணைத்துக் கொண்டான்.

ஆராதனாவின் உடல் நடுங்கியது. அவன் தொடுதலுக்கு இவ்வளவு வலிமையா எனத் திகைத்தாள்.

"தேங்க்ஸ்!" என்றவன் சட்டென அவள் கையை விடுவித்தான்.

அவளால் அப்பொழுதுதான் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது.



"தருண் ரூம் எது? இப்ப போய்ப் பார்க்கலாமா?" என்றாள் ஆர்வமாக.

"போகலாம்... வா!" என்றான் லேசான புன்முறுவலோடு. கதவை லேசாகத் தட்டினான். ஆராதனாவின் இதயம் படபடத்தது.

முகேஷ் கதவை லேசாகத் தள்ளினான். அது திறந்து கொண்டது.

மெதுவாக உள்ளே சென்றான் அவன். அவனைச் சத்தமின்றிப் பின் தொடர்ந்தாள் ஆராதனா.

அந்த அறை ரொம்ப எளிமையாக இருந்தது. ஒரு சிறிய நைட் லாம்ப் எரிந்து கொண்டு இருந்தது. அதன் வெளிச்சத்தில் ஒரு நர்ஸ் புத்தகம் படித்துக் கொண்டு இருந்தாள்.

இவர்கள் வருவதைக் கண்டவுடன் அவள் அதை அவசரமாக மூடினாள். முகேஷையும், ஆராதனாவையும் பார்த்துப் புன்னகைத்தாள்.

அவள் அருகே ஒரு கட்டில் இருந்தது. கட்டில் மேல் ஒரு சிறுவன் படுத்துத் தூங்கிக் கொண்டு இருந்தான்.

வெள்ளை பைஜாமா, நீல நிற டி சர்ட் போட்டுக் கொண்டு தலையணையில் ஒரு கை வைத்து ஒருக்களித்துப் படுத்துக் கொண்டு இருந்த இந்தச் சிறிய உருவத்தைப் பார்த்து லேசாகப் புன்முறுவல் சிந்தினாள் ஆராதனா.

"போகலாமா?" என்பது போல் சைகை செய்தா
முகேஷ்.

'சரி' என்பது போலத் தலை அசைத்தாள் அவ
அறையை விட்டு வெளியே வந்த பின்பும் தருணின் மு
அவள் கண் முன்னே நிழலாடியது.

"என்ன ஆராதனா... தருணைப் பற்றி என்ன நினைக்கிற? அவன் பேசுவானா மறுபடியும்?"

"ம்... ஹி இஸ் எ பியூட்டிஃபுல் சைல்ட். ஆனால் அவனுக்கு நான் என்ன செய்ய முடியும் என்று யோசனையாக இருக்கிறது."

"ஏன்? என்ன தயக்கம் உனக்கு... சம்பளம் எவ்வளவு வேண்டும் என்று சொல்." என்றான் பட்டென. அவள் அவனை முறைத்தாள். இவன் ஏன் இப்படிப் பேசுகிறான் என்று அவள் மனம் வலித்தது.

"சொல்... ஏன் தயங்குகிறாய்?" என்றான் கோபமாக முகேஷ்.

"தருணைக் கவனித்துக் கொள்ள க்வாலிஃபைட் நர்ஸ் இருக்கிறார்கள். அதற்கு மேல் நான் என்ன செய்ய முடியும்?" என்றாள் தயக்கமான குரலில் ஆராதனா.

"ம்... ம் ஹி நீட்ஸ் லவ் அண்ட் கேர். ஃப்ரம் ஸம்ஒன் யங் லைக் யூ. அவனைப் பார்த்துக் கொள்ள நர்ஸ் இருக்கலாம். பட் ஹி நீட்ஸ் மோர் தேன் தட்.

கண்டிப்பாக நீ அவனைச் சீக்கிரமாகவே பழைய நிலைமைக்குக் கொண்டு வருவாய் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஸோ... ப்ளீஸ் ஆராதனா."

"அவ்வளவு நம்பிக்கை வைத்திருப்பவர் ஏன் சம்பளம் பற்றிப் பேசி என்னைக் கஷ்டப்படுத்தினீர்கள்..."

"ஓ காட். உனக்கு அது தான் கோபமா? ஸாரி. ஐயாம் யலி ஸாரி. என்னடா திடீரென உன் முகம் ஆரஞ்சுப் ழம் போலச் சிவந்து விட்டதே என நான் பயந்து விட்டேன்!" ன்றான் கிண்டலாக.



அவள் அதைக் கேட்டுக் கடகடவெனச் சிரித்தாள். அவள் சிரிப்பதை அவன் ரசித்தான். இயல்பாக முத்துப் பற்கள் ஒளிர ஒரு குழந்தை போல் அவள் சிரிப்பதை வைத்த கண் வாங்காமல் அவன் பார்த்துக் கொண்டு இருந்தான்.

"அப்புறம் நீ தருணைக் கவனித்துக் கொள்வதற்காக உனக்குச் சம்பளம் மாதம் இருபதாயிரம். அப்புறம் உனக்குத் தேவையானவை எல்லாம், உணவு, உடை எல்லாமே இங்கே உனக்குக் கிடைக்கும்.

அதோடு உன் படிப்பு சம்பந்தமாக உனக்கு ஏதாவது தேவைப்பட்டாலும் நீ என்னைத் தயங்காமல் கேள். நான் உனக்குப் படிக்க விடுமுறை வேண்டும் என்றாலும் தரத் தயாராக இருக்கிறேன்.

தருண் எனக்கு உயிர். சித்தப்பா, சித்து என்று என்னை ஆசையாக அழைப்பான் அவன். ஐ மிஸ் ஆல் தட்!" என்றான் வேதனையோடு முகேஷ்.

"நான்... தருணோடு நன்றாக டைம் ஸ்பெண்ட் செய்கிறேன். பட் தாரிணி மேடமிடம். தான் ஏதும் சொல்லி விட்டு வரவில்லை.

ஃபிரெண்ட், வீட்டிற்குப் போவதாக மட்டுமே சொ னேன். அதோடு, குழந்தைகளிடமும் நான் ஏதும் சொல் வில்லை. அதனால் அது எல்லாம் முடிந்த பின்பு நா இங்கே வருகிறேன். இதில் உங்களுக்கு ஆட்சேப ஏதும் இல்லையே..." என்றாள் ஆராதனா.

"ஓ... அப்படியா? அப்ப நீ எப்ப வருவ? கண்டி சொல்லிட்டு வருவியா?"

"யெஸ். ஐயாம் ஷ்யூர். நான் தாரிணியிடம் சொல்லி விட்டு வந்து விடுகிறேன்."

"அது அவ்வளவு சுலபம் என்று நினைத்தாயா? தாரிணி பற்றி எனக்குத் தெரியும்..."

காலிங்பெல் சத்தம் கேட்டது. யாராக இருக்கும்? நான் இங்கு வந்து இருப்பது யாருக்கும் தெரியாதே. மீடியா உட்பட என நினைத்தபடியே கதவைத் திறந்தான் முகேஷ்.

"ஹாய் முகேஷ். ஹவ் ஆர் யூ? இந்தப் பக்கம் வந்தேன். ஸோ உங்களைப் பார்த்துட்டு ஜஸ்ட் ஹாய் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்..." என்றாள் தாரிணி.

"ஓ... அப்படியா... வா... கம் இன்..." என்றான் முகேஷ் கூலாக.

ஹாலில் இருந்த ஆராதனா திகைத்தாள். கடவுளே! இவள் ஏன் இங்கே வந்தாள். அதுவும் இப்பொழுது. சே. என்ன செய்வது என்று அதிர்ந்தாள்.

"ஸோ நீ இங்கே வருவதற்குத் தான் பொய் சொல்லி விட்டு வந்தியா? சே. உனக்கு வெட்கமாக இல்லை?

இங்கே வந்து என்ன செய்துகிட்டு இருக்க? நீ இவ்வளவு மோசமா இருப்பேன்னு நான் நினைக்கலை."

"இன்னிக்கு என்னுடைய விடுமுறை நாள். நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன். ஐ கேன் ஸ்பெண்ட் ஹவ்எவர் ஐ வாண்ட்.

அதைப் பத்தி கேட்க உங்களுக்கு எந்த சிந்தனையும் வேண்டாம்."

"ஷட் அப். ஐயாம் நாட் இண்ட்ரஸ்டட் இன் தி எக்ஸ்க்யூஸஸ் யூ கிவ். நீ எல்லாம் திட்டமிட்டுத் தான் செய்து இருக்கிறாய்.



வேண்டும் என்றே முகேஷ் வந்தபொழுது கவர்ச்சிகரமான ஆடை உடுத்தினாய். அதோடு எப்படியோ அவர் அட்ரெஸ் தெரிந்து கொண்டு இங்கே வந்திருக்கிறாய்...

காட்! முகேஷ். ஆர் யூ ஸோ டெஸ்பரேட் நீ இவ்வளவு தரம் தாழ்ந்து போவாய் என நான் நினைக்கவே இல்லை..."

"வில் யூ கீப் கொய்ட்? என்னுடைய ஸ்பேர்டைமை நான் எப்படி வேண்டுமானாலும் செலவழிப்பேன்.

அதற்கு உங்கள் அனுமதி தேவை இல்லை!" என்று சீறினாள்.

"ஓ... இப்ப என்ன செய்யற? இங்க முகேஷிற்கு பெர்மனெண்டா கம்பெனி கொடுக்கப் போறியா?" என்று அமிலமாக வார்த்தைகள் தெறித்தன தாரிணியிடமிருந்து.

"தாரிணி! இனப். நீ பேசறது சரியில்லை. திஸ் இஸ் டூ மச். நீ இப்படிப் பேசுவது சீப்பாக இருக்கிறது!" என்று உறுமினான் முகேஷ்.

"அப்ப இவ இங்கே எதுக்கு வந்தா? ஐ ஹேவ் எ ரைட் டு நோ முகேஷ். இவளால நம்ம ஃபிரண்ட்ஷிப் கட்டாக வேண்டாம்."

"ஐ யாம் நாட் ஃபாதர்ட் அபௌட் பிரண்ட்ஷிப். பட் நீ ஆராதனா மேல் தேவையில்லாமல் பழி போடறது எனக்குப் பிடிக்கலை."

"தென் டெல் மி வொய் ஷி இஸ் ஹியர்..."

"ஆராதனா தருணைப் பார்த்துக் கொள்ளத்தான் இங்கே வந்தாள். இனிமேல் அவள் தான் தருணைப் பார்த்துக் கொள்ளப் போகிறாள். அதனால் அவள் இனி உன்னிடம் வேலை பார்க்க மாட்டாள். நீ இங்கே வந்தது நல்லதிற்குத் தான். இங்கேயே மேட்டர் முடிந்து விட்டது.

இல்லாவிட்டால் ஆராதனா உன்னிடம் தனியாக வந்து மாட்டிக் கொண்டு முழிப்பாள். ஸோ இன்றோடு எல்லாம் முடிந்து விட்டது."

"நோ... ஐ காண்ட் ரீலீவ் ஹர். அவளுக்கு என்னிடம் இருந்து செர்டிபிகேட் வேண்டும். அது இல்லாமல் அவளால் ரிஜிஸ்டர்ட் புரபஷனலாக இருக்க முடியாது."

"இட்ஸ் ஓகே. எனக்கும் அதைப்பற்றித் தெரியும். அதை எல்லாம் நான் பார்த்துப்பேன்... ஸோ நோ நீட் டு வொரி."

தாரிணியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. முகேஷைப் பற்றி அவளுக்கு நன்றாகத் தெரியும்.

அவன் முடிவு எடுத்தால் எடுத்ததுதான். பதில் மாற்றம் ஏதும் இல்லை என்பது அவளுக்குத் தெரியும். அதனால் மேலும் இதைப் பற்றிப் பேசுவது வீண் என்பது அவளுக் குப் புரிந்தது.

அவள் கோபம் எல்லாம் ஆராதனா மேல் திரும்பியது. அவளை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

"ஸோ... உன் ஜம்பம் ஏதும் என் வீட்டில் சாயவில்லை. கேஷ் நல்ல காலம் வீட்டில் இல்லை. வீட்டில் இருந்தால் வ்வளவு தான்.

நீ இந்நேரம் என்னவெல்லாம் செய்திருப்பாயோ? திருமண வாழ்க்கையே உன்னால் நாசமாகியிருக்கும். ஆர் எ வுமன் ஆஃப் நோ மாரல்ஸ்!" என்று ள்.

வள் சொன்னதைக் கேட்டு ஆராதனாவின் உடல் ம் கோபம் புகை போல் படர்ந்தது. அவள்



கன்னத்தில் அறைய வேண்டும் என்று துடித்த கைகளை அடக்கினாள் ஆராதனா.

"தாரிணி! ஸ்டாப் இட். வொய் டோண்ட் யூ லீவ் நவ்?" என்றான் முகேஷ்.

அதைக் கேட்ட தாரிணியின் முகம் அவமானத்தால் சிவந்தது. சே. வேலைக்காரியின் பேச்சு எடுபடுகிறதே இவனிடம்.

எல்லாம் நேரம் தான் எனப் பொருமினாள் தாரிணி. ஏதும் சொல்லாமல் விருட் என்று வெளியேறினாள்.

அவள் சென்ற பின்பு புயல் அடித்து ஓய்ந்தது போல் இருந்தது அங்கே.

முகேஷ் ஆராதனாவின் முகத்தைப் பார்த்தான். வருத்தத்தால் அவள் முகம் வாடி இருப்பதை அவனால் உணர முடிந்தது.

"ஆராதனா! ஐயாம் ஸாரி. தாரிணி சார்பில் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்!" என்றான் கனிவான குரலில்.

"தாரிணி சொல்வதை வைத்து என்னைத் தப்பாக எடை போட்டு விடாதீர்கள். நான் நான்..." என்று மேலும் சொல்ல முடியாமல் கண்கள் குளமாயின. வார்த்தைகள் தொண்டையிலிருந்து வெளியே வர மறுத்தன.

அவள் எவ்வளவு கஷ்டப்படுகிறாள் என்று முகேஷுக்குப் புரிந்தது. ஆங்கிலத்தில் 'கேரக்டர் அஸாஸி னேஷன்' என்று சொல்வார்கள். ஒருவரின் குணத்தைக் கொலை செய்வது போல் பேசுவது ரொம்ப கொடுமை யானது. தாரிணி செய்தது அதுதான்.

"ஆராதனா! ஜஸ்ட் இக்னோர் இட். தாரிணியைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்.

அவள் விஷம் கக்கும் பெண். ராகேஷ் ரொம்ப நல்லவன். அதுவும் எனக்குத் தெரியும்.

உன்னைப் புண்படுத்த வேண்டும் என்றே அவள் இப்படிச் சொல்லிவிட்டுப் போகிறாள். நீயும் அதைக் கேட்டு விட்டு இப்படி வருத்தப்பட்டுக் கொண்டு, கண்ணில் ரெடி யாக அணை போல் கண்ணீரைத் தேக்கி வைத்துக் கொண்டு இருக்கிறாயே...

உன்னை என்ன சொல்வது... நீ ரொம்ப ஸ்மார்ட் கேர்ல்ன்னு நினைச்சேன்... அவள் சொன்னதில் ஏதும் உண்மை இல்லை. அதற்குப் போய் இப்படி உன்னை வருத்திக் கொள்கிறாயே..." என்றான் முகேஷ்.

"ஓ... தேங்க்ஸ்... என்னை நம்பியதற்கு!" என்று கண் களைத் துடைத்துக் கொண்டாள்.

"இந்தா... என் கைக்குட்டை!" என்று புன்முறுவலோடு அவளிடம் ஒரு வெள்ளைக் கைக்குட்டையை நீட்டினான்.

அவள் அதை வாங்கிக் கண்களைத் துடைத்துக் கொண்டாள். "உன்னைப் பற்றி ஆனால் ஒன்று மட்டும் தீர்மானமாகப் புரிந்து விட்டது எனக்கு!" என்றான் முகேஷ்.

"என்ன... எனக்குப் புரியவில்லை."

"நீ சரியான அழுமூஞ்சி. உனக்காக நான் நிறையக் கைக்குட்டைகள் வாங்கி ரெடியாக வைக்க வேண்டும்..."

அதைக் கேட்டு லேசாகப் புன்முறுவல் பூத்தாள் ஆராதனா.



"தட்ஸ் குட். கொஞ்ச நேரம் நீ ஓய்வு எடு ஆராதனா. நேற்று நீ சரியாகத் தூங்கி இருக்க மாட்டாய். அதனால் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு.

அப்புறம் உனக்கு வேண்டிய டிரெஸ், மேக்கப் பொருட்கள் எக்ஸ்ட்ரா எல்லாம் நீ இன்று சாயங்காலம் வாங்கிக் கொள்ளலாம்.

இந்தா, இதை முன் பணமாக வைத்துக் கொள். அப்புறம் டிரெஸ் விஷயத்தில் எல்லாம் கஞ்சத்தனமாக இருக்காதே. நல்ல உடை அணிந்தால் மனம் புத்துணர்ச்சி யாக இருக்கும்!" என்று சொல்லியபடியே ஐந்நூறு ரூபாய்க் கட்டு ஒன்றை அவளிடம் நீட்டினான்.

அவள் அதை வாங்கத் தயங்கினாள். அவள் தயக்கத்தை அவனும் கவனித்தான்.

"ஆராதனா! கமான்... என்ன தயக்கம்... ப்ளீஸ் வாங்கிக்கோ..."

"நான் வாங்கிக் கொள்கிறேன். பட் என் சம்பளத்தில் இருந்து இதைக் கழித்துக் கொள்ளுங்கள்.

எனக்கு... எனக்கு ஏனோ மனம் ஒப்பவில்லை. அதனால் தான் சொல்கிறேன். தப்பாக நினைத்துக் கொள் ளாதீர்கள்!" என்றாள் ஆராதனா மெதுவாக.

"ஓகே... உனக்கு அதுதான் மனதிற்கு நிம்மதியைத் தரும் என்றால் ஐயாம் ஓகே ஃபார் தட்.

உன் நிலைமை எனக்குப் புரிகிறது. நான் உன்னை வற்புறுத்த விரும்பவில்லை. ஸோ டோண்ட் ஓரி. பே கேர்."

"தேங்க்ஸ் ஃபார் அண்டர்ஸ்டாண்டிங்."

"சரி, ஆராதனா. எனக்கு வேலை இருக்கு. அதனால் நான் இப்ப கிளம்ப வேண்டும்.

எப்படியும் நைட் வந்து விடுவேன். பத்து மணிக்குள் வந்து விடுவேன். எனக்காகக் காத்திருக்க வேண்டாம். சாப்பிட்டு விட்டுத் தூங்கு.

நாளைக்கு உன்னைத் தருணிற்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன். எதையும் மனதில் வைத்துக் கொள்ளாமல். ரிலாக்ஸாக இரு..." என்றான் புன்முறுவலோடு முகேஷ்.

## 6

நீ
பார்த்த
அந்த
முதல்
பார்வை
சூரியனைப்
பார்த்து
முதல்
முதலாக
மலர்ந்த
தாமரை
மொட்டை



எனக்கு
நினைவு
படுத்துகிறது!
சூரியன்
தனக்கே
தனக்கு
எனச்
சொந்தம்
கொண்டாடும்
தாமரை!
இது
நடக்குமா
நடக்காதா
பொய்யா
மெய்யா
என்று
தாமரைக்குத்
தெரியாது!

முகேஷ் சென்ற பின்பு ஆராதனாவிடமிருந்து ஒ[...] பெருமூச்சுப் பிறந்தது. சட்டெனத் தன் வாழ்க்கை மா[...] விட்டதை நினைத்துத் திகைத்தாள்.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. யாராக இருக்[...] என்று நினைத்தபடியே கதவைத் திறந்தாள்.

"மேடம்! நான் தான் ஹவுஸ்கீப்பர். உங்களுக்கு லன்ச் எப்ப ரூமிற்கு கொண்டு வரட்டும்?

ஸார் சொல்லிட்டுப் போனார். உங்களை நன்றாகப் பார்த்துக் கொள்ளச் சொன்னார்!" என்றாள் புன்முறுவலோடு ஐம்பது வயது மிக்க ஒரு பெண்மணி.

"ஓ... அப்படியா... எனக்கு இப்ப பசிக்கலை. காலையில் சாப்பிட்டதே டொம்ன்னு இருக்கு.

வேணும்னா நான் வந்து சாப்பிடறேன். நீங்க சிரமப் பட வேண்டாம். உங்க பேர் என்ன?"

"ஓ... சாரி.

பேர் சொல்லலை பாருங்க. என் பெயர் மேகலா. ஐயாவிற்கு, தருணிற்கு அப்புறம் நர்ஸ், இவங்க எல்லாருக்கும் சேர்த்து நான்தான் சமையல் செய்வேன்.

இன்னிக்கு நான் நாலு மணிக்குக் கிளம்பிப் போகணும். பொண்ணோட குழந்தைக்கு இன்னிக்கு பேர் வைக்கறாங்க. பாட்டி நான் போகாட்டி நல்லா இருக்காது.

அதனால ஐயாகிட்டே ஒரு வாரம் முன்னாடியே பெர்மிஷன் வாங்கிட்டேன். எதுவும் டின்னர் செய்ய வேண்டாம், அப்படின்னார்.

பிரெட் போதும்னார். நான் உங்களுக்கு வேணா ஏதாவது செய்து வைக்கட்டுமா... உப்புமா, இல்லை, சப்பாத்தி கிழங்கு..." என்று இழுத்தாள் மேகலா.

"அச்சோ... வேண்டாம். ப்ளீஸ் எனக்காக நீங்க ஏதும் செய்ய வேண்டாம். பிரெட் போதும் எனக்கு."

"சரிங்க... அப்ப நான் கிளம்பறேன். என்ன வேணும்னாலும் தயங்காமல் கேளுங்க."



"சரி... தேங்க்ஸ்!" என்றாள் புன்முறுவலோடு ஆராதனா.

அவள் அறையின் ஜன்னல் வழியாகப் பார்க்கும் பொழுது தோட்டத்தில் இருந்த பூக்கள் எல்லாம் அணி வகுத்து வண்ண உடையோடு நிற்பது போல் இருந்தது அவளுக்கு.

தாரிணி தன்னைப் பற்றிச் சொல்லியது ஏனோ காதில் ஒலித்தது. சே... அமிலத் துளிகள் போல் வார்த்தைகளை எப்படி இவளால் சிந்த முடிகிறது என அதிர்ந்தாள் ஆராதனா.

அங்கிருந்த படுக்கையில் உட்கார்ந்தாள் ஆராதனா. ஏனோ அம்மாவின் ஞாபகம் வந்தது. அந்த விபத்து நடக்காமல் இருந்தால் என் வாழ்க்கை இப்படி மாறி இருக்காது.

எல்லாமே தலை கீழாக. யாருக்கும் நான் எந்தக் கெடுதலும் நினைக்கவில்லை. ஆனால் ஏன் எனக்கு மட்டும் இப்படி என நினைத்து வருந்தினாள்.

சுயபச்சாதாபம் ஆராதனாவிற்குப் பிடிக்காது. ஆனால் அதிர்ச்சி மேல் அதிர்ச்சி ஏற்பட்டதாலோ என்னவோ மனம் சோர்வாக இருந்தது அவளுக்கு.

கண்களை மூடிக் கொண்டு இருந்தவள் தன்னை மீறிக் கண் அயர்ந்தாள். ஏதோ பறவைகள் சத்தம் கேட்டது போல் தோன்றியது ஆராதனாவிற்கு.

சட்டெனக் கண் விழித்துப் பார்த்தாள் அவள். இருள் சூழ ஆரம்பித்து இருந்தது. பறவைகள் கூட்டம் கூட்ட மாகப் பறந்து போய்க் கொண்டிருந்தன.

அந்தச் சத்தத்தில் தான் கண் விழித்து விட்டேன் போல என நினைத்தபடியே கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஆறு என உறுதிப்படுத்தியது.

வானத்தில் ஒன்று இரண்டு நட்சத்திரங்கள் ஒளிர்ந்து கொண்டு இருந்தன. மதியம் சாப்பிடாததால் பசி எடுக்கத் தொடங்கியது.

வயிறு தன் வேலையைச் சரியாகச் செய்கிறது என நினைத்தபடியே அறையிலிருந்து வெளியேறினாள். வீடு நிசப்தமாக இருந்தது.

சமையல் அறை சென்றவள் அங்கு சாப்பிட என்ன இருக்கிறது என்று பார்த்தாள்.

“மேடம்! மணி ஆறாகுது. நான் கிளம்பணும்!” என்றாள் தருணைப் பார்த்துக் கொண்டு இருந்த நர்ஸ்.

“ஓ... சரி... தருண் என்ன செய்து கொண்டு இருக்கிறான் இப்ப? அவனுக்கு எது சாப்பிடப் பிடிக்கும்? எனி ஐடியா?”

“ம்... தெரியாது மேடம். தருண் இப்ப நல்லாத் தூங்கறான். இன்னும் கொஞ்ச நேரத்தில் கண் விழிப்பான்...”

“ஓகே... நான் பார்த்துக்கறேன்...”

தருண் மாதிரி பசங்க எப்பவும் உருளைக்கிழங்கு விரும்பிச் சாப்பிடுவாங்க. ஸோ ஐ கேன் ட்ரை திஸ் என்று நினைத்தபடியே சமையல் அறையினுள் நுழைந்தாள் ஆராதனா.

சமையல் அறை நல்ல விசாலமாக, சுத்தமாக இருந்தது. எல்லாச் சாமான்கள் மேலும் ‘லேபில்’ இருந்ததால் எது ங்கே என்று கண்டுபிடிப்பது சுலபமாக இருந்தது.



பூரிக் கிழங்கு செய்யலாம் என முடிவு செய்தாள் ஆராதனா. கூடவே பொங்கல் சட்னியும் செய்தால் எது பிடிக்குதோ அதைச் சாப்பிடட்டும் தருண் எனத் தீர்மானித்தாள்.

தூங்கியதால் உடல் புத்துணர்ச்சியாக இருப்பது போல் உணர்ந்தாள். அவள் மூன்று பேருக்குத் தேவையான பூரிக் கிழங்கு, பொங்கல் சட்னி என எல்லாம் செய்து முடிக்கும் பொழுது இரவு எட்டு.

தருண் அறைக்குள் போய் அவனை எழுப்பலாமா என யோசித்தாள். பின் வேண்டாம் எனத் தீர்மானித்தாள். தருண் அவளைப் பார்த்ததே இல்லை.

அவள் யார் என்றே அவனுக்குத் தெரியாது. அதனால் கண்டிப்பாகத் தருண் ஒரு மாதிரி ‘ஃபீல்’ செய்வான்.

அதனால் முகேஷ் வரட்டும். வந்த பின்பு இருவருமே டின்னர் சாப்பிடட்டும் என்று முடிவு செய்தாள். அவள் அறைக்கு மீண்டும் சென்றாள்.

டீப்பாய் மேல் சில புத்தகங்கள் இருந்தன. அதில் ஏனோ மனம் பதியவில்லை. அங்கிருந்த தொலைக் காட்சிப் பெட்டியை உயிர்ப்பித்தாள்.

ஏதோ ஒரு பழைய பாடல் ஒளிபரப்பாகிக் கொண்டு இருந்தது ஒரு அலை வரிசையில். இன்னொரு அலை வரிசையில் கார்டூன் ஏதோ ஒன்று ஓடிக் கொண்டு இருந்தது.

கார்டூன் பார்ப்பதே உத்தமம் என முடிவு செய்தவள் அந்த அலைவரிசையை மாற்றாமல் அதையே தொடர்ந்து பார்த்தாள்.

கார்டூனில் மூழ்கியவளுக்கு அறையின் வெளியே என்ன நடக்கிறது என்று தெரிய வாய்ப்பு இல்லை.

"ம்... நீ ஒரு கிட் என்பதை நிருபித்து விட்டாய். கார்டூனை லயித்துப் பார்த்துக் கொண்டு இருக்கிறாயே!" என்று முகேஷ் குரல் அருகே கேட்க, திடுக்கிட்டுத் திரும்பினாள்.

கதவருகே நின்றபடி இருந்தான் முகேஷ். எவ்வளவு நேரமாக அவன் அங்கே நின்று இருப்பானோ எனப் பதறியபடி பட்டெனத் தொலைக்காட்சியை நிறுத்தினாள் அவள்.

"கூல் ஆராதனா... ஏன் இவ்வளவு பதட்டம்? கார்டூன் என்றால் பிடிக்குமா..." என்றான் முகேஷ்.

"ஆமாம்... போர் அடித்தது. அதுதான். தருண் தூங்கிக் கொண்டு இருக்கிறான். வீட்டில் யாரும் இல்லை. அதான்... ஸாரி..."

"இட்ஸ் ஓகே. ஏன் சின்ன விஷயத்திற்கு இவ்வளவு பதட்டப்படுகிறாய். டிவி பார்ப்பது தப்பே கிடையாது.

ஆனால் நீ கார்டூன் பார்த்தது தான் எனக்குக் கஷ்டமாக இருக்கிறது."

"ஸாரி நான்... வேற என்ன பார்த்திருக்கணும்?" என்றாள் மெல்லிய குரலில்.

"ம்... நான் நடித்த படம் ஒரு அலை வரிசையில் ஒளி பரப்பாகிறது.

நீ அதைப் பார்த்தால் ஐயா சந்தோஷப்படுவேன்!" என்றான் கண்களில் குறும்பு மின்ன.

அவன் கிண்டல் அடிக்கிறான் என்பதை அவள் உணர்ந்தாள். அவள் இதழ்களில் புன்முறுவல் பூத்தது.

"ரொம்ப லேட்டாகி விட்டதே. வாங்க. சாப்பிட லாமா? தருணை எழுப்பலாமா?" என்றாள் ஆராதனா.



"ஓ... ஒரு பத்து நிமிஷம் டைம் கொடுங்க மேடம். ஃபாஸ்ட்டா குளிச்சிட்டு வந்திடறேன்..." என்றான் முகேஷ்.

அவன் சென்ற பின்பு அவன் கண்களில் தெரிந்த குறும்பும் உதடுகளில் தெரிந்த புன்னகையும் அவள் கண் முன்னே நிழலாடியது.

தன் மனதில் தோன்றிய உணர்வை அடக்கிக் கொண்டு சமையல் அறை நோக்கிச் சென்றாள் அவள்.

சமையல் அறையில் இருந்த உணவுப் பொருட்களை எல்லாம் டைனிங் டேபிளில் வைத்து மூடினாள்.

குளித்துவிட்டு இரவு உடையில் வந்து கொண்டிருந்த முகேஷை ஏனோ நிமிர்ந்து பார்க்கத் தயக்கமாக இருந்தது அவளுக்கு.

"ஏன் ஆராதனா இந்த வேலை எல்லாம் நீ செய்கிறாய். மேகலா ஆன்ட்டி எங்கே?"

"ம்... அவர்கள் இன்னிக்கு சீக்கிரம் போகணும் அப்படின்னு சொன்னாங்க. அவங்க பொண்ணோட குழந்தைக்கு இன்னிக்கு பேர் வைக்கறாங்களாம்.

உங்ககிட்ட முன்னாடியே சொன்னாங்களாம். இன் பேக்ட் நான் ரொம்ப ஸிம்பிளான டின்னர் தான் செஞ்சேன்..."

"ஓ... ஆமாம். ஆன்ட்டி என்னிடம் சொன்னாங்க. நான்தான் மறந்துவிட்டேன். இந்த ஷூட்டிங் ஷெட்யூலில் எல்லாமே மறந்து போய் விடுகிறது."

"சரி... தருணிற்கு இந்தச் சாப்பாடு பிடிக்குமா? நான் கெஸ் வொர்க் செஞ்சு தான் பூரியும், உருளைக் கிழங்கும் செய்தேன்..."

"ஓ– தட்ஸ் ஹிஸ் ஃபேவரைட். யூவர் கெஸ் இஸ் கரெக்ட் வா. தருணைப் போய்ப் பார்க்கலாம்."

அவனைப் பின் தொடர்ந்தாள் ஆராதனா. ஏனோ மனம் படபடத்தது.

தருணின் அறைக் கதவு திறந்தே இருந்தது. டிவியில் ஏதோ குழந்தைகளுக்கான ப்ரோக்ராம் ஓடிக் கொண்டு இருந்தது.

ஆனால் தருண் அதைப் பார்க்கவில்லை. மோட்டு வளையைப் பார்த்தபடி இருந்தான். அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது அவளுக்கு.

அவன் கண்களில் ஏனோ ஒளி குன்றி இருப்பது போல் தோன்றியது அவளுக்கு.

"தருண், ஹவ் ஆர் யூ. இவங்க பேர் ஆராதனா. இனிமே இவங்க உன்கூட இருப்பாங்க. ஷி இஸ் எ நைஸ் கேர்ல். ஷி வில் ஹெல்ப் யூ ஃபார் ஆல்.

ஓகேவா. சாப்பிடலாம். கமான்..." என்றான் அவன் தலையைக் கோதியபடி முகேஷ்.

தருண் ஏதும் பேசவில்லை. ஆராதனாவை ஒரு நிமிடம் பார்த்தான். பின் எழுந்து நின்றான். "ஹாய் தருண்!" என்று சிநேகமாகப் புன்னகைத்தபடி கை நீட்டினாள் ஆரா தனா.

ஏதும் சொல்லாமல் லேசாகப் புன்னகைத்தான் தருண்.

"வா தருண்!" என்று அவன் கைமணிக்கட்டைப் பற்றிக் கொண்டு நடந்தாள் ஆராதனா.

டைனிங் டேபிளில் முகேஷும், தருணும் அமர்ந் தனர். "தருண்! உனக்குப் பிடிக்கும் என்று நான் பூரி, கிழங்கு செய்து இருக்கேன்.



சாப்பிட்டு முடித்த பின் எப்படி டேஸ்ட் என்று சொல். நீ நல்லாயிருக்கு என்று சொன்னால் ஐ வில் பி ஹேப்பி!" என்றாள் உற்சாகமாக.

தருணின் முகத்தில் எந்த சலனமும் இல்லை. "ஆரா தனா... ஸோ நாங்க தான் இன்னிக்கு சோதனை எலிகளா... உன் சமையலுக்கு?" என்றான் சிரிக்காமலே முகேஷ்.

"ஓ... நான் நன்றாகச் சமைப்பேன் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இருந்தாலும் நீங்கள் சாப்பிட்டு விட்டுச் சொல்லுங்கள்."

"ம்... கடவுளே! காப்பாற்று!" என்று கண்மூடிச் சத்தமாக வேண்டினான் முகேஷ்.

"ஓ... இது ரொம்ப மோசம்... என்ன நீங்க இப்படி செய்யறீங்க. தருண் பாருங்க, குட் பாயா சாப்பிடறான்."

"டேய் தருண். பாருடா. நீ குட்பாயாம். சித்தப்பா குட் இல்லையாம்!" என்றான் முகத்தைச் சோகமாக வைத்தபடி முகேஷ்.

ஆராதனா கடகடவெனச் சிரித்தாள். தருண் உதட்டில் லேசான புன்முறுவல் பூத்தது.

அதைக் கவனித்த முகேஷின் முகத்தில் நிம்மதி படர்ந்தது. பரவாயில்லை. என் கணிப்பு வீணாகவில்லை. தருண் முகத்தில் இறுக்கம் குறைந்து இருக்கிறது.

இவனுக்குக் கண்டிப்பாக ஆராதனாவைப் பிடிக்கும். இன்னும் கொஞ்ச நாளில் நிலைமை இன்னும் சீராகும். எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று தனக்குத் தானே பேசிக் கொண்டான் முகேஷ்.

"என்ன நிஜமாலுமே சாப்பாடு நல்லா இல்லையா? ஏன் சட்டுன்னு அமைதியாயிட்டீங்க."

"நோ... ஏதோ யோசனை. பூரியும் கிழங்கும் ரொம்ப
அருமை. தேங்க்ஸ் ஃபார் இட்.

இன்ஃபேக்ட் எனக்குப் பொங்கலே பிடிக்காது. சினிமா
போஸ்டர்ஸ் ஒட்ட யூஸ் பண்ற அயிட்டம் மாதிரி அதை
என்று நினைத்து அதை ஒதுக்கி விடுவேன் எப்பொழுதும்.

பட் திஸ் இஸ் வெரி நைஸ். ரொம்ப வித்தியாசமா
இருக்கு!" என்று சொல்லியபடியே ரசித்துச் சாப்பிட்டான்
முகேஷ்.

தருண் ஏதும் சொல்லாமல் இரண்டு பூரி சாப்பிட்ட
பின்பு கை கழுவ எழுந்தான்.

"தருண்! என்ன இது அதுக்குள்ள கை கழுவப்போற
ப்ளீஸ் இன்னும் ஒரு பூரி வாங்கிக்கோ." அவள் சொன்ன
வதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் தருண் அங்கிருந்து
வெளியேறினான்.

ஆராதனாவின் முகம் வாடியது. அதைக் கவனித்
தான் முகேஷ்.

"ஆராதனா... உன் மனம் கஷ்டப்படுகிறது என்று
எனக்குப் புரிகிறது. பட் புரிந்து கொள். இதுதான் நீ தருணை
முதல் முதலாகச் சந்திப்பது.

அதனால் ரொம்ப எதிர்பார்க்காதே. உன் ஏமாற்றம்
எனக்குப் புரிகிறது. நிஜத்தைச் சொல்ல வேண்டும்
என்றால் தருணின் முகத்தில் லேசான புன்னகை இன்று
தான் தெரிந்தது.

அதற்குக் காரணம் உன் அப்ரோச். ஸோ டோண்ட்
கிவ் அப் தி ஹோப்ஸ். எனக்கு நம்பிக்கை இருக்கிறது.
தருண் நிலைமையில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.



நீ கொஞ்சம் பொறுமையாக இரு. நீ சரியான வழியில்
தான் சென்று கொண்டு இருக்கிறாய்!" என்றான் முகேஷ்.
சிறு குழந்தையிடம் பேசுவது போல.

அவள் முகம் மலர்ந்தது. முகேஷை நன்றியோடு
பார்த்தாள்.

"தேங்க்ஸ்... தேங்க்ஸ் எ லாட்!" என்றாள் ஆராதனா.

"சரி... நீயும் சாப்பிடுவது தானே. நாளையிலிருந்து
நீயும் தருணோடு சேர்ந்து சாப்பிடலாம். யூ மேக் யூவர்
செல்ஃப் கம்பர்டபிள்..."

"சரி..."

"ஸோ உன் முதல் நாள் இங்கே நன்றாக இருந்
திருக்கும் என நினைக்கிறேன்.

சாப்பிட்டு விட்டுத் தூங்கு. குட் நைட்."

"குட் நைட்..." என்றாள் ஆராதனா.

அவன் போன பின்பு தருணைப் பற்றி யோசித்த
படியே சாப்பிட்டாள் ஆராதனா.

பாவம்! அந்த விபத்தில் பெற்றோரைப் பறிகொடுத்த
பின்பு தருண் இப்படி மாறிவிட்டான் போல. நிச்சயமாக
அது ஒரு பெரிய அதிர்ச்சியாகத்தான் இருந்திருக்கும்.

என்னாலேயே இன்னும் அம்மா, அப்பாவின்
நினைவுகளில் இருந்து மீள முடியவில்லை. என் வாழ்க்கை
யைப் புரட்டிப் போட்டு விட்டது அவர்களின் மரணம்.

பாவம், தருண் ரொம்ப சின்னப் பையன். அதோடு
விபத்து நடந்த இடத்தில் வேறு அவன் இருந்து இருக்கி
றான்.

அதனால் இந்த அதிர்ச்சியில் இருந்து மீள ரொம்ப நாளாகும் என நினைத்தபடியே சாப்பிட்டு முடித்தாள்.

பணம் இருக்கிறது. என்ன வேண்டுமோ அதை வாங்கிக் கொடுக்க முகேஷ் இருக்கிறான். இருந்தும் தருண் ரொம்ப பாவம் என நினைத்துக் கொண்டாள் ஆராதனா.

தன் அறைக்குச் சென்றவளுக்கு ஏனோ உடனே தூக்கம் வரவில்லை. சுவரில் இருந்த அழகி தன்னைப் பார்த்துச் சிரிப்பது போல் தோன்றியது அவளுக்கு.

ஏதோ பிரமை தான் எனக்கு என எண்ணியபடியே கண்களை மூடித் தூங்க முயற்சித்தாள் ஆராதனா.

## 7

கனவுகள்
நிஜமாகுமா ?
நதியோரம்
நான்
நின்று
கொண்டு
இருக்கிறேன்!
பறவைக்
கூட்டம்
என் தலை



மேலே!
ஒரு பறவையின்
முகத்தில்
நீ
தெரிகிறாய்!
எனக்கும்
இரண்டு இறக்கைகள்
வேண்டும்!
பறவையாக
மாற!
உன்னுடன்
சேர்ந்து
பறக்க!
பரந்த
வானில்
மேகக்
கூட்டங்களைத் தாண்டி!
கனவுகள்
நிஜமாகுமா ?

“தருண்! நாம் ரூமை விட்டு வெளியே போய் விளையாடலாமா...

உனக்கு என்ன கேம்ஸ் பிடிக்கும்? சொல்லு பார்க்கலாம்,” என்றாள் உற்சாகமாக.

தருண் முகத்தில் எந்த உணர்வும் இல்லை.

அன்று காலையிலிருந்து தருணை எப்படியாவது அறையை விட்டு வெளியே வரச் செய்ய வேண்டும் என்று முயற்சி செய்து பார்த்தாள் ஆராதனா.

ஆனால் தருண் அதற்கு ஒத்துழைக்கவில்லை. அவன் அந்த அறையிலேயே முடங்கிக் கிடப்பது ஏனோ அவளுக்குப் பிடிக்கவில்லை.

சட்டென ஒரு யோசனை தோன்றியது அவளுக்கு. அவளுக்குக் காகிதத்தில் சின்னச் சின்னப் பொம்மைகள் செய்யத் தெரியும்.

அவளுடைய படிப்பில் 'ஓரிகாமி' ஒரு பகுதி. தன் அறைக்குச் சென்றவள் அங்கே இருந்த காகிதத்தை எடுத்தாள்.

கத்தரிக்கோல் ஒன்றையும் எடுத்துக் கொண்டு தருணின் அறைக்குச் சென்றாள்.

தருண் கட்டிலில் உட்கார்ந்து இருந்தான். அவன் கண்ணில் படுமாறு கீழே உட்கார்ந்தாள்.

காகிதத்தையும், கத்தரியையும் கொண்டு ஒரு விமானம் செய்தாள். தருண் என்ன செய்கிறான் என்று அவ்வப்பொழுது பார்த்தபடி விமானத்தைச் செய்து முடித்தாள்.

தருண் கண்ணில் ஆர்வம் தெரிந்தது. மனதிற்குள் சிரித்துக் கொண்டாள் அவள்.

தருண் கட்டிலில் இருந்து இறங்கி அவள் அருகே வந்து உட்கார்ந்தான்.

'வாடா வா!' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.



தானே ஒரு காகிதத்தை எடுத்து தருண் ஏதோ செய்ய முயன்றான். விமானத்தின் வால் பகுதி மட்டுமே அவனால் சரியாகச் செய்ய முடிந்தது.

அவன் முகம் வாடுவதைக் கவனித்தாள் அவள். “தருண்! நாம இரண்டு பேரும் மறுபடியும் செய்யலாம்,” என்றாள் உற்சாகமாக.

'சரி' என்பது போல் தலை அசைத்தான் தருண்.

அவள் மெதுவாகக் காகிதத்தில் விமானம் மீண்டும் செய்யத் தொடங்கினாள். தருணும் அதைப் பார்த்துச் செய்யத் தொடங்கினான்.

தருண் அவள் செய்வதைப் பார்த்துப் பார்த்து அழகாக ஒரு விமானம் வடிவமைத்தான். அதைச் செய்யும் பொழுது அவன் கண்களில் தெரிந்த ஒளி, ஆர்வம் எல்லாவற்றையும் கவனித்தாள் ஆராதனா.

“வாவ் தருண்... ரொம்ப நல்லா இருக்கு. இப்ப இதை நாம் பறக்கவிடலாமா? வா, வெளியே போய் விடலாம்.”

தருண் உற்சாகமாகத் தலை ஆட்டினான். ஆராதனா அவன் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தாள்.

தோட்டத்தில் காற்று இதமாக இருந்தது. பூக்களின் நறுமணம் மனதிற்கு இதம் அளித்தது.

விமானத்தை லேசாக மேலே காற்றில் வீசினாள் ஆராதனா. அது காற்றில் சில நொடிகள் மேலே அங்கும் இங்கும் பறந்தது.

அப்புறம் கீழே விழுந்தது. தருணும் அதே போல் காகித விமானத்தை விட்டெறிந்தான். ஆனால் 'விஷ்' என்று அவன் ஏதோ குரல் எழுப்பியது போல் தோன்றியது அவளுக்கு.

என்ன, எனக்கு ஏதாவது பிரமையா? இல்லை, தருண் நிஜமாலுமே குரல் எழுப்பினானா எனக் குழம்பினாள் அவள்.

கீழே கிடந்த விமானத்தை எடுத்து மீண்டும் அவனிடம் கொடுத்தாள். அவன் அதை மேலே விட்டு எறிந்தான்.

மீண்டும் 'விஷ்' என்ற ஒலி அவளுக்குத் தெளிவாகக் கேட்டது. கடவுளே! தருண் ஏதோ பேச முயற்சிக்கிறான்.

தன்னை மறந்த நிலையில் அவன் இதைச் செய்கிறான். எவ்வளவு ஒரு நல்ல விஷயம் இது. காட்! ஐயாம் ஸோ ஹேப்பி எனத் தனக்குள்ளே மகிழ்ந்தாள்.

அவளை அறியாமல் ஏனோ அவள் கண்கள் கலங்கின.

"ஹாய் தருண். குட் டு ஸீ யூ ஹியர்!" என்று ஒரு புதிய ஆண் குரல் கேட்க சட்டெனத் திரும்பினாள் ஆராதனா.

அங்கே ஒரு இளைஞன் நின்று கொண்டு இருந்தான். அவளைப் பார்த்துச் சிநேகமாகப் புன்னகைத்தான்.

'இவன் யார்' என்று யோசித்தபடியே அவளும் புன்னகைத்தாள் ஆராதனா.

"ம்... ஐயாம் டாக்டர் சஞ்சய். தருணிற்கு நான்தான் ட்ரீட்மெண்ட் கொடுக்கிறேன். நீங்க..." என்று இழுத்தான்.

"நான் ஆராதனா. தருணைப் பார்த்துக் கொள்வதற்குப் புதிதாக நியமிக்கப்பட்டு இருக்கிறேன்."

"ஓ... நீங்கள் தானா அது? நான் யாரோ ஒரு வயதான பெண்மணி இருப்பார்கள் என நினைத்தேன்.

ஒரு சதவீதம் கூட இந்த மாதிரி ஒரு அழகான இளம் பெண்ணை எதிர் பார்க்கவில்லை. இட்ஸ் எ நைஸ் சர்ப்ரைஸ்.



யூ லுக் வெரி பியூட்டிஃபுல்... இதற்கு முன் எங்கே இருந்தீர்கள்?"

அவன் சொன்னதைக் கேட்டு அவள் முகம் சிவந்தது. முதல் சந்திப்பிலேயே இப்படி எல்லாம் எப்படிப் பேச முடிகிறது என்று ஆச்சரியப்பட்டாள் ஆராதனா.

"என்னங்க சட்டுன்னு அமைதியாயிட்டீங்க. நான் மனசில பட்டதைப் பட்டுன்னு சொல்லிடுவேன்.

உங்களை மாதிரி ஒரு பெண் பார்த்துக் கொள்ளறதா இருந்தா நானும் தருண் மாதிரி இருக்கக் கூடாதா என மனசு அடிச்சுக்குது!" என்றான் கூலாக.

இவன் என்ன, விட்டால் ரொம்ப பேசிக் கொண்டே போறானே... சே... சரியான ஆள்தான் என அவனை மனதிற்குள் திட்டினாள் ஆராதனா.

"என்னங்க, தருண் பேச மாட்டேன்னு அடம் செய்யறான். நீங்களும் இப்படி அடம் பிடிச்சா என்ன அர்த்தம்...?

நான் உங்களையும் பரிசோதிக்கணும் போல இருக்கு!" என்று சொல்லியபடியே சட்டென அவள் மணிக்கட்டைப் பற்றினான் சஞ்சய்.

"ஹாய் டாக்டர்... ஹவ் ஆர் யூ. ஷி இஸ் ஆராதனா!" என்று முகேஷின் குரல் அருகே கேட்க, சட்டெனக் கையை இழுத்துக் கொண்டாள் ஆராதனா.

"ஹாய் முகேஷ். நீங்க அறிமுகப்படுத்தி வைக்கறதுக்கு முன்னாடியே நாங்க அறிமுகமாகிக் கொண்டோம்.

இட்ஸ் எ நைஸ் ஸர்ப்ரைஸ் டு ஸீ எ க்யூட் கேர்ல் லைக் ஆராதனா ஹியர்.

நான் ஒரு வயதான பாட்டி வருவார்கள் என நினைத்துக் கொண்டு இருந்தேன். தருண் இஸ் லக்கி!" என்றான் சஞ்சய்.

முகேஷின் கண்கள் ஆராதனாவின் முகத்தை ஆராய்ந்தன. அவள் முகம் சிவந்திருப்பதை அவன் கண்கள் கவனித்தன.

"ஸோ... சஞ்சய்... ஹவ் இஸ் தருண்? எனி புரோக்ரஸ்?"

"ம்... தருண் இஸ் எ நார்மல் சைல்ட். இந்த விபத்து ஒரு ஷாக். அவன் அதிலிருந்து எப்ப வெளி வருவான் என்று யாராலும் சொல்ல முடியாது.

பட் எனக்கு என்ன தோணுது என்றால், ஆராதனா வந்ததால் கண்டிப்பாக முன்னேற்றம் தெரியும்.

என் உள்ளுணர்வு எப்பவும் தப்பாக ஆனது இல்லை முகேஷ். ஐயாம் ஷ்யூர்..."

"ஐ மீன் தருணிற்கு உங்க ட்ரீட்மெண்ட் தேவை இல்லையா?"

"கமான் முகேஷ். தருணிற்கு நானும் தேவை... ஆராதனாவும் தேவை. ஸோ நீங்க எங்களைப் பிரிக்க முடியாது..."

முகேஷ் கோபத்தை அடக்கிக் கொண்டான். அவன் கை விரல்களை அழுத்தமாக மூடினான்.

"சரி... சஞ்சய்... நீங்க தருணைப் பரிசோதிங்க... டேக் ஹிம் டு ஹிஸ் ரூம்..."

"ஓகே முகேஷ்..." என்று சொல்லிவிட்டுத் தருணின் கையைப் பிடித்துக் கொண்டு சென்றான் சஞ்சய்.

அவன் பின்னாலேயே ஆராதனா நடக்கத் தொடங்கினாள்.



"ஆராதனா! யூ ஸ்டே ஹியர். நான் உன்னுடன் பேச வேண்டும்!" என்றான் ஓங்கிய குரலில் முகேஷ்.

அவன் குரல் அவன் உணர்வைப் பிரதிபலித்தது. இவனுக்கு ஏன் கோபம் எனப் புரியாமல் திகைத்தாள் அவள்.

"சொல்லுங்க..." என்றாள் மெல்லிய குரலில்.

"நீ இங்கே இருப்பது தருணைப் பார்த்துக் கொள்ளத் தான். மற்றப்படி வெட்டி அரட்டை அடிக்க இல்லை.

அதைப் புரிந்து கொண்டு ஒழுங்காக நடந்து கொள்!" என்றான் உறுமலாக.

ஆராதனாவிற்குச் சட்டெனக் கோபம் வந்தது. ஏதோ நானே வலியப் போய் அரட்டை அடித்த மாதிரி இல்லை பேசுகிறான் என்று கொதித்தாள் அவள்.

"அவர் தான் பேசினார். தருணைப் பார்க்கும் டாக்டர் என்பதால் தான் நான் பேசினேன்.

மற்றப்படி நான் ஒன்றும் அரட்டை அடிக்கவில்லை. தருண் உடல்நிலை பற்றித் தெரிந்து கொள்ளலாம் என்று தான் நான் அவரிடம் பேசினேன்!" என்றாள் பட்டென.

"லுக்... நான் நீ சொல்வதை எல்லாம் நம்பி விடுவேன் என்று நினைக்காதே.

எனக்கு நான் பேசுவதற்கு எதிர்ப் பேச்சுப் பேசினா பிடிக்காது. ஸோ... ஜஸ்ட் கீப் கொயட் அண்ட் லிஸன் ( வாட் ஐ ஸே!" என்று கத்தினான் முகேஷ்.

ஆராதனாவிற்கு அவமானமாக இருந்தது. கூட கோபமும் பொங்கியது. சே... என்ன ஒரு திமிர்.

என்ன ஒரு ஆண் ஆதிக்கம்! சொல்வதை நம்பாமல் என்ன பேச்சுப் பேசுகிறான் என மனதில் பொங்கிய கோபத்தை அடக்கிக் கொண்டு பல்லைக் கடித்தபடி நின்றாள் அவள்.

"என்ன. சொல்வது புரிந்ததா? ஏன் வாயை மூடிக் கொண்டு இருக்கிறாய்."

"ம்... நீங்க தானே கீப் கொய்ட் என்றீர்கள்..." என்றாள் பட்டென.

"ஓ... யூ ஆர் எ கிட். உன் நன்மைக்குத் தான் நான் சொல்கிறேன்.

சஞ்சயிடம் நீ ரொம்ப பேச்சு வைத்துக் கொள் ளாதே!" என்றான் தணிந்த குரலில்.

"நான் குழந்தை இல்லை. அதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். எனக்கு யார் எப்படிப்பட்டவர்கள் என்று தெரியும்.

என்னுடைய லிமிட் எது என்று எனக்குத் தெரியும். காலம் எனக்கு நிறையப் பாடம் கற்றுக் கொடுத்து இருக் கிறது. அப்பா, அம்மா மரணம். அதற்குப் பின்பு நடந்தவை எல்லாம் எனக்கு நல்ல அனுபவத்தைக் கற்றுக் கொடுத்து இருக்கிறது.

அதனால் எனக்கும் மனிதர்களைப் பற்றித் தெரியும். குறிப்பாக ஆண்களைப் பற்றி..." என்று சொல்லும் பொழுதே அவள் குரல் உடைந்தது.

கண்களில் இருந்து சட்டெனக் கண்ணீர் பெருகியது. உதட்டைப் பற்களால் அழுந்தக் கடித்தாள் அவள்.



அதைப் பார்த்த முகேஷின் மனம் இரங்கியது. "இந்தா... ஸாரி..." என்று கைக்குட்டையை அவளிடம் நீட்டி னான் முகேஷ்.

அவள் அதை வாங்காமல் சட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அவன் சட்டென அவள் அருகே வந்தான். அவள் முகத்தை உற்றுப் பார்த்தான் அவன்.

கோபத்தில் சிவந்து இருந்தது அவள் முகம். அவள் நெற்றியில் விளையாடிய கூந்தல் கற்றை இவற்றில் மனதை இழந்தான் அவன்.

அவன் கைவிரல்கள் அவள் கண்ணீரைத் துடைத்தன. திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள் அவள்.

"ஸாரி ஆராதனா... ஸாரி... தெரியாமல் பேசி விட்டேன்!" என்றான் தணிந்த குரலில்.

அவள் ஏதும் சொல்லாமல் தலை குனிந்தபடி இருந்தாள்.

"நான் தான் ஸாரி சொல்லிவிட்டேனே, இன்னும் ஏன் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருக்கிறாய்..." என்றான் சற்றே கோபமாக.

"ம்... தாரிணி மேடமும் என்னைப் பற்றி இப்படித் தான் தவறாக நினைத்தார்கள். இதோ இப்ப நீங்களும் இப்படித்தான் பேசுகிறீர்கள்.

ஏன் என்னைப் பார்த்தால் இப்படி நினைக்கத் தோன் றுகிறதோ என்று தெரியவில்லை..." என்றாள் மெல்லிய குரலில்.

"ஓகே... ஓகே... இனி நான் இப்படிப் பேசவில்லை. போதுமா..." என்றான் பொறுமை இழந்த குரலில் அவன்.

"சரி... உள்ளே போகலாமா? தருணைப் பார்க்க வேண்டும்..."

"ம்... வா. போகலாம்."

தருணுடன் காகிதப் பொம்மைகள் வடிவமைத்தது பற்றிச் சொல்ல வேண்டும் என நினைத்தாள். ஆனால் முகேஷ் இப்படிப் பேசியதால் அதைச் சொல்ல மனம் வரவில்லை.

அதோடு அது உண்மைதானா என முகேஷ் நம்பு வானா எனத் தெரியவில்லை. அதனால் சற்றுப் பொறுத் திருக்கலாம் என நினைத்துக் கொண்டாள்.

தருண் அறையில் படுத்து இருந்தான். அருகில் சஞ்சய் அவனைப் பரிசோதித்துக் கொண்டு இருந்தான்.

"ஹலோ... சஞ்சய்... ஹவ் இஸ் ஹி நவ்?" என்றான் முகேஷ்.

"ம்... ஹி இஸ் ஃபைன்... எவ்ரி திங் நார்மல். ஆராதனா வந்து இருக்காங்க இல்ல. ஸோ ஐயாம் ஷ்யூர் ஹி வில் பி ஓகே...

இவ்வளவு அழகான பெண் பக்கத்தில் இருப்பதால் என் பி.பி தான் ஏறுது முகேஷ்..."

முகேஷின் முகம் கடினமாவதைக் கவனித்தாள் ஆரர்தனா.

"சஞ்சய்! உனக்கு ஹாஸ்பிடலில் வேலை ஏதும் இல்லையா? ஐ திங்க் இட்ஸ் கெட்டிங் லேட் ஃபார் யூ."

"பரவாயில்லை. ஒரு நாள் பேஷண்ட்ஸ் வெயிட் செய்யட்டும்.



ஆராதனா! திஸ் இஸ் மை கார்ட். நான் தருண் கேஸ் ஹிஸ்டரி பற்றி உன்னிடம் விவரமாகப் பேச வேண்டும்.

நீ எப்ப ஃப்ரீ என்று சொல். ஜஸ்ட் கிவ் மி எ ஃபோன் கால். ஐ வில் கம் ஹியர்!" என்று சொல்லியபடியே விஸிட்டிங் கார்டை நீட்டினான்.

அவள் அதை வாங்கிக் கொண்டாள்.

"ஓகே முகேஷ். நான் கிளம்பறேன். ஸி யூ ஸூன் ஆராதனா..."

அவன் சென்ற பின்பும் முகேஷின் கோபம் குறைய வில்லை.

"ஸோ நீ சஞ்சயைக் கூப்பிடப் போறாயா... கால் மீ வென் யூ ஆர் ஃப்ரீ!" என்று அவனைப் போலப் பேசிக் காட்டினான்.

ஆராதனாவிற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. தருணைப் பற்றி, அவன் உடல்நலம் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்வது நல்லது.

பட் சஞ்சய் பேசுவது ஏனோ சரியாகப்படவில்லை. முகேஷிற்கும் அவனைப் பிடிக்கவில்லை. என்ன செய்ய லாம் என யோசித்தாள் அவள்.

சட்டென ஒரு யோசனை தோன்றியது அவளுக்கு. இப்படிச் செய்யலாமே என மனதில் நினைத்தாள்.

"நீங்கள் எப்ப ஃப்ரீ என்று சொல்லுங்கள். நான் அப்ப டாக்டரை வரச் சொல்கிறேன்..."

அதைக் கேட்டபின் முகேஷின் முகத்தில் கடுமை குறைந்தது போல் தோன்றியது அவளுக்கு.

"ஓகே... தட்ஸ் குட்... நான் இல்லாத பொழுது சஞ்சய் வந்தால் நீ அவனிடம் ரொம்ப பேச்சு வைத்துக் கொள்ளாதே..."

அவள் மனதில் ஆயாசம் படர்ந்தது. சே... இவன் ஏன் அதையே திரும்பத் திரும்பச் சொல்கிறான். ஒரு தடவை சொன்னால் எனக்குப் புரியாது என்று நினைத்துக் கொண்டானா?

எல்லாம் இந்த சஞ்சயால் வந்தது என்று மனம் நொந்து போனாள் ஆராதனா.

தருணைப் பார்த்துக் கொள்கிற நர்ஸ் வந்ததால் 'அப்பாடா' என்று நிம்மதியாக இருந்தது அவளுக்கு. அட்லீஸ்ட் முகேஷின் ஃபோக்கஸ் மாறும் என்று நினைத்துக் கொண்டாள் அவள்.

"சரி... நான் இப்ப கிளம்பணும். தருணைப் பத்திரமாகப் பார்த்துக் கொள் ஆராதனா. மோஸ்ட்லி இன்னிக்கு ஈவினிங் வந்திடுவேன்.

அவுட்டோர் ஷூட்டிங் இருக்காது. கேன்சல் ஆயிடுச்சு..."

"ஓ... அப்படியா... டோண்ட் ஒரி... நான் பார்த்துக்கறேன்..."

"ஓகே..." என்று சொல்லிவிட்டு அறையிலிருந்து வெளியேறியவன் என்ன தோன்றியதோ அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"சஞ்சய்க்கு போன் செய்யாதே. நான் இங்கே இல்லை... அதனால் எனக்குத் தெரியாமல் ஃபோன் செய்யலாம் என நினைக்காதே.



மீறி நீ போன் செய்தால் அது எப்படியும் எனக்குத் தெரிந்து விடும்!" என்றான் தீர்மானமான குரலில் முகேஷ்.

அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள் ஆராதனா. ஆனால் அவன் அதைக் கண்டு கொள்ளவில்லை.

அவன் சென்ற பின்பும் அவளுக்குக் கோபம் அடங்கவில்லை. "என்ன மேடம்... வீடு பழகிவிட்டதா? தருண் உங்களிடம் ஒட்டிக் கொண்டான் போல் இருக்கு!" என்றாள் அந்த நர்ஸ்.

"ம்... ஆமாம். ஹி இஸ் எ க்யூட் பாய். ரொம்ப நல்லா கவனிக்கிறான். ஹி இஸ் ஆன் இண்டெலிஜண்ட் கிட்...

நீங்கள் இங்கே எவ்வளவு நாளாக வேலை பார்க்கிறீர்கள்..."

"பாவம்... தருண் நன்றாகப் பேசிக் கொண்டு இருந்த பையன். நான் இங்கே வேலைக்குச் சேர்ந்து நான்கு மாதங்கள் ஆகிறது."

"மேடம்! உங்களுக்குச் சாப்பாடு உங்கள் அறையிலேயே வைக்கவா?" என்றாள் மேகலா ஆராதனாவைப் பார்த்தபடியே.

"ஓ... மணி இரண்டாகப் போகுதா... தருண் இங்கேயா சாப்பிடுவான்?

நானும் தருணும் அங்கே ஹாலிலேயே சாப்பிடறோமே."

"சரி மேடம். நான் அப்ப உங்க இரண்டு பேருக்கும் அங்கேயே சாப்பாடு வெச்சிடறேன்.

டைனிங் டேபிளிலேயே எல்லாம் வெச்சிடறேன். சூடா சாப்பாடு இருக்கும் பொழுதே வந்து சாப்பிடுங்க."

"ஓகே... நீங்க சாப்பிடலையா?" என்றாள் நர்ஸைப் பார்த்து.

"நான் இங்கேயே சாப்பிடுவேன். அதான் எனக்குப் பிடித்து இருக்கிறது. பழகியும் விட்டது!" என்றாள் புன்முறுவலோடு அந்த நர்ஸ்.

"தருண்... வா, சாப்பிடப் போகலாமா?"

தருண் முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லை. அவன் தலைமுடியை ஆதரவாகக் கோதினாள் ஆராதனா.

"தருண்! ப்ளீஸ் வா... சாப்பிடலாம்."

'சரி' என்பது போல் தலை அசைத்தான் தருண். அவன் கையைப் பிடித்துக் கொண்டு டைனிங் ஹால் நோக்கி நடந்தாள் ஆராதனா.

உணவுப் பொருட்களின் வாசனை அவள் பசியைத் தூண்டியது. வெஜிடபிள் பிரியாணி, பீஸ் புலவ், ரெய்தா எனப் பதார்த்தங்கள் தயாராக இருந்தன.

"தருணுக்கு இது பிடிக்கும் தானே... அதுதான் ஸ்பெஷலா செஞ்சிருக்காங்க. ம்...ம். வாசனை நல்லா இருக்கு இல்ல...

கமான்... சாப்பிடலாம் வா..." என்று சொல்லியபடியே அவன் தட்டில் உணவை வைத்தாள் ஆராதனா.

தன்னுடைய தட்டிலும் உணவை வைத்துக் கொண்டாள். "யார் ஃபர்ஸ்ட் சாப்பிடறோம்... அப்படின்னு பார்க்கலாமா... பெட்... ஒரு ஃபைவ் ஸ்டார் இல்ல கிண்டர் ஜாய்..."

தருணின் கண்களில் ஒளி மின்னியது. வெஜிடபிள் பிரியாணியை வேகவேகமாகச் சாப்பிட ஆரம்பித்தான்.



மனதிற்குள் சிரித்துக் கொண்டாள் ஆராதனா. தருண் சாப்பிடுவதைக் கண்டும் காணாமல் இருந்தாள்.

வேண்டும் என்றே மெதுவாகச் சாப்பிட்டாள். தருண் பிளேட் காலியாகிவிட்டதை ஓரக் கண்ணால் கவனித்தாள் அவள்.

தருண் அவள் கையைச் சுரண்டினான்.

"என்ன தருண்?"

அவன் பிளேட்டைச் சுட்டிக் காட்டினான். அவன் முகத்தில் ஜெயித்து விட்ட பெருமை தெரிந்தது.

"வாவ்... தருண். நீ ஃபர்ஸ்ட் சாப்பிட்டு முடிச்சிட்டியே... நீ தான் வின் செஞ்சிட்ட...

ஸோ உனக்கு என்ன வேணும். ஃபைவ் ஸ்டார் ஆர் கிண்டர் ஜாய்..."

கையால் வட்ட வடிவம் போல் சைகை செய்தான்.

"ஓ... கிண்டர் ஜாய் வேணுமா... டன்... நீ தூங்கிக் கண் விழித்த பிறகு உன் தலையணை அடியில் ஒரு கிண்டர் ஜாய் இருக்கும்.

சரியா... டீல் பிடிச்சிருக்கா? சொல் தருண்."

தருண் உற்சாகமாகத் தலை அசைத்தான். அதைப் பார்த்த அவளின் முகத்தில் நிம்மதிப் பூக்கள் பூத்தன.

சாப்பிட்ட பிறகு உடனே தூங்குவது நல்லது இல்லை என்பதால் தருணிடம் ஏதேதோ பேசியபடியே இருந்தாள் அவள்.

தருணிடம் மாற்றம் தெரிவதை அவள் உணர்ந்தாள். எந்த உணர்வையும் பிரதிபலிக்காமல் இருந்தவன் லேசாகத்

தலை அசைப்பதும், அவ்வப்பொழுது சிரிப்பதும் அவளுக்கு நம்பிக்கை அளித்தது.

தருண் எப்படியும் பேசிவிடுவான். முன்பு இருந்தது போல், விபத்திற்கு முன் இருந்தது போல் அவன் மாறுவான்.

பாவம் சின்ன வயதில் இவனுக்கு எவ்வளவு அதிர்ச்சி வாழ்க்கையில். கடவுளே! அவனுக்கு உதவிபுரி என்று மனதிற்குள் வேண்டினாள் ஆராதனா.

## 8

**இரவுகளின்**
**கருமையை**
**நினைவுபடுத்தும்**
**உன்**
**கூந்தல்!**
**வெள்ளி**
**நிலாவை**
**நினைவுபடுத்தும்**
**உன்**
**கண்கள்!**
**நீ**
**தித்திக்கும்**
**தேன்!**



**பளிங்கை**
**நினைவுபடுத்தும்**
**உன்**
**முகம்!**
**பெண்ணே,**
**என்ன**
**மாயம்**
**செய்தாய்**
**நீ!**
**உன்னாலே**
**நான்**
**கவிஞனாகி**
**விட்டேன்!**
**என்ன**
**மாயம் செய்தாய்**
**பெண்ணே?**
**சொல்!**

**சா**யங்காலம் பொழுது போகாததால் சிறிது தூரம் நடக்கலாம் என முடிவு செய்தாள். தோட்டம் அழகாக இருந்தது.

விஸ்தாரமாகவும் இருந்தது தோட்டம். நடப்பதற்கென்றே தனிப் பாதை வேறு இருந்தது.

தருண் தூங்கிக் கொண்டு இருந்ததால் தனியாகவே நடப்பது என முடிவு செய்தாள். மார்கழி மாதம் என்பதால் காற்று சில்லென்று இருந்தது.

நடந்தால் குளிர் குறையும் என நினைத்தபடியே நடந்தாள். கால் போன போக்கில் ரொம்ப தூரம் நடந்தாள் ஆராதனா.

தோட்டம் செழுமையாக இருந்தது. செடிகளும் அதில் பூத்து இருந்த பூக்களும் பார்க்க அழகாக இருந்தன.

தோட்டத்தின் நடுவே ஒரு நீச்சல் குளம் இருந்தது. ஓ... முகேஷ் நீந்துவானாக்கும் என நினைத்தபடியே திரும்பி நடக்கப் போனாள்.

"ஹாய் ஆராதனா. என்ன போர் அடிக்குதா?" என்ற முகேஷ் குரல் அருகே கேட்க திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அங்கே முகேஷ் நீச்சல் உடையில் தலை துவட்டிய படியே நின்று கொண்டு இருந்தான். அவனைப் பார்க்கத் தயக்கமாக இருந்தது.

தன்னைச் சமாளித்துக் கொண்டு பேசத் தொடங்கி னாள். "யெஸ்... தருண் தூங்கிட்டு இருக்கான். அதான் சும்மா கொஞ்ச நேரம் நடக்கலாம்னு வந்தேன்."

"ஓ... தட்ஸ் குட். நீ இந்த நீச்சல் குளத்தை உபயோ கிக்கலாம்... ஐயாம் ஃபைன் வித் தட்..."

"இ... இல்லை. வேண்டாம்..."

"ஏன் வேண்டாம்..."

"எனக்கு நீச்சல் தெரியாது... அதான்."

"ஓ... இது தான் விஷயமா. ஐ கேன் டீச் யூ. ரொம்ப ஈஸி இது..."



"இ... இல்லை. வேண்டாம். எனக்கு இதில் ஈடுபாடு இல்லை."

"ஏன் பிடிக்கவில்லை உனக்கு? இது நல்ல உடற் பயிற்சி... அதோடு நல்ல ஸ்ட்ரெஸ் ரிமூவர்... ஆனால் உன் உயரத்திற்கு ஏற்ற எடை உனக்கு.

அதனால் உனக்கு ஜிம், உடற்பயிற்சி எல்லாம் வேண் டாம்..." என்று சொல்லியபடியே அவளை ஆர்வமாகப் பார்த்தான்.

அவள் முகம் சிவந்தது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தொடர்ந்து நடக்கத் தொடங்கினாள்.

"சரி. பயந்து போய் ஓடாதே... நீ நீந்த வேண்டாம்!" என்றான் சிரித்தபடியே.

தன் மனதில் இருப்பதை அவன் அறிந்து கொண்டானே என அவளுக்கு அவமானமாக இருந்தது.

"ஆராதனா... இங்கே உட்கார்," என்று அங்கிருந்த காட்டேஜ் போன்ற இடத்தைக் காட்டினான்.

"இது... என்ன இடம்..."

"ம்... உள்ளே வா, தெரியும்."

அவள் விழிகளில் ஒரு பயம் தோன்றியது. அதை முகேஷ் கவனித்தான்.

"இந்த நாற்காலியில் உட்கார். நான் உனக்குக் குடிக்க ஏதாவது எடுத்து வருகிறேன்!" என்று அங்கிருந்த ஃபிரிட்ஜைத் திறந்தான்.

அவன் தனக்கென ஒரு கண்ணாடித் தம்ளரை எடுத்துக் கொண்டான். அதில் ஏதோ ஒரு மஞ்சள் திரவத்தை ஊற்றுவது அவளுக்குத் தெரிந்தது.

ஏனோ பயத்தில் அவள் நெற்றியில் வியர்வைப் பூக்கள் பூத்தன.

இன்னொரு கோப்பையில் அவன் அவளுக்கும் ஏதோ ஒரு திரவத்தை ஊற்றிக் கொண்டு வந்தான்.

"இந்தா... ஆராதனா... டேக் இட்!" என்று ட்ரேயை அவளிடம் நீட்டினான்.

"என்ன இது..."

"பெண்கள் விரும்பிக் குடிக்கும் ட்ரிங்க்."

"எனக்கு வேண்டாம்."

"என்ன ஆச்சு? எல்லாமே வேண்டாம் என்று சொல்கிறாய்."

அவள் எழுந்திருக்க முயன்றாள். அவன் கைகள் அவள் தோள்களை அழுத்தி உட்கார்த்தி வைத்தன.

தன் கோப்பையில் இருந்த திரவத்தை அவன் ரசித்துக் குடிப்பதை அவள் விழிகள் அகலப் பார்த்தாள்.

"நான் மனம் சரியில்லாத பொழுது குடிப்பேன். திஸ் இஸ் பியர்..." என்று சொல்லிக் கொண்டே தன் கோப்பையை மீண்டும் நிரப்பினான் அவன்.

"ஓ... இது இரண்டாவது...." என்று பதறினாள்...

"ம்... தி ஸ்வீட்டஸ்ட் க்ளாஸ் இஸ் தி ஒன் அட் தி பாட்டம் ஆஃப் தி பாட்டில். நீ கேள்விப்பட்டதில்லையா?"

"காட்! அப்ப நீங்க எல்லாத்தையும் குடிக்கப் போறீங் களா... இந்த பாட்டில் முழுவதும்?" என்றாள் பதட்டமாக.

"ம்... சில நேரம் எனக்கு இது தேவை. ட்ரிங்க்ஸ், மியூஸிக், ஃபாஸ்ட் ட்ரைவ் - எல்லாத்தையும் மறக்க எனக்கு இது உதவி செய்யுது.



ஆனால் இதெல்லாம் உனக்கு அதிர்ச்சியாக இருக்கும், கிட். நீ ஒரு கிட். பட் நர்ஸரி ஸ்கூல் டீச்சர். உன்னைப் பொறுத்தவரை ரெகுலர் திங்ஸ் ஹாஸ் பிரயாரிடி.

நோ எக்ஸைட்மெண்ட். வார்ம் மில்க் அட் பெட் டைம். அது குழந்தைகளுக்கு வேண்டுமானால் சரி வரும். நாட் ஃபார் எ மேன் லைக் மி."

"ட்ரிங்க்ஸ், ட்ரைவ் இதெல்லாம் நான் பிரிஸ்க்ரைப் செய்ய மாட்டேன். ரன்னிங் அவே ஃப்ரம் பிராப்ளம் வில் நாட் ஸால்வ் எனிதிங்."

"ஓ... கிட்... யூ ஆர் அட்வைஸிங் மி. க்ரேஸி. உன் வயது என்ன இருபத்து மூன்று தானே. நான் உன்னை விடப் பத்து வயது பெரியவன்.

உன்னைக் காட்டிலும் எனக்கு உலக அனுபவம் ஜாஸ்தி. உனக்கு என்ன பேசறோம்னே தெரியலை. நீ எப்பவாவது பியர் குடித்து இருக்கிறாயா?

கண்டிப்பாக இல்லை. ஏன் என்றால் நீ எப்பவும் எல்லாவற்றையும் ஜாக்கிரதையாகச் செய்வாய். ரொம்ப கேர்புல்லாக யோசித்து நிதானமாகச் செய்வாய்.

ஜஸ்ட் லைக் தட் ஏதாவது செய்து இருக்கிறாயா? இதைச் செய்வதால் இதெல்லாம் தான் லாபம், இதெல்லாம் நஷ்டம் என ஒரு கணினி போல் கால்குலேட் செய்து தானே எல்லாமே செய்வாய்."

"நான் இங்கே வந்தேன்... அதை என்ன வென்று சொல்கிறீர்கள்..."

"ஓ... மறந்து விட்டேன். நீ இங்கே வந்தாய் தருணைப் பார்த்துக் கொள்ள. ஹவ் ப்ரேவ் யூ ஆர்."

நூ ஹேவ் டேக்கன் எ ரிஸ்க். சரி. இந்த ரிஸ்கையும் இப்ப எடு. டேஸ்ட் திஸ்!" என்று அவளிடம் கோப்பையை நீட்டினான்.

"வேண்டாம்!" என்றாள் தீர்மானமாக அவள்.

"எனக்குத் தெரியும் நீ மாற மாட்டாய். கிட். வா போகலாம்..."

அவள் இரண்டு அடி எடுத்து வைத்து இருப்பாள். அதற்குள் அவள் காலணி ஒன்று அறுத்து விட்டதால் நின்று அதைச் சரி செய்ய முடியுமா எனப் பார்த்தாள்.

"ஓ... ஸ்லிப்பர் அறுந்து விட்டதா. ஒன் ஸெகண்ட்..." என்று அங்கே ஷூ ரேக்கில் இருந்த ஒரு ஜோடி சிவப்பு ஷூக்களை எடுத்து அவள் அருகே வந்தான்.

"அட என் கால் அளவு இருக்கும்போல."

"ம்... இந்த ஷூவிற்கு ஒரு கதை உண்டு. தெரியுமா."

"என்ன கதை? ரெட் ரைடிங் ஹூட் போல் உள்ளது இது..."

"ம்... இந்தக் கதை குழந்தைகளுக்குப் பொருத்தமானது இல்லை. பட் குட் ஃபார் பிலிம்ஸ். இந்த ஷூக்களை ஒரு பெண் அணிந்து கொண்டால் அவளால் ரொம்ப அழகாக நடனமாட முடியும்.

மற்ற எல்லாப் பெண்களைக் காட்டிலும் ரொம்ப அழகாக நடனம் ஆட முடியும். ஆனால் அவளால் நடனம் முடிந்ததும் அந்த ஷூக்களைக் கழற்ற முடியாது.

அவளால் நடனத்தை நிறுத்தவும் முடியாது. அவளுக்குப் பைத்தியமே பிடித்து விடும். அதுதான் கதை."

"ஓ... அ... அப்படியா..." என்றாள் கண்களில் பயத்தோடு ஆராதனா.



"கிட்... சும்மா ஒரு கதை சொன்னேன். நீ அதை நம்பி விட்டாயே. அதோடு என்ன பயம் உனக்கு?

நான் இருக்கும்பொழுது உனக்கு எந்தப் பயமும் வேண்டாம். என்னை மீறி உனக்கு எந்த ஆபத்தும் வராது."

நீங்கள் தான் ஆபத்து என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் அவள். ஆனால் ஏனோ உதடுகள் ஒட்டிக் கொண்டன.

பேச நினைத்த வார்த்தைகள் தொண்டையிலேயே சிக்கிக் கொண்டன.

"என்ன ஆராதனா, பேச மாட்டேங்கிறாய்? என் மேல் கோபமா?"

அவள் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.

"நீ சஞ்சயிடம் பேசினாயா..?"

"இல்லை" என்பது போல் தலை அசைத்தாள் அவள்.

"உனக்குச் சஞ்சயைப் பிடிக்கிறதா?"

"ம்... யெஸ். ஐ காண்ட் பிலீவ் ஹி இஸ் எ டாக்டர். ஹி இஸ் வெரி லவ்லி.

ஹி லைக்ஸ் தருண் எ லாட். ஹி இஸ் கன்ஸர்ண்ட் அபௌட் தருண்."

"ம்... ஹி இஸ் ஆன் எக்ஸலெண்ட் டாக்டர். அதனால் தான் அவன் அதிகப்பிரசங்கித்தனமான பேச்சைச் சகித்துக் கொண்டு இருக்கிறேன்."

"தருணிடம் நீங்கள் நேரம் செலவு செய்வது ரொம்பக் குறைவு. அதை அதிகரிக்க முயற்சி செய்யுங்கள்.

இன்று நானும் தருணும் காகிதத்தில் விமானம் செய்தோம். அவன் அதைப் பறக்க விட்டான். ஹி வாஸ் எக்ஸைட்டட்.

ப்ளீஸ் ஸ்பெண்ட் மோர் டைம் வித் ஹிம். ஹி வில் பி ஹேப்பி.."

"தேங்க்ஸ் ஃபார் டெல்லிங் மி திஸ். ஐயாம் ஸாரி ஐ ஷுட் ஹேவ் டன் திஸ்."

"ஓ... ப்ளீஸ் ஸாரி எல்லாம் வேண்டாம். உங்களை ஹர்ட் செய்ய வேண்டும் என்று நான் சொல்லவில்லை.

நீங்கள் அவன் வாழ்க்கையில் ஒரு முக்கியமான மனிதர். வேறு உறவுகள் அவனுக்கு இல்லை. ஹி நீட்ஸ் யூவர் லவ் மோர்.

அவன் இப்பொழுது இன்செக்யூராக ஃபீல் செய்கிறான். ஹி ஹேஸ் லாஸ்ட் ஹிஸ் பேரண்ட்ஸ். இட்ஸ் எ டெரிபில் ஷாக்."

"ம்... நீ சொல்வது ரொம்ப நிஜம். தருண் ரொம்ப பாவம். ஹி நீட்ஸ் லாட் ஆஃப் லவ்.

என்னிடம் இதைப் பற்றி வெளிப்படையாகப் பேசியதற்கு ரொம்ப நன்றி.

யூ ஆர் ஆன் ஏஞ்ஜல் ரியலி! உன் வயதுப் பெண்களுக்கு உண்டான ஆசைகள் ஏதும் உன்னிடம் இல்லை ஆராதனா.

யூ ஆர் வெரி டிபரெண்ட். ஐ லைக் யூ. கிட்!" என்றான் னம் உவந்து முகேஷ்.

அவன் பாராட்டைக் கேட்டு அவள் முகம் சிவந்தது. தங்க்ஸ்!" என்று முணுமுணுத்தாள்.



"சரி. வா. போகலாம். தருண் விழித்து விட்டானா எனப் பார்க்கலாம்."

"ம். அப்புறம் இன்னொரு விஷயம்..." என்று தயங்கினாள்.

"என்ன ஆராதனா? சொல்."

"தருணிற்கு சாஃப்ட் டாய்ஸ் பிடித்து இருக்கிறது. எப்பவும் தூங்கும் பொழுது ஒரு டெட்டி பியரைப் படுக்கையில் தன்னுடன் வைத்துக் கொள்ள விரும்புகிறான்.

அது... அது... தப்பான பழக்கம் கிடையாது. குழந்தைகள் உலகமே வித்தியாசமான ஒன்று. அந்த மாதிரி இருக்கும் குழந்தைகள் ரொம்ப கிரியேடிவாக இருப்பார்களாம்.

ஆனால் தருணின் அம்மாவிற்கு அது பிடிக்காது போல. படுக்கையில் ஸாப்ட் டாய்ஸ் எல்லாம் கொடுக்க வேண்டாம் என்று நீங்கள் சொன்னதாக நர்ஸ் என்னிடம் சொன்னார்கள்.

ப்ளீஸ் அதை ரிலாக்ஸ் செய்ய முடியுமா? குழந்தைகள் பொம்மைகளுடன் தூங்கச் செல்வது தப்பு இல்லை!" என்றாள் கெஞ்சும் குரலில்.

"ஓ... கமான் ஆராதனா. நீ இதற்கெல்லாம் என்னிடம் பர்மிஷன் கேட்க வேண்டாம். டாய்ஸில் ஏதாவது அழுக்கு இருக்கப் போகிறது.

இன்பெக்ஷன் ஆகிவிடப் போகிறது என்று நினைத்துத் தான் நான் வேண்டாம் எனச் சொல்லி இருப்பேன்.

மற்றப்படி ஐ டோண்ட் ஹேவ் எனிதிங் அகெய்ன்ஸ்ட் இட்."

"ஓ... தேங்க்ஸ். அப்புறம் தருணின் பெற்றோர் பற்றிச் சொல்லுங்களேன்..."

"ம்... அது எதற்கு உனக்கு?" என்றான் சற்றே கோபமாக.

"இல்லை. தருண் பற்றித் தெரிந்து கொள்ள உதவும். அதற்குத்தான்.

தருண் யாரிடம் ரொம்ப அட்டாச்டாக இருந்தான். அம்மாவிடமா, அப்பாவிடமா?"

"எனக்குத் தெரியாது ஆராதனா. மை பிரதர் லவ்ட் தருண் எ லாட். அது மட்டும் எனக்குத் தெரியும்!" என்றான் வறண்ட குரலில்.

இவனுக்கு இதைப் பற்றிப் பேச இஷ்டமில்லை என்று அவளுக்குப் புரிந்தது. அதனால் அதற்கு மேல் எந்தக் கேள்வியும் அவள் கேட்கவில்லை.

அவன் கண்களில் ஒரு வலி தெரிந்தது. அதைக் கவனித்தாள் ஆராதனா. அவன் மனதில் ஏதோ பாரம் இருக்கிறது.

அது அவனை அழுத்துகிறது. அதை அவன் இறக்கி வைக்கத் தயங்குகிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

இருவரும் அதற்குப் பின்பு ஏதும் பேசவில்லை. ஒரு கனமான மௌனம் அங்கே நிலவியது.

வீட்டை அடைந்தவுடன் தன் அறைக்குள் சென்ற ஆராதனா முகம் கழுவிக் கொண்டு, சாமி படம் முன்பு விளக்கு ஏற்றி மனமுருக வேண்டினாள்.

கடவுளே! தருண் உடல்நிலை சீக்கிரம் தேற வேண்டும். அவன் பழையபடி பேச வேண்டும். அப்புறம் முகேஷின் மனதை ஏதோ அரித்துக் கொண்டு இருக்கிறது.



அது என்னவென்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அந்த ப்ரச்சினை தீர வேண்டும். முகேஷின் மனதில் நிம்மதி பரவ வேண்டும் என்று வேண்டினாள்.

முகேஷிற்காகத் தான் வேண்டிக் கொள்வதை நினைத்து அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் என் முதலாளி.

அவர் நன்றாக இருந்தால்தான் நான் நன்றாக இருக்க முடியும். அதற்காகத் தான் நான் வேண்டிக் கொள்கிறேன். மற்றப்படி ஏதும் இல்லை என்று தன்னையே சமாதானப் படுத்திக் கொண்டாள்.

## 9

உன்னைப்  
பார்த்தவுடன்  
என்  
உலகம்  
நின்று  
விட்டது!  
காலச்  
சக்கரம்  
சுழல  
மறுத்து  
விட்டது!

என்
மனதின்
காயங்களை
உன்
விழிகள்
தடவி
மருந்திட்டன!
அந்தச்
சுகத்தில்
திளைத்த
மனம்
கேட்டது
ஒரு கேள்வி!
மறுபடியும்
காயம்
ஏற்படுத்திக்
கொள்ளவா
என்று ?

...ஸோ நீயும் தருணும் இன்று ஷூட்டிங்கிற்கு
...களா?" என்று முகேஷ் குரல் அருகே திடீரெனக்
...க்கிட்டாள் ஆராதனா.



அவள் மட்டுமே சமையல் அறையில் இருந்தாள். காப்பியை ரசித்துக் குடித்தபடி இருந்தவள் முகேஷை அங்கே துளியும் எதிர்பார்க்கவில்லை.

சட்டென மான் போல் அவள் மருள மருள விழித்ததை முகேஷின் கண்கள் படமெடுத்தன.

"ஐயாம் ஸாரி ஆராதனா. நான் உன்னைப் பயமுறுத்தி விட்டேன் போல!" என்றான் அவள் முகத்தைப் பார்த்த படி.

இருவர் கண்களும் ஒரு நொடி சந்தித்தன. அவன் கண்களில் தெரிந்த ஏதோ ஒன்றைச் சந்திக்கத் திராணி இன்றி முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள் அவள்.

"தருணிற்குப் பிடிக்கும் என நினைத்தேன். கேமிரா, தி லைட்ஸ், தி லொகேஷன்..."

"ம்... தருணிற்குக் கண்டிப்பாகப் பிடிக்கும். ஹி லைக்ஸ் டெக்னிகல் திங்ஸ்," என்றாள் மெதுவாக.

"ஐயாம் ஸாரி. இந்தப் படம் என்னை ரொம்பவே பிஸியாக வைத்து இருக்கிறது.

நாம் சந்தித்து, பேசி ஒரு வாரம் ஆகிவிட்டது. ஐ ஹோப் எவ்ரிதிங் இஸ் ஃபைன் வித் யூ அண்ட் தருண்!" என்றான் சிநேகமாக முகேஷ்.

"யெஸ்... வீ ஆர் ஃபைன்... தருண்..." என்று அவள் முடிக்கும் முன்பு மேகலா சமையல் அறையினுள் நுழைவது தெரிந்தது.

அதனால் பேசாமல் இருந்தாள் ஆராதனா. "ஆராதனா டாக்டர் சஞ்சய் வந்து இருக்கார். அவர் தருணை வழக்... மான செக்அப் செய்கிறார். நீயும் போய்ப் பார்க்கிறாயா?

அவர் உன்னை எங்கே என்று கேட்டார். உன் அறைக்கு வேறு சென்று பார்த்தார் போல. பாவம்! காலையில் உன் தரிசனத்திற்குத் தவம் இருக்கிறார்!'' என்று பேசி முடித்தவள் கப்போர்ட் அருகே நின்று கொண்டு இருந்த முகேஷை அப்பொழுதான் கவனித்தாள்.

அவனை அங்கே சற்றும் எதிர்பார்க்காததால் என்ன பேசுவது என்று திகைத்தாள் அவள்.

“இட்ஸ் ஓகே ஆன்ட்டி. சஞ்சயை நான் பார்த்து விட்டு வருகிறேன். ஆராதனாவைத் தொந்தரவு செய்ய வேண்டாம்!'' என்றான் இறுகிய குரலில் முகேஷ்.

“இல்லை. டாக்டர் தான் ஆராதனாவை...'' என்று இழுத்தாள் மேகலா.

“நான் சொல்வதைச் செய்யத்தான் நீங்கள் இங்கே இருக்கிறீர்கள்!'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேறினான் முகேஷ்.

“ஆராதனா! நீயும் தருணும் மதியம் தயாராக இருங்கள். வீ ஆர் கோயிங் அவுட்!'' என்று திரும்பி வந்து சொல்லி விட்டுச் சென்றான் முகேஷ்.

“அட ராமா... நான் கவனிக்கவில்லை இவரை. சே... பார்க்காமலே பேசி விட்டேன். ஸாரி ஆராதனா.''

“பரவாயில்லை...'' என்றாள் மெதுவாக ஆராதனா.

“ஆனால் ஸார் ஏன் இப்படி நடந்து கொள்கிறார் ...ன்று எனக்குப் புரியவில்லை. டாக்டர் தம்பி உங்களைப் ...க்கணும் அப்படின்னு சொன்னார்.

...உன்னை ஒரே ஒரு தடவை தான் பார்த்துப் பேசி ...கிறார் போல. பாவம், தருண் பற்றி உன்னிடம் ஏதேனும் ...ல வேண்டும் என்று நினைக்கிறார் போல.



நீயாவது அவரை போனில் தொடர்பு கொண்டு பேசு. தருணின் உடல் நலம் ஆச்சே...''

“ம்... என்ன பேசி என்ன செய்வது? என்ன பயன்? தருணின் உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை...''

“முன்னேற்றம் இல்லையா? கடவுளே! தருணிடம் எவ்வளவு முன்னேற்றங்கள் மாறுதல்கள் தெரிகின்றன. ஹி இஸ் லைக் எ நார்மல் சைல்ட்.

நன்றாக விளையாடுகிறான். அவ்வப்பொழுது சிரிக்கிறான். ஒழுங்காகச் சாப்பிடுகிறான். இதெல்லாம் நீ வந்த பின்பு வந்த மாற்றங்கள்.

தருண் இதற்கு முன்பு எப்படி அறையிலேயே முடங்கிக் கிடப்பான் என்று உனக்குத் தெரியாது. எங்களுக்குத் தான் தெரியும்!'' என்று படபடத்தாள் மேகலா.

“ஓ... ரொம்ப தேங்க்ஸ்!'' என்றாள் கூச்சமாக ஆராதனா.

“அப்புறம் உனக்கு இந்த வேலை பிடித்து இருக்கிறது தானே...''

“ம்... கண்டிப்பாக. தருண், அப்புறம் இந்த வீட்டில் உள்ள நீங்கள், நர்ஸ் மேரி எல்லாரையும் எனக்குப் பிடித்து இருக்கிறது.''

“நீ இங்கே தனியாக இருப்பது போல் ஒரு நாளும் உணராதே. நீயும் சின்னப் பெண். பாவம்! வேதனையை மறக்க வேலைக்கு வந்து இருக்கிறாய்.

அதனால் உனக்கு என்ன வேணுமோ தயங்காமல் கேள். புரிந்ததா?'' என்றாள் அன்பு கலந்த கண்டிப்புடன் மேகலா.

"இல்லை... நான் அப்படித் தனிமையாக ஒரு நாளும் உணர்ந்தது இல்லை.

ஏன் சட்டென அப்படிக் கேட்கிறீர்கள்?"

"இல்லை. ஒரு நாள் நீ தோட்டத்தில் தனியாக உட்கார்ந்து இருப்பதைப் பார்த்தேன். உன் முகம் சோகமாக இருந்தது போல் தோன்றியது.

உன் கண்கள் சோகத்தைப் பிரதிபலிப்பது போல் எனக்குத் தோன்றியது. அதுதான் கேட்டேன்."

"ஓ... அப்படியா... அந்த மாதிரி ஏதும் இல்லை."

"ரொம்ப நல்லது. அப்ப மதியம் ஷூட்டிங் பார்க்கப் போகப் போறீங்களா?

எனக்கே ஆச்சரியமா இருக்கு. ஸார் அவர் குடும்பத்தில் இருக்கும் யாரையும் இதுவரை ஷூட்டிங்கிற்கு அழைத்துச் சென்றது இல்லை.

ஒரு நாள் அவர் அண்ணி ஆசைப்பட்டுக் கேட்டார்கள். அவர் அதை மறுத்து விட்டார். இன்று உன்னையும் தருணையும் அழைத்துச் செல்கிறார் என்றால் அது பெரிய கௌரவம் தான் உனக்கு."

"ஓ... ஆச்சரியமாக இருக்கு. சரி. தருணின் பெற்றோர்கள் எப்படி..?"

"ம்... தருணின் அப்பா ரொம்ப பேச மாட்டார். வெரி காய்ட். ரொம்ப அழுத்தம்."

"ம்... தருணின் அம்மா... எப்படி."

"அந்த அம்மா ரொம்ப வித்தியாசமானவங்க. அவங்க்கு வீட்டுக்குள்ளேயே இருக்கத் தான் பிடிக்கும்.



கொஞ்சம் வெயில் பட்டாலே போதும். சருமம் வீணாயிடுச்சு அப்படின்னு புலம்புவாங்க.

தருணை அவங்க கொஞ்சி, அவனோடு விளையாடி நான் பார்த்ததே இல்லை. எப்பவும் சீட்டுக் கட்டு மாதிரி ஒண்ணு இருக்கும். அதை வைச்சு குலுக்கிப் போட்டுப் போட்டு அவங்களே விளையாடுவாங்க."

"என்னது சீட்டுக் கட்டா? அது விளையாட குறைஞ்சது ரெண்டு பேர் வேணுமே..."

"இது வழக்கமா விளையாடற சீட்டுக் கட்டு இல்ல. இது வேற. ஏதோ வருங்காலத்தைப் பற்றி சொல்ற சீட்டுக் கட்டு நிறைஞ்ச கார்ட்ஸ் அது.

மேடம் ரூமிலதான் இருக்கு. நான் ஒரு நாள் உனக்குக் காட்டறேன். ஆனால் ஸாருக்குத் தெரியக்கூடாது.

அவருக்கு அது கொஞ்சம் கூடப் பிடிக்காது. ஸாரோட அண்ணனுக்கும் பிடிக்காது. ஆனால் அந்த அம்மா கேக்கவே இல்லை.

அதையே வெச்சுகிட்டு விளையாடிகிட்டே இருக்கும். ம்..ம் என்ன இருந்ததோ அப்படி அதில்..."

"ஓ... 'டாரட் கார்ட்' போல் தெரிகிறது. இவர்கள் சொ வதைப் பார்த்தால் இவ்வளவு அழகான பெண் தருணி அம்மா.

கண்களில் என்ன ஒரு காந்த சக்தி. நல்ல கவர்ச்சிய முகம். அவர்களுக்குத் தெரிந்து இருக்குமா தான் இற விடுவோம் என்று.

விபத்தில் இறந்து விடுவோம் என்று தெ இருக்குமா? தட்ஸ் ஸ்ட்ரேன்ஜ்.

மனிதனின் மரணம் மட்டும் அவனுக்கு எப்பவும் புதிர்தான். அந்தப் புதிரின் விடையைக் கண்டு பிடிப்பது அவ்வளவு சுலபம் அல்ல.

அதனால் கண்டிப்பாகத் தருணின் அம்மாவிற்கும் அது தெரிந்து இருக்காது என்று மனதில் நினைத்துக் கொண்டாள்.

தன் அறைக்குள் சென்றாள் ஆராதனா. சுந்தரியின் ஓவியத்தைப் பார்த்தாள். அந்தக் கண்களில் ஒரு அபாய கரமான ஈர்ப்புச் சக்தி இருப்பது போல் தோன்றியது அவளுக்கு.

அந்தப் புகைப்படம் உயிரோடு இருப்பது போல் தோன்றியது சே... மேகலா சொன்னதால் நான் என்னவெல் லாமோ நினைத்துக் கொள்கிறேன் என்று தன்னையே கடிந்து கொண்டாள்.

அந்த 'டாரட் கார்ட்' ஞாபகம் வர, சட்டென கப்போர் டைத் திறந்தாள். கப்போர்டில் பெரும்பாலும் டிரெஸ்ஸஸ் இருந்தன.

கப்போர்டின் கடைசித் தளத்தில் 'டாரட் கார்டுகள்'. அப்புறம் அதை வைத்து விளையாட ஒரு சிறிய முக்காலி யும் இருந்தன.

ஆராதனா அதற்கு முன்பு இணைய தளத்தில் 'டாரட் கார்டுகள்' பற்றிப் படித்து இருக்கிறாள். ஆனால் அதை எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்று அவளுக்குத் தெரியாது.

நடுங்கும் விரல்களோடு அந்த கார்டை எடுத்தாள் அவள். ஒரு கார்டில் ஒரு பாம்பு படுத்து இருந்தது.



இன்னொன்றில் ஒரு வண்ணத்துப் பூச்சி இருந்தது. இன்னொன்றில் எலும்புக் கூடு ஒன்று இருந்தது. இன் னொன்றில் ஒரு ஆணும் பெண்ணும் இருந்தனர்.

ஒரு கார்டில் படமே சரியாகத் தெரியவில்லை. ரொம்ப உபயோகப்படுத்தியதால் அதில் இருந்த படம் அழிந்து போய் இருந்தது.

இந்த கார்டைத் தருணின் அம்மா, சுந்தரி அடிக்கடி எடுத்துப் பார்த்து இருப்பார்களோ? அதனால் தான் இந்த கார்ட் இப்படி டல்லாக இருக்கிறதா என்று நினைத்தாள்.

கார்டின் பின்னால் ஏதோ புரியாத மொழியில் எழுத் துக்கள் இருந்தன. சட்டென கார்ட்கள் எல்லாவற்றையும் அடுக்கி அட்டைப் பெட்டியினுள் வைத்து, அதே இடத்தில் வைத்தாள்.

அட்டை டப்பாவில் ஏதோ ஒரு மணம் இருப்பது போல் தோன்றியது அவளுக்கு. அவள் நாசியை அது நிறைத்தது.

சட்டென அந்த அறையில் தான் தனியாக இல்லை போன்ற உணர்வு அவளுக்குத் தோன்றியது. ஏனோ நெற்றியில் வியர்வைப் பூக்கள் பூத்தன.

பயத்தால் தன் நெற்றியில் இருந்த வியர்வையைக் கையால் துடைத்தாள் அவள். தன் கையில் அந்த அட்டைப்பெட்டியில் இருந்த மணம் இருப்பதை அவள் உணர்ந்தாள்.

ஏனோ அந்த மணம் அவளுக்குப் பிடிக்கவில்லை. வாஷ் பேஸின் அருகே சென்று கையைக் கழுவினாள். ஸோப் போட்டுக் கழுவிய பின்பும் அந்த வாசனை கையை விட்டுப் போன பாடில்லை.

திரைச்சீலைகள் வேகமாகப் படபடத்தன. ஏதோ ஒரு அமானுஷ சக்தி அங்கே இருப்பது போல் அவள் உள்ளுணர்வு சொல்லியது.

கந்த-சஷ்டி கவசத்தை அவள் உதடுகள் தானாக முணுமுணுத்தன. அறையில் இருக்கப் பிடிக்காமல் வேகமாக வெளியேறினாள்.

அவள் இதயம் படபடத்தது. ஏதோ யோசித்தபடியே நடந்தவள் எதிரில் வந்து கொண்டு இருந்த முகேஷ் மேல் மோதினாள்.

"ஸாரி..." என்றாள் அவள்.

"என்ன ஆச்சு ஆராதனா? யூ லுக் பேல். வெளிறிப் போய் இருக்கிறது உன் முகம். உடம்பு சரியில்லையா...?"

"இ... இல்லை... ஏதும் இல்லை!" என்று சொல்லிய படியே தன் கையைச் சுடிதாரில் அழுத்தித் துடைத்தாள்.

முகேஷின் பார்வை அவள் மேல் கூர்மையாகப் படிந்தது. அவள் கையைப் பற்றினான் அவன். மெதுவாக அவள் மணிக்கட்டைப் பற்றினான்.

"என்ன பதட்டம் ஆராதனா... என்ன ஆச்சு? என் மேல் கோபமா?

சஞ்சயைப் பார்க்க விடாமல் தடுத்தேன் என்று கோபமா? சொல், ஆராதனா," என்றான் வெறுப்பாக முகேஷ்.

அவள் ஏதும் சொல்லாமல் அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள். அவன் கண்களிலும் கோபம் தெரிந்தது.

"ஸோ நீ ஷூட்டிங் வருகிறாய் தானே?" அவன் சஞ்சயைப் பற்றிச் சொன்னது அவள் காதில் ஒலித்துக் கொண்டு இருந்தது. அதோடு அந்த 'டாரட் கார்ட்',



சுந்தரியின் ஓவியம் என்று எல்லாமே அவளுக்கு ஒரு வலியை ஏற்படுத்தி இருந்தது.

அதனால் முகேஷ் கேட்டதற்கு எந்தப் பதிலும் சொல்லாமல் தயங்கி நின்றாள்.

அவள் தயக்கத்தை வேறு விதமாகப் புரிந்து கொண்டான் முகேஷ்.

"வெல்... உனக்கு வர இண்ட்ரஸ்ட் இல்லை போலத் தெரிகிறது. ஸோ லெட் அஸ் ஃபர்கெட் இட்.

இன்று ஒரு காதல் காட்சி தான் படமாக்கப் போகிறார்கள். தட் மே நாட் பி ஸூட்டபிள் ஃபார் தருண்.

அதோடு யூ மே ஹேவ் பெட்டர் திங்ஸ் டு ஹேண்டில் லைக் சஞ்சய். ஸோ நீங்கள் வர வேண்டாம்!" என்று சொல்லிவிட்டு அவன் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் வேக மாக அங்கிருந்து சென்றான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டு இருந்தாள் ஆராதனா.

இவன் தான் ஷூட்டிங்கிற்கு அழைத்துப் போவதாகச் சொன்னான். இப்பொழுது வேண்டாம் என்று சொல்கிறான். எப்பவுமே இவன் முடிவு எடுப்பதுதான் இறுதியானது.

சே... அதுவும் எப்பவும் சஞ்சயைப் பற்றி ஏதாவது பேசுகிறான். நான் என்னவோ அவனிடம் அரட்டை அடித்துக் கொண்டு பொழுதைப் போக்குவது போலப் பேசுகிறான்.

அதை மறுத்துப் பேசினாலும் நம்ப மாட்டேங்கிறான். பேசாமல், மௌனமாக இருந்தாலும் தவறாக ஏதோ அர்த்தம் கற்பித்துக் கொள்கிறான்.

என்ன செய்தால் இவன் மாறுவான். எப்படிப் பேசினால் சரி வரும் என்று யோசித்தபடியே இருந்தாள் ஆராதனா.

அடுத்த ஒரு வாரம் வேகமாக ஓடியது ஆராதனாவிற்கு. முகேஷ் படத்தில் பிஸியாக இருந்ததால் அவளைப் பார்க்கும் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை.

ஆனால் அவளுக்கு அது நிம்மதியாக இருந்தது. ஏனோ முகேஷைப் பார்த்தால் அவள் மனம் சலனமடைந்தது.

தன் நினைப்பு தவறு என்று அவளுக்குத் தெரிந்தது. ஆனால் மனம் ஏனோ உடும்பு போல் அவனையே நினைத்தது.

அவளுடைய ஒரே ஆறுதல் தருண் தான். அவனோடு பேசும் பொழுது. விளையாடும் பொழுது தன்னை மறந்தாள் அவள்.

எந்த வேலையையும் ரெகுலராகச் செய்பவள் என்று தன்னைப் பற்றி முகேஷ் ஒரு நாள் சொன்னது அவளின் நினைவுக்கு வந்தது.

முகேஷ் சொன்னது உண்மை தான். தருணின் தினசரி ஷெட்யூல் இப்பொழுது ஓரளவு அவளுக்குப் பழகிவிட்டது.

தருணின் உடல்நிலையிலும் நல்ல மாற்றம் தெரிந்தது. கண்ணின் அடியில் இருந்த கருவளையங்கள் காணாமல் போயிருந்தன.

தருணும் முன்னைக் காட்டிலும் லேசான சதைப் பிடிப்போடு இருந்தான். குழந்தைகளும் செடியைப் போன்றவர்கள் தான்.



நன்றாகத் தண்ணீர் ஊற்றி. அன்பு செலுத்திச் செடியைப் பக்குவமாக வளர்ப்பது போலத் தான் குழந்தைகளையும் வளர்க்க வேண்டும் எனத் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

அன்று ஒரு நாள் மொட்டை மாடியில் இருந்தபடி தருணிற்கு ஒரு கதைப் புத்தகத்தைப் படித்துச் சொல்லிக் கொண்டு இருந்தாள் ஆராதனா.

அது சிவப்பு இந்தியர்களைப் பற்றிய ஒரு புத்தகம். முகேஷ் அவனுக்காக ஸ்பெஷலாகத் தருவித்த புத்தகம் அது.

முதல் பக்கத்தின் கடைசிப் பகுதி வந்ததும் தருண் வேகமாக அடுத்த பக்கத்தைத் திருப்பினான்.

ஏதும் சொல்லாமல் அடுத்த பக்கத்தில் இருந்த கதையைச் சொன்னாள் அவள். ஆனால் அந்தப் பக்கத்திலும் கடைசிப் பகுதி வந்தவுடன் தருண் வேகமாகப் பக்கத்தைத் திருப்பினாள்.

அடுத்து வந்த எல்லாப் பக்கங்களையும் அவள் படிக்கும் பொழுது தருண் அதே மாதிரிச் செய்தான்.

ஏதும் சொல்லாமல் புத்தகத்தைக் கீழே வைத்தாள் அவள். அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவன் கண்களில் குறும்பு மின்னியது போல் தோன்றியது அவளுக்கு.

“தருண்! இந்தப் புத்தகத்தை நீ இதற்கு முன்பு படித்த இருக்கியா... யாராவது உனக்குப் படித்துச் சொல்லி இரு காங்களா..?”

‘இல்லை’ என்பது போல் தலை அசைத்தான் தருண்

"சரி தருண். இவ்வளவு நேரம் நான் உனக்குப் படித்துச் சொன்னேன். இப்பொழுது நீ படிக்கிறாயா இதை? உனக்குப் படிக்கத் தெரியும் தானே? படி. பார்க்கலாம்," என்று அவனிடம் நீட்டினாள் புத்தகத்தை.

அப்பொழுது தான் தருணின் கையில் இருந்த பேப்பரைக் கவனித்தாள் அவள்.

'திஸ் இஸ் போரிங்' என்று பேப்பரில் எழுதி இருந்தான் தருண்.

அதைப் பார்த்தவள் கடகடவெனச் சிரித்தாள். "ம்... நான் இங்கே உனக்குப் படித்துச் சொல்லிக் கொண்டு இருக்கிறேன்... நீ கூலாக இப்படி எழுதி வைத்து இருக்காய்... படவா... உன்னை என்ன செய்யலாம்?" என்று செல்லமாக அவன் காதைத் திருகினாள்.

தருண் லேசாக முறுவலித்தான். அப்பொழுது தான் அவளுக்கு அந்த எண்ணம் தோன்றியது.

தருணிற்கு இந்த மாதிரி எழுதுவது பிடித்து இருக்கிறது போல. ஸோ அதை முயற்சி செய்து பார்க்கலாமே என நினைத்துக் கொண்டாள்.

"தருண்! இந்த மாதிரி 'மெஸேஜ்' எழுதுவது உனக்குப் பிடிக்கிறது தானே. ஸோ நான் நீ தூங்கிய பின்பு உனக்கு ஒரு 'மெஸேஜ்' எழுதி வைப்பேன்.

எங்கே வைக்கலாம்..? ம்ம்... உன் தலையணை அடியில் வைக்கவா? அதில் என்ன எழுதியிருக்கோ, அதன்படி நீ நடக்க வேண்டும். சரியா?"

'சரி' என்பது போல் வேகமாகத் தலை ஆட்டினான் தருண்.



"தட்ஸ் குட். சரி. வா. போகலாம்." லேசான புன்முறுவலோடு அவளைப் பின் தொடர்ந்தான் தருண்.

அன்று இரவு ஒரு காகிதத்தில் பெரிய எழுத்துக்களால் தருணிற்கு 'மெஸேஜ்' எழுதத் தொடங்கினாள் அவள்.

"ஹலோ தருண். என்னுடைய அறைக்கு வந்து என்னை எழுப்பு - ஆராதனா!" என்று எழுதி அதைத் தருணின் தலையணை அடியில் வைத்தாள்.

அடுத்த நாள் காலை ஆராதனா நல்ல தூக்கத்தில் இருந்தாள். சிறிய கை ஒன்று அவள் கையைச் சுரண்டியது.

சட்டெனக் கண் விழித்தாள் அவள். எதிரே தருண் அவள் அருகில் நின்று கொண்டு இருந்தான்.

அவன் கையில் ஒரு காகிதம் இருந்தது. தருண் அதை அவளிடம் நீட்டினான்.

ஆவலாக அதை வாங்கிப் பார்த்தாள் அவள். தருண் ஒரு அழகான ஓவியம் வரைந்து இருந்தான்.

சிரிக்கும் சூரியன், பசுமையான தோட்டம், அதில் இருக்கும் மரங்கள், செடிகள், பூக்கள் என வண்ண மயமாக இருந்தது அந்தக் காகிதம்.

தோட்டத்தில் இரண்டு பேர் நடப்பது போல் வரைந்து இருந்தான். கீழே 'குட்மார்னிங் ஆராதனா' என எழுதி இருந்தான்.

"வாவ்... தருண் என் மெஸேஜ் புரிந்து கொண்டு என்னை எழுப்ப வந்து விட்டாயே...

யூ ஆர் எ க்யூட் பாய். அப்புறம் இது நம்ம தோட்டம் தானே. ரொம்ப அழகாக வரைந்து இருக்கிறாய்.

உதிர்வதில்லை!
தேவதைகள்
அங்கே
உலா வரும்!
நட்சத்திரப்
பூக்கள்
கால்
மிதியடியாக!
என்
இதயத்
தாமரையில்
நீ
இருக்கிறாய்!
மனமின்றிக்
கண்களைத்
திறக்கிறேன்!
அது
ஒரு
தேன் சிந்தும்
காலை!
என் கனவிலும்
தேன்!
உன்னாலே!



மொட்டை மாடி காலை வெயிலில் அழகாகக் குளித்துக் கொண்டு இருந்தது.

"தருண்! எவ்வளவு அழகாக இருக்கு பார்... சூரியன் பெரிய ஆரஞ்சுப் பழம் மாதிரி இருக்கு தானே! வாவ்! ஸோ நைஸ். உனக்குப் பிடிக்குதா?"

தருண் கண்களில் உற்சாகம் மின்னியது. சட்டெனத் தன் முன்னே நிழல் தெரிவதை உணர்ந்தாள் ஆராதனா.

'யாராகயிருக்கும்' என்று நினைத்தபடியே திரும்பிப் பார்த்தாள்.

அங்கே முகேஷ் நின்று கொண்டு இருந்தான். அவனை அங்கு சற்றும் எதிர்பார்க்காததால் அவள் மனதில் பரவசமும் பதட்டமும் பொங்கியது.

சட்டென எழுந்திருக்க முயன்றாள் அவள். ரொம்ப நேரம் உட்கார்ந்து இருந்ததால் அவள் கால் மரத்துப் போய் இருந்தது.

அதனால் எழுந்திருக்கும் பொழுது லேசாகத் தடுமாறினாள் அவள். முகேஷின் கைகள் அவளைக் கீழே விழாமல் தாங்கிப் பிடித்தன.

அவன் கைகள் பட்ட இடம் ஏனோ மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது அவளுக்கு.

"சாரி... நான்... நீங்கள் ஷூட்டிங் போயிருப்பீங்க அப்படின்னு நினைச்சேன்..."

"ம்... இன்னிக்கு ஒரு நாள் மட்டுமே நோ ஷூட்டிங். வீ ஆர் அஹெட் ஆஃப் தி ஷெட்யூல். அதனால் தான் இன்னிக்கு ஆஃப்!" என்றவனின் கண்கள் தருண் மேல் படர்ந்தன.

தருண் அவனைப் பார்த்து லேசாகப் புன்னகைத்தான்.

"வா தருண். உன்னை நான் சரியாகப் பார்த்து ஒரு வாரம் ஆகிவிட்டது. டிட் யூ மிஸ் மி?" என்றான் கைகளை நீட்டியபடி.

நீட்டிய கைகளுக்குள் தஞ்சம் அடைந்தான் தருண்.

"தருண்! உன்னை இப்படிப் பார்ப்பதற்கு சந்தோஷமாக இருக்கிறது. யூ லுக் ஸ்ட்ராங் நவ்.

வாவ்! இட்ஸ் குட் தருண். இதே மாதிரி இன்னும் ஒரு மாதம் மெயின்டெயின் செய்தால் யூ கேன் லெர்ன் கராத்தே...

வீட்டிற்கு ஒரு ட்ரெயினர் வந்து சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன். உனக்கு ஓகேவா?" என்றான் தருணைத் தன் தோள் மேல் தூக்கி வைத்தபடி.

அதற்குள் முகேஷின் கைப்பேசி சிணுங்கியது. "இரு தருண்!" என்று அவனை இறக்கிவிட்டவன் கைப்பேசியை எடுத்து "ஹலோ..." என்றான்.

"என்ன இன்னும் அரை மணி நேரத்தில் வரணுமா? கடைசி ஷாட் சரியில்லையா? ஓகே. வருகிறேன்," என்று சொல்லிவிட்டு ஃபோனில் இணைப்பைத் துண்டித்தான்.

"தருண்! நீ இங்கேயே இரு. நான் ஆராதனாவிடம் ஒன்று சொல்ல வேண்டும்!" என்று முகேஷ் சொன்னவுடன் ஆராதனாவிற்குத் தூக்கி வாரிப் போட்டது.

"தருண்! நீ இங்கேயே இரு. கலர் அடித்துக் கொண்டு இரு. நான் கீழே போய் விட்டு வருகிறேன்," என்று சொல்லிவிட்டு முகேஷைத் தொடர்ந்தாள்.

"என்ன பேச வேண்டும். சொல்லுங்கள்."



"தேங்க்ஸ். நீ தருணை ரொம்ப நன்றாகப் பார்த்துக் கொள்கிறாய். அவன் இப்பதான் பழைய நிலைமைக்கு வந்து கொண்டு இருக்கிறான்.

அவன் முகம் பொலிவாக இருக்கிறது. கண்களில் ஒளி தெரிகிறது. தேங்க்ஸ் ஆராதனா."

"ஓ... இட்ஸ் ஓகே. நான் பெரிதாக ஏதும் செய்து விடவில்லை..." என்றாள் கூச்சத்துடன் அவள்.

"கிட்! நீ எவ்வளவு மாற்றங்களைச் செய்து இருக்கிறாய் என்று உனக்குத் தெரியாது.

சில நேரம் தருணாக நான் இருக்கக் கூடாதா என்று ஏக்கமாக இருக்கிறது!" என்றான் மெல்லிய குரலில்.

அவன் சொன்னதைக் கேட்டவுடன் அவள் இதயத் துடிப்பு அதிகரித்தது. முகத்தில் செம்மை படர்ந்தது.

"உன் முகத்தில் அப்பப்ப தோன்றும் இந்தச் சிகப்பு எனக்கு ரொம்ப பிடிக்கும்!" என்று சொல்லி அவளை மேலும் ஆச்சரியப் படுத்தினான் அவன்.

தன்னைச் சமாளித்துக் கொண்டு பேசத் தொடங்கினாள் அவள்.

"நானும் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்."

"என்ன ஆராதனா?"

"தருணை இன்று ஹாஸ்பிடலுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். நானும் கூடப் போகவா?

டாக்டரிடம் தருண் பற்றிப் பேச வேண்டும். அதற்காகத் தான்."

"நீ ஒன்றும் இங்கே கைதி இல்லை. நீ உன் விருப்ப போல எங்கே வேண்டுமானாலும் போகலாம்.

யாரை வேண்டுமானாலும் பார்க்கலாம். அதற்கு எந்தச் சாக்கும் வேண்டாம்!” என்று கோபமாகப் பேசினான்.

“இல்லை. தருண் நேத்து என்ன...” என்று முடிக்கும் முன்பு அவன் வேகமாக அறையை விட்டு வெளியேறி விட்டான்.

ஆராதனாவிற்குக் கோபம் வந்தது. சே! சொல்ல வந்ததைக் காதில் வாங்காமல் இது என்ன அவசரம்? அதோடு சட்டென்று அவன் ரூட் ஏன் மாறிவிட்டது?

புரியவில்லை. முகேஷ்! ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்? தருண் எழுதுவதைப் பற்றி நான் தான் உங்களிடம் சொல்ல வந்தேன்.

ஆனால் அதற்குள் நீங்கள் அவசரமாகப் போய் விட்டீர்கள். நான் வெளியே போவது உங்களுக்கு ஏன் பிடிக்கவில்லை?

நான் ஊர் சுத்த ஒன்றும் போகவில்லை. தருணைப் பற்றிப் பேசவே போக வேண்டும் என்று தெளிவாகச் சொன்னேன்.

அப்புறம் ஏன் வார்த்தைகளை இப்படிச் சிதறவிட்டு விட்டுப் போகிறீர்கள். சே! உங்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

பாவம் தருண். அங்கே தனியாக இருப்பான். அவனைக் கவனிக்கப் போகலாம். அட்லீஸ்ட் அதைச் செய்தாலாவது என் மனம் நிம்மதி அடையும்.

நல்ல காலம். தருண் முகேஷ் மாதிரி இல்லை. ஹி இஸ் எ நைஸ் பாய் எனத் தனக்குத் தானே சொல்லியபடி மாடிப் படிக்கட்டுகளைக் கடந்தாள்.



தருண் சமர்த்தாக கலர் அடித்துக் கொண்டு இருப்பதைக் கவனித்தவளின் இதழ்களில் புன்னகை பரவியது.

“தருண்! கலரிங் அடிச்சு முடிச்சிட்டியா? காட்டு. பார்க்கலாம்.”

தருண் கலர் அடித்து இருந்த அந்த இயற்கைக் காட்சி அழகாக இருந்தது.

மலை, அருவி, நீல வானம், மின்னும் நட்சத்திரங்கள், முழு நிலவு என எல்லாமே ரசிக்கும்படி இருந்தது.

“வாவ். தருண் ரொம்ப அழகா அடிச்சிருக்க. குட் பாய். இப்ப சாப்பிடலாமா?”

‘சரி’ என்பது போல் தலை அசைத்தான் தருண்.

தயாராக இருந்த உணவு வகைகளை அவனிடம் தட்டில் வைத்து நீட்டினாள். தருண் ஆர்வமாகச் சாப்பிடுவதை ரசித்தாள் அவள்.

சாப்பிட்டு முடித்த பின்பு இருவரும் மொட்டை மாடியில் இருந்து இறங்கினர்.

சமையல் அறையில் இருந்த மேகலா அவர்கள் இருவரும் பிரேக்ஃபாஸ்ட் முடித்து விட்டு வருவதைப் பார்த்துத் திகைத்தாள்.

“என்ன ஆராதனா.... எங்கே போயிட்டீங்க? நான் எங்கே எல்லாம் உங்களைத் தேடினேன்.

சாப்பாட்டு பிளேட் எல்லாம் வேற எடுத்து வரீங்க அதுக்குள்ள பிரேக்பாஸ்ட் ஓவரா?”

“ஆமாம்.... ஃபார் ஏ சேன்ஜ். இன்னிக்கு நான் பிரே பாஸ்ட் செய்தேன். உங்களுக்கும் எடுத்து வைச்சிருக்கே

சாப்பிடுங்க ஆன்ட்டீ. உங்களுக்குப் பிடிக்கும் என நினைக்கிறேன்."

"ஓ... கண்டிப்பாக. ரொம்ப தேங்க்ஸ் ஆராதனா. எனக்கு இன்னிக்கு உடம்பு கொஞ்சம் சரியில்லை.

நீ பிரேக்பாஸ்ட் செய்தது எனக்கு ரொம்ப வசதியாப் போச்சு."

"அட இந்தச் சின்ன விஷயத்திற்கு எதுக்கு தேங்க்ஸ். ப்ளீஸ் சாப்பிடுங்க.

இன்னிக்கு லன்ச் கூட வேண்டாம். நானும் தருணும் வெளியே போறோம். ஸோ ரெஸ்ட் எடுங்க."

"தருண்! நம்ம இன்னும் கொஞ்ச நேரத்தில வெளியே போறோம். பத்து மணிக்குக் கிளம்பலாம். சரியா?"

'சரி' என்பது போல் தலை அசைத்தான் தருண்.

குளித்து விட்டுத் தனக்குப் பிடித்த ரோஜா வண்ண சல்வாரை அணிந்து கொண்டாள் ஆராதனா.

தருணும் குளித்துவிட்டுத் தயாராக இருந்தான். ட்ரைவர் எப்பவுமே தயாராக இருந்ததால் இருவரும் உடனே கிளம்பினர்.

"வெல் - ஸீன் ஹாஸ்பிடல் போங்க!" என்று பணித்தாள் ஆராதனா.

கார் மெதுவாக சீராகப் போய்க் கொண்டு இருந்தது. தருண் முகத்தில் ஏதோ ஒரு இறுக்கம் படர்வதைக் கவனித்தாள் அவள்.

காரில் பயணம் செய்யும் பொழுது அவனுக்கு அந்த விபத்து நினைவு வரும் போல. அதனால் தான் ஒரு மாதிரி இருக்கிறான் என நினைத்துக் கொண்டாள் ஆராதனா.



தருணின் கையை எடுத்து மடிமேல் வைத்துக் கொண்டாள். 'நான் தருணாக இருக்கக் கூடாதா?' என முகேஷ் சொன்னது ஏனோ காதில் ஒலித்தது.

முகேஷைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ஏன் அப்படிச் சொன்னான் என்று தெரியவில்லை என்று தனக்குள்ளே யோசித்தபடி இருந்தாள்.

"மேடம்! ஹாஸ்பிடல் வந்து விட்டது!" என்ற டிரைவரின் குரல் கேட்டு நிஜ உலகிற்கு வந்தாள் அவள்.

"தருண்! கமான். இறங்கலாமா? ஹாஸ்பிடல் வந்து விட்டது பார்!" என்று அவன் கைபிடித்து இறங்க உதவி செய்தாள்.

"மேடம்! நான் இங்கேயே வெயிட் செய்யறேன். நீங்க போயிட்டு வாங்க!" என்றார் டிரைவர்.

ஹாஸ்பிடல் ரிசப்ஷனில் நிறையப் பேர் உட்கார்ந்து இருந்தார்கள். நாட்டில் இவ்வளவு பேருக்கு உடம்பு சரியில்லை என நினைத்துக் கொண்டாள் அவள்.

"டாக்டர் சஞ்சயைப் பார்க்க முடியுமா? என் பெயர் ஆராதனா!" என்றாள் ரிசப்ஷனில் உட்கார்ந்து இருந்த பெண்ணிடம்.

"சஞ்சய் சாரா? வரச் சொல்றேன் மேடம். வெயிட் பண்ணுங்க."

அடுத்த ஐந்து நிமிடத்தில் சஞ்சய் அவர்களை நோக்கி நடந்து வந்தான்.

"ஹாய் ஆராதனா. வாட் எ நைஸ் ஸர்ப்ரைஸ்.ஹா தருண். ஹவ் ஆர் யூ?" என்றான் புன்னகை புரிந்தபடி சஞ்சய்.

"ம்..... இன்னிக்கு தருணிற்கு டெஸ்ட் எல்லாம் எடுக்கணும். ரெகுலர் செக் - அப். அதற்குத்தான் வந்து இருக்கிறோம்.

அப்புறம் நான் உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும். உங்களுக்கு நேரம் இருக்குமா?"

"ம்.... நீ கேட்டு நேரம் இல்லை என்று நான் சொல்வேனா, ஆராதனா?

என்னுடைய டியூட்டி இன்று மதியம் ஒரு மணிக்கு முடிந்து விடும். அப்புறம் ஐயா ஃப்ரீதான்

எப்படியும் தருணின் டெஸ்ட் எல்லாம் எடுத்து முடிப்பதற்கே மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகிவிடும்.

அப்புறம் கொஞ்ச நேரம் வெயிட் செய்தால் போதும். நான் ஓடி வந்து விடுவேன். லன்ச் சாப்பிட்ட பின்பு நீங்கள் வீட்டிற்குப் போகலாம்.

தருணை லன்சிற்கு அப்புறம் வீட்டில் விட்டு விடலாம். பின் நீ என்ன பேசணுமோ அதை நிதானமாகப் பேசலாம்.

என்ன ஆராதனா, ப்ளான் ஓகேவா? நோ சேன்ஜஸ் ப்ளீஸ்."

"இல்லை. தருண் தனியாக......" என்று அவள் முடிக்கும் முன்பு அவன் குறுக்கிட்டான்.

"ப்ளீஸ் நோ சேன்ஜஸ். தருண் வில் பி டயர்ட் அதனால் லன்ச் முடிந்த பின்பு தூங்கி விடுவான்.

ஸோ நீ கவலைப்படாதே. ஒரு நாள் தானே ப்ளீஸ்."

"சரி," என்றாள் ஆராதனா.



அதற்குள் தருணிற்குத் தேவையான டெஸ்ட்கள் எல்லாம் எடுப்பதற்கு ஏதுவாக ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்தான் வரவேற்பறை அழகியிடம் சஞ்சய்.

"ஆராதனா! இதெல்லாம் முடிய இன்னும் இரண்டு மணி நேரம் ஆகும்.

தருணை இங்கே இருப்பவர்கள் பார்த்துக் கொள்வார்கள். உன்னை டெஸ்ட் ரூமில் விட மாட்டார்கள்.

அதனால் நீ ஜாலியாக ஒரு ரவுண்ட் அடித்து விட்டு வா. இங்கே இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் புக் -ஷாப் ஒன்று இருக்கிறது.

யூ கேன் ஸ்பெண்ட் டைம் தேர். இங்கே உட்கார்ந்து கொண்டு இருந்தால் போர் அடிக்கும். ஸோ ஜஸ்ட் கோ......"

"இல்லை தருண்......" என்று இழுத்தாள்.

ம்...... தருணைப் பார்த்துக் கொள்ளும் டாக்டர் நான் சொல்கிறேன். கேள். ஐ வில் டேக் கேர் ஆஃப் ஹிம்."

"சரி," என்று முணுமுணுத்தாள் அவள்.

"தருண்! நான் வெளியே போய்ட்டு கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்திருவேன். ஓகேவா?

நீ குட் பாயா எல்லா டெஸ்ட் எடுக்க ஹெல்ப் செய் யணும். சரியா?"

'சரி' என்பது போல் தலை ஆட்டினான் தருண்.

டிரைவரிடம் சொல்லி புக் - ஷாப் அருகே போகும் படி சொன்னாள்.

வழியில் தெரிந்த பலமாடிக் கட்டடங்களைப் பிரமி புடன் பார்த்தபடி இருந்தாள் அவள். அப்பொழுது 'திக்ள

நாளிதழ் என்ற பெயர்ப் பலகை பொருந்திய கட்டடம் அவள் கண்ணில் பட்டது.

"இங்க கொஞ்சம் நிறுத்துங்க."

"சரி மேடம்."

அவர் நிறுத்திய அந்தக் கட்டடத்தின் முன் நின்றாள் ஆராதனா. உள்ளே நுழையலாமா வேண்டாமா எனத் தயங்கியவள் துணிவை வரவழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள்

"யெஸ் மேடம். ஹவ் கேன் ஐ ஹெல்ப் யூ?"

"ம்.... எனக்குப் பழைய பேப்பர் ஒன்று வேண்டும். இணைய தளத்தில் இரண்டு வருடம் முன்பு வெளிவந்த பேப்பர் இல்லை.

அதனால் தான் இங்கே வந்தேன். எனக்கு இது அவசரமா வேணும். ஹெல்ப் பண்ணுங்க ப்ளீஸ்."

"ஷ்யூர் மேடம். டேட் சொல்லுங்க"

"ம்... மார்ச்... பத்து. இரண்டாயிரத்து ஐந்து வருடம்... மார்ச் பத்து, இல்லை பதினொண்ணு தான் தேதி."

"ஓ நோ ப்ராப்ளம்."

"நான் வெயிட் பண்றேன்."

அவள் இதயத் துடிப்பு அதிகரித்தது. ஏனோ பதட்டமாக உணர்ந்தாள் அவள். பத்து நிமிடங்கள் நத்தை போல் ஊர்ந்தன.

"மேடம் இந்தாங்க... நீங்க கேட்ட பேப்பர். இரண்டு டேட்டும் இருக்கு." என்று ஒரு ஆஃபீஸ் - பாய் அவளிடம் பேப்பரை நீட்டினான்.



அதை நடுங்கும் கரத்தோடு வாங்கினாள் அவள்.

பேப்பரின் முதல் பக்கத்திலேயே அவள் எதிர் பார்த்த செய்தி இருந்தது.

'நடிகர் முகேஷின் அண்ணன், மற்றும் அவர் மனைவி கார் விபத்தில் மரணம்' என்று தலைப்புச் செய்தி இருந்தது.

கீழே பெரிய பெட்டிச் செய்தி வந்திருந்தது.

'பிரபல நடிகர் முகேஷின் அண்ணனும் அவர் மனைவியும், மகன் தருணும் ஒரு கோரமான கார் விபத்தில் சிக்கினார்கள்.

முகேஷின் அண்ணன் தினேஷ், அவர் மனைவி சுந்தரி இருவரும் அங்கேயே உயிர் இழந்தனர். அவர்கள் மகன் தருண் காரிலிருந்து வெளியே தூக்கி எறியப்பட்டான்.

அவன் இப்பொழுது ஐ. சி. யூ. வில் ஹாஸ்பிடலில் அட்மிட் செய்யப்பட்டு இருக்கிறான். விபத்திற்குக் காரணம் வண்டியை வேகமாக ஓட்டியதுதான் என போலீஸார் திட்டவட்டமாகச் சொல்கிறார்கள்.

காரை ஓட்டியது தினேஷின் மனைவி சுந்தரி என்று உறுதி செய்யப்பட்டு இருக்கிறது.

சுந்தரிக்கு மது அருந்தும் பழக்கம் ஏதும் இல்லை. அதனால் விரைவாகக் காரைச் செலுத்தியதுதான் விபத்திற்குக் காரணம் என்று முடிவு செய்யலாம்.

அதிர்ச்சியில் இருக்கும் முகேஷ் பத்திரிகைத் துறையில் இருப்பவர்களைச் சந்திக்க மறுத்து விட்டார்.

சுந்தரியின் சிகப்பு ஜோடி ஷூக்களும், அவருடைய திருமண மோதிரமும் காரினுள் விழுந்து கிடந்தன என்று

முடிந்து இருந்தது அந்தச் செய்தி.

கீழே வெளியாகி இருந்த புகைப்படத்தைப் பார்க்க ஏனோ அவள் மனம் இடம் கொடுக்கவில்லை.

சே! எவ்வளவு கோரமான விபத்து இது. அந்தச் சிகப்பு ஷு! ஓ காட்! சுந்தரியின் அறையில் இருந்ததே. அதுவா?

அன்று கூட அந்தக் காலணி பற்றி ஏதோ ஒரு கதை சொன்னானே முகேஷ். அந்தக் காலணியை அணிந்து கொண்ட பெண்ணால் அதைக் கழற்ற முடியவில்லை.

தொடர்ந்து நடனம் ஆடியபடியே இருக்கிறாள். பின்பு அவளுக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது என்று ஏதோ சொன்னானே.

கடவுளே! இது என்ன ஒரு துர் மரணம். அவளின் மோதிரம் எப்படிக் கழன்று விழுந்தது. ஏதோ சரியில்லாதது போல் தோன்றகிறதே எனக் குழம்பினாள் அவள்.

“மேடம்! வேறு ஏதாவது வேணுமா?” என்று அந்த ஆஃபீஸ் - பாய் கேட்டவுடன் சுய நினைவுக்கு வந்தாள்.

“இல்லை. தேங்க்ஸ்!” என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேறினாள் அவள்.

ஏனோ அவள் மனம் நிம்மதி இன்றித் தவித்தது. இந்த விபத்தில் ஏதோ ஒன்று இருக்கிறது. அது என்ன என்று தெரியவில்லை.

ஆனால் ஒரு ரசசியம் பொதிந்து இருக்கிறது இந்த ...த்தில். என் உள்உணர்வு சொல்கிறது. அது தெரிந்தால் ...ண் குணமடைய வாய்ப்பு அதிகம்.

...என்ன செய்வது என்று யோசித்தபடி இருந்தாள்



# 11

உன்
வார்த்தைகளைக்
கோத்து
நான்
மாலையாக்கி
வைத்து
இருக்கிறேன்!
பூக்களின்
கருவறையில்
பிறந்த
உன்னை
எந்தப்
பூவால்
அர்ச்சிக்க
முடியும்?
உன்னைப்
பார்த்த
பின்பு
நான்
நானாக

**இல்லை!**
**விழி**
**மூடினால்**
**அங்கே**
**நீ!**
**நிழலிலும்**
**நீ!**
**நிஜத்திலும்**
**நீ!**

பேப்பரில் பார்த்த அந்தச் செய்தி அவள் மனதை விட்டு அகல மறுத்தது. தினேஷின் முகம் கண் முன்னே தோன்றியது.

பார்ப்பதற்கு முகேஷ் போல் தான் இருந்தான் அவன். ஆனால் கண்கள் வேறு மாதிரி இருந்தன.

தருண் தினேஷின் ஜாடை என்று அவளுக்குப் புரிந்தது. சுந்தரியின் கவர்ச்சியான முகமும் அவள் கண் முன்னே தோன்றியது.

ஹாஸ்பிடலை அவள் அடைந்த பொழுது மணி பன்னிரண்டு. ரிசப்ஷன் ஹாலில் உட்கார்ந்து இருந்தாள் அவள்.

"ஹாய் ஆராதனா! என்ன ஆச்சு உனக்கு? முகம் வெளிறிப் போயிருக்கு!" என்றான் சஞ்சய். அவன் அருகே தருண் நின்று கொண்டு இருந்தான்.

"ஓ... நத்திங். வெயிலாக இருக்கும். புக் – ஷாப் வரை சென்று இருந்தேன்..."



"ஏதோ பேய் அறைந்த மாதிரி இருக்கு உன் முகம்! ஹோப் எவ்ரிதிங் இஸ் ஃபைன்."

"டாக்டராக இருந்து கொண்டு, பேய் பற்றி எல்லாம் பேசுகிறீர்களே..."

"ம்... டாக்டர்களும் மனிதர்கள் தான். சரி, இந்தச் சர்ச்சையை அப்புறம் வைத்துக் கொள்ளலாம். முதலில் சாப்பிடப் போகலாமா? ஐ ஃபீல் ஹங்ரி."

"ஓ... போகலாமே... பை தி பை உங்க டியூட்டி முடிந்து விட்டதா? மணி இன்னும் ஆகவில்லையே!"

"எங்க பாஸ் கிட்டே ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கிட்டு வந்தேன். அதான் ஒன் ஹவர் முன்னாடி ரிலீவ் செய்ய முடிஞ்சுது."

"ஓ... தேங்க்ஸ் ஃபர் இட். வா தருண்."

"அந்த காரை நீ வேண்டுமானால் திரும்பிப் போகச் சொல்லிவிடு. சாப்பிட்ட பின்பு தருணை ட்ராப் செய்து விட்டு நாம் வெளியே போகலாம்."

"இல்லை... நான்..." என்று இழுத்தாள் அவள்.

"ஆராதனா ப்ளீஸ். ஒரு நாள் தானே. ஏதோ பேச வேண்டும் என்று சொன்னாயே."

"சரி," என்றாள் அவள்.

"தருணின் டெஸ்ட் ரிசல்ட் எல்லாமே நாளைக்கு வந்து விடும். கண்டிப்பாக நார்மலாக இருக்கும். ஐயாம் கான்பிடெண்ட்."

"தட்ஸ் குட். நைஸ் டு ஹியர்."

"இந்த இடத்தில் ஒரு நல்ல ரெஸ்டாரண்ட் ஏதும் இல்லை. கொஞ்சம் தள்ளிப் போக வேண்டும்

இன்னும் பத்து நிமிஷத்தில் போய் விடலாம். உனக்கு ஓகே தானே ஆராதனா?"

"எனக்கு நோ ப்ராப்ளம். பாவம், நீங்க தான் டியூட்டி முடிஞ்சு ரொம்ப டயர்டாக இருப்பீங்க."

"இட்ஸ் ஓகே. உன்னைப் பார்த்தவுடன் என் களைப்பு எல்லாம் போய் விட்டது.

யூ ஆர் ஆன் எனர்ஜி டானிக். அது உனக்குத் தெரியாது."

இவனால் எப்படி இப்படி வெளிப்படையாகப் பேச முடிகிறது எனத் திகைத்தாள் ஆராதனா.

"என்ன ஆராதனா சட்டுன்னு மௌனமாயிட்ட?"

"ம்... நீங்க பேசறதைக் கேட்டவுடன் எனக்கு ஒரு யோசனை தோன்றியது..."

"என்ன சொல்லு..."

"ம்... நீங்க தமிழ்ப் படத்திற்கு டயலாக் எழுதப் போகலாம்.

யூ ஹேவ் எ குட் டயலாக் சென்ஸ்."

"ஓ... தேங்க் யூ. நீ ஹீரோயினா நடிக்கறதா இருந்தா ஐயாம் ரெடி. ஃபார் எனிதிங்.

ரைக்ஷன், டயலாக், ஹீரோ ரோல் என 'ஆல் இன் ஆல்' அவதாரம் எடுக்க நான் ரெடி."

அவள் அதைக் கேட்டுக் கடகடவெனச் சிரித்தாள்.

அதற்குள் ஹோட்டல் வந்து விடவே பேச்சு தடைப்பட்டது. காரை பார்க்கிங் ஸ்லாட்டில் நிறுத்தினான் சஞ்சய்.

"வா ஆராதனா. கமான் தருண்."



அந்த ரெஸ்டாரண்டில் கூட்டம் அவ்வளவாக இல்லை. கார்டன் வியு தெரியும்படி இருந்த ஒரு டேபிள் அருகே சென்றான் சஞ்சய்.

"லெட் அஸ் ஸிட் ஹியர்."

அங்கே இருந்த சேரில் இருவரும் உட்கார்ந்தனர்.

மெனு கார்டை பேரர் அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்தார்.

"இங்கே எல்லா அயிட்டமும் ரொம்ப நல்லா இருக்கும். ஸோ ஜஸ்ட் ரிலாக்ஸ் அண்ட் என்ஜாய் தி ஃபுட்."

"நீங்க என்ன ஆர்டர் செய்யறீங்களோ அதுவே எனக்குப் போதும்.

மே பி ஃபார் தருண் வி கேன் ஆர்டர் சம்திங். தருண்! உனக்கு கிட்ஸ் இடியாப்பம், அப்புறம் டொமேட்டோ சூப் ஓகேவா?"

தருண் 'சரி' என்பது போல் தலை ஆட்டினான்.

பேரரிடம் ஆர்டர் சொல்லிவிட்டு வெயிட் செய்து கொண்டு இருந்தனர்.

அங்கே தொலைக்காட்சியில் கார்டூன் ஒன்று ஓடிக் கொண்டு இருந்தது. அதனால் அதில் மூழ்கினான் தருண்.

சஞ்சய் அவள் முகத்தையே உற்றுப் பார்த்தபடி இருந்தான். ஆராதனாவால் அதை உணர முடிந்தது. ஏனோ அன்கம்பர்டபிளாக உணர்ந்தாள் அவள்.

"உங்களுக்கு எப்பவும் ஹாஸ்பிடல், பேஷண்ட்ஸ் என டைம் டைட்டாக இருக்கும்!" என்று அவன் கவனத்தைத் திசை திருப்ப முயன்றாள்.

“யெஸ். எ மெக்கானிகல் லைஃப். ஆனால் அப்பப்ப லக் அடிக்கும்.

லைக் டுடே. நீங்க இன்னிக்கு என்னோட லன்ச் வந்து இருக்கீங்க. என்னோட டைம் ஸ்பெண்ட் செய்யறீங்க.

அந்த மாதிரி லக் அடிக்கடி அடிச்சா பரவாயில்லை... சரி. நீங்க எப்ப கல்யாணம் செஞ்சுக்கப் போறீங்க?” என்றான் பட்டென.

“ஓ.. எனக்கு அந்த எண்ணம் இல்லை இப்போதைக்கு.”

“சரி. அந்த எண்ணம் எப்ப வந்தாலும் பரவாயில்லை. அப்ப என்னை ஞாபகம் வெச்சுக்கோங்க.

ஐயாம் தேர் ஆல்வேஸ் ஃபார் யூ!” என்றான்

இவனால் எப்படி இந்த மாதிரி வெளிப்படையாகப் பேச முடிகிறது என்று திகைத்தாள் அவள்.

“என்ன ஆராதனா... பதிலே இல்லை.”

“ப்ளீஸ் இந்தப் பேச்சு வேண்டாமே...”

“சரி... உன் பேச்சை நான் கேட்கிறேன். என்ஜாய் அண்ட் ஈட் யூவர் ஃபுட்.”

நல்ல பசியோடு இருந்ததால் வேகமாகச் சாப்பிட்டாள் ஆராதனா. தருணும் ரசித்துச் சாப்பிட்டான்.

ஆராதனாவின் மனம் சஞ்சய் சொன்னதை அசை போட்டபடி இருந்தது. இவன் பேசுவதைப் பார்த்தால் விளையாட்டு என்று ஒதுக்க முடியவில்லை.

ஆனால் சந்தித்த கொஞ்ச நேரத்தில் இவன் இப்படி ப்ரபோஸ் செய்கிறான் என்றால் அது ரொம்ப ஆச்சரியப் பட வேண்டிய விஷயம்.



இவன் தைரியத்தைப் பாராட்ட வேண்டும். இதைச் சொல்லத் தான் இவன் என்னுடன் பேசுவதற்கு முயற்சி செய்து இருப்பானோ?

முகேஷும் இதை அனுமானித்து இருப்பானோ? அதனால் தான் இவன் என்னைத் தனியாகச் சந்திக்க முயலும் பொழுது அதைத் தடுத்தானோ?

பட் அவனுக்கு என்ன லாபம் அதில்? ம்... ம். தருணை நான் பார்த்துக் கொள்ள முடியாது என முகேஷ் நினைத் திருப்பான்.

அதனால் தான் முகேஷ் அப்படி நடந்து கொண்டு இருப்பான். அதை நினைக்கும் பொழுது ஏனோ ஒரு ஏமாற்றம் அவள் மனதை ஆக்ரமித்தது.

சஞ்சய் மீது அவளுக்கு டாக்டர் என்று மரியாதை இருந்தது. ஆனால் அதைத் தாண்டி வேறு எந்த எண்ணமும் அவள் மனதில் இல்லை.

சஞ்சய் முகத்தைப் பார்க்க ஏனோ தயக்கமாக இருந் தது. ஆனால் சஞ்சய் ஏதேதோ பேசியபடி சாப்பிட்டுக் கொண்டு இருந்தான்.

சாப்பிட்ட பின்பு பில் தொகையை பேரரிடம் செலுத்தினான் சஞ்சய்.

“போகலாமா?” என்றான் அவளைப் பார்த்து.

“ஓ... போகலாமே... தருண், வா!” என்று அவன் கையைப் பற்றினாள் ஆராதனா.

காரில் போகும் பொழுதும் சஞ்சய் பேசியபடியே வந்தான். அவனால் எப்படி எந்த ஏமாற்றமும் கோபமும் இல்லாமல் பேச முடிகிறது என்று நினைத்து ஆச்சரியப் பட்டாள் அவள்.

ஒரு வேளை டாக்டராக இருப்பதால் மனம் பக்குவப்பட்டு இருக்கிறது போல என்று நினைத்தபடி காரில் உட்கார்ந்து இருந்தாள்.

தருணிற்குக் களைப்பு போல. கொட்டாவி விட்டபடி இருந்தவன் காரின் இருக்கையில் சாய்ந்து தூங்கிவிட்டான்.

வீடு வந்தவுடன் தருணைத் தூக்கியவாறு சஞ்சய் உள்ளே வந்தான். கட்டிலில் அவனைப் படுக்க வைக்க ஆராதனா உதவி செய்தாள்.

ஏ.ஸியை ஆன் செய்து விட்டு, தருண் தூங்குகிறான் என்பதை உறுதி செய்த பின்பு தான் அந்த இடத்தை விட்டு அகன்றாள் அவள்.

“என்ன ஆராதனா... யூ லுக் டயர்ட். ஏதோ பேசணும்னு வேற சொன்னியே...”

“ம்... பேசணும். இங்க வேண்டாம்... எங்கேயாவது வெளியில போய்ப் பேசலாம்.

உங்க காரில கூட உட்கார்ந்து பேசலாம்.”

“ஓகே... தட்ஸ் எ குட் ஐடியா.. கம்.”

அவனைப் பின் தொடர்ந்தாள் ஆராதனா. சஞ்சய் சாதாரணமாகத் தான் இருக்கிறான். ஆனால் தன்னால் அப்படி இருக்க முடியவில்லை என்று புரிந்தது அவளுக்கு.

காரில் உட்கார்ந்த சஞ்சய் இக்னிஷனை ஆன் செய்தான்.

“ஏஸி போதுமா ஆராதனா.... இல்லை, இன்னும் கொஞ்சம் அதிகமாக வைக்கவா..?”

“ஓ... நோ. இதுவே கரெக்டாக இருக்கிறது.”



“சரி... சொல்... நீ தனியாகப் பேச வேண்டும் என்று தீர்மானமாக இருக்கிறாய்.

ஸோ நீ சொல்லப் போகும் விஷயம் ரொம்ப முக்கியமானது என்று நம்புகிறேன்.”

“யெஸ். யூ ஆர் ரைட். நான் இன்று 'தி க்ளாக்' நியூஸ் பேப்பர் ஆஃபீஸிற்குச் சென்று இருந்தேன்.

அங்கே அந்த கார் விபத்து பற்றி செய்தி வந்து இருந்த பேப்பரைப் பார்த்தேன்.

தருணின் பெற்றோரின் புகைப்படத்தைப் பார்த்தேன். இட் வாஸ் எ கோரி இன்ஸிடெண்ட்”

“ஐ ஸீ. நீ ஏன் அதைப் பார்த்தாய்? அதுவும் அந்த நாளிதழைத் தேடி ஏன் பார்த்தாய்?”

“ம்... தெரியவில்லை. நான் எதுவும் ப்ளான் செய்து பார்க்கவில்லை.

அந்தக் கட்டடத்தைப் பார்த்தவுடன் போக வேண்டும் என்று ஒரு உந்துதல்...

“யெஸ்... நோ... எ... எனக்குத் தெரியவில்லை - ஏன் போய்ப் பார்த்தேன் என்று.

ஐ ஜஸ்ட் டோண்ட் நோ!” என்றாள் பரிதாபமாக

“ம்... உனக்குத் தெரியும் ஆராதனா. ஏன் அங்கே போனாய் என்று உனக்குத் தெரியும்.

ஜஸ்ட் திங்க். கம் அவுட்!” என்றான் அவள் கண்களைப் பார்த்தபடி சஞ்சய்.

“யெஸ். யூ ஆர் ரைட். விபத்து எப்படி நடந்தது என் நான் தெரிந்து கொள்ள விரும்பினேன்.

விபத்தைக் காட்டிலும் சுந்தரியைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பினேன். அவளைப் பற்றி யாருமே ரொம்ப பேச மறுக்கிறார்கள்."

"ம்-தட்ஸ் நைஸ். இது உண்மை என்று நம்புகிறேன்."

"ஆமாம். இது தான் உண்மை. உங்களுக்குக் கண்டிப்பாகச் சுந்தரி பற்றித் தெரிந்திருக்கும். அதை என்னிடம் சொல்லுங்கள் ப்ளீஸ்."

"ம்... சுந்தரி ரொம்ப அழகான பெண். அவளிடம் ஏதோ ஒரு ஈர்ப்புச் சக்தி இருக்கிறது என்று நான் நிறையத் தடவை நினைத்து இருக்கிறேன்.

பட் ஏனோ அவளை எனக்குப் பிடிக்கவில்லை. ஏனோ அவளுக்குத் தன்னம்பிக்கை குறைவு என்பது என் கணிப்பு.

தருணிடம் அவள் அன்பாகப் பேசி, கொஞ்சி விளையாடி நான் பார்த்தது இல்லை. எப்பவும் ஏதாவது யோசனையில் மூழ்கி இருப்பாள் அவள்.

எதையோ தேடுவது போல் இருக்கும் அவள் கண்கள். எப்பவும் பொறுமை இல்லாமல், அமைதி இல்லாமல் தவிப்பது போல் இருக்கும் அவள் முகம்."

"ஓ... அப்படியா... ஆனால் தருண் அப்படி இல்லை. நல்ல வேளை...

"சரி. சுந்தரியைப் பற்றித் தெரிந்து கொள்ள நீ ஏன் இவ்வளவு அக்கறை காட்டுகிறாய்?

தருணின் உடல் நலம் தேறுவதற்கு இந்த விஷயங்கள் எல்லாம் உபயோகமாகும் என நினைக்கிறாயா?"

"யெஸ்... யூ ஆர் ரைட்..."



"பட்... இது ரொம்ப கஷ்டமான விஷயம். நீ எங்கே தொடங்கினாயோ அங்கேயே இருப்பாய்.

தெரியாத புதையலைத் துரத்துவதற்குச் சமம் இது. உண்மை அறிந்தவர்கள் இரண்டு பேர். என்ன நடந்தது என்று அவர்களுக்கு மட்டுமே தெரியும்.

ஒருவனால் பேச முடியாது. இன்னொருவன் பேசத் தெரிந்தும் பேச மாட்டான்.

ஸோ ஜஸ்ட் லீவ் இட். நான் ரொம்ப முயற்சி செய்து பார்த்துத் தோற்று விட்டேன்."

"இரண்டு பேரா?"

"யெஸ். ஒன்று தருண். இன்னொன்று முகேஷ்."

"பட் இது ரொம்ப முக்கியமான விஷயம் ஆச்சே. தருண் சீக்கிரமாகக் குணமடைய அவன் அம்மா, அப்பா பற்றி தெரிந்தால் தானே முடியும்?"

"ம்... நீ சொல்வது சரி. எனக்குத் தெரிந்ததை நான் சொல்கிறேன்.

அவர்கள் திருமணமே ஒரு வெறுமை என்று நான் நினைத்திருக்கிறேன். தினேஷ் எப்பவும் சோகமாக இருப்பான்.

உலகில் உள்ள சோகத்தை எல்லாம் தன் தலையில் சுமந்து கொண்டு திரிவதைப் போல் இருக்கும் தினேஷைப் பார்த்தால்.

சுந்தரி நிறைய மாத்திரைகள், பெயின் கில்லர் போட்டுக் கொண்டு இருப்பாள். அவளுக்கு என்ன வியாதி என்று தெரியவில்லை.

"யெஸ். மைக்ரேன் போல் ஏதோ ஒன்றுக்காக அவள் பயந்திருக்கிறாள்.

என்னுடைய கொலீக்" தான் அவளை ட்ரீட் செய்து இருக்கிறான். அவளுக்கு மைக்ரேனே இல்லை.

பட் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு அமர்க்களப் படுத்தி இருக்கிறாள். ஷீ இஸ் ஆன் ஆட்டோ - டிஸ்ட்ரக்ட்."

"எனக்குப் புரியவில்லை... அப்படி என்றால் என்ன"

"ம்... தன்னைத் தானே மெதுவாக அழித்துக் கொள்வதில் இவர்களுக்கு விருப்பம்.

ஷி வாஸ் எ ஃஸைக்கோ."

"காட்! அப்ப அந்த விபத்து..."

"அவள் வேண்டும் என்றே ஏற்படுத்தியதாக இருக்கலாம்..."

"கடவுளே! ஆனால் அந்தக் காரில் அவள் கணவனும், தருணும் இருந்து இருக்கிறார்களே! அவளுக்கு எப்படி மனம் வரும். என்னால் நம்ப முடியவில்லை..."

"ம்... நம்புவதும் நம்பாததும் உன் இஷ்டம். இதில் நீ ரொம்ப இன்வால்வ் ஆகாதே."

"ஏன்..."

"அது முகேஷிற்குப் பிடிக்காது..."

"அதுதான் ஏன்...?"

"ஏனென்றால் சுந்தரியும் அவனும் லவ்வர்ஸ். போதுமா?"

அதைக் கேட்டவுடன் அவள் முகம் வெளிறியது.



# 12

நீல
வானில்
மேகங்களின்
ஊர்வலம்!
என்
வானில்
எப்பவும்
நிலாவாக
நீ
உலா
வருகிறாய்!
தேன்
சிந்தும்
மழை!
பூவாக
என்
மேலே!
நினைக்கும்
பொழுது
இனிக்கிறது!

தேனாடும்
ரோஜா!
சலசலக்கும்
அருவி!
என்
மனதில்
மழைச்சாரல்
உன்னைப்
பார்த்த அந்த
நொடி
முதல்!

"இல்லை... என்னால் நம்ப முடியவில்லை!" என்றாள் அதிர்ச்சியாக ஆராதனா.

"ம்... இது உண்மை... உன்னைப் பார்க்கப் பாவமாக இருக்கிறது.

ஐ ஹேவ் கிவ்வன் யூ எ ஷாக். கொஞ்ச நேரம் வெளியே டைம் ஸ்பெண்ட் செய்து விட்டு வரலாம்.

யூ லுக் ஸிக். அட்லீஸ்ட் இந்த அதிர்ச்சியில் இருந்து வெளி வர அது உதவி செய்யும்...

"சரி," என்றாள் ஆராதனா.

"நீ பேசாமல் இதைப் பற்றி மறந்து விடுவது தான் நல்லது. நாம் இதைப் பற்றிப் பேசவே இல்லை என்று நினைத்துக் கொள்."



"பட்... ஐயாம் கன்ஸர்ண்ட் ஃபார் தருண். அவனுடைய உடல் நிலை பழையபடி வந்தால் நன்றாக இருக்கும்."

"ம்... புரிகிறது."

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் என்னை நம்பாதது போல் தெரிகிறது!" என்றாள் பதட்டமாக.

"ம்... சரி. நம்புகிறேன். முயற்சிக்கிறேன்."

"என்ன சொல்கிறீர்கள்... புரியவில்லை."

"ம்... எனக்கும் முகேஷிற்கும் கருத்து வேற்றுமை இப்பொழுது அதிகமாகி வருகிறது.

அதுவும் கடந்த இரண்டு வாரங்களா..! அதனால் முகேஷ் மே சேன்ஜ் தி டாக்டர். அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது..."

"நோ... யூ காண்ட் பி ரைட். முகேஷிற்கு உங்கள் மேல் மரியாதை இருக்கிறது. ஹி அட்மைர்ஸ் யூ.

நீங்கள் தருணிற்கு நன்றாக ட்ரீட்மெண்ட் கொடுப்பதாக அவர் என்னிடம் சொல்லி இருக்கிறார்."

"ம்... உண்மைதான். பட் ஸம்திங் டெல்ஸ் மி.

முகேஷிற்கு என்னைச் சமீபகாலமாகப் பிடிக்கவில்லை.

இப்பொழுது தருணைப் பார்த்துக் கொள்ள நீ வந்து விட்டாய். நீ வந்த பிறகு அவனிடம் நல்ல மாற்றங்கள் நிறையத் தெரிகிறது."

"ஓ... நான் ஏதும் பெரிதாகச் செய்துவிடவில்லை மாற்றங்கள் என்று நீங்கள் சொன்ன பிறகு எனக்கு ஒ நினைவிற்கு வருகிறது."

"என்ன ஆராதனா..?"

"ம்... தருணைப் பற்றி புதிதாக ஒன்று கண்டு பிடித்தேன் நேற்று. இன்ஃபேக்ட் நான் உங்களிடம் அதைப் பற்றிப் பேசத்தான் விரும்பினேன்.

உங்களுக்குத் தெரிந்து இருக்கலாம். தருண் நன்றாகப் படித்துப் புரிந்து கொள்கிறான். எழுதவும் செய்கிறான்.

"எ... என்னது. இது நிஜமா?" என்று உற்சாகமாக விசில் அடித்தான் சஞ்சய்.

"வாவ்... எனக்கு இது தெரியாது. எப்படிக் கண்டு பிடித்தாய் இதை?"

நடந்ததை எல்லாம் சுருக்கமாகச் சொன்னாள் ஆராதனா.

"இட் இஸ் மார்வெலஸ். நாங்கள் முதலில் தருணிடம் இதை ட்ரை செய்து பார்த்தோம். படங்கள், எழுத்துக்கள், சின்ன கேம்ஸ் என நிறைய முயற்சி செய்து பார்த்தோம்.

பட் தேர் வாஸ் நோ ரெஸ்பான்ஸ் ஃப்ரம் தருண். ஷோ அதிர்ச்சியில் மறந்து விட்டது என நம்பினோம்.

அப்புறம் முயற்சி செய்யவில்லை. தட் கன்னிங்பாய்... தருண் ஒரு அழகான பெண்ணைப் பார்த்தவுடன் மனம் மாறி விட்டான்.. சே... " என்றான் பொய்க் கோபத்தோடு சஞ்சய்.

"ஓ... கமான்... கிண்டல் செய்யாதீங்க. அப்புறம் இந்த மாதிரி அணுகு முறை சரியா... அதை உங்களிடம் கன்பார்ம் செய்ய வேண்டும் என்பது என் விருப்பம்.."

"ம்... நீ செய்யறது ரொம்ப கரெக்ட் ஆராதனா. டோண்ட் ஒரி. நீ செய்வது சரியான அப்ரோச் தான்



நான் என்ன நினைக்கிறேன் என்றால் இனி தருணிற்குச் சிகிச்சை, இந்த டெஸ்ட் எல்லாம் வேண்டாம் என நினைக்கிறேன்.

தருண் தனக்கு ஏதோ பிரச்சினை இருக்கிறது. அதனால் தான் இதெல்லாம் தனக்குச் செய்கிறார்கள் என்று நினைத்துக் கொள்வான்.

ஸோ நோ மோர் டெஸ்ட்ஸ் அண்ட் ட்ரீட்மெண்ட் ஃபார் தருண். ஐ திங்க் ஹி வில் பீ ஹேப்பி. நான் முகேஷிடம் இதைப் பற்றிப் பேசறேன்."

"தட்ஸ் குட் சஞ்சய். தேங்க்ஸ் ஃபார் தி ரெஸ்பான்ஸ் இட்ஸ் வெரி பாஸிடிவ். சரி. இப்ப நம்ம எங்க போகப் போறோம்..."

"ம்.... நீ மகாபலிபுரம் போயிருக்கியா..."

"இல்லை... எப்பவோ சின்ன வயசில டூர் அழைச்சுட்டுப் போயிருக்காங்க. தட் வாஸ் வெரி லாங் பேக்..."

"இப்ப நம்ம அங்க தான் போறோம்... எனக்கு ரொம்ப பிடிச்ச இடம் அது.

நல்ல இடம். நிறைய அழகான வேலைப்பாடுகள் நிரம்பிய சிலைகள். ஆனால் மெயிண்டெயினன்ஸ் தான் ரொம்ப கம்மி...

"ம்.... நிறைய இடம்... டூரிஸ்ட் ஸ்பாட் ஆன பிறகு அப்படித்தான் ஆயிருது.

பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு வேணும். இது எல்லாம் புராதனச் சின்னங்கள், அதைப் பாதுக்கணும் அப்படின்னு தெரியணும்."

"ம்... ரொம்ப கஷ்டம். மக்கள் தேவைக்கு ஏற்ப அப்பப்ப தங்களை மாத்திப்பாங்க.

வெளிநாட்டில் பயணம் செய்யும் பொழுது, கார் ஓட்டும் பொழுது ஒழுங்கா ரூல்ஸ் எல்லாம் கடைப்பிடிப்பாங்க. ஆனால் அவங்களே இந்தியாவில இருக்கும் பொழுது வேற மாதிரி இருப்பாங்க.

ஜஸ்ட் பிரேக் ஆல் தி ரூல்ஸ். டிராபிக் கான்ஸ்டபிள் இருந்தால் சிகப்பு ஸிக்னலை மதிப்பார்கள். இல்லாவிட்டால் அப்படியே கடந்து போவார்கள்.

அதுவும் பெரும்பாலும் படித்தவர்கள் தான் இந்த மாதிரி நடந்து கொள்வார்கள். தட்ஸ் க்ரேஸி."

"கரெக்ட்... மக்களுக்கு இந்த மாதிரி நடப்பது ரொம்ப பழக்கமான ஒன்றாகி விட்டது.

அவங்களாலே சட்டெனத் தங்களை மாற்றிக் கொள்ள முடியாது தான்."

அதற்குள் மஹாபலிபுரம் வந்து விட, காரை நிறுத்தினான் சஞ்சய். குளிர் காற்று சில்லென முகத்தை வருடியது.

"வெயில் அவ்வளவா தெரியலை. நடக்கலாமா ஆராதனா? இல்ல டயர்டா இருக்கா?"

"ம்... நடக்கலாம். ஐயாம் ஃபைன் டு வாக்."

அங்கிருந்த சிற்பங்களை ரசித்தபடியே நடந்தாள் ஆராதனா. ஏனோ ரொம்ப கூட்டம் இல்லை. நேரம் ஆக ஆகக் கூட்டம் சேரலாம் என நினைத்தபடி நடந்தாள் அவள்

சிற்பங்கள் நிறைந்த மண்டபம் போன்ற இடத்தில் கடற் காற்று சில்லென வீசியது.



"வாவ்! ரொம்ப அழகாக இருக்கு கடல் இங்கே இருந்து பார்க்க!" என்றாள் உற்சாகமாக ஆராதனா.

சஞ்சயின் கைப்பேசி சிணுங்கியது. அதை எடுத்துப் பேச முயன்றான். ஆனால் அங்கே சிக்னல் சரியாக இல்லாததால் பேச முடியவில்லை.

"ஆராதனா! நீ இங்கேயே இரு. நான் கொஞ்சம் தள்ளிப் போய்ப் பேசிட்டு வரேன். இங்கே சிக்னல் இல்லை.

ஹாஸ்பிடல்ல இருந்து தான் 'கால்' வந்திருக்கு. லோ இட் மே பி ஸம் எமர்ஜென்ஸி."

"ஓ... கோ அகெட்... நோ ப்ராப்ளம்."

சஞ்சய் சென்ற பின்பு அந்த இடத்தில் 'பெஞ்ச்' போல் இருந்த ஒரு பாறையில் உட்கார்ந்து கண் மூடிக் காற்றை அனுபவித்துக் கொண்டு இருந்தாள் அவள்

யாரோ தன்னைப் பார்ப்பது போல் உள்ளுணர்வு தோன்றக் கண்களைச் சட்டெனத் திறந்தாள்.

அவளுக்குச் சற்றுத் தொலைவில் இருந்தபடி ஒரு வயதான பெண் அவளையே உற்றுப் பார்ப்பது அவளுக்குத் தெரிந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தாள் ஆராதனா. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை யாருமே இல்லை. ஏனோ அவளுக்குப் பயமாக இருந்தது.

இதயத் துடிப்பு அதிகரித்தது. அந்த வயதான பெண் அவள் அருகே நடந்து வருவது தெரிந்தது. அவள் கண்களில் ஏதோ ஒரு சக்தி இருப்பது போல் தோன்றிய ஆராதனாவிற்கு.

அவள் முகத்தில் நிறையச் சுருக்கங்கள் இருந்தன. கழுத்தில் தடியான கறுப்பு மணி ஒன்று அணிந்து இருந்தாள்.

"தண்ணீர் வேண்டுமா தாயி?" என்றாள். அவளைப் பார்த்தபடி அந்தப் பெண்மணி.

'வேண்டாம்' என்பது போல் தலை அசைத்தாள் ஆராதனா.

தன் கைப்பையில் இருந்த ஒரு மண் குடுவையை அவளிடம் நீட்டினாள் அந்தப் பெண்மணி.

"குடி!" என்றாள் உத்தரவு போடும் குரலில்.

அந்த மண்குடுவையை உற்றுப் பார்த்தாள் ஆராதனா. அதில் 'முகேஷ்' உருவம் தெரிவது போல் அவளுக்குத் தோன்றியது.

தண்ணீரில் எப்படி முகேஷ் உருவம். காட்! என்ன இது என்று அதிர்ந்தாள் ஆராதனா.

"என்ன தாயி மனசில இருக்கறவன் உருவம் இதில எப்படித் தெரியுது அப்படின்னு யோசிக்கிறியா?" என்று அவள் கேட்டவுடன் சன்னமாக அதிர்ந்தாள் ஆராதனா.

"உன் கையைக் காட்டு!" என்றாள் அந்தப் பெண்மணி.

மறுக்க வேண்டும் என நினைத்தாள் அவள். ஆனால் முடியவில்லை. தன்னை மறந்து உள்ளங்கையை நீட்டினாள் ஆராதனா.

தன் கையை அவள் கை மேல் வைத்தாள் அந்தப் பெண். கண் மூடி ஏதோ முணுமுணுத்தாள்.

"ஆ... " என்று ஒரு பெருமூச்சுப் பிறந்தது அவளிடமிருந்து.



"என்னைப் பார் ... தாயி. என் கண்ணைப் பார்."

ஆராதனா அவள் கண்களை உற்றுப் பார்த்தாள். ஏனோ அவளுக்குத் தலை வலிப்பது போல் இருந்தது. அந்தப் பெண்ணின் கண்களில் இருந்து ஏதோ ஒளி பாய்வது போல் தோன்ற, சட்டெனக் கண்களை மூடிக் கொண்டாள் ஆராதனா.

அந்த ஒரு நொடியில் ஒரு முகம் அவள் கண் முன் தோன்றி மறைவதை அவளால் உணர முடிந்தது.

அது முகேஷின் முகம். விழித்திரையில் அவன் முகம் சட்டெனத் தோன்றி மறைந்தது.

டக்கென அதன் முன்னே ஒரு புரொஜெக்டரை வைத்து அதில் முகேஷ் முகம் ஒரு நொடி தோன்றி மறைந்தது போல் உணர்ந்தாள் அவள்.

திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்தாள் ஆராதனா. அப் பெண்ணின் கண்கள் தன்னையே பார்த்துக் கொண்டு இருப்பதை உணர்ந்தாள்.

"இவன் தான் உன் மனதில் இருப்பவன்."

தன் கையை எடுத்துக் கொண்டாள் அந்தப் பெண். அந்தப் பெண்ணின் முகத்தில் ஏதோ ஒரு சக்தி இருப்பது போல் தோன்றியது அவளுக்கு.

மூச்சு விடவே சிரமமாக இருந்தது ஆராதனாவிற்கு. தன் மனதை ஒரு முகப் படுத்திப் பழைய நிலைக்கு வர முயற்சித்தாள் ஆராதனா.

அங்கே இருப்பது மூச்சு முட்டுவது போல் தோன்றியது அவளுக்கு. கண்கள் இருட்டின. சமாளித்துக் கொண்டு மெதுவாக எழுந்தாள்.

“என்ன ஆராதனா... என்ன ஆச்சு. ஏன் முகம் இப்படிப் பேயறைஞ்ச மாதிரி இருக்கு?” என்று சஞ்சயின் குரல் அருகே கேட்க நிம்மதியாக உணர்ந்தாள் ஆராதனா.

அந்தப் பெண்மணியை உற்றுப் பார்த்தான் சஞ்சய். அந்தப் பெண்ணைப் பார்த்துப் புரியாத பாஷையில் சத்தமாகக் கத்தினான் சஞ்சய்.

அவன் அவளைத் திட்டுகிறான் என்று மட்டும் புரிந்தது ஆராதனாவிற்கு. அதற்கு அந்தப் பெண் மெதுவாக ஏதோ சொன்னாள்.

“சஞ்சய்... ப்ளீஸ். அவங்களைத் திட்டாதீங்க. அவங்க 'குறி' சொல்றது மாதிரி ஏதோ சொன்னாங்க.”

“வா போகலாம், ஆராதனா...”

“ம்... ஒரு நிமிஷம்... நான் அந்த அம்மாவிற்கு ஏதாவது பணம் கொடுக்கணும்!” என்று தன் கைப்பையிலிருந்து நூறு ரூபாய்த் தாள் ஒன்றை அவளிடம் நீட்டினாள்.

'வேண்டாம்' என்பது போல் தலை அசைத்து விட்டு அங்கிருந்து வேகமாக வெளியேறினாள் அந்தப் பெண்.

“என்ன ஆச்சு சஞ்சய்... ஏன் அவங்க சட்டுன்னு போயிட்டாங்க. நான் ஏதாவது தப்பா செஞ்சிட்டேனா?” என்றாள் ஆதங்கத்துடன் ஆராதனா.

“எனக்கு ஏதும் தப்பாகத் தெரியவில்லை. சரி, வா, போகலாம்,” என்று அவள் கையைப் பற்றினான் சஞ்சய்.

“இல்லை... அவங்க கிட்ட...” என்று அவள் முடிக்கும் முன்பு குறுக்கிட்டான் சஞ்சய்.



“ஆராதனா... டூரிஸ்ட்களிடம் இருந்து பணம் பறிப்பதே இவர்கள் நோக்கம். டோண்ட் கெட் டிராப்ட் இன் திஸ்.

“ஆனால் அவர்கள் என் இடமிருந்து பணம் ஏதும் வாங்கவில்லையே. இன்ஃபேக்ட் வேண்டாம் என்று மறுத்து விட்டார்கள்.”

“ஆராதனா, வா... உன்னை இங்கே தனியாக விட்டுச் சென்றது தப்பாகி விட்டது!” என்றான் சற்றே கோபமாகச் சஞ்சய்.

“ஏன் நீங்க இப்படி மூட் அவுட் ஆயிட்டீங்க? அதுவும் அந்த அம்மா, உங்ககிட்ட ஏதோ சொன்னாங்க. சொன்ன பிறகு நீங்க ஒரு மாதிரி ஆயிட்டீங்க.

அப்படி என்ன சொன்னாங்க, அவங்க? ப்ளீஸ் சொல்லுங்க...”

“ஆராதனா... வா காருக்குப் போய்ப் பேசலாம். சே... உன்னை இங்கே அழைச்சுட்டு வந்தா நிம்மதியா இருப்ப அப்படின்னு பார்த்தா இங்க வந்து நிலைமை இன்னும் மோசமா ஆச்சு...”

“நீங்க எதையோ என்னிடம் இருந்து மறைக்கறீங்க... சொல்லுங்க சஞ்சய்...”

“நீ வா ஆராதனா... பிடிவாதம் பிடிக்காதே...”

“இல்லை. நீங்கள் என்னிடம் சொல்லும் வரை நான் இங்கே இருந்து வர மாட்டேன்!” என்றாள் உறுதியாக.

“சரி, சொல்கிறேன் பட் இட் வுட் அப்ஸெட் யூ.”

“என்ன, சொல்லுங்க. பரவாயில்லை.”

“ம்... ஷீ டோல்ட் யூ ஆர் க்ளோஸ் டு டெத்.”

"என்னது..."

"ம்.. பூ ஆர் அன்லக்கி. நீ ராசியில்லாதவள் அப்படின்னு சொன்னா அவன். நீ சீக்கிரம் விபத்தில் சிக்குவாய் அப்படின்னு சொன்னாள். அதுவும் இரண்டு முறை."

"ஓ.. அப்படியா?" என்று முணுமுணுத்தாள் அவள். அவள் முகத்தில் ஒரு பய ரேகை படர்ந்தது.

"பார் ஆராதனா... நான் இதுக்குத் தான் சொல்ல மாட்டேன் என்றேன். இப்ப பார். நீ ரொம்ப டிஸ்டர்ப் ஆயிட்ட."

"இட்ஸ் ஓகே. அட்லீஸ்ட் நவ் ஐ நோ தி ட்ருத்."

"என்னது உண்மையா... கமான். அவள் ஏதோ உளறினாள். அதைப் போய் நீ நம்பறியா...?"

"இ.. இல்லை. ஒன்றும் இல்லை..."

"ஆராதனா... டோண்ட் ஒரி. ஸாரி. உன்னை நான் இங்கே அழைத்து வந்தது தப்பு.

அதோடு உன்னைத் தனியாக விட்டது தப்பு. ரிலாக்ஸ். நான் காரை மெதுவாக ஓட்டுகிறேன்!" என்று அவள் கையை மென்மையாகப் பற்றினான்.

'ஓ டோண்ட் ஃபீல் பேட். நாம் போகலாம் தருண் வேறு தூங்கி முழிச்சாலும் முழிச்சு இருப்பான்."

"ஓகே... வா!" என்று சொல்லியபடி அவள் கையைப் பற்றியபடி நடந்தான் சஞ்சய்.

காரில் உட்கார்ந்த பின்பு சஞ்சய் ஏதேதோ பேசியபடி இருந்தான். ஆனால் அவள் மனம் அதில் பதியவில்லை.

அவள் மனநிலையை உணர்ந்தவன் போல் சஞ்சய் கொஞ்ச நேரம் கழித்துப் பேசுவதை நிறுத்திக் கொண்டான்.



காரில் மௌனம் நிலவியது. கண்களை மூடி அமைதியாக இருக்க முயன்றாள் அவள். அந்தப் பெண் சொன்னதும், சஞ்சய் சொன்னதும் அவள் காதில் ஒலித்தது.

சஞ்சய் முகேஷைப் பற்றியும், சுந்தரியைப் பற்றியும் சொன்னது வேறு அவள் மனதை அலைக்கழித்தது.

அது உண்மையாக இருக்கக் கூடாது என்று அவள் மனம் ஏங்கியது. தன் மனம் ஏன் முகேஷைப் பற்றி இப்படி எல்லாம் நினைக்கிறது எனத் திகைத்தாள் அவள்

ஒரே நாளில் தன் வாழ்க்கை எப்படி மாறி விட்டது என நினைத்துப் பெருமூச்சுப் பிறந்தது அவளிடம் இருந்து.

வெளியே சூரியன் மறைந்து இருள் கவியத் தொடங்கியது.

## 13

உன்னால்
இசையாக
நான்
மலர்ந்தேன்!
உன்னால்
நான்
மௌனம்
கலைத்தேன்!

என்ன
மாயம்
செய்தாய்
பெண்ணே ?
என்னை
எனக்கே
தெரியாமல்
மாற்றினாய் !
மாற்றங்கள்
இனிமையாக
இருக்கின்றன !
என்
விடை நீ!
என்
குழப்பத்திற்குத்
தீர்வு நீ!
என்
வலிக்கு
மருந்து நீ!
என்
கனவுக்கு
உயிர் நீ,
பெண்ணே!



முகேஷின் பங்களா முன் கார் சென்றது.காரை பார்க் செய்து விட்டு வீட்டின் உள் செல்ல காலிங் பெல்லை அழுத்தினான்.

உள்ளே இருந்து வந்து கதவைத் திறந்தான் முகேஷ்.

அவன் பார்வை அவர்கள் இருவர் மேலும் பதிந்தது. அவன் கோபமாக இருக்கிறான் என்பதை அவன் முகம் காட்டிக் கொடுத்தது.

"ஹாய் முகேஷ்..." என்றான் புன்சிரிப்போடு சஞ்சய்

"ஹாய் சஞ்சய். இன்னிக்கு ஹாஸ்பிடல்ல ட்யூட்டி இல்லையா..."

"ம். இன்னிக்கு ஒரு மணி வரைக்கும் தான் எனக்கு ட்யூட்டி. அதனால கொஞ்ச நேரம் ஆராதனாவோட டைம் ஸ்பெண்ட் செய்ய முடிந்தது."

"ஓ... ஸோ யூ ஹாட் எ குட் டைம்..."

"ம்... யெஸ். முகேஷ். நான் தருண் பற்றி உங்களிடம் பேச வேண்டும். இப்ப பேசலாமா..."

"ஓகே... வாங்க. என்னுடைய ரூமிற்குப் போகலாம். ஆராதனா இருக்க வேண்டுமா?"

"வேண்டாம்... நாங்க தருணைப் பற்றிப் பேசி விட்டோம்."

"சரி... வாங்க!" என்று தன் ரூம் உள்ளே சென்றான் முகேஷ்.

சஞ்சய் அவனைப் பின் தொடர்ந்தான். ஆராதனா தன் ரூமிற்குச் சென்று கைகால் முகம் எல்லாம் கழுவி விட்டு வந்தாள்.

பின்பு தருண் அறைக்குள் சென்றாள். அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டு இருப்பது தெரிந்தது.

'பாவம்! இன்னிக்கு அவனுக்கு டைட் ஷெட்யூல் அலுப்பு போல!' என நினைத்துக் கொண்டாள் அவள்.

மீண்டும் ஹாலுக்கு வந்தவள், அங்கிருந்து ஏதாவது பத்திரிகை படிக்க எடுத்துச் செல்லலாம் என டேபிள் அருகே வந்தாள்

உள்ளே ஆராதனா எனத் தன் பெயர் ஒலிக்கக் கேட்டுச் சுவர் அருகே தயங்கி நின்றாள்.

“பட் சஞ்சய், நீ ஏன் அவளை அங்கு அழைத்துச் சென்றாய்?” என்று முகேஷ் கோபமாகப் பேசுவது அவள் காதில் கேட்டது.

“நான் ஏதும் ப்ளான் செய்யவில்லை முகேஷ். யூ நீட் டு அண்டர்ஸ்டாண்ட் தட்.”

“நீ அங்கே பார்த்தது அதே பெண்மணியா? ஆர் யூ ஷ்யூர்?”

“ம்... அப்படித் தான் நினைக்கிறேன்.”

“காட்! நீ ஏன் அங்கே போனாய்? மகாபலிபுரம் தவிர உனக்குப் போக வேற இடமே இல்லையா?

சுந்தரிக்கு இந்த மாதிரி குறி சொல்பவர்கள் மேல் ஒரு வெறியே பிடித்து விட்டது. அவள் திரும்பத் திரும்ப அங்கே செல்லத் தொடங்கினாள்.

தினேஷும் அதைத் தடுத்தான். நானும் முடிந்த வரை தடுத்தேன். பட் எதுவும் ஒர்க் அவுட் ஆகலை.

சுந்தரி அந்த விபத்து நடக்கும் பொழுது கூட அங்கே போனாளோ என்று எனக்குச் சந்தேகம். ஓ. எம். ஆர். ரோட்டில் அவள் போய் இருக்கிறாள்.



அவள் அங்கே தான் போய்விட்டுத் திரும்பிக் கொண்டு இருந்தாள் என்பது என் யூகம். இன்ஃபேக்ட் அவள் என்னையும் வரச் சொன்னாள்.

நான் ஷூட்டிங் இருந்ததால் போக முடியவில்லை. ஷி வாஸ் அப்செஸ்ட் வித் ஸூப்பர்ஸ்டிஷன்ஸ்.”

ஆராதனாவிற்கு மூச்சு முட்டியது. கடவுளே! என்ன நடக்கிறது இங்கே என்று அதிர்ந்தாள்.

“முகேஷ்... நான் வேண்டும் என்று எதுவும் செய்ய வில்லை. ப்ளீஸ்...”

“ம்... சஞ்சய்! என்னால் நம்ப முடியவில்லை. நீ ஏன் அவளைத் தனியாக விட்டுச் சென்றாய்?

யு லைக் ஹர்... அவளோடு டைம் ஸ்பெண்ட் செய்யத் தானே அழைத்துச் சென்றாய்?”

“வாட் டு யூ மீன். ஆராதனா தான் என்னிடம் ஏதோ பேச வேண்டும் என்று சொன்னாள்.”

“ஓ.... அப்படியா? நீ ஆராதனாவைப் பற்றி என்ன நினைக்கிறாய் என்று எனக்குத் தெரியும்.

லுக். ஆராதனா இஸ் ஆன் இன்னஸெண்ட் கேர்ல். டோண்ட் ஸ்பாயில் ஹர்!”என்று முகேஷ் கோபமாகக் கத்தினான்.

ஆராதனாவிற்குப் பயத்தால் முகம் வியர்த்தது. அவள் சுவர் அருகே நின்று கொண்டு இருந்தாள். அவர்களால் அவளைப் பார்க்க முடியவில்லை.

“முகேஷ்... லெட் அஸ் பி ஓபன் இன் தி ஹோல் திங். உனக்குப் பொறாமை. நான் ஆராதனாவுடன் பழகுவது உனக்குப் பிடிக்கவில்லை.

யூ ஆர் ஜெலஸ். ஒத்துக் கொள். இட்ஸ் வெரி க்ளியர்."

"வாட்! நான் பொறாமைப் படுகிறேனா? டாமிட்"

"யெஸ். முகேஷ். எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. நான் அவளுடன் பேச விரும்பினேன். நீ அதற்கு உன்னால் முடிந்த தடைகளை ஏற்படுத்தினாய்.

இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? வாட் இஸ் ஈட்டிங் யூ? ஆர் யூ இன் லவ் வித் ஹர்? ஆர் யூ அஃப்ரெய்ட் டு ஃபேஸ் இட்?"

"ஓ... சஞ்சய்! யூ ஆர் க்ரேஸி. நான்... அப்படி எல்லாம் ஏதும் நினைக்கவில்லை..."

"நீ பொய் சொல்கிறாய் முகேஷ். நீ உன்னையே ஏமாற்றிக் கொள்கிறாய்!" என்று கத்தினான் சஞ்சய்.

"சஞ்சய்! மைண்ட் யூவர் வர்ட்ஸ்."

"நோ. முகேஷ். எனக்கு ஆராதனா ஹர்ட் ஆறது பிடிக்கலை. அண்டர்ஸ்டாண்ட்..."

"பட் வொய் ஷி ஷுட் கெட் ஹர்ட்?"

"ம்... பிகாஸ் ஷி லவ்ஸ் யூ. அது உனக்குத் தெரியலையா முகேஷ்?

இல்லை, தெரிந்தும் தெரியாத மாதிரி நடிக்கிறியா? படத்தில் நடிப்பது மட்டும் உனக்குப் போதாதா? நிஜ வாழ்க்கையிலும் நடிக்கத் தொடங்கி விட்டாயா?"

"நீ... நீ என்ன சொல்கிறாய் சஞ்சய்?"

"யெஸ். நான் சொல்வது உண்மை. ஆராதனா உன்னை விரும்புகிறாள்.



அவள் கண்களில் அது தெரிகிறது. ஒரு ஃபிலிம் ஸ்டாரை நிறையப் பெண்கள் காதலிக்கலாம்.

அதுவும் யூ ஆர் வெரி பிராமினண்ட். அதனால் உனக்கு நிறைய ரசிகைகள் இருப்பார்கள்.

பட் ஆராதனா இஸ் நாட் லைக் தெம்.ஷி இஸ் எ இன்னஸண்ட் கிட்.-உன் மேல் அவளுக்கு அளவு கடந்து அன்பு இருக்கிறது.

இதனால் ஏமாற்றம் அடையப் போவது அவள் தான். ஷி இஸ் எ நைஸ் கேர்ல். சொல் முகேஷ். என்ன செய்யப் போகிறாய்?

ஆராதனா இருப்பதால் தான் இப்பொழுது தருணின் உடல் நிலை நன்றாக இருக்கிறது. அதைப் புரிந்து கொள்.

தருண் பழைய நிலைக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பிக் கொண்டு இருக்கிறான். இதை எல்லாம் நீ வீண் அடிக்கப் போகிறாயா?

ஐ டோண்ட் வான்ட் ஆராதனா டு பி ஹர்ட் அட் எனி காஸ்ட்!" என்று கோபமாகக் கத்தினான் சஞ்சய்

அங்கே சற்று நேரம் மௌனம் நிலவியது. இருவருமே ஏதும் பேசவில்லை.

சுவரில் சாய்ந்தபடி கேட்டுக் கொண்டு இருந்த ஆராதனாவிற்குக் கண்கள் கலங்கின. சஞ்சய் தன் மனதில் இருப்பதை எல்லாம் முகேஷிடம் சொன்னது அவளுக்கு வியப்பாக இருந்தது.

அவன் புரிந்து கொள்ளும்படி அவ்வளவு தெ வாகத் தன் மனம் இருந்து இருக்கிறதே எனத் திகைத்தா அவள்.

"இஸ் இட் ட்ரு சஞ்சய்?"

""யெஸ். உன் கண்ணில் ஏதோ கோளாறு என்று நினைக்கிறேன். அவள் முகம் முழுவதும் எழுதி ஒட்டி இருக்கிறது.

ஷி இஸ் நாட் எ கிட் இன் திஸ். உன் மேல் ஏற்பட்டு இருப்பது கவர்ச்சி இல்லை. அவள் உன் படம் ஒன்று கூடப் பார்த்தது இல்லை.

ஸோ உன் பெரிய ஃபிலிம் பேனரை எல்லாம் பார்த்து அவள் மயங்கவில்லை. ஷி இஸ் வொர்த் மோர் தேன் தட்."

"அவளுடைய மதிப்பு பற்றி நீ எனக்குச் சொல்ல வேண்டாம் சஞ்சய். எனக்குத் தெரியும்."

"ஆராதனாவின் வாழ்க்கையைப் பாழாக்கி விடாதே முகேஷ். ஏனெனில் உனக்கு உன் கண் முன்னே என்ன நடக்கிறது என்று கூடத் தெரியவில்லை.

அப்புறம் என்னிடம் பொய் சொல்லாதே. யூ லைக் ஆராதனா. எனக்கு அது தெரியும்."

"யூ மைண்ட் யூவர் பிஸினெஸ் சஞ்சய்."

"இது என்னுடைய பிஸினெஸ் தான் முகேஷ். தருண் இஸ் மை பேஷண்ட். ஆராதனா தருணைப் பார்த்துக் கொண்டு இருக்கிறாள்.

ஐ டோண்ட் வாண்ட் ஹர் டு பி ஹர்ட் இன் எனி வேஸ்."

"காட்! நீ என்ன நினைக்கிறாய் என்னைப் பற்றி? யூ திங்க் ஐ வாண்ட் டு ஹர்ட் ஹர்."

"நீ வேண்டும் என்றே செய்ய மாட்டாய் முகேஷ். பட் ...து நடக்கலாம்.



உன்னை அறியாமல் நடக்கலாம். சுந்தரிக்கு நேர்ந்தது போல்."

"ஷட் அப். கெட் லாஸ்ட் சஞ்சய். போ. இங்கிருந்து போய் விடு.

உன்னை நான் ஏதாவது செய்து விடுவேன். போ இங்கிருந்து!" என்று உறுமினான் முகேஷ்.

ஒரு கண்ணாடி டம்ளர் உடையும் சத்தம் கேட்டது. அதைக் கேட்ட ஆராதனாவின் உடல் பதறியது.

அவள் கால்களுக்கு உயிர் வந்தது போல் இருந்தது. அவள் மனம் வலித்தது.

வேகமாக அந்த இடத்தில் இருந்து அகன்றாள். தோட்டத்தை நோக்கி அவள் கால்கள் சென்றன. வானத்தில் நட்சத்திரங்கள் இல்லை.

அன்று அமாவாசை என்பதால் எங்கும் இருளாக இருந்தது. தோட்டத்தில் கால்போன திக்கில் அலைந்தவள் நீச்சல் குளம் அருகே அமர்ந்தாள்.

இருளை வெறித்துப் பார்த்தபடி இருந்தாள் அவள். அழ வேண்டும். வாய் விட்டு அழ வேண்டும் போல் இருந்தது அவளுக்கு.

நான் முகேஷை விரும்புகிறேன். இது உண்மை. என் மனிதில் எனக்கே தெரியமால் முகேஷ் புகுந்து விட்டான்

இவ்வளவு நாள் நான் அதைப் பொத்திப் பொத்தி வைத்து இருந்து இருக்கிறேன். ஆனால் அது இப்பொழு... முகேஷிற்குத் தெரிந்து விட்டது.

சஞ்சய் மூலமாக அவனுக்கு எல்லாம் தெரி... விட்டது. அவளுக்கு மனம் வலித்தது.

காற்று சில்லென வீசியது. அவளுக்குக் குளிர்வது போல் இருந்தது. எழுந்தவள் அறைக்குள் போகலாமென்று நினைத்தாள்.

காற்று பலமாக வீசியது. எழுந்தவளுக்குக் கால்கள் தடுமாறின. தடுமாறியவள் நீச்சல் குளத்தில் விழுந்தாள்.

குளிரில் அவள் உடல் விரைத்தது. தண்ணீர் மேலே தலையைத் தூக்க முயன்றாள். ஆனால் முடியவில்லை.

மூச்சுத் திணறியது அவளுக்கு. அந்தப் பெண்மணியின் முகம் அவள் கண் முன்னே நிழலாடியது. 'முகேஷ்' எனக் கத்த முயன்றாள்.

ஆனால் அவளால் ஏதும் முடியவில்லை. நினை விழந்தாள் ஆராதனா.

ஆராதனா கண் விழித்த பொழுது தான் ஒரு அறை யினுள் இருப்பது அவளுக்குப் புரிந்தது. குளிர் ஏதும் இல்லாமல் அந்த இடம் ரொம்ப அடக்கமாக இருந்தது.

எழுந்திருக்க முயன்றாள் அவள். ஆனால் முடிய வில்லை. தான் நீச்சல் குளத்தில் தவறி விழுந்தது அவளின் நினைவுக்கு வந்தது.

அந்த அறை அவளுடைய அறை இல்லை. இது முகேஷ் அறையா என யோசித்தாள். கால் ரொம்பவே வலித்தது அவளுக்கு

"தண்ணீர்... குடிக்க வேண்டும்!" என்று முணுமுணுத் தாள். அவள்.

கதவைத் திறந்து கொண்டு முகேஷ் உள்ளே வருவது அவளுக்குத் தெரிந்தது.



"தேங்க் காட் நீ கண் விழித்து விட்டாய் ஆராதனா. நான் பயந்து விட்டேன் ரொம்ப!" என்றான் கனிவான குரலில் முகேஷ்.

ஏனோ அவன் முகத்தைப் பார்க்க அவளுக்கு வெட் கமாகவும், அவமானமாகவும் இருந்தது.

கட்டிலில் அவள் அருகே உட்கார்ந்தான் முகேஷ். அவன் கை அவள் நெற்றியைத் தொட்டது.

"குட்... இப்ப ஜுரம் இல்லை. ஹவ் டு யூ ஃபீல்?"

அவன் தொட்டது ஏனோ அவளுக்குப் பிடித்தது. அவன் மடியில் தலை வைத்துப் படுக்க வேண்டும் என்று துடித்த உணர்வுகளை அடக்கினாள் அவள்.

எழுந்திருக்க முயன்றாள் அவள். அவன் மெதுவாக அவள் உட்கார உதவி புரிந்தான்.

"இப்ப உடம்பு பரவாயில்லையா ஆராதனா?"

"ம்... ஐயாம் பெட்டர்."

"நீ... மனசை அலட்டிக் கொள்ளாதே. தண்ணீர் குடி!" என்று அவளிடம் தண்ணீர் நிறைந்த டம்ளர் ஒன்றை நீட் னான்.

அதை வாங்க முயன்றாள் அவள். ஆனால் [illegible] நடுங்கியது.

"ஐயாம் ஸாரி. நீ அங்கே போயிருக்கக் கூடாது. இஸ் நாட் குட்"

"சுந்தரி அங்கே போயிருக்காங்களா...."

"யெஸ். எனக்குத் தெரிந்து மூன்று தடவை."

"ஓ... அப்படியா?"

"ம்... முதல் தடவை சுற்றிப் பார்க்க ஒரு டூரிஸ்ட் போல் போனாள்.

ஆனால் அடுத்த இரண்டு முறை அவள் சுற்றிப் பார்க்கச் செல்லவில்லை..."

"நான்.. ஒரு பெண்மணியைச் சந்தித்தேன். அவர்கள் என் கையைப் பார்த்தார்கள்.

அந்தப் பெண்ணைச் சுந்தரியும் சந்தித்து இருக்கிறார்களா..."

"ம்... சந்தித்து இருக்கிறாள். சுந்தரி என்னிடம் பேசினாள்.

சுந்தரி தன் தேடலுக்கு அவளிடம் விடை கிடைக்கும் என நம்பினாள்.

எனக்கு நிச்சயமாகத் தெரியும். விபத்து நடந்த அன்று சுந்தரி அவளைப் பார்த்து விட்டு வந்து இருப்பாள்!" என்றான் பெருமூச்சோடு.

"ஓ... உங்களுக்குத் தெரியுமா - அந்தப் பெண் சுந்தரியிடம் என்ன சொன்னாள் என்று?"

அதைக் கேட்ட ஆராதனாவின் மனம் வலித்தது. சுந்தரி இறந்த பிறகு கூட அவன் ரகசியத்தைக் காப்பாற்றுகிறானே என அவள் மனம் வலித்தது!

"சுந்தரி உங்களைக் காதலித்தாளா..?"

என்ற கேள்வி அவளை அறியாமல் அவள் உதட்டில் இருந்து விழுந்தது.

"ஆமாம்."

"இது உங்கள் அண்ணனுக்குத் தெரியுமா?"



"தெரியும்."

"தருணிற்கு."

"தெரியாது என நினைக்கிறேன்.

"ம்... தருணிற்காக நீ இதை எல்லாம் கேட்கிறாய் என்று எனக்குப் புரிகிறது...

ஐ நோ யூ ஆர் கன்ஸெர்ண்ட் அபௌட் தருண்."

"யெஸ்... எனக்குத் தருண் ஏன் பேச மறுக்கிறான் என்று தெரிய வேண்டும்.

அது... விபத்தால் மட்டும் இல்லை. அதற்கு மேல் ஏதோ ஒன்று அவனை ரொம்ப பாதித்து இருக்கிறது."

"ஐ ஸீ..."

"ஐயாம் ஸாரி. நான் உங்கள் பெர்சனல் விஷயத்தில் ரொம்ப தலையிடுகிறேன்.

ஐயாம் ஸாரி. ஆனால் தருண் பேசுவதற்கு இது உதவி புரியும்."

"நோ... யூ ஹேவ் ட்ரைட் டு நோ. யூ ஆர் வெரி க்ளோஸ் டு தருண். அண்ட் ஆல்ஸோ டு மி."

அவன் சொன்னதைக் கேட்டு அவள் உடல் சிலிர்த்தது. இதயத் துடிப்பு அதிகரித்தது.

"ஆராதனா... " என்று அவள் முகத்தை ஏந்தினான் அவன்

"யூ ஹேவ் டு பி ஹானஸ்ட் வித் மி ஆராதனா. எனக்கு உண்மை தெரிய வேண்டும்.

நீ சஞ்சய் சொன்னதெல்லாம் கேட்டாய்தானே! அவன் உன்னைப் பற்றிச் சொன்னான். நீ என்னை விரும்புவதாகச் சொன்னான்.

அதைக் கேட்டாய்தானே?" என்றான். அவள் 'ஆமாம்' என்பது போல் தலை அசைத்தாள்.

"அவன் சொன்னது உண்மையா?"

ஆராதனாவிற்கு முகம் வெளுத்தது. முகேஷ் படபடமாக இருப்பது போல் தோன்றியது அவளுக்கு. அந்தப் படபடப்பு அவளையும் தொற்றிக் கொண்டது.

இருவர் கண்களும் சந்தித்தன. அவளுக்கு உண்மையைச் சொல்லப் பயமாக இருந்தது. உண்மையைச் சொன்னால் முகேஷ் தன்னைத் திருப்பி அனுப்பி விடுவான் என்று அவளுக்குத் தெரியும்.

தருண் பாவம். அவன் மனம் உடைந்து விடுவான். அதனால் மனதில் இருந்த காதலை அடக்கிக் கொண்டாள் அவள். பொய் சொல்லத் தீர்மானித்தாள்.

"இல்லை."

"அப்படியா..." என்றவன் அவளை விடுவித்தான். "ஸோ... அவன் எல்லாவற்றையும் கற்பனை செய்து கொண்டு இருக்கிறான்.

சஞ்சய் உன்னைப் பற்றிச் சொன்னது எல்லாம் அவனோட கற்பனையா?"

ஆராதனா தன் மனதை அடக்கிக் கொண்டாள். முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் அடக்கிக் கொண்டு இருந்தாள்.

தன் முகம் வலியையும், ஏமாற்றத்தையும் காட்டிக் கொடுத்து விடுமோ எனப் பயந்தாள் அவள். கண்களில் கண்ணீர் வழியாமல் அடக்கிக் கொண்டு இருந்தாள்.

"ஆமாம்... அப்படித் தான் இருக்கும். ஹி இஸ் ராங்."



"ஓ... அப்ப நான் உன்னை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. அப்படித் தானே..."

"ஆ... ஆமாம்."

"ஆனால் நான் தொடும் பொழுது உன் உடல் நடுங்குகிறதே.... ஏன்... ஆராதனா... என்னைப் பார்த்தால் பயமாக இருக்கிறதா?"

அவள் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.

"ஆனால் சஞ்சய் என்னைப் பற்றிச் சொன்னது எல்லாமே உண்மை, ஆராதனா.

ஐ லைக் யூ. உன்னுடைய குழந்தைத்தனமான முகம், இன்னசெண்ட் லுக்ஸ் எல்லாமே எனக்குப் பிடித்திருக்கிறது!" என்றவன் அவள் கை மணிக்கட்டைப் பற்றி அவள் விரல்களில் தன் உதடுகளைப் பதித்தான்

'இட்ஸ் நாட் சிம்பிள் ஆராதனா. இட் இஸ் ஸோ ஸ்ட்ராங். நீ என்னை ரொம்பவே பாதித்து இருக்கிறாய்.

உன் போன்ற ஒரு பெண்ணை நான் இதுவரை சந்தித்ததே இல்லை. யூ ஆர் நாட் செல்ஃபிஷ் லைக் அதர் கேர்ல்ஸ்' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான் அவன்.

# 14

விடை
தெரியாத
வினாக்கள்
என்
நெஞ்சில்!
கண்கள்
இரண்டால்
உன்
கண்கள்
இரண்டால்
என்னை
எப்படி
உன்னால்
கட்டிப்
போட
முடிந்தது?
வானத்தில்
தோன்றும்
நட்சத்திரங்களைப்
பறிக்க



நீளும்
என்
கைகள்!
அன்று....!
இன்று
நாம் சந்தித்த
பிறகு பூமியின்
பூக்களைப்
பறிக்கக் கூட
யோசனையாக
இருக்கிறது! ஏன்?

அவன் சொல்வதைக் கேட்டு அவள் மனம் உருகியது. தன்னைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள் அவள்.

"என்னைப் பற்றி நல்ல அபிப்பிராயம் வைத்து இருக்கிறீர்கள். தேங்க்ஸ் ஃபார் இட்."

"சரி. நீ ரெஸ்ட் எடு. பாவம்! இன்று உனக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி. நான் பால் மிதமான சூட்டில் கொண்டு வருகிறேன்.

குடித்து விட்டுத் தூங்கு. மை டியர் கிட்!" என்றான் சிறு குழந்தையிடம் பேசுவது போல.

"இல்லை... எனக்கு ஏதும் வேண்டாம்."

"நோ ஆராதனா. பிடிவாதம் பிடிக்காதே. பா படுக்கும் முன் அருந்தினால் நன்றாகத் தூக்கம் வரும்."

அவள் பதிலை எதிர்பார்க்காமல் அவன் அறையி லிருந்து வெளியேறினான்.

அவன் சென்ற பின்பும் ஆராதனா அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. காட்! நான் முகேஷைப் பாதித்து இருக் கேனா?

என்னால் நம்பவே முடியவில்லை. ஆனால் முகேஷின் மனதில் இன்னும் சுந்தரி இருக்கிறாள். சே... இதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

சுந்தரி இறந்த பின்பு கூட அவள் நினைவாக இருக் கிறான் முகேஷ். அதனால்தான் அவனால் ஒரு தெளி வான முடிவிற்கு வர முடியவில்லை.

அதை நினைக்கும் பொழுது அவளுக்குச் சுந்தரி மேல் கோபம் வந்தது.

“பால் குடி... ஆராதனா!” என்று முகேஷின் குரல் கேட்டவுடன், கண்களைத் திறந்தாள் அவள்.

கையில் ஒரு ட்ரேயை ஏந்தியபடி அவள் அருகே நின்று கொண்டு இருந்தான் முகேஷ். ஏதும் பேசாமல் பாலை வாங்கிக் குடித்தாள் அவள்.

“தட்ஸ் எ குட் கேர்ல். சரி. நீ இங்கேயே தூங்கு. நான் இங்கே சோபாவில் படுத்துக் கொள்கிறேன்.”

“இ... இல்லை. வேண்டாம். நான் என் அறைக்குப் போய்த் தூங்குகிறேன்!” என்று மெதுவாக எழுந்தாள்.

“ஓகே. உன் இஷ்டம்.”

தன் அறைக்குள் நுழைந்தவளுக்கு மனம் சோர்வாக இருந்தது. இன்று ஏன் மகாபலிபுரம் போனேன் எனத் ன்னையே நொந்து கொண்டாள்.



அந்தப் பெண் சொன்னது பலிக்குமா? நான் ராசி இல்லாதவளா? நான் சீக்கிரம் இறந்து விடுவேனா?

இன்று நீச்சல் குளத்தில் தவறி விழுந்து மூச்சுத் திணறிச் சாவின் விளிம்பு வரை சென்று விட்டேன்.

முகேஷ் என்னைக் காப்பாற்றி விட்டான். அவன் இருந்ததால் அது சாத்தியம் ஆயிற்று. இல்லாவிட்டால் என்று நினைக்கும் பொழுது அவள் உடல் நடுங்கியது.

முகேஷின் கைகளில் நான் மயங்கி இருந்தேன் என்று நினைக்கும் பொழுது ஏனோ அவள் உடல் சிலிர்த்தது.

அதை நினைக்கும் பொழுது அவள் கன்னம் சூடானது. முகேஷ் தன் கையைப் பற்றியது அவள் நினைவுக்கு வந்தது.

அவன் அருகிலேயே இருக்க வேண்டும் என்று ஏங்கிய மனதைக் கஷ்டப்பட்டுக் கடிவாளம் போட்டு அடக்கினாள்.

கண் மூடித் தூங்க முயன்றாள். ஆனால் ஏனோ தூக்கம் வர மறுத்தது. உடல் சோர்வாக இருந்தது. ஆனால் ஏனோ தூங்க முடியவில்லை.

எப்பொழுது தூங்கினாள் என்று அவளுக்குத் தெரியவில்லை. ஏதோ சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித்தாள். தன் அருகில் யாரோ இருப்பது போல் தோ றியது

அவளுக்கு ஏனோ வியர்த்துக் கொட்டியது. இ இது சுந்தரியாக இருக்குமோ எனப் பயந்தாள்.

சமாளித்துக் கொண்டு லைட்டைப் போட்டாள். அருகே தருண் சுருண்டு படுத்து இருப்பதைப் பார்த்தா

அவன் தூக்கத்தில் ஏதோ முனகுவது தெரிந்தது.

அவன் கண்களில் இருந்து கன்னம் வரை கோடாக இருந்த கறை அவன் தூக்கத்தில் பயந்து போய் அழுது இருக்கிறான் என்று அவளுக்கு உணர்த்தியது.

"தருண்!" என்று அவனை அழைக்க முயன்றாள். ஆனால் தருண் தூக்கத்தில் 'ஆராதனா' என முனகுவதைக் கேட்டவுடன் அவள் மனம் நெகிழ்ந்தது.

சே... தருண் பாவம்! தூங்கும் பொழுது பயத்தில் 'அம்மா' என்று அழைக்காமல் என்னைப் பெயர் சொல்லி அழைக்கிறானே என மனம் சிலிர்த்தாள். நெகிழ்ந்தாள் அவள். அவன் பேசுகிறான் என்பதை உணர்ந்து.

"தருண் தருண்... ஒன்றும் இல்லைடா. நான் இங்கே தான் இருக்கிறேன்!" என்று அவனை அணைத்துச் சமாதானம் செய்தாள்.

தருண் அவளைத் தன் சிறிய கைகளால் வலுவாகப் பிடித்துக் கொண்டான். அவன் அழுது கொண்டே இருந்ததால் அவன் உடல் குலுங்கியது.

"ஒன்றும் இல்லை ராஜா. நத்திங். நான் இங்கே தான் இருக்கிறேன்!" என்று அவனைச் சமாதானப்படுத்திக் கொண்டு இருந்தாள் அவள்.

அவன் மறுபடியும் பேச மாட்டானா என அவள் மனம் ஏங்கியது. கடவுளே! ப்ளீஸ் என்று மனதிற்குள் வேண்டியபடி இருந்தாள்.

"தருண்! அழக் கூடாது... நான் உன் கண்ணீரைத் துடைக்கிறேன். பார். குட் பாய்!" என்று சொல்லியபடி அவன் கண்ணீரைத் துடைத்தாள் அவள்.



சட்டென அந்த அறை அமைதியானது. தருண் அவளை நிமிர்ந்து பார்த்தான். தன் மனதில் இருந்த படபடத்தை அடக்கியபடி இருந்தாள் அவள்.

கடவுளே! இவன் மறுபடியும் பேசுவானா? இல்லை, பழையபடி தன்னுடைய உலகிற்குப் போய் விடுவானா?

அந்த மௌன உலகில் இருந்து வெளிவர இந்தக் குழந்தைக்கு சக்தி கொடு என்று வேண்டியபடி இருந்தாள்.

தருணின் உதடுகள் அசைந்தன. அவன் தன் நெற்றியைச் சுருக்கினான்.

ஆராதனா அவனை ஆவலோடு பார்த்தாள். "நீங்க என்னை விட்டுப் போயிட்டீங்கன்னு நான் நினைச்சேன். அப்பா மாதிரி நீங்களும் இறந்து போயிட்டீங்கன்னு பயந்து போயிட்டேன்!" என்றான் தெளிவாக - தருண்.

ஆராதனா தன் உதடுகளை ஈரப் படுத்திக் கொண்டாள். கடவுளே! நன்றி என்று மனதிற்குள் முணுமுணுத்தாள்.

"தருண்! நான் இங்கே தான் இருக்கிறேன். வேற எங்க போயிடப் போறேன். நல்லா பார் என்னை.

நல்லா கிள்ளிப் பார் என்னை. உனக்கே தெரியும்!" என்று தன் கையை நீட்டினாள் அவனிடம்.

"உங்கள் படுக்கையில் நீங்கள் இல்லையே. நான் அப்ப வந்து பார்த்தேனே..." என்றான் தருண் நம்பாத தொனியில்.

"நான் இங்கேதான் இருந்தேன். உன் சித்தப்பாவிடம் பேசிக் கொண்டு இருந்தேன்.

அங்கே தோட்டத்தில் இருந்தோம்..."

"நான்... நான் ஏதோ கனவு கண்டேன். நீங்கள் இறந்து விடுவது போல... கெட்ட கனவு!" என்றான் துடிக்கும் குரலில் தருண்.

அவள் அவனை அணைத்துக் கொண்டாள். உன் கனவு பலிக்குமா என்று தெரியவில்லை தருண். ஏன் உனக்கும் என்னைப் போலவே ஏதோ நினைவுகள் ஆட்டிப் படைக்கின்றன என மனதிற்குள் அழுதாள் அவள்.

"தருண்! உனக்கு வந்தது கனவு. தட்ஸ் ஆல். சில நேரம் நல்ல கனவு வரும்.

தேவதைகள், ஸாண்டாக்ளாஸ், என ஸ்வீட் ட்ரீம்ஸ் வரும். சில நேரம் இந்த மாதிரி கெட்ட கனவுகள் வரும்.

எல்லாமே காலையில் சரியாகிவிடும். அதனால் நீ கவலைப்படாதே!" என்றாள் அவன் தலை முடியைக் கோதியபடி.

"நீங்க என்னை விட்டுட்டு எங்கேயும் போக மாட்டீங்கதானே..." என்றான் தருண் பரிதாபமாக.

அந்தப் பிஞ்சு முகத்தைப் பார்க்க ரொம்ப பாவமாக இருந்தது அவளுக்கு. அவள் கண்கள் கலங்கின. அவள் சமாளித்துக் கொண்டு பேசுவதற்குள் வேறு ஒரு குரல் பதிலளித்தது, அவளுக்குப் பதிலாக.

"இல்லை தருண். ஆராதனா இங்கேதான் இருப்பாள். எங்கேயும் போக மாட்டாள்."

இருவரும் வாயிற் கதவை நோக்கி வேகமாகத் திரும்பினார்கள். அங்கே முகேஷ் நின்று கொண்டு இருந்தான்.

தருண் ஆராதனாவையும், முகேஷையும் மாறி மாறிப் பார்த்தான்.



"எப்பவுமே போக மாட்டாங்கதானே..." என்றான் இருவரையும் பார்த்தபடி.

முகேஷ் இந்த முறை பேசாமல் இருந்தான். ஆராதனா என்ன பதில் சொல்லப் போகிறாள் என்று இரு ஜோடி விழிகள் ஆவலுடன் அவள் முகத்தையே பார்த்த வண்ணம் இருந்தன.

லேசாகப் புன்னகை புரிந்தாள் அவள்.

"உனக்கு நான் எவ்வளவு நாள் இருக்க வேண்டும் என்று விருப்பமோ அவ்வளவு நாள் இருப்பேன். போதுமா?"

"ஆராதனா... என்று முகேஷும் தருணும் ஒருமித்த குரலில் அழைத்தனர்.

தருண் வெட்கச் சிரிப்பு ஒன்று உதிர்த்தான். முகேஷ் வாய்விட்டுச் சிரித்தான்.

முகேஷ் தன் கைகளைத் தருண் நோக்கி நீட்டினான். "சித்தப்பா!" என்றபடி அவன் கைகளில் தஞ்சம் அடைந் தான் தருண்.

முகேஷின் கண்கள் கலங்குவதை ஆராதனாவால் உணர முடிந்தது. அங்கே ஒரு அழகான மௌனப்

நிலவியது.

முகேஷ் ஆராதனாவின் கையைப் பற்றினான். அவ

கையை அழுத்திப் பற்றி ஆறுதல் சொல்ல முயன்ற

அவள்.

மூன்று பேரும் சில நிமிடங்கள் அந்த மௌனத்

கலைக்காமல் இருந்தனர். முகேஷின் கையை மு

விடுவித்தாள் ஆராதனா.

"சரி தருண்... உனக்குப் பசிக்குமே. இப்ப உனக்கு என்ன வேணும் சாப்பிட?" என்றான் புன்முறுவலோடு முகேஷ்.

"ம்... பிரெட் ஜாம், மில்க்!" என்றான் தருண்.

"காலை நான்கு மணிக்கு ஏற்ற பிரேக்ஃபாஸ்ட்தான் தருண். பிரேக்ஃபாஸ்ட் செய்யப் போறது நானும் ஆராதனாவும்.

நீ எங்களோட வா. வந்து பார்... எவ்வளவு சூப்பரா நாங்க செய்யப் போறதை..."

"ஓ... நானே செஞ்சிடுவேன். நீங்க... நீங்க ரெஸ்ட் எடுங்க!

"கமான் ஆராதனா. டோண்ட் பீ ஃபஸ்ஸி. வா, போகலாம்!" என்று அவள் கையைப் பற்றி மெதுவாக அழைத்துச் சென்றான் முகேஷ்.

முகேஷ் சமையல் அறையில் அவளுக்குத் தேவையான எல்லாம் எடுத்துக் கொடுத்தான். பிரெட்டை அழகாக ஸ்லைஸ் செய்து அவனே ரோஸ்ட்டும் செய்தான்.

பாலைக் காய்ச்சினாள் ஆராதனா. முகேஷை அந்த மாதிரி ஒரு சூழலில் பார்க்க வித்தியாசமாக இருந்தது. அவன் ரொம்ப இயல்பாக எந்த அலட்டலும் இல்லாமல் அவளிடம் பழகியது அவளுக்குப் பிடித்தது.

மூன்று பேரும் ஏதேதோ பேசியபடி சாப்பிட்டனர். ண்டல், கேலி, சந்தோஷம் என இனிமையாக இருந்தது ந்தச் சமையல் அறை.

காலை ஆறு மணிக்கு வழக்கம் போல் சமையல் றை உள்ளே நுழைந்த மேகலா திடுக்கிட்டாள்



"நான் யாரோ திருடங்க வந்திட்டாங்க போல அப்படின்னு பயந்திட்டேன். குட் மார்னிங் ஸார்!" என்றாள் முகேஷைப் பார்த்து.

"ம்... சாப்பாட்டைத் திருட வந்தோம் நாங்க!" என்று தருண் பதில் சொல்லத் திகைத்தாள் அவள்.

அவள் தன்னை அதிசயமாகப் பார்ப்பதைத் தருண் உணர்ந்தான்.

"என்னால் பேச முடிகிறது ஆன்ட்டி!" என்றான் தருண்.

அவனைப் பாசத்தோடு அணைத்துக் கொண்டாள் மேகலா.

"தருண்! நீ ரொம்ப நல்ல பையன். நீ கண்டிப்பாகப் பேசுவாய் ஒரு நாள் என்று நாங்கள் எல்லாமே நம்பினோம்.

உன் பேச்சைக் கேட்பதற்கு எங்களுக்கு ரொம்ப இனிமையாக இருக்கிறது!" என்றாள் மேகலா.

"ஆராதனா கிட்டதான் நான் முதல்ல பேசினே சித்தப்பாவும் அவங்களும் எனக்கு இப்ப பிரெட், ஜா பால் எல்லாம் கொடுத்தாங்க."

"ஆமாம்... பிரெட் ஜாமில், பிரெட் மூலை ரோஸ்ட் செய்யும் பொழுது கொஞ்சம் கருகி விட்டது.

அதைச் சொல்லலையே தருண்!" என்றான் மு கிண்டலாக.

"ம்... அது மொறுமொறுன்னு நல்லாதான் இருந் என்றான் புன் சிரிப்போடு தருண்.

ஆராதனா அதைக் கேட்டுச் சிரித்தாள். மேகலாவும், முகேஷ்ூம் அவள் சிரிப்பில் இணைந்து கொண்டனர்.

"சரி... இப்ப போய் எல்லாரும் ரெஸ்ட் எடுங்க. நான் இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்களுக்கு பிரேக் - பாஸ்ட் தயார் செய்து கொண்டு வருகிறேன்!" என்றாள் மேகலா.

"தருண்! இன்னிக்கு பிரேக்பாஸ்ட் முடிச்சுட்டு எல்லாரும் வெளியே போகலாமா?

ரொம்ப நாளாச்சு உன்னை வெளியே அழைச்சுட்டு போய்!" என்றான் முகேஷ்.

"ஓ.... ஜாலி. நான் ரெடி!" என்றான் உற்சாகமாக தருண்

"தட்ஸ் குட். எங்கே போகலாம்?"

"தருணிற்குப் பறவைகள் பிடிக்கும். வேடந்தாங்கல் போகலாமா?" என்றாள் ஆராதனா.

"போகலாம். அங்கேயே போகலாம் சித்தப்பா."

"ஓகேடா தருண். போகலாம்... இன்னிக்கு ஷூட்டிங் எல்லாம் கேன்சல் செஞ்சிடறேன். ஆன்ட்டி! நீங்களும் வாங்க!" என்றான் மேகலாவைப் பார்த்து.

"தம்பி... நீங்க போயிட்டு வாங்க. ராத்திரி சரியா தூங்கலை. பேத்திக்கு உடம்பு சரியில்லை. அதனால அவளைக் கவனிச்சுகிட்டு இருந்தேன்.

அங்க வந்தால் கூட நான் எதையும் ரசிக்க முடியாது. தப்பா நினைக்காதீங்க..."

"ஓ... அப்படியா. அப்ப நீங்க பிரேக்ஃஃபாஸ்ட் மட்டும் செஞ்சிட்டு கிளம்புங்க வீட்டுக்கு.



மதியச் சாப்பாடு நாங்க வெளியில பார்த்துக்கறோம். அப்புறம் சாயங்காலமா வேடத்தாங்கல் போகலாம்."

"தேங்க்ஸ் தம்பி. தருண் இன்னிக்கு பேசினதால, பாயசம் ஒண்ணு செஞ்சிடறேன். தருண்! உனக்கு ஓகே தானேடா?"

"சரி... ஆனால் பாயசத்தில் சாக்லேட் ஃப்ளேவர் வேணும்."

"ம்... பாயசத்திலா..." என்று வாயைப் பிளந்தாள் மேகலா.

"நான் ஹெல்ப் செய்யறேன் உங்களுக்கு!" என்றாள் ஆராதனா.

"சரி... தருண்... வா... நம்ம ஒரு குட்டித் தூக்கம் போட்டுட்டு நீச்சல் அடிக்கப் போகலாம்.

ஆராதனா! யூ கேன் ஆல்ஸோ ஜாயின் அஸ்!" அவன் சொன்னதைக் கேட்டவுடன் ஏனோ அவளை அறியாமல் அவள் கன்னங்களில் செம்மை படர்ந்தது.

"இல்லை. நீங்க போங்க!"என்றாள் லேசான புன்முறுவலோடு ஆராதனா.

"ஐயா முகத்தில இப்பதான் சந்தோஷம் தெரியுது. தருண் பேசின பிறகுதான் அவர் முகமே தெளிவா இருக்கு..."

"ஆமாம். என்னாலேயே நம்ப முடியவில்லை. தருண் இப்படி சட்டுன்னு பேசுவான் அப்படின்னு நான் எதிர் பார்க்கலை."

"பாவம். ரொம்ப நல்ல புள்ளை தருண். அம்மா பாசம் அவனுக்குக் கிடைக்கவே இல்லை.

அப்பா அவனை நல்லா பார்த்துட்டு இருந்தார். ஆனால் விதி விபத்து ரூபத்தில் வந்து அவர் கதையை முடிச்சிருச்சு."

"நல்ல காலம். தருண் அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு வந்திட்டான். இனிமேல் எந்த ப்ரச்சினையும் இருக்காது."

"ஆமாம். உனக்குதான் ஆராதனா நன்றி சொல்லணும். நீ வந்த பிறகுதான் தருண் இயல்பு நிலைமைக்குக் கொஞ்சம் கொஞ்சமா திரும்பினான்.

உன் அன்பும், அரவணைப்பும் அவனைச் சீக்கிரமாகப் பழைய நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது."

"ஓ... நான் ஏதும் பெரிதாகச் செய்து விடவில்லை. எனக்குக் குழந்தைகள் என்றால் பிடிக்கும்.

அதுவும் தருண் நிலையைப் பார்க்கும் பொழுது ஏனோ ரொம்ப பாவமாக இருந்தது.

சட்டெனப் பெற்றோரைப் பறி கொடுப்பது எவ்வளவு கொடுமையான விஷயம் என்று எனக்குத் தெரியும். நான் அதை அனுபவித்து இருக்கிறேன்.

அதனாலேயே தருண் மீது எக்ஸ்ட்ரா அன்பு, பாசம் எல்லாம் தானாகவே ஏற்பட்டது..."

"சரி... இப்ப தருண் உடம்பு சரியாகி விட்டதே... அடுத்து நீ என்ன செய்யப் போகிறாய்?"

உனக்கென ஒரு வாழ்க்கை வேண்டாமா? உன் பெர்சனல் வாழ்க்கையில் மூக்கை நுழைக்கிறேன் என நினைக்காதே."



"இல்லை. நான் அப்படி எல்லாம் ஏதும் தப்பாக நினைக்க மாட்டேன்.

பார்க்கலாம். தருணிற்கு எவ்வளவு நாள் நான் தேவையோ அவ்வளவு நாள் நான் இங்கே இருப்பேன்."

மேகலா கேட்ட கேள்விக்கு அவள் பதில் அளித்து விட்டாலும், ஏனோ ஒரு துக்கம் அவள் அடி வயிற்றில் பந்து போல் எழும்பியது.

## 15

நதி
ஓடிக்
கொண்டு
இருக்கிறது
தெளிவாக
கடலில்
சேர்வதற்கு!
நட்சத்திரங்கள்
வானில்
பவனி
வருகின்றன
அழகாக
நிலவைத்
தரிசிப்பதற்கு!

பூக்கள்
மலர்ந்து
கொண்டு
இருக்கின்றன
கதிரவனின்
வருகைக்காக!
எனக்காக
நீ
காத்துக்
கொண்டு
இருக்கிறாய்!

........

பிரேக்பாஸ்ட் முடிந்த பின்பு ஷாப்பிங் செய்வது என்று முகேஷ் முடிவு செய்தான்.

ஸ்பென்ஸர் ப்ளாஸா சென்று தருணுக்குப் பிடித்த டீ - போர்ட், டிரெஸ்ஸஸ் வாங்குவது என ப்ளான் செய்தான்.

ஸ்பென்ஸர் ப்ளாஸா சென்னையில் வேறு ஒரு உலகம் எனப் புரிந்து கொண்டாள் ஆராதனா.

ஜோடி ஜோடியாக இருந்த ஆண்களும் பெண்களும் கூட்டம் கூட்டமாக நின்று பேசிக் கொண்டு இருந்த காலேஜ் ஸ்டுடண்ட்களும், அவளுக்குப் புதிதாக இருந்தனர்.

முகேஷை அடையாளம் கண்டு கொண்ட ஒரு இளம் பெண் அவனை நோக்கி வேகமாக ஓடி வந்தாள்



"ஸார்... உங்களை இங்க சந்திப்பேன்னு நான் எதிர் பார்க்கவில்லை. காட்! ஐ காண்ட் பிலீவ் இட்.

எப்பவும் ஷாப்பிங் இங்க தான் வருவீங்களா ஸார்? யூ லுக் வெரி அட்ராக்டிவ்.

படத்தில பார்க்கறதை விட நேரில நீங்க இன்னும் நல்லா இருக்கீங்க. உங்க லாஸ்ட் பிலிம்ல ஏன் ஸார் அவ்வளவு சோகம்?

அதைப் பார்த்துட்டு எனக்குச் சாப்பாடு, தூக்கம் எதுவுமே பிடிக்கலை. ரொம்ப மனசு கஷ்டமாயிருந்தது!" என்று படபடவெனப் பேசினாள் அந்தப் பெண்.

"ஓ... என்ன இப்படி மூச்சு விடாம பேசறீங்க? என்னுடைய படங்களின் கதையை முடிவு செய்வது டைரக்டர் தான்.

நாட் மீ. ம்... இருந்தாலும் நீங்க சொல்றதை ஞாபகம் வெச்சுக்கறேன். என்னோட அடுத்த படம் செய்யும் பொழுது.

தேங்க்ஸ். நைஸ் டாக்கிங் டு யூ!" என்றான் புன்முறுவலோடு முகேஷ்.

ஆனால் அந்தப் பெண் அவ்வளவு சீக்கிரம் முகேஷை விடுவதாக இல்லை.

"ஸார்... ஸார். உங்களோட ஒரு ஃபோட்டோ எடுத்துக் கணும் ஸார். ப்ளீஸ்.

அப்புறம் இவங்க யார் ஸார்? உங்க லேட்டஸ்ட் கேர்ள் ஃபிரண்டா?" என்று குறும்பாகக் கண் சிமிட்டினாள்.

அதைக் கேட்ட ஆராதனாவின் முகம் சிவந்தது. அவள் இதயத் துடிப்பு அதிகரித்தது.

"ம்... போட்டோ எடுத்துட்டு என்னைக் கொஞ்சம் சீக்கிரமா விட்டீங்கன்னா நல்லா இருக்கும். நான் ஷாப்பிங் செய்யணும். ப்ளீஸ் இன்னிக்கு மட்டும் தான் ஷூட்டிங்கை கேன்சல் செஞ்சிருக்கேன். கொஞ்சம் கோ ஆபரேட் செய்ங்க மேடம்... ப்ளீஸ்!" என்றான் முகேஷ்.

வேறு வழியின்றி அந்தப் பெண் பெருமூச்சோடு தலை அசைத்தாள்.

"ஆராதனா! அவங்க செல்லில் கொஞ்சம் ஃபோட்டோ எடு. ப்ளீஸ்..." என்றான் முகேஷ்.

அந்தப் பெண் நீட்டிய செல்லை வாங்கிக் கொண்டாள் ஆராதனா.

அந்தப் பெண் முகேஷ் அருகே நெருக்கமாக நின்று கொண்டாள். தோள் மேல் வேறு கை போட்டுக் கொண்டாள்.

எரிச்சலோடு செல்போனின் கேமிரா பொத்தானை அழுத்தினாள் ஆராதனா.

"இன்னும் ஒரு ஃபோட்டோ ஸார், ப்ளீஸ்."

"ஓகே... இது தான் லாஸ்ட். எங்களுக்கு டைம் ஆச்சு!" என்றான் முகேஷ்.

வேண்டா வெறுப்பாக இன்னொரு முறை கேமிரா பட்டனை அழுத்தினாள் அவள்.



"என்ன ஸார் உங்க கேர்ல் ஃப்ரெண்டிற்கு என் மேல் கோபம் போல. ரொம்ப கோபமா இருக்காங்க!" என்றாள் ஆராதனாவைப் பார்த்தபடியே அந்தப் பெண்.

"ஆமாம். ஷாப்பிங் போகும் பொழுது இப்படி குறுக்க வந்தீங்கன்னா... யாரா இருந்தாலும் கோபம்தானே வரும்..."

"ஓ... விட்டுக் கொடுக்க மாட்டேங்கறீங்க ஸார் உங்க கேர்ல் ஃப்ரெண்டை. ஷி இஸ் வெரி. ஃப்யூட்டிஃபுல் அண்ட் ஸிம்பிள்.

க்ளேமரஸ் கேர்ல்ஸ் பார்த்துப் பார்த்து சினிமாவில உங்களுக்கு போர் அடிச்சிருக்கும். அதான் இப்படி ஒரு தேர்வா..."

"ஆமாம். யூ ஆர் ரைட்!" என்றவன் ஆராதனாவின் கையைப் பற்றிக் கொண்டு வேகமாக நடந்தான்.

"ஐயாம் ஸாரி ஆராதனா. இந்த மாதிரி பட்டுன்னு பேசினால்தான் வாயை மூடுவாங்க. அதனால்தான் அப்படிச் சொன்னேன். ப்ளீஸ் டோண்ட் ஃபீல் பேட்!" என்றான் மெதுவாக முகேஷ்.

தெரியுமே... உங்கள் மனம் முழுவதும் இன்னும் சுந்தரிதானே இருக்கிறாள் என மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் ஆராதனா.

அவள் பதில் ஏதும் சொல்லாமல் இருப்பதைக் கண் கோபம் எனத் தவறாக நினைத்துக் கொண்டான் முகேஷ்

"ஐயாம் ஸாரி ஆராதனா. நான் அந்த ரசிகைக்க அப்படிச் சொல்ல வேண்டி இருந்தது.

ப்ளீஸ் கோபப்படாதே. நான் பெரும்பாலும் ஷாப்பிங் இரவு நேரங்களில் தான் செய்வேன்.

இந்த மாதிரி இம்சை எல்லாம் இருக்காது. என்ன செய்வது. இன்னிக்கு ஜாலியா டைம் ஸ்பெண்ட் செய்ய வந்தேன். இப்படி ஆகிவிட்டது!" என்றான் பெருமூச்சோடு.

"இட்ஸ் ஓகே. நீங்கள் என்ன செய்வீர்கள், பாவம். உங்கள் ரசிகைகள் அப்படி..."

"ம்... என்ன இருந்து என்ன? ஒரு பெண்ணிடம் ஏதும் எடுபடவில்லை. நான் அவளை... மிஸ் செய்கிறேன்... ரொம்ப."

அவன் சுந்தரியை நினைத்துத் தான் பேசுகிறான் என்று அவளுக்குப் புரிந்தது. ஏனோ அவன் மேல் கோபம் வந்தது.

சே... சுந்தரி அண்ணன் மனைவி என்று தெரிந்தும் இப்படி நினைக்கிறானே! அதுவும் அவள் உயிரோடு வேறு இல்லை.

இருந்தும் இந்த மாதிரி நினைக்கிறானே என மனம் வருந்தினாள் அவள்.

"சித்தப்பா! அந்தக் கடைக்குப் போகலாமா? தே ஹாவ் லாட் ஆஃப் கார்ஸ்!" என்று தருண் குரல் கேட்க, நிஜ உலகிற்கு வந்தாள் ஆராதனா.

"ஓகே... வாடா!" என்று முகேஷ் அவனைத் தூக்கிய நடந்தான்.

தருண் கை காட்டிய கடையில் எலெக்ட்ரானிக்ஸ் ிட்டம்ஸ் நிறைய இருந்தன. ஆனால் தருண் பார்க்கிற ாவற்றையும் கை காட்டாமல் தெளிவாகத் தனக்கு



வேண்டியதைத் தேர்ந்தெடுப்பதைப் பார்த்து ஆச்சரியப் பட்டாள் அவள்.

கடையை விட்டு வெளியே வரும்பொழுது நிறையப் பேர் சட்டென முகேஷைச் சூழ்ந்து கொண்டனர்.

"காட்... திஸ் க்ரவுட் இஸ் கிரேஸி!" என்று முணு முணுத்தான் முகேஷ்.

அவர்கள் எல்லாரும் முகேஷைச் சுற்றி வளைத்துக் கொண்டனர்.

"ஸார்... ஆட்டோகிராப் ப்ளீஸ். இவங்க யார் ஸார்? உங்க ஃபிரண்ட்டா... ஃபியான்ஸியா? கல்யாணம் எப்ப?" என்று கத்தினான் ஒருவன்.

"லுக்... நாங்க இங்க ஷாப்பிங்குக்காக வந்தோம். வி ஆர் லேட். உங்க கேள்விகளுக்குப் பதில் சொல்ல எனக் நேரமில்லை.

ப்ளீஸ் வழி விடுங்க!" என்றான் உரத்த குரலி அவன்.

"ஸார்! உங்க மேலே இண்ட்ரெஸ்ட் இருக்கறத தானே நாங்க இதெல்லாம் கேக்கறோம்.

உங்களை மாதிரி செலப்ரிடி இதை எல்லாம் ஏத்து தான் வேணும்."

"இட்ஸ் ஓகே. உங்க அன்பு எனக்குப் புரியுது. ப ஹாவ் டு அண்டர்ஸ்டாண்ட். எனக்குன்னு ஒரு வாழ் இருக்கு. ப்ளீஸ்."

"ஸோ நீங்க சொல்றதைப் பார்த்தா இவங்க உங்க ஃபியான்ஸின்னு தோணுது... ஆல் தி பெஸ்ட் என்றான் ஒருவன்.

"ஓ... தேங்க்ஸ் எ லாட்!" என்றான் புன்முறுவலோடு முகேஷ்.

கூட்டம் சிரித்தபடியே கலைந்தது. ஒரு செலப்பிரிடியாக இருப்பது எவ்வளவு கஷ்டம் என்பது அவளுக்குப் புரிந்தது.

புவர் முகேஷ் என அவனுக்காகப் பரிதாபப்பட்டாள் அவள்.

அவன் தன்னை ஃபியான்ஸி என்று ஒருவன் குறிப்பிட்டதை ஒத்துக் கொண்டது போல் பேசியது ஏனோ அவளுக்கு எரிச்சலை வரவழைத்தது.

மனம் முழுக்கச் சுந்தரி இருக்கிறாள். இறந்த பின்பும் அவளை மறக்க முடியவில்லை என்று நினைத்து அதிர்ந்தாள் அவள்.

"ஆராதனா! நீயும் தருணும் கொஞ்ச நேரம் காரில் இருங்க. நான் ஒரு டென் மினிட்ஸில் வந்திடறேன்!" என்று சொல்லிவிட்டு அவர்களைக் காரில் உட்கார வைத்து விட்டு மீண்டும் காம்ப்ளெக்ஸிற்குள் சென்றான் அவன்.

அவன் வேகவேகமாக நடந்து போவதைப் பார்த்தாள் அவள். ஏதாவது வாங்க மறந்து போயிருப்பான். அதை வாங்கப் போகிறான் போல என நினைத்துக் கொண்டாள்.

ஒரு பத்து நிமிடத்தில் திரும்பி வந்தான் முகேஷ். அவன் கையில் ஏதோ ஒரு பொட்டிக்கின் பெயர் கொண்ட கவர் ஒன்று இருந்தது.

"சித்தப்பா... என்னது கையில?"

"ம்... நான் ஆராதனாவிற்குச் சில டிரெஸ் வாங்கி இருக்கேன்."



"பட்... நான்... எனக்கு வேண்டாம்."

"கலர் உனக்குப் பிடிக்கலைன்னா எக்ஸ்சேன்ஜ் செஞ்சுக்கலாம். நோ ப்ராப்ளம்."

"நான் கலரைச் சொல்லலை. டிரெஸ்ஸைப் பற்றி சொன்னேன்."

"ஆராதனா! ப்ளீஸ். அடம் பிடிக்காதே. உனக்கு ரொம்ப நாளாவே வாங்கித் தரணும் அப்படின்னு நினைச்சுட்டு இருந்தேன்.

டோண்ட் பீ ஃபஸ்ஸி. புடவைகளும், சல்வார் ஸெட்டும் தான்."

"இல்லை... நான்..." என்று அவள் முடிப்பதற்குள் அவன் குறுக்கிட்டான்.

"ப்ளீஸ் நோ மோர் எக்ஸ்கியூஸ். சின்ன விஷயத்தைப் பெரிது படுத்தாதே... ஆராதனா."

"சரி... நீங்கள் இவ்வளவு வற்புறுத்தறதால நான் இதை வாங்கிக்கறேன்..."

"அப்பாடா... எவ்வளவு டயலாக் பேச வேண்டி இருக்கு... உன்னைச் சம்மதிக்க வைக்க...

தேங்க்ஸ் எ லாட் ஆராதனா..."

"சித்தப்பா! இப்ப நாம எங்க போறோம்?"

"லன்ச்... ஹோட்டல்ல சாப்பிடப் போறோம். அதுக்கப்புறம் உன்னுடைய பேவரிட் இடம் வேடந்தாங்கல் ஓகேவா தருண்..."

"ம்... எந்த ஹோட்டல் சித்தப்பா..."

"உனக்கு எங்கே போகணும்னு சொல். நான் பா ஷெரட்டனில் புக் செஞ்சிருக்கேன்.

அங்க போனா நிம்மதியா சாப்பிடலாம். என்னை யாரும் கண்டுக்க மாட்டாங்க. பார்த்தாலும் ரொம்ப அன்புத் தொல்லை கொடுக்க மாட்டாங்க. அதான் நான் அந்த இடத்தில டேபிள் புக் செஞ்சிருக்கேன்..."

"ஓ... அங்கேயே... அப்பாவோட ஒரு நாள் போயிருக்கேன். எனக்கு ஞாபகம் இருக்கு. அங்க குலோப்ஜாமுன் ரொம்ப யம்மியா இருந்தது!" என்றான் உற்சாகமாக தருண்.

"என்ன ஆராதனா. இன்னும் என் மேலே கோபமா? பேச மாட்டேங்கற எதுவும்."

"ஓ... அதெல்லாம் இல்லை. நீங்க எப்பவும் நினைச்சதை நடத்தி முடிச்சிடுவீங்க... அப்படித்தானே?"

"ம்... எதையாவது மனசில வெச்சுண்டு பேசினா எனக்குப் புரியாது.

தெளிவா சொன்னாதான் புரியும்."

"ஒண்ணும் இல்லை."

"ஓகே உன்னை நான் வற்புறுத்தலை."

"அட்லீஸ்ட் இதிலாவது வற்புறுத்தாம இருக்கீங்களே."

"ம்... உனக்கு இன்னும் கோபம் தீரலை போல. உன்னை இவ்வளவு கோபப்படுத்தினதுக்கு ஐயாம் ஸாரி!" என்றான் அவள் கையைப் பற்றியபடி.

அவன் தொட்ட இடம் சிலிர்த்தது அவளுக்கு. ஏனோ கோபம் எல்லாம் தீர்ந்து விட்டாற் போல் தோன்றியது அவளுக்கு.

அவன் கையில் என்ன மந்திர சக்தி இருக்கிறது என்று தரியவில்லை என்று மனதிற்குள் நினைத்துச் சிரித்துக் காண்டாள்.



"சித்தப்பா! இதுதானே ஹோட்டல்?" என்று காரினுள் இருந்தபடியே ஒரு கட்டடத்தைக் காட்டினான் தருண்.

"வாவ்! குட். நல்ல ஞாபக சக்தி உனக்கு தருண். யூ ஆர் ரைட்..."

ட்ரைவர் காரை நிறுத்தியவுடன் காரில் இருந்து இறங்கினார்கள் மூவரும்.

"தருண்... நீ எல்லாம் சாப்பிடலாம்... பட் ஃபார் ஒன் திங்..."

"ம்... சித்தப்பா ப்ளீஸ்... ஐஸ்க்ரீம் ஐ வாண்ட்!" என்று சிணுங்கினான் தருண்.

"தருண்! நோடா... யூ ஆர் புரோன் டு கோல்ட் ப்ளீஸ்டா. சித்தப்பா சொல்றதைக் கேள். பீ எ குட் பாய்."

"பாவம். ஒரு நாள்தானே. அவன் சாப்பிடட்டும். வேணும்னா காப் ஸிரப் கொடுத்திடலாம்."

"பாருடா... உனக்கு ஸப்போர்ட் செய்ய ஆராதனா இருக்காங்க. அதனால உன் பாடு கொண்டாட்டம்தான்!" என்றான் முகேஷ் புன்முறுவலோடு.

"யெஸ். ஷி இஸ் எ குட் கேர்ல்."

"அப்ப நான் குட் பாய் இல்லையா? டேய்.சித்தப்பாவை இப்படி அம்பேல் ஆக்கிட்டியே.

இது உனக்கு நியாயமா? புதுசா ஃப்ரெண்ட் கிடைச்சவுடன் என்னை மறந்திட்ட பார்."

அதைக் கேட்ட ஆராதனா வாய்விட்டுச் சிரித்தாள். அவள் சிரிப்பதைப் பார்த்தான் முகேஷ்.

"யூ லுக் குட் வென் யூ ஸ்மைல். ரொம்ப இயல்ப அழகா இருக்க!" என்றான் முகேஷ். அவன் பாராட் யதைக் கேட்ட அவள் முகம் சிவந்தது.

“பஃபே முறையில் இருந்த உணவு வகைகளைப் பார்த்தாள் ஆராதனா. சைவம், அசைவம் எனத் தனித் தனியாக இருந்த விதவிதமான உணவு வகைகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

இவ்வளவு வகை வகையான உணவுகளைத் தினம் தினம் செய்ய எவ்வளவு எவ்வளவு உழைப்பு தேவைப் படும். எவ்வளவு பேர் அதில் இன்வால்வ் ஆகியிருப் பாங்க என யோசித்தபடியே தனக்குத் தேவையான உணவைத் தட்டில் எடுத்து வைத்தபடி நடந்தாள்.

முகேஷ் தட்டில் இருப்பதைக் காட்டிலும் தன் தட்டில் நிறைய உணவு வகைகள் இருப்பதைப் பார்த்தவுடன் அவளுக்கு வெட்கமாகப் போய்விட்டது.

அவள் மன ஓட்டத்தை, அறிந்தவன் போல் முகேஷ் அவள் முகத்தைப் பார்த்தான்.

“ஆராதனா... உனக்கு எது பிடிக்குமோ அதைத் தயங் காமல் சாப்பிடு.

கிளாமர் வெர்ல்டில் இருக்கும் பெண்கள் எப்பவும் டியட்டில் இருப்பார்கள். இந்த உணவு சாப்பிட்டால் வெயிட் போட்டு விடும்.

இது வேண்டாம்... அது வேண்டாம் என ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பார்கள். ஆனால் நீ எந்த டயட் இல்லாமல் கரெக்டான வெயிட்டில் இருக்கிறாய்.

இட்ஸ் குட் டு ஸீ எ கேர்ல் லைக் யூ. ஸோ டோண்ட் சேன்ஜ் யூவர் ஒரிஜினாலிடி.”

“அப்பாடா... எவ்வளவு பெரிய லெக்சர்... சரி... நான் இப்படியே நன்றாகச் சாப்பிட்டு, சாப்பிட்டுத் தூங்கினால் அவ்வளவுதான்...”



“நீ எப்படி இருந்தாலும் அழகாகத் தான் இருப்பாய். ஸோ டோண்ட் பாதர்!” என்றான் கண்களில் குறும்பு மின்ன.

“ஓ தேங்க்ஸ்... ரொம்ப நல்ல பொய்!” என்றாள் அவளும் சளைக்காமல்.

“காட்... இது பொய் இல்லை. எந்த ஒப்பனையும் இல்லாமல் சிம்பிளாக நீ இருக்கிறாய்.

அதுதான் உன்னோட அட்ராக்ஷன். உன் கண்கள் உன் மனதில் இருப்பதை அப்படியே காட்டும்.

உன் முகம் ரொம்ப எக்ஸ்ப்ரெஸிவ். உன் கன்னத்தில் அடிக்கடி தோன்றும் சிகப்பு எனக்கு ரொம்ப பிடிக்கும்.

சினிமாவில் அந்தச் சிவப்பு நிறத்தைக் கன்னத்தில் வரவழைப்பதற்குச் செயற்கையாக என்னென்னவோ செய் வார்கள்...”

அவன் சொன்னதைக் கேட்டு அவள் முகத்தில் செம்மை படர்ந்தது.

“ம்... இதைத்தான் நான் சொன்னேன்.”

“ஆமாம் சித்தப்பா. ஏன் அவங்க அப்பப்ப இப்படி ரெட் ஆயிடறாங்க?” என்றான் தன் பங்கிற்கு - தருண்.

“தருண்... என்ன இது...” என்று செல்லமாகக் கோபித் தாள் ஆராதனா.

கிண்டலும் கேலியுமாகப் பேசிக் கொண்டே சாப்பிட்டு முடித்தனர் மூவரும்.

“ரொம்ப நாளாச்சு இந்த மாதிரி சந்தோஷமா சாப்பிட்டு. குட் ஆராதனா. தேங்க்ஸ் டூ யூ.”

“ஓ... கமான். உங்களுக்கு இன்னிக்கு நோ ஷூட்டிங் அதனாலேயே ரிலாக்ஸ்டா இருக்கீங்க...

அதோடு உங்க ரசிகை வேறு இன்று உங்களிடம் ரொம்ப நேரம் பேசிக் கொண்டு இருந்தாங்க. அதனாலே உங்களுக்கு மூட் வந்திருக்கும்."

அவள் கண்களில் தெரிந்த கோபத்தைக் கவனித்தான் முகேஷ். அவன் மனதில் ஏதோ ஒரு புதிய உணர்வு தோன்றியது.

"ம்... கரெக்ட் ஆராதனா... நீ சொல்றது ரொம்ப சரி... யூ ஆர் வெரி ஸ்மார்ட் இன் கெஸ்ஸிங்!" என்றான் சீரியஸாக முகேஷ்.

சொல்லிவிட்டு அவள் முகத்தை அவன் கவனித்தான். அவள் முகத்தில் சட்டென ஒரு ஏமாற்றம் படர்ந்தது.

அதை அவன் விழிகள் கவனித்தன. மனதிற்குள் சிரித்துக் கொண்டான் அவன். அதை அறியாமல் தருணும், ஆராதனாவும் சாப்பிட்டுக் கொண்டு இருந்தனர்.

## 16

மலர்களைப்
போல்
நீ
உறங்குகின்றாய்!
பூக்களின்
தலைவியா
நீ!



உன்னில்
என்ன
ஒரு
மென்மை!
அந்த
மென்மை
தான்
என்னைக்
கரைத்ததோ?
வல்லினமாக
இருந்த
நான்
உன்னால்
மழையை
ரசிக்கிறேன்!
இரவில்
தோன்றும்
கருமையை
ரசிக்கிறேன்!
உன்னாலே
தான்
இந்த மாற்றங்கள்
என்னில்!

**சா**ப்பிட்ட பின்பு வேடந்தாங்கல் செல்லத் தயாரா னார்கள் எல்லோரும்.

காரில் இருந்தபடியே லேப்டாப்பில் வேலை பார்த்துக் கொண்டு இருந்த முகேஷை அவ்வப்பொழுது ஓரக் கண்ணால் பார்த்த வண்ணம் இருந்தாள் அவள்.

அதை வேண்டும் என்றே கண்டு கொள்ளாமல் இருந்தான் முகேஷ். தருண் உட்கார்ந்தபடியே தூங்கு வதைப் பார்த்த ஆராதனா அவனைத் தன் மடியில் சாய்ந்து உறங்கும்படி செய்தாள்.

"ஆராதனா... தருணை வேணும்னா நான் என் மடியில் படுக்க வைச்சுக்கவா? எப்படியும் நாம் போய்ச் சேர இன்னும் இரண்டு மணி நேரம் ஆகும்."

"இல்லை. பரவாயில்லை. நீங்க ஏதோ வேலையா இருக்கீங்க. அதைப் பாருங்க."

"ம்... என்னுடைய ரசிகர்கள் நிறையக் கேள்விகள் என்னிடம் கேட்டிருக்காங்க. இணைய தளத்தில் அதைத் தான் பார்த்துக் கொண்டு இருக்கிறேன்!" என்றான் முகேஷ்.

"ஓ... நீங்க செலபரிடி என்பதை நான் அப்பப்ப மறந்து போய் விடுகிறேன்."

"நீ மறந்து இருப்பது எனக்கு நல்லதுதான். இந்த 'செலபரிடி' என்ற முகமூடி இல்லாமல் நான் நிம்மதியாக இயல்பாக இருக்கிறேன்.

கேமிரா, மேக்கப் என ஷூட்டிங் அட்மாஸ்பியர் ராம்ப போர் அடித்து விட்டது. நிறைய வெற்றிப் படங்கள் காடுத்தாச்சு.



புகழ் என்பது ஒரு போதை. அதில் ஒரு தடவை அமிழ்ந்தால் போதும். மீண்டும் மீண்டும் அமிழச் சொல்லும் ஒரு மாய உலகம் இந்த திரைப்பட உலகம்.

இது எனக்கு போர் அடித்து விட்டது. இதிலிருந்து சீக்கிரமாக வெளிவர வேண்டும் என்று எனக்கு ஒரு எண்ணம் ரொம்ப நாளாகவே இருக்கிறது...

மனம் சொல்வதை நான் கேட்கப் போகிறேன். இனிமேல் யார் என்ன நினைத்தாலும் பரவாயில்லை. நான் அதைப் பற்றிக் கவலைப்படப் போவது இல்லை!" என்றான் தெளிவான குரலில் முகேஷ்.

"ம்... ஆனால் உங்கள்... ஃபேன்ஸ் ரொம்ப ஏமாற்ற மடைஞ்சிடுவாங்களே... ஹவ் ஆர் யூ கோயிங் டு மேனேஜ் தட்..."

"அது கொஞ்சம் கஷ்டம்தான். பட் வேறு வழி இல்லை. சில நேரங்களில் சில முடிவுகள் நமக்காக எடுக்க வேண்டி வரும்.

அது மற்றவர்களுக்குப் பிடிக்காது. ஒத்துக் கொள்ள முடியாது. ஆனால் வேறு ஏதும் செய்ய முடியாது. வீ நீட் டு கீப் கோயிங்.

வாழ்க்கையில் எப்பவும் எல்லாரையும் திருப்தி செய்ய முடியாது. இட்ஸ் தி பிரின்சிபல் ஆஃப் லைப்!" என்றான் முகேஷ்.

ஓ... இவன் சொல்வதைப் பார்த்தால் சுந்தரியைப் பற்றி ஏதோ மறைமுகமாகச் சொல்வது போல் தோன்றுகிறதே.

சில நேரம் சுய நலமான முடிவுகள் எடுக்க வேண்டி வரும் என்பது போல் அல்லவா பேசினான். தான் செய்தது சரி என்று நியாயப் படுத்துவதற்கு முயற்சி செய்கிறானா?

சே... 'என்ன இது' என்று ஒரு ஆயாசம் அவள் மனதை ஆக்ரமித்தது. இவன் மனதில் இவ்வளவு கேவலமான எண்ணங்களா என அதிர்ந்தாள் அவள்.

கார் வேகமாகச் சென்றது. ஆராதனாவின் மனமும் வேகமாக ஏதோ முடிவு எல்லாம் எடுத்தது.

அவள் தருணின் தலைமுடியைக் கோதியபடி அவன் தூங்குவதையே பார்த்தபடி இருந்தாள். தருண் தன் வாழ்வில் எவ்வளவு மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறான் என நினைத்த பொழுது ஒரு பெருமூச்சு பிறந்தது அவளிடம் இருந்து.

"என்ன ஆராதனா... சட்டுன்னு கொய்ட் ஆயிட்டே தூக்கம் வருகிறதா?

நீயும் தருண் மாதிரி தூங்கலாம்... ஐ டோண்ட் ஹேவ் அப்ஜெக்ஷன்."

அவன் சொன்னதைக் கேட்டு அவள் மனம் திடுக்கிட்டது. இப்பொழுது எல்லாம் இந்த மாதிரி ஏதாவது சொல்கிறான். இவனைப் புரிந்து கொள்வது அவ்வளவு சுலபம் இல்லை என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

கார் வேடந்தாங்கலை அடைந்து விட்டது. தன் மடியில் இருந்த தருணை லேசாகத் தட்டி எழுப்பினாள் ஆராதனா.

"ம்... ஏன் எழுப்பறீங்க?" என்று செல்லமாகச் சிணுங்னான் தருண்.

"தருண்... கமான் வா... வேடந்தாங்கல் வந்திடுச்சு. ரான். கெட் அப்!" என்று அவனை எழுப்பினாள் அவள்.



"ஓ... அதுக்குள்ள வேடந்தாங்கல் வந்திடுச்சா?" என்றான் தருண் கண்களைக் கசக்கியபடி.

"யெஸ்டா தருண் வா... கமான் க்விக்!" என்றான் முகேஷ்.

"சித்தப்பா ஐயாம் டயர்ட்... என்னைத் தூக்கிக்கோங்க!" என்று கொஞ்சினான் தருண்.

"ஓகே டா. யூ ஆர் மை ஸ்வீட்பாக்!" என்று சொல்லியபடியே அவனைத் தூக்கிக் கொண்டான் முகேஷ்.

"நான் வேணா தூக்கிக்கறேன்..." என்று தருணை நோக்கிக் கை நீட்டினாள் அவள்.

"உன்னாலே தூக்க முடியாது. உன்னைத் தூக்க ஆள் வேண்டும் போல. யூ ஆர் லைக் தட்!" என்றான் கிண்டலாக முகேஷ்.

"தேங்க்ஸ் ஃபார் யூவர் கமெண்ட்ஸ்!" என்றாள் கிண்டலாக ஆராதனா.

சில்லென்று காற்று அவள் முகத்தில் வீசியது. அவளைத் தள்ளிவிடுவது போல் வேகமாகக் காற்று வீசியது.

லேக்கிலிருந்து பறவைகள் அழகழகாகப் பறந்து அங்கேயும் இங்கேயும் சென்று கொண்டு இருந்தன.

"வாவ்... எவ்வளவு பர்ட்ஸ்!" என்று வியந்தான் தருண்.

பைனாகுலர் வழியாகப் பறவைகளை ரசித்தான் முகேஷ்.

"அதோ அங்கே பறக்குதே... அது என்ன பர்ட்? ரொம்ப பெரிதாக அழகாக இருக்குதே."

"தட்ஸ் கால்ட் பெயிண்டட் ஸ்டோர்க். அதோட இறக்கை எல்லாம் பார்.

எவ்வளவு கலர் கலராக அழகா இருக்கு. ஸோ ஒன்லி இட்ஸ் கால்ட் பெயிண்டட் ஸ்டோர்க்.

அப்புறம் நவம்பர் முதல் ஏப்ரல் வரை இங்கே நிறையப் பறவைகள் வரும்... இட்ஸ் தி ரைட் டைம்."

"உங்களுக்கு எப்படி இதெல்லாம் தெரியுது. படத்தைத் தவிர நிறைய விஷயங்கள் உங்களுக்குத் தெரியுதே. ஐயாம் ரியலி ஸர்ப்ரைஸ்ட். பர்ட் வாட்சிங் உங்களுக்குப் பிடிக்குமா?"

"யெஸ். எனக்குப் பறவைகளை ரொம்ப பிடிக்கும், சின்ன வயசு முதல் ஐ லைக் டு வாட்ச் தெம்.

பறவைகள், அப்புறம் அதோட குணங்கள்... இதெல்லாம் வெரி இண்ட்ரஸ்டிங்...

அதோ அங்க போகுது பார். அதுதான் ஸ்பூன் பில் ஸ்டோர்க். அதோட அலகு ஸ்பூன் வடிவில் இருப்பதால் அதற்கு இந்தப் பெயர்...

பார்... இந்த பைனாகுலர் வழியாகப் பார். நல்லா தெரியும்!" என்று அவளிடம் நீட்டினான்.

அதை வாங்கிக் கழுத்தில் மாட்டிக் கொண்டாள் அவள். அவன் அவள் அருகே வந்து அதை எப்படி இயக்குவது என்று சொன்னான்.

அவன் அண்மை ஏனோ அவள் இதயத் துடிப்பை அதிகரித்தது. உதடுகள் உலர்ந்தது போல் இருந்தன அவளுக்கு.

சட்டென அங்கிருந்த சிமெண்ட் பெஞ்ச் போன்ற இடத்தில் உட்கார்ந்து கொண்டாள் அவள்.



"என்ன ஆராதனா... எனி ப்ராப்ளம்?" என்றான் முகேஷ் பதட்டமாக.

"இ... இல்லை... சட்டெனத் தலை சுத்துவது போல் இருந்தது."

"இஸ் இட் ஸோ... இந்த லெமன் ஜூஸ் கொஞ்சம் குடி. யூ வில் கெட் எனர்ஜி!" என்று ஒரு பாட்டிலை அவளிடம் நீட்டினான்.

மறுப்பு ஏதும் சொல்லாமல் அதை வாங்கி மெதுவாகக் குடித்தாள் அவள்.

அதற்குப் பின்பு 'எனர்ஜி லெவல்' அதிகரித்தது போல் தோன்றியது அவளுக்கு.

"ஸாரி... சட்டுன்னு ஒரு மாதிரி இருந்தது."

"பரவாயில்லை. இங்கேயே நீ உட்கார்... இங்கிருந்தே நல்ல வியூ கிடைக்கிறது பார்."

"தருண்! நீ வேணா ட்ரைவர் அங்கிளோட கொஞ்ச நேரம் விளையாடிக்கோ. சுத்திப் பார்க்கறதுன்னாலும் பார்.

நான் இங்கே ஆராதனாவோட கொஞ்சம் பேசணும்..."

"இ... இல்லை... போகலாம்," என எழ முயன்றவளை அவன் கைகள் அழுத்திப் பிடித்து மீண்டும் உட்கார வைத்தன.

அதற்கு மேல் எந்த மறுப்பும் சொல்லாமல் மௌனமாக அவனருகே அமர்ந்தாள் அவள்.

தருண் டிரைவர் கையைப் பிடித்தபடி நடந்து போவதை அவள் கவனித்தாள். அன்று வார நாள் என்பதாலோ என்னவோ கூட்டம் அதிகமாக இல்லை.

"இப்ப எப்படி இருக்கு ஆராதனா? டு யூ ஃபீல் பெட்டர்?"

"யெஸ். அந்த ஜூஸ் குடித்த பின்பு பரவாயில்லை."

"நீ சரியாகச் சாப்பிடுவது இல்லை போல எனக்குத் தோன்றுகிறது. வந்ததற்குக் கொஞ்சம் மெலிந்து விட்டாய்."

"அதெல்லாம் ஏதும் இல்லை. நான் எப்பவும் போல் தான் இருக்கிறேன்..."

சட்டென அவன் தன்னைப் பற்றிக் கேட்க ஆரம்பித்தவுடன் அவளுக்குச் சிரமமாக இருந்தது. எங்கே தன்னை அறியாமல் ஏதாவது உளறி விடுவோமோ எனத் தன் மேலேயே நம்பிக்கை இல்லாமல் இருந்தாள் அவள்.

யாரோ தலைமுடியை, தன் ஜடையை இழுப்பது போல் தோன்ற சட்டெனப் பின்னால் திரும்பினாள் அவள்.

ஒரு பெரிய குரங்கு அவளைப் பார்த்துச் சிரித்தது. பயந்து போனவள் அருகில் இருந்த முகேஷ் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

முகேஷ் கீழே இருந்த கல் ஒன்றை எடுத்துக் குரங்கு மேல் தூக்கி விட்டெறிய அது வேகமாக ஓடிவிட்டது. பயந்து போய் இருந்த ஆராதனாவைச் சட்டென இழுத்து அணைத்தான்.

அவன் கைகள் அவள் முதுகைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் சொன்னது. அவள் உடல் நடுங்குவதை அவனால் உணர முடிந்தது.

அவனுடைய அணைப்பு இறுகியது. அவள் உடல் நடுக்கம் குறைவது அவனுக்குத் தெரிந்தது.



ஆராதனாவின் மூளை 'இது தவறு' என்று அபாய அறிவிப்புக் கொடுத்தபடி இருந்தது. ஆனால் அவள் மனம் அதைக் கண்டு கொள்ளவில்லை.

அவன் உதடுகள் அவள் நெற்றியில் மென்மையாகப் பதிந்தன. பின் அவள் கன்னம், கண்கள், என முகம் முழுவதும் அவன் உதடுகள் கோலமிட்டன.

ஆராதனா விலக வேண்டும் என்று நினைத்தாள். ஆனால் முடியாமல் அவன் கைகள் அவளை மாலையாக வளைத்து இருந்தன.

சட்டென அவளைத் தன் மடியில் கிடத்தினான் முகேஷ். அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அவளிடம் இருந்து ஒரு கேவல் வெளிப்பட்டது.

சட்டென அவளைத் தனியாக உட்கார்த்தி வைத்தான் அவன்.

"ஐயாம்... ஸாரி ஆராதனா. ஐ ஜஸ்ட் காண்ட் கண்ட்ரோல் மைசெல்ஃப்.

ஸாரி... ஸாரிம்மா. ப்ளீஸ். என்னை மன்னித்து விடு!" என்றான் மெல்லிய குரலில்.

அவன் சொன்னதைக் கேட்டவுடன் அவள் அழுகை மேலும் அதிகரித்தது.

"ஆராதனா... நான்தான் மன்னிப்புக் கேட்டுட்டேன் இல்ல. இன்னும் ஏன் அழற?

எனக்கு... சட்டுன்னு என்ன செய்யறோம் அப்படின்னு தெரியலை.

நான் செஞ்சது உனக்குப் பிடிக்கலை. ஆனால் எனக் ரொம்ப பிடித்தது ஆராதனா. நான் நினைக்கிறே

உன்னிடம் இப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று என் மனதில் ரொம்ப நாளாக ஆசை இருந்திருக்கும். இன்னிக்கு சந்தர்ப்பம் கிடைத்தவுடன் என்னை அறியாமல் என் மனம் என்னை வென்று விட்டது.

ஐயாம் ஸாரி. ஜஸ்ட் ஃபர்கெட் இட். அழுது அழுது என்னை ரொம்ப கில்டியாக ஃபீல் செய்ய வைக்காதே. ப்ளீஸ்.''

அவள் அழுகை குறைந்தது. அவன் தன் பாக்கெட்டிலிருந்து ஒரு கைக்குட்டையை அவளிடம் நீட்டினான்.

ஏதும் சொல்லாமல் அதை வாங்கிக் கொண்டாள். கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"எனக்கு யாரும் இல்லைன்னுதானே இப்படி எல்லாம் நடந்துக்கறீங்க...

என்னோட சூழ்நிலையை நீங்க... நீங்க எக்ஸ்ப்ளாயிட் செய்யறீங்க!'' என்றாள் மெலிந்த குரலில்.

"லுக் ஆராதனா. நீ எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்திருந்தாலும் நான் இப்படித்தான் நடந்து கொண்டு இருப்பேன்.

ஸாரி. இவ்வளவு வெளிப்படையா பேசறதுக்கு. பட். அது தான் உண்மை. உன்னை எக்ஸ்ப்ளாயிட் செய்யணும் அப்படின்னு நினைச்சு இருந்தேன்னா... ஐ குட் ஹாவ் டன் சம்திங் எஸ்டொர் டே.''

என்ன, புரியலை என்பது போல் அவனைக் குழப்பமாகப் பார்த்தாள் அவள்.

"நேற்று உன்னை நீச்சல் குளத்தில் இருந்து காப்பாற்றியது நான். நீ நினைவிழந்து இருந்ததால் உனக்கு என்ன நடந்தது என்று தெரியாத மயக்கத்தில் இருந்தாய் நீ.



உன்னை நான் என்ன வேண்டுமானாலும் செய்து இருக்கலாம். உனக்குக் காய்ந்த ஆடைகளை அணிவித்தது மேகலா ஆண்ட்டி.

ஸோ சட்டென வார்த்தைகளைக் கொட்டி விடாதே. இட்ஸ் வெரி டிபிகல்ட் டு டேக் இட் பேக்!'' என்றான் நிதானமாக முகேஷ்.

அவள் ஏதும் சொல்லாமல் தலை குனிந்தபடி இருந்தாள். அவன் சொன்னதின் அர்த்தம் அவளுக்குப் புரிந்தது.

'முகேஷ்... ஐ லவ் யூ!' என்று அவள் மனம் கதறியது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் அவள்.

"என்ன. இன்னும் என் மேல் கோபமா? ப்ளீஸ் இதை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு தருணைத் தனியாக விட்டு விட்டுப் போய் விடாதே.

பாவம்! அவன் இப்பொழுதுதான் பேசத் தொடங்கி இருக்கிறான். அதுவும் உன்னால் தான்.

அவனால் மீண்டும் ஒரு அதிர்ச்சியைத் தாங்க முடியாது. ஸோ ப்ளீஸ் வேறு எந்த முடிவும் எடுக்காதே!'' என்றான் தணிந்த குரலில்.

அவள் பதில் சொல்லாமல் தன் கைவிரல் நகங்களைப் பார்த்தவண்ணம் இருந்தாள்.

"ஆராதனா... நான் செய்தது தப்புதான். வேண்டுமானால் என்னை அடித்து விடு!'' என்று சட்டென அவள் கைகளைப் பற்றியவன் தன் கன்னத்தில் பதித்துக் கொண்டான்.

உதடு துடிக்க, கண்கள் அகல, அவனைப் பார்த்தா[illegible] ஆராதனா.

"ப்ளீஸ்... கையை விடுங்க. நீங்க செஞ்சது தப்புன்னு நீங்க ஃபீல் செய்யறீங்க.

அதுபோதும். ப்ளீஸ் இதுபற்றி இனிமேல் ஏதும் பேச வேண்டாம்."

"தேங்க்ஸ்!" என்று முணுமுணுத்தவன் அவள் கையை விடுவித்தான்.

"சித்தப்பா... அங்க மேலே மாடி மாதிரி கூடண்டு இருக்கு... அங்க போய்ப் பார்க்கலாமா?

ஏரியல் வியூ நிறைய பேர்ட்ஸை பார்க்கலாம். வாங்க சித்து."

"ஓ... போகலாமே..." என்றவன் அவளைக் கண்டு கொள்ளவில்லை.

"ஆராதனா... நீயும் வா!" என்று தருண் அவளை அழைத்தான்.

அவள் மனம் நிம்மதி அடைந்தது. இவனாவது என்னை நினைவு வைத்திருக்கிறானே என்று பெருமூச்சு பிறந்தது.

# 17

என்
இதயம்
எனும்
கோவிலில்



உன்னை
வைத்துப்
பூஜித்துக்
கொண்டு
இருக்கிறேன்
உனக்குத்
தெரியுமா ?
என்
இதயம்
எனும்
தோட்டத்தில்
பூத்த
குறிஞ்சிப்
பூ
நீ!
உனக்குத்
தெரியுமா ?
என்
இதயமெனும்
மேடையில்
நாட்டியமாடும்
கால் முளைத்த
ரோஜா நீ!
உனக்குத்
தெரியுமா ?
சொல் – பெண்ணே !

அடுத்த ஒரு வாரம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது ஆராதனாவிற்கு.

டெலி..போன் எப்பவும் அடித்துக் கொண்டே இருந்தது.

தருணின் உடல் நிலை சரியானதால் நிறையப் பேர் வாழ்த்துக்கள் சொல்லியபடி இருந்தனர்.

வீடு முழுவதும் சந்தோஷம் பொங்குவது போல் அவளுக்குத் தோன்றியது. முகேஷும் ஷூட்டிங்கில் ரொம்ப நேரம் செலவிடாததால் வீட்டில்தான் பெரும்பாலும் இருந் தான்.

தருண் ஏதாவது பேசிக் கொண்டு இருப்பான். வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் அதை ரசித்தபடி இருப்பார்கள்.

அன்றும் அதே போல் தருண் செய்த மிமிக்ரியைக் கேட்டுச் சிரித்துக் கொண்டு இருந்தனர் முகேஷும் ஆரா தனாவும்.

"ஹாய் தருண். ஹவ் ஆர் யூ?" என்று ஒரு பூங்கொத்தை அவனிடம் நீட்டினான் சஞ்சய்.

"ஐயாம் குட் டாக்டர். ஹவ் ஆர் யூ?" என்றான் தருண் புன்முறுவலோடு.

"ஹாய் ஆராதனா... ஹலோ முகேஷ்..." என்று சிநேக மாகப் புன்னகைத்தான் சஞ்சய்.

"ஹலோ... நீங்க பேசிகிட்டு இருங்க. நான் உங்க எல்லாருக்கும் குடிக்க ஏதாவது எடுத்துட்டு வரேன்!" என்று எழுந்தாள் ஆராதனா.

தருணின் டாக்டர் என்ற முறையில் அவன் ஏதாவது பேச நினைக்கலாம். அங்கே நான் எதற்கு என்று எண்ணிய டியே சமையல் அறை உள்ளே சென்றாள் அவள்.



குடிப்பதற்குத் தேநீர் தயாரித்தாள். அதைக் கோப்பை களில் ஊற்றி ஒரு தட்டில் வைத்தாள். தருணிற்கு மட்டும் 'பூஸ்ட்' கலந்து அதை அவன் கோப்பையில் ஊற்றினாள்.

ஹாலில் சஞ்சயும், முகேஷும் பேசிக் கொண்டு இருப்பதைக் கவனித்தாள் அவள். தருண் டீவியில் மூழ்கி இருந்தான்.

"இந்தாங்க... டீ... எடுத்துக்கோங்க."

"ஓ... தேங்க்ஸ் ஆராதனா. உன்னை மாதிரி ஒரு பெண் வீட்டில் இருந்தால் வாவ்! எவ்வளவு நன்றாக இருக்கிறது. முகேஷ் இஸ் ரியலி லக்கி. எனக்கு முகேஷைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறது!" என்றான் சஞ்சய்.

"தட்ஸ் ட்ரூ. ஆராதனா வந்த பின்பு வீட்டில் நிறைய மாற்றங்கள். ஷி இஸ் எ நைஸ் கிட்!" என்றான் முகேஷ்.

இருவரும் மாற்றி மாற்றித் தன்னைப் பற்றியே பேசு வதை உணர்ந்தவளுக்கு ஏனோ வெட்கமாக இருந்தது.

"ஷி இஸ் எ நைஸ் கேர்ல் முகேஷ். அதனால் தான் தருணை அவளால் மாற்ற முடிந்தது.

இட்ஸ் ரியலி எ மார்வெலஸ் ஜாப்!" என்றான் சஞ்சய்.

"ம்... சரி... ஹவ் இஸ் யூவர் வொர்க்?"

"ஸேம். நோ டிபரென்ஸ். ஹாஸ்பிடல், பேஷண்ட்ஸ் நர்ஸ், ஆபரேஷன் எக்ஸெட்ரா."

"என்ன சஞ்சய் குரலில் சலிப்புத் தெரிகிறதே. என்ன விஷயம்?"

"ம்... நத்திங்... ஆராதனா... நான் உனக்கு ஒன்ற ஸ்பெஷலாக வாங்கி வந்து இருக்கிறேன். கெஸ் வாட் இ இஸ்."

"ம்... தெரியலை. பட் எனக்கு எதுக்கு."

"கமான். நாங்க டாக்டர்ஸ் எல்லாம் சாதிக்க முடியா ததை யூ மேட் இட்.

தட்ஸ் நாட் ஆன் ஈஸி திங் ஆராதனா. அதுக்கு எ ஸ்மால் ப்ரஸண்ட்!" என்று ஒரு பூங்கொத்தை நீட்டினான் சஞ்சய்.

அதை வாங்குவதா, வேண்டாமா என்று குழம்பி னாள். அவள். முகேஷை அவள் பார்த்தாள்.

"வாங்கிக்கோ ஆராதனா..." என்றான் முகேஷ்.

"தேங்க்ஸ்..." என்று லேசான புன்முறுவலோடு அதை வாங்கிக் கொண்டாள் அவள்.

"ஸோ... முகேஷ் சொன்னால்தான் வாங்குவீங்களா ஆராதனா..."

"யெஸ்... அவள் என் கஸ்டடியில் இருக்கிறாள்.

ஸோ... ஐ ஹேவ் டு டெல்... தென் ஒன்லி ஷி வில் அக்ஸெப்ட் இட்."

"ஓ... தட்ஸ் இண்ட்ரஸ்டிங். அப்ப நான் உங்ககிட்டே ஒண்ணு பேசணும் முகேஷ்."

"ஒண்ணு என்ன, எவ்வளவு வேணாலும் பேசலாம். சொல்லு சஞ்சய்."

"முகேஷ்! உங்களுக்கு என்னைப் பற்றி நல்லா தெரியும். ஐ யாம் எ டீடோட்டலர். எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது.

ஐயாம் ரிச். அடையாரில் என் பேரில் ஒரு வீடு இருக்கிறது. நான் ஒரே பையன். அப்பாவின் சொத்து பல ட்சங்கள் இருக்கின்றன."



"சஞ்சய்... இதெல்லாம் ஏன் என்னிடம் சொல்கிறாய்? சீக்கிரமாக விஷயத்திற்கு வா."

"இப்பொழுது ஆராதனா உங்கள் கஸ்டடியில் இருப் பதாகச் சொன்னீர்கள். அதனால் நான் உங்களிடம் தான் பேசணும்.

ஐ லவ் ஆராதனா. நான் அவளைத் திருமணம் செய்ய விரும்புகிறேன். ஸோ நீங்கள் சம்மதித்த பின்பு முறையாகப் பெண் கேட்கிறேன்...

என் அம்மா திருமணத்திற்கு எந்தத் தடையும் சொல்ல மாட்டார்கள்..."

சஞ்சய் சொன்னதைக் கேட்டவுடன் முகேஷின் முகம் மாறியது. அவன் முகம் இறுகியது போல் தோன்றியது அவளுக்கு.

ஏஸியை மீறி அவள் நெற்றியில் வியர்வை பூத்தது. சஞ்சய் ஏன் இப்படிக் கேட்டான் என அவள் மனதில் ஒரு ஆயாசம் படர்ந்தது.

"முகேஷ்! என்ன சைலண்ட்டா ஆயிட்டீங்க?" என்றான் சஞ்சய்.

"வெல்... ஆராதனாவிற்கு இதில் விருப்பமா என்று எனக்குத் தெரியணும்.

நான் அவளிடம் பேச வேண்டும். கிவ் ஸம் டைம்."

"ஆராதனாவிற்கு இதில் சம்மதம்தான்."

"அப்படியா... ஆராதனா... நீ என்னிடம் சொல்லவில் லையே!" என்று கண்கள் இடுங்க அவளைப் பார்த்தா முகேஷ்.

"இ... இல்லை... நான் அப்படி எல்லாம் ஏதும் சொல்லவில்லை..."

"நீ நேரடியாகச் சொல்லாவிட்டாலும், மறைமுகமாக என்கரேஜ் செய்து இருப்பாய்.

அதனால் தான் இவ்வளவு நம்பிக்கையோடு சஞ்சய் வந்திருக்கின்றான்."

"இல்லை... ப்ளீஸ் ட்ரஸ்ட் மி!" என்றாள் கண்கள் கலங்க.

"முகேஷ்... ஆராதனாவைச் சந்தேகப்படாதீர்கள். ஷி இஸ் நாட் இன்வால்வ்ட் இன் திஸ்."

"சரி... சஞ்சய். நான் ஆராதனாவை கன்வின்ஸ் செய்ய முயற்சி செய்கிறேன்..."

"ஓகே... நான் கிளம்பறேன். பை தருண். பை ஆராதனா..."

அவன் சென்ற பின்பு அங்கே மௌனம் நிலவியது முகேஷின் பார்வை தன் மேல் கோபமாகப் படிவதை அவளால் உணர முடிந்தது.

"சொல் ஆராதனா. என்ன முடிவு செய்து இருக்கிறாய்?"

அவள் ஏதும் பேசாமல் இருந்தாள். அவள் கண்கள் கலங்கின.

"மௌனம் சம்மதம் என்று எடுத்துக் கொள்ளவா?"

"ப்ளீஸ்... என்னை ஏன் இப்படிப் பாடு படுத்துகிறீர்கள்..."

"என்ன பாடு படுத்துகிறேன்? சஞ்சய் இஸ் எ நைஸ் பெர்ஸன்.



ஸோ யோசித்துச் சொல்..."

"இதில் யோசிக்க ஏதும் இல்லை..."

"உனக்கென ஒரு வாழ்க்கை அவசியம். அதனால் ஜஸ்ட் திங்க்."

"நான் இங்கே இருப்பது உங்களுக்குச் சங்கடமாக இருக்கிறதா..?"

அவன் ஏதும் சொல்லாமல் அவளைப் பார்த்தான். அவன் கண்கள் ஏதோ ஒரு உணர்வைப் பிரதிபலிப்பது போல் தோன்றியது அவளுக்கு.

"மௌனத்தை என் கேள்விக்கு விடையாக... சம்மதம் என்று எடுத்துக் கொள்ளட்டுமா..?"

"ஆராதனா... நீ என்னை ரொம்ப இரிடேட் செய்கிறாய்..."

"நீங்கள் மட்டும் என்னைச் செய்யலாமா..?"

"கிட்... காட்... யூ ஆர் எ ரியல் கிட். சரி. நேரடியாகக் கேட்கிறேன்.

உனக்குச் சஞ்சயைப் பிடித்து இருக்கிறதா..?"

"ம்... அவரோட சென்ஸ் ஆஃப் ஹியூமர் பிடிக்கும்... அவ்வளவுதான்..."

"அப்ப சரின்னு சொல்லட்டுமா... சஞ்சயிடம். உனக்குச் சஞ்சயைப் பிடித்து இருக்கிறது என்று அவனிடம் சொல்லட்டுமா..."

"வெறும் சென்ஸ் ஆப் ஹியூமர் போதுமா ஒரு திருமணத்திற்கு..."

"வேறு என்னவெல்லாம் வேண்டும்... சொல்." அவள் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.

"தாரிணி தன் கணவனை விவாகரத்து செய்யப் போகிறாள்.

தெரியுமா உனக்கு? மூன்று குழந்தைகள் பிறந்த பிறகு எடுக்கப்பட்ட புத்திசாலித் தனமான முடிவு இது.

ஸோ சொல். உன் மனதில் திருமணம் பற்றி என்ன எண்ணம் உள்ளது? எப்படிப்பட்ட கணவன் வேண்டும் என்று எதிர்பார்க்கிறாய்... சொல்."

அவள் மீண்டும் பதில் பேசாமல் இருந்தாள்.

"ஆராதனா... நான் என்ன சொல்ல வருகிறேன் என்று புரிகிறதா?

திருமணத்திற்கு அன்பு மட்டும் இருந்தால் போதாது. தாரிணியின் வாழ்க்கை அதற்கு உதாரணம். தாரிணியின் கணவன் அவள் மேல் அப்படி ஒரு அன்பைப் பொழி வான்.

அவள் கேட்கும் எல்லாமே அவளுக்கு உடனே கிடைக்குமாறு செய்வான்.

பட்... இப்ப தாரிணி இந்த மாதிரி ஒரு முடிவுக்கு வந்து இருக்கிறாள்.

ஸோ, மரியாதை, நம்பிக்கை, ஃப்ரெண்ட்ஷிப் இதெல்லாம் ரொம்ப தேவை ஒரு திருமணத்திற்கு."

"ஆனால் இது எப்பவுமே நீடிக்குமா..."

"அன்பு இருந்தால் இது நீடிக்கும். ஆனால் கவர்ச்சி மட்டுமே இருந்தால் அது திகட்டி விட்டால் அப்புறம் திருமணம் போர் அடிக்கலாம்.

ஆனால் சில பேர் வாழ்க்கைத் துணையாகச் சிலருக்கு இருந்தால் திருமண வாழ்க்கை திகட்டவே திகட்டாது!" என்றான் அவள் அருகே வந்து.



"எ... என்ன சொல்றீங்க..?"

"நீ என்னுடைய வாழ்க்கைத் துணையாக வந்தால் நம் திருமண வாழ்க்கை ரொம்ப இனிமையாக ரசிக்கும்படி இருக்கும்!" என்றான் அவள் கையை மெதுவாகப் பற்றிய படி.

"எ... என்ன?"

"நீ என்னைத் திருமணம் செய்து கொள் என்று சொல்கிறேன், ஆராதனா."

அவள் முகத்தில் திகைப்பும் அதிர்ச்சியும் போட்டி போட்டுக் கொண்டு தெரிந்தன.

"நோ..." என்றபடி தன் கையை விடுவித்துக் கொண் டாள்.

"வொய்... நாட் ஆராதனா..?"

"இது ஒத்து வராது. யூ ஆர் எ செலபிரிடி ப்ளஸ். நீங்கள் என்னை விரும்பவில்லை. இட்ஸ் ஜஸ்ட் ஆன் அட்ராக்ஷன்."

"பட் ஐ லைக் யூ ஆராதனா. உன் மேல் எனக்கு மரியாதை இருக்கிறது.

உன் மேல் ரொம்ப நம்பிக்கை இருக்கிறது. அப்புறம் நீ குழந்தை போல் சில நேரம் தருணுடன் அவனுக்குச் சரியாக விளையாடுவாயே அது பிடித்து இருக்கிறது.

பல நேரம் உன் மேல் அட்ராக்ஷனும் இருக்கிறது. அதனால் தான் அன்று வேடந்தாங்கலில் நான் அப்படி நடந்து கொண்டேன்..." என்றான் மெதுவாக முகேஷ்.

அவன் இப்படி வெளிப்படையாகப் பேசுவான் என எதிர்பார்க்கவில்லை ஆராதனா.

"ஐ கேர் ஃபார் யூ ஆராதனா. யூ ஆர் வெரி யங். யூ ஆர் வெரி ட்ருத்ஃபுல். நீயும் என்னை விரும்புகிறாய் என்று தான் எனக்குத் தோன்றுகிறது.

சொல் டியர். மனதில் இருப்பதை மறைக்காமல் சொல்..."

அவள் கண்கள் கலங்கின. உதடு துடித்தது.

"ஆராதனா... நான் உன்னை நன்றாகப் பார்த்துக் கொள்வேன். உனக்காக ஒரு அழகான வீடு என்னால் கட்டிக் கொடுக்க முடியும்.

கார், நகை, டிரெஸ் என உனக்கு என்ன வேணுமோ கேள்... ஐ கேன் கெட் இட்.

உன் அனுமதி இல்லாமல்... நான் உன்னிடம்..." என்று தயங்கினான்.

"சொல்லுங்கள்... சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்." என்று படபடத்தாள்.

"உன் அனுமதி இல்லாமல் நான் கணவன் என்ற உரிமையை உன்னிடம் நிலை நாட்ட மாட்டேன். போதுமா..."

"சொல்ல வேண்டியதை நீங்கள் இன்னும் தெளிவாகச் சொல்லவில்லை!" என்றாள் வெறுப்பாக.

"என்ன சொல்கிறாய்... புரியவில்லை."

"ம்... நீங்கள் ஒரு மனைவியை எதிர்பார்க்கவில்லை. தருணிற்கு ஒரு தாயை எதிர்பார்க்கிறீர்கள் - திருமணம் மூலமாக..."

"ஆராதனா... நீ ஏற்கெனவே அவனைத் தாய் போலத் தான் கவனிக்கிறாய்..."



"பட் நான் தாய் இல்லை. நான் அவனைப் பார்த்துக் கொள்ள வந்த நர்ஸ். நீங்கள் என்னை இங்கே வேலை பார்க்கத் தான் அழைத்து வந்தீர்கள்.

நான் இங்கே இருந்து எப்ப வேண்டுமானாலும் வேலையை விட்டுவிட்டுப் போகலாம். அதுதானே உங்கள் பயம்..."

முகேஷின் முகம் இறுகியது. அவன் கோபமாக இருக்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

"உங்களுக்கு அந்தப்-பயம் வேண்டாம். நான் தருணை விட்டுப் போக மாட்டேன். உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம்.

தருணுக்கு உடம்பு சரியாகி விட்டதால் நான் அவனை விட்டுப் போய் விடுவேன் என்று நினைக்கிறீர்களா? என்னை நிறுத்தி வைப்பதற்காக நீங்கள்... நீங்கள் எந்த யுக்தியும் கண்டுபிடிக்க வேண்டாம்..." என்று சொல்லும் பொழுது அவள் குரல் உடைந்தது.

"ஆராதனா... நீ இங்கே தருணின் நர்ஸாக இருப்பதை நான் விரும்பவில்லை.

ஐ வாண்ட் யூ ஆஸ் மை வொஃய்ப்!" என்றான் அழுத்தமாக முகேஷ்.

"இல்லை... இது நடக்காது!" என்று முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள் ஆராதனா. அவள் முகத்தில் தெரிந்த வேதனை முகேஷின் கண்களுக்குத் தெரியக் கூடாது எனத் திருப்பிக் கொண்டாள் அவள்.

அவன் சட்டென அவள் கையைப் பற்றித் தன் பக்க இழுத்தான். அவள் முகத்தைக் கையில் ஏந்தினான்.

"என்னால் உன்னைச் சம்மதிக்க வைக்க முடியும். உனக்கு என்னைப் பிடித்து இருக்கிறது. எனக்கு உன்னை ரொம்ப பிடித்து இருக்கிறது.

வி ஹாவ் எ குட் கெமிஸ்ட்ரி பிட்வீன் அஸ். அதை என்னால் நிருபிக்க முடியும்!" என்று சொல்லியபடியே அவள் உதடுகளைச் சுவைத்தான் முகேஷ்.

அவனைத் தன் கைகளால் தள்ள முயன்றாள் அவள். ஆனால் அவளால் முடியவில்லை.

அவன் உதடுகள் அவள் முகத்தை முற்றுகையிட்டன. எதுவும் செய்ய முடியாமல் அவன் மேல் துவண்டாள் அவள்.

அவள் கால்கள் தள்ளாடின. அவளால் எதுவுமே செய்ய முடியாது போல் ஒரு உணர்வு அவளை ஆக்ர மித்தது.

"முகேஷ்... ப்ளீஸ் வேண்டாம்..." என்று கெஞ்சினாள்.

அவள் மறுப்பதை அவன் கண்டு கொள்ளவே இல்லை. அவள் அவன் தோள் வளைவில் முகம் புதைத்தாள். அவள் கைகள் அவன் முதுகைப் பற்றின.

"ஸோ...வி வில் கெட் மாரிட் ஸூன்... உன்னை நான் திருமணத்திற்குப் பின்பு தான் என் மனைவியாக முழுமையாக உன்னை அடைய வேண்டும் என்று நினைக்கிறேன்.

டியர்... என் தீர்மானத்தை மாற்றும்படி செய்து விடாதே... ளீஸ்!" என்று அவள் காதோரம் கிசுகிசுத்தான் அவன்.

அவள் முகம் குங்குமமாகச் சிவந்தது. அவன் பிடியி ருந்து விலகினாள். அவன் மறுப்பு ஏதும் சொல்லவில்லை.



தன் நிலை கண்டு ஏனோ அவளுக்கு அவமானமாக இருந்தது.

"ம்... ஆராதனா... யூ ஆர் எ ஸ்வீட் கேர்ல். நம் திருமணம் நிச்சயம் ஆனதை நாம் கொண்டாடலாம்.

ஐ வாண்ட் டு கோ அவுட் வித் யூ. நான் உனக்கு வாங்கிக் கொடுத்த அந்த நீலநிறப் புடவையை அணிந்து கொண்டு வா.

நாம் ஜாலியாக வெளியே போய் விட்டு வரலாம். கமான் டியர்..."

"யூ ஆர் ரஷ்ஹிங் திங்க்ஸ் ஃபார் மி. ப்ளீஸ் எனக்கு கொஞ்சம் அவகாசம் வேண்டும்..."

"உன்னைச் சம்மதிக்க வைக்க எனக்குத் தெரியும்!" என்று கிண்டலாகச் சொன்னவன் அவள் அருகே வரத் தொடங்கினான்.

"ஓ... நோ... வேண்டாம். நான் கிளம்புகிறேன். தருணை யும் கிளப்ப வேண்டும்..."

"தருண் வேண்டாம். நீயும் நானும் மட்டும் போய் வரலாம்..."

"பட் அவன்..." என்று அவள் முடிக்கும் முன்பு அவன் குறுக்கிட்டான்.

"ப்ளீஸ் சொல்வதைக் கேள் ஆராதனா. ஐயாம் வெரி ஹேப்பி டுடே.

ஐ வாண்ட் டு என்ஜாய் திஸ் வித் யூ. யூ அலோன்..."

அவன் சொன்னதைக் கேட்டு ஆராதனா திகைத்தாள். முகேஷ் தன்னிடம் நடந்து கொண்டது எல்லாம் கனவே என்று ஒரு நொடி நினைத்தாள்.

ஆனால் சிவந்து இருந்த அவள் மணிக்கட்டு இது நிஜம் என்று உறுதி செய்தது.

தன் அறையினுள் சென்றவள் சிறிது நேரம் உட்கார்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். முகம் கழுவி னாள்.

தான் முகேஷின் பிடியில் நெகிழ்ந்ததை நினைத்தாள், தன் மேலேயே கோபம் வந்தது அவளுக்கு.

சே! நான் ஏன் அப்படி நடந்து கொண்டேன்? முகேஷ் என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பான்? தன் நிலையைக் கண்டு அவளுக்குத் தன் மேலேயே எரிச்சல் வந்தது.

"என்ன ஆராதனை... ரெடியா?" என்று அவன் குரல் அருகே கேட்க, திடுக்கிட்டாள்.

"ப்ளீஸ் இது என் ரூம். உங்க வீடு தான் இது. பட்... பட்... ஐ நீட் ஸம் ப்ரைவஸி.

இனிமேல் கதவைத் தட்டிவிட்டு வாருங்கள்..."

அவன் முகம் இறுகியது. அதை அவள் விழிகள் பார்வையிட்டன.

"நீயும் நானும் திருமணம் செய்து கொள்ளப் போகி றோம்.

நமக்குள் இந்த ஃபார்மலிடீஸ் எல்லாம் தேவை இல்லை. அதோடு உனக்கு ஏதாவது ஹெல்ப் வேணுமா என்று கேட்கத் தான் வந்தேன்."

"எனக்கு எந்த ஹெல்பும் வேண்டாம். நீங்கள் ரூமை விட்டுப் போனால் போதும். அதுவே பெரிய ஹெல்ப்."

"ஓகே" என்று தோளைக் குலுக்கியபடி வெளியேறி னான் அவன்.



அவன் சென்ற பின்பு கூடத் தன் படபடப்பு தணிய வில்லை என்று அவளுக்குப் புரிந்தது. தான் ஏதோ ஒரு புதைகுழியில் சிக்குவது போல் ஒரு உணர்வு அவள் மனதை அரித்தது.

அந்தப் பெண்மணி தன் கையைப் பார்த்து விட்டுக் 'குறி' சொன்னது வேறு அவள் மனதைக் குடைந்தது.

# 18

பூக்களின்
உள்
இருக்கும்
நறுமணம்
அதிசயம்!
நிலவுக்குள்
தினசரி
தோன்றும்
உருவம்
அதிசயம்!
எறும்புகளின்
அணிவகுப்பு
அதிசயம்!
கூட்டமாக

மாலையில்
பறக்கும்
பறவைக்
கூட்டம்
அதிசயம்!
எல்லா
அதிசயத்திற்கும்
சிகரம்
ஒரு
அதிசயம்!
அது
நீ
தான்
பெண்ணே!

**ஆ**ராதனா ஒரு சல்வாரை எடுத்து அணிந்து கொண்டாள். முகேஷ் அவளைப் புடவை உடுத்திக் கொண்டு வரச் சொன்னது அவள் நினைவுக்கு வந்தது.

ஆனால் வேண்டும் என்றே அப்படிச் செய்யாமல் சல்வார் ஒன்றை அணிந்து கொண்டு லேசான ஒப்பனை செய்த பின்பு, வெளியே வந்தாள்.

ஹாலில் முகேஷ் தனியாக உட்கார்ந்து லேப்டாப்பில் ஏதோ பார்த்துக் கொண்டு இருந்தான்.

காலடிச் சத்தம் கேட்டு அவன் லேப்டாப்பில் இருந்து பார்வையை அவள் மேல் பதித்தான்.



"ஸோ... நான் சொல்றதைக் கேட்கக் கூடாது அப்படின்னு தெளிவா இருக்க... கரெக்டா?" என்றான் அவளைப் பார்வையால் அளந்தபடி.

அவள் எதும் பதில் சொல்லாமல் அவனைக் கோபமாக முறைத்தாள்.

"சரி வா... போகலாம்..."

"நான் தருணிடம் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன்..."

"வேண்டாம். நான் மேகலா ஆன்ட்டியிடம் சொல்லி விட்டேன். அவர்கள் அவனைப் பார்த்துக் கொள்வார்கள்..."

"இல்லை... நான்..." என்று அவள் முடிக்கும் முன்பு அவன் குறுக்கிட்டான்.

"ஆராதனா... வா... இட்ஸ் கெட்டிங் லேட்."

"நான் தருணைப் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் போய்ட்டு வாங்க.

ஐயா இப்பதான் எல்லா விஷயமும் சொன்னார். எனக்குக் கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு.

உங்க திருமணச் செய்தி எனக்குத் தான் முதலில் தெரிஞ்சுது. இது ரொம்ப நல்ல விஷயம்!" என்றாள் மேகலா.

"ஓ... அப்படியா?" என்றாள் மெல்லிய குரலில் ஆராதனா.

"தருணைப் பற்றிக் கவலைப்படாம போயிட்டு வாங்க!" என்று அவள் கையைப் பற்றினாள் மேகலா.

"தேங்க்ஸ்..." என்று லேசாகப் புன்முறுவல் புரிந்தாள் அவள்.

"வா ஆராதனா..." என்று அவள் கையைப் பற்றி இழுத்தான் முகேஷ்.

மேகலா முன்பு ஸீன் எதுவும் போட வேண்டாம் எனப் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்தாள் அவள்.

கார் அருகே வந்தவுடன் கையை உதறிக் கொண்டாள் அவள்.

"ஆராதனா... யூ பிஹேவ் லைக் எ கிட். பட் ஐ லைக் இட்... இட்ஸ் இண்ட்ரஸ்டிங்..."

அவள் முகம் கோபத்தால் சிவந்தது. பேசாமல் உட்கார்ந்து இருந்தாள் அவள்.

"ஸோ... என்னை நம்பிக் காரில உட்கார்ந்திட்ட ஐ லைக் தி ட்ரஸ்ட் யூ ஹாவ் ஆன் மி..."

"எனக்கு வேறு வழியில்லாமல் தான் நான் வந்தேன். விருப்பப்பட்டு இல்லை..."

"இட்ஸ் ஓகே. நம்ம ரிலேஷன்ஷிப்பிற்கு இது முதல் படி. ஐயாம் ஷ்யூர் நம்மிடையே நல்ல ரிலேஷன்ஷிப் கூடிய விரைவில் ஏற்படும்..." என்றான் விரைவாக காரைச் செலுத்தியபடி.

"ப்ளீஸ் மெதுவாப் போங்க..."

"ஸாரி... எனக்கு வேகமாகக் கார் ஓட்டப் பிடிக்கும். பட் இனி அதெல்லாம் குறைத்துக் கொள்ள வேண்டும்.

என் வாழ்க்கை இனி வித்தியாசமாக இருக்கப் போகிறது. எனக்கென ஒரு பெண்... மனைவியாக... அப்புறம் குழந்தைகள்...

நினைக்கவே இனிமையாக இருக்கிறது. ஐயாம் எ லக்கி மேன்..."



"நீங்கள்... நீங்கள் ரொம்ப கனவு காண்றீங்க."

"ம்... கனவு காணுங்கள் அப்படின்னு அப்துல்கலாம் கூடச் சொல்லி இருக்கார்."

"அவர் சொன்னது வேற அர்த்தத்தில். அதைக் கொச்சைப் படுத்தாதீங்க..."

"ஓகே... நான் சொன்னது எதுவும் கனவு இல்லை. போதுமா? எல்லாமே சீக்கிரம் உண்மையாகப் போகிறது."

அவன் பேசியதைக் கேட்டு அவள் மனம் பதை பதைத்தது. அவள் முகம் பயத்தால் வெளிறியது. கண்கள் கலங்கின.

"நீங்க... நீங்க... என் அனுமதி இல்லாமல்..." என்று மேலே தொடர முடியாமல் உதட்டை அழுத்தமாகப் பற்களால் கடித்தாள்.

"நான் அதை இல்லை என்று சொல்லவில்லையே. உன் அனுமதி இல்லாமல் உன் விருப்பம் இல்லாமல் ஏதும் நடக்காது.

எல்லாமே உன் விருப்பத்தோடுதான் நடக்கும். எனக்கு நம்பிக்கை இருக்கிறது..."

அவள் கோபம் அதிகமானது. கையை அழுத்தி மூடிக் கோபத்தைக் கட்டுப்படுத்த முயன்றாள் அவள்.

"இப்ப எங்க போறோம்..." என்றாள் பேச்சை மாற்ற விரும்பி.

"இன்று இரவு நீயும் நானும் தங்குவதற்கு ஒரு அழகான இடம் இருக்கிறது. அங்க தான் போறோம்."

"வாட்... என்ன இதெல்லாம்? நான் எங்கும் வரலை. ப்ளீஸ் காரைத் திருப்புங்கள்!" என்று சீறினாள்.

"மக்கு... உடனே ஏன் என்னவெல்லாமோ நினைக்கிறாய்? என்னுடைய பிரண்ட் ஒருவன் ரொம்ப நாளாக என்னை அவன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு இருக்கிறான்.

அவன் வீட்டிற்குப் போகப் போகிறோம். ஸோ ரிலாக்ஸ். கூல் டவுன். போய்ச் சேர இன்னும் அரைமணி நேரமாகும். ஸோ டேக் ரெஸ்ட்."

அவளிடமிருந்து ஒரு நிம்மதிப் பெருமூச்சு பிறந்தது. ஒரு நொடி தன்னை எப்படிப் பயமுறுத்தி விட்டான்.

அதோடு மட்டும் இல்லை. என் வாயில் இருந்து வேறு எதையாவது வரவழைக்கிறான்.

இவனிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என முடிவு செய்தாள்.

"என்ன ஆராதனா... அப்பப்ப சைலண்டா ஆயிடற."

"ம்... நீங்க தான் ரெஸ்ட் எடுங்க அப்படின்னு சொன்னீங்க."

"ஓ நான் என்ன சொன்னாலும் கேப்ப போல. தட்ஸ் ரியலி நைஸ்."

"எல்லாத்தையும் கேட்பேன் அப்படின்னு எதிர் பார்க்காதீங்க..."

"அப்படியா, எதில் எல்லாம் கேட்க மாட்டாய்."

அதற்கு மேலே பேச முடியாமல் மௌனமானாள் அவள்.

கண் மூடி அமைதியாக இருக்க முயன்றாள் அவள். ஆனால் மனம் அலை பாய்ந்தபடி இருந்தது.



"ஹலோ... ஆராதனா... நாம இங்க இறங்கணும். இது தான் என் பிரெண்ட் ராகுல் வீடு.

நானும் அவனும் ஸ்கூல் டேஸ் முதல் நல்ல ஃப்ரெண்ட்ஸ். நம்ம கல்யாணத்தைப் பத்தி அவனிடம் சொன்னேன்.

ஹி வாஸ் எக்ஸைட்டட். நம்மளை உடனே பார்க்கணும் அப்படின்னு சொன்னான். அதனால் தான் இங்க வந்திருக்கோம்.

முகத்தைக் கொஞ்சம் ரிலாக்ஸ்டா வச்சிக்கோ. ப்ளீஸ்... பீ எ குட் கேர்ல்...

"ம்... எனக்காக வேண்டாம். தருணிற்காக இதைச் செய்..."

"தருணிற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?"

"இந்த வீட்டில் ஒரு சுட்டிப் பெண் இருக்கிறாள். ராகுலின் மகள். பெயர் கீர்த்தனா.

அவளும் தருணும் ரொம்ப ஃப்ரெண்ட்ஸ். இவ்வளவு நாள் இவர்கள் சிங்கப்பூரில் இருந்தார்கள்...

அதனால் கீர்த்தனா உன்னைப் போட்டுக் கொடுத்து விடுவாள். அப்புறம் உன் பாடு, தருண் பாடு..."

"ஓ... தேங்க்ஸ் ஃபார் டெல்லிங் மி திஸ். நீங்கள் நன்றாக நடிப்பீர்கள் போல. படத்தில் நிச்சயமாக நன்றாக நடிப்பீர்கள்.

ஏன் என்றால் நிஜ வாழ்க்கையிலேயே ரொம்ப நன்றாக நடிக்கிறீர்கள்." என்றாள் குத்தலாக.

"தேங்க்ஸ் ஃபார் தி காம்ப்ளிமெண்ட்ஸ் டியர். உன்னிடம் இருந்து இப்படி ஒரு பாராட்டு கிடைக்க நான் ரொம்பவே கொடுத்து வைத்திருக்கணும்!" என்று சொல்லியபடியே காரை நிறுத்தினான்.

"அப்பா... அங்கிள் வந்தாச்சு. கூட ஆன்ட்டியும் வராங்க..." என்று ஒரு மழலை மாறாத குரல் கேட்டது.

ம்... முகேஷ் சொல்றது நிஜம் தான் போல. கீர்த்தனாவின் முகத்தைப் பார்த்தாலே ஒரு சுட்டித்தனம் தெரிகிறது என்று நினைத்தபடியே நடந்தாள்.

முகேஷ் அவள் கையைப் பற்ற, அவள் அவனை முறைத்தாள்.

"டேய் முகேஷ், வாடா. காட்! எவ்வளவு நாளாச்சு உன்னைப் பார்த்து! ஸிஸ்டர், வாங்க..." என்று வரவேற்றான் ராகுல்.

"வாங்க... வாங்க. நைஸ் டு ஸீ யூ இன் அவர் ஹோம்.

மேட் ஃபார் ஈச் அதர் போல இருக்கீங்க. முகேஷ் அண்ணா கல்யாணமே செஞ்சுக்க மாட்டார் அப்படின்னு நாங்க நினைச்சு இருந்தோம்.

பட் இப்ப தான் புரியுது. ஹி இஸ் லக்கி. அவர் வெயிட் செஞ்சதுக்கு நல்ல அர்த்தம் இருக்கு..." என்றாள் ஒரு இளம்பெண்.

அது ராகுலின் மனைவியாக இருக்கும் என நினைத்துக் கொண்டாள் அவள். அந்தப் பெண்ணைப் பார்த்தவுடன் அவளுக்குப் பிடித்துவிட்டது.

அவள் முகம் களங்கமில்லாமல் இருந்தது. எந்த ஒப்பனையும் இல்லாமல் ரொம்ப ஹோம்லியாக இருந்தாள் அவள்.

"ஸிஸ்டர்! ஷி இஸ் மை வொய்ப் ரேகா. மை ஸ்வீட் டாட்டர் கீர்த்தனா!" என்று அறிமுகப்படுத்தி வைத்தான் ராகுல்.



"ஹலோ..." என்ற ஆராதனா எல்லோரையும் பார்த்து லேசாக முறுவலித்தாள்.

"ஆன்ட்டீ ஏன் தருண் வரலை?"

"இ... இல்லை... தருண் டயர்டா இருக்கு அப்படின்னு சொன்னான்.

அதான் ரெஸ்ட் எடுக்கட்டும் அப்படின்னு நினைச்சோம்."

"நோ... நோ... நீங்க பொய் சொல்றீங்க. முகேஷ் அங்கிள் உங்க கூட தனியா டைம் ஸ்பெண்ட் செய்யணும் அப்படின்னு சொன்னாராம்.

அதனாலே தானே தருணை வீட்டில வீட்டீங்க. எனக்குத் தெரியுமே..."

காட்! இவள் ஏன் இப்படி மானத்தை வாங்குகிறாள் என்று நொந்து போனாள் ஆராதனா.

"கீர்த்தனா... திஸ் இஸ் நாட் ரைட்... இப்படி எல்லாம் பேசக்கூடாது..." என்றாள் கண்டிப்புக் கலந்த குரலில் ரேகா.

"அதுதான் ஃபேக்ட். கீர்த்தனா சொல்றது தான் நிஜம். அதனால அவளைக் கண்டிக்காதீங்க..." என்றான் முகேஷ் புன்முறுவலோடு.

"ஓ... மேடமோடு நீ தனியா டைம் ஸ்பெண்ட் செய்யணுமா?

நான் வேண்டுமானால் உனக்கு ஹெல்ப் செய்யட்டுமா, முகேஷ்? மாடியில் பெண்ட் ஹவுஸ் இஸ் தேர்.

யூ கேன் என்ஜாய். கமான் முகேஷ்!" என்றான் ராகுல்.

அதைக் கேட்ட ஆராதனாவின் முகம் சிவந்தது. அவள் தயக்கத்தைப் புரிந்து கொண்டவள் போல் ரேகா உதவிக்கு வந்தாள்.

“போதும்... எல்லாரும் சேர்ந்து ஆராதனாவை ரொம்ப ஓட்டாதீங்க.

அவளுக்கு எப்ப அண்ணாவோட பேச இண்ட்ரெஸ்ட்டோ அப்பதான் பேசுவா.

அதுவரைக்கும் யாரும் டிஸ்டர்ப் செய்யக் கூடாது அவளை. நீ வா ஆராதனா!” என்று அவள் கைபிடித்து வீட்டினுள் அழைத்துச் சென்றாள்.

“டேய். பாருடா. கேர்ல்ஸ் எல்லாரும் ஒரு டீமில் சேர்ந்திட்டாங்க...”

வழக்கம் போல நம்மளைக் காலை வாரி விட்டுட்டாங்க...” என்றான் ராகுல்.

“அப்பா! நான் உங்க கட்சி...”

“எனக்குத் தெரியும் கீது... நீ அங்கிள் கட்சிதான் சேர்வாய் என்று.

யூ ஆர் எ ஸ்மார்ட் கேர்ல்...” என்றான் முகேஷ் புன்முறுவலோடு.

“ஆராதனா... யார் வேணாலும் என்ன வேணாலும் சொல்லட்டும்.

கண்டுக்காதே இப்ப. ராகுலை நான் அப்புறம் கவனிக்கறேன். நீ முகேஷைக் கவனி. அப்பதான் சரி வரும்.”

“ஐயோ! பயம்மா இருக்கே...” என்று ராகுல் பொய்யாகப் பயந்தான்.



அதைப் பார்த்த ஆராதனாவிற்குச் சிரிப்பு வந்தது. அவள் சிரிப்பில் ரேகாவும் சேர்ந்து கொண்டாள்.

இருவரும் பெண்ட்ஹவுஸை அடைந்தனர். அங்கே இருந்து பார்க்க 'ஏரியல் வியூ' ரொம்ப அழகாக இருந்தது.

“வாவ்! இரவில் சென்னை இங்கே இருந்து பார்க்க ரொம்ப அழகாக இருக்கு...” என்றாள் ஆராதனா.

“தட்ஸ் ட்ரு. நாங்கள் இங்கே வந்து இரவு அடிக்கடி நிலாச் சாப்பாடு சாப்பிடுவோம்.

ரொம்ப நல்ல அனுபவம் அது. அப்புறம் சொல் ஆராதனா... உனக்கும் முகேஷிற்கும் எப்படிக் காதல் பூத்தது.

இட் ஷுட் பீ ஆன் இண்ட்ரெஸ்டிங் ஸ்டோரி.”

“ம்... அப்படி எல்லாம் ஏதும் இல்லை!” என்று மழுப்பினாள்.

“கமான் ஆராதனா... என்னிடம் சொல்லேன்... ரொம்ப ரகசியமா வெச்சிருக்கச் சொன்னாரா முகேஷ் அண்ணா?” என்றாள் கிண்டலாக.

அவள் வெளிப்படையாகக் கேட்டது ஏனோ அவள் மனதைப் பாதித்தது. என்ன சொல்வது என்று திணறினாள் அவள்.

அவள் முகத்தில் சட்டெனக் கவலை ரேகைகள் தெரிந்தன. அதை ரேகாவின் விழிகள் கவனித்தன.

“ஆர் யூ ஹேப்பி ஆராதனா?” என்றாள் அவள் கையைப் பற்றியபடி.

சட்டென அவள் கண்கள் கலங்கின. அவள் தோளைத் தட்டிச் சமாதானப்படுத்தினாள் ரேகா.

இதுவரை மனதிலேயே அடக்கி வைத்து இருந்த எல்லாவற்றையும் தன்னை மீறிக் கொட்டினாள் அவள். அவள் சொன்ன எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டாள் ரேகா.

மனதில் இருப்பவற்றை அவளிடம் கொட்டிய பிறகு நிம்மதியாக உணர்ந்தாள் ஆராதனா.

"ஆராதனா! எனக்கு உன் நிலமை புரிகிறது. தருணிற்காக உன்னை முகேஷ் அண்ணா திருமணம் செய்து கொள்கிறார் என்று நீ நினைக்கிறாய்.

ஆனால் எனக்கு அது உண்மை என்று தோன்றவில்லை. தருண் மேல் முகேஷிற்கு ரொம்ப பாசம் அதிகம்.

அதுவும் தருணின் பெற்றோர் இறந்தவுடன் தருண் மேல் இருந்த பாசம் அதிகமானது. அவன் சட்டென வாய் பேசாமல் போன பொழுது முகேஷ் அண்ணா பட்ட கஷ்டம் ரொம்ப அதிகம்.

அவன் சரியாக வேண்டும் - பழைய நிலைக்கு என ரொம்ப தீவிரமாக உழைத்தார் அவர்.

அதனால் என்னால் அவரைச் சட்டென நீ சொல்கிற ஆங்கிளில் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை!" என்றாள் மெதுவாக ரேகா.

"ம்... உங்களிடம் சொன்ன பிறகு என் மனப்பாரம் குறைந்து விட்டது..."

ஏனோ சுந்தரியைப் பற்றிப் பேச ஆராதனாவின் மனம் இடம் தரவில்லை. அது ரொம்ப கேவலமான விஷயம் என்று அவள் நினைத்தாள்.



"சரி ஆராதனா... நான் உனக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று யோசிக்கிறேன்.

எனக்குக் கூடப் பிறந்தவர்கள் யாரும் இல்லை. உன்னைப் பார்த்தவுடன் சட்டென அந்த நினைவு எழும்பியது.

இனி நீ என் நல்ல ஃபிரண்ட். உனக்கு என்னிடம் பேச எந்த தயக்கமும் வேண்டாம்.

என்னைப் பொறுத்தவரை முகேஷ் அண்ணா எல்லாரிடமும் ரொம்ப நன்றாக, பந்தா இல்லாமல் பழகுவார்கள். இந்த மாதிரி ஒரு செலபரிடி அப்படி இருப்பது ரொம்ப கஷ்டம்.

உனக்குச் சம்மதம் என்றால் நான் ராகுலிடம் இதைப் பற்றிப் பேசுகிறேன். அவர் முகேஷ் அண்ணாவிடம் பக்குவமாக இதைப் பற்றிப் பேசுவார்."

"இல்லை... வேண்டாம்... ப்ளீஸ்! அவர் அதை விரும்ப மாட்டார். அதனால் வேண்டாம்.

எனக்கு என் மனதில் இருப்பதை யாரிடமாவது கொட்ட மாட்டோமா என ஆதங்கமாக இருந்தது. உங்களைப் பார்த்தவுடன் என் மனதில் இருப்பதை எல்லாம் உங்களிடம் சொல்லவேண்டும் போல இருந்தது.

என்னுடைய மனப்பாரம் நீங்கினாற் போல் இருக்கிறது. என்னுடைய 'ஸ்ட்ரெஸ் - ரிலீஃப்' நீங்கள் தான்.

தேங்க்ஸ் எ லாட். நான் சொன்னதை எல்லாம் பொறுமையாகக் கேட்டதற்கு நன்றி..."

"கமான் ஆராதனா. ஏன் நன்றி எல்லாம் சொல்லி என்னைத் தள்ளி நிறுத்தற.

எனக்கென்னவோ தோணுது... நீயும் முகேஷ் அண்ணாவும் ரொம்ப சந்தோஷமாக இருப்பீங்க கல்யாணத்துக்கு அப்புறம். அப்படின்னு.

ஸோ மனசைப் போட்டுக் குழப்பாதீங்க. ஜஸ்ட் லிவ் ஃபார் டுடே."

"சரி..." என்று முறுவலித்தாள்.

"ஓகே... கீழே போகலாமா... வீ கேன் ஹாவ் டின்னர்... ப்ளீஸ் கம்..."

"என்னைத் தேங்க்ஸ் சொல்லக் கூடாதுன்னு சொல்லிட்டு நீங்க மட்டும் 'ப்ளீஸ்' சொல்றீங்க."

"ஓ... ஓகே... நான் மறந்துட்டேன் ஸாரி."

"பாருங்க... மறுபடியும் ஸாரி சொல்றீங்க..."

"சே... சே... மறுபடியும் மறுபடியும் அதே தப்பைச் செய்யறேன்..." என்று சிரித்தாள் ரேகா.

அவளின் சிரிப்போடு ஆராதனாவின் சிரிப்பும் இணைந்தது.

இருவரும் சிரித்தபடி மாடியிலிருந்து இறங்குவதைப் பார்த்தார்கள் முகேஷும், ராகுலும்.

"ரேகா... ரொம்ப பசிக்குது. ஏதாவது சாப்பிட இருக்குமா... உங்க ரெண்டு பேருக்கும் சிரிச்சுச் சிரிச்சே சி எடுக்காது..." என்றான் ராகுல் கிண்டலாக.

அதைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர். கீர்த்தனா ர்த்தம் புரியாமல் சிரித்தாள்.



# 19

உன்னால்
எப்படி
முடிந்தது ?
எனக்கே
தெரியாமல்
எப்படி
ஏன்
நெஞ்சில்
அன்பு
விதையை
விதைத்தாய்!
இப்பொழுது
அந்த
விதை
முளைத்து
வளர்ந்து
விருட்சமாக நிற்கிறது!
உன்னால்
எப்படி
முடிந்தது

பெண்ணே ?
இவ்வளவு
செய்த
நீ
இப்பொழுது
பிரபஞ்சத்தில்
எங்கே
இருக்கிறாய் ?

**டி**ன்னர் முடிந்து வீடு திரும்பும் பொழுது மணி ஒன்பது. ரேகாவிடம் பேசிய பின்பு மனதில் இருந்த இறுக்கம் நீங்கியது போல் உணர்ந்தாள் ஆராதனா.

ஆனாலும் முகேஷ் பற்றி இருந்த நெருடல் அவள் மனதை விட்டு அகலவில்லை.

காரில் மௌனமாக இருந்தாள் அவள். முகேஷ் உல்லாசமாக ஏதோ பாடலை முணுமுணுத்தபடியே காரைச் செலுத்தினான்.

"ஆராதனா... ஹோப் யூ என்ஜாயிட் தி டே! ராகுலும் சரி, அவன் மனைவியும் சரி... வெரி அண்டர்ஸ்டாண்டிங் கபிள்.

கீர்த்தனா இஸ் எ லவ்லி, ஸ்வீட் கேர்ல். அந்த மாதிரி ரு குடும்பம், அன்பான மனைவி, சுட்டியான குழந்தை... தெல்லாம் என்னைப் பொறுத்த வரை... தொலைதூரக் வாக இருந்தது. ஆனால்... நீ என் வாழ்க்கையில் வந்த து... அது எல்லாமே நிஜமாகும் என்று என் உள் மனசு ல்கிறது..." என்றான் மென்மையாக.



"நீங்களா ஏதாவது கற்பனை செஞ்சுக்காதீங்க. தருணை நான் நன்றாகப் பார்த்துக் கொள்வேன். அது மட்டும் தான் என்னுடைய குறிக்கோள்.

வேறு ஏதும் இல்லை. இந்தத் திருமணத்திற்கும். அதனால் நீங்களும் அதை மட்டுமே மனதில் வைத்துக் கொள்வது நல்லது..." என்று படபடத்தாள் அவள்.

சட்டெனக் காரை நிறுத்தினான் முகேஷ். அவள் கொஞ்சம் மிரண்டு போய் அவனைப் பார்த்தாள்.

"ஆராதனா... உனக்கு இவ்வளவு கோபம் என் மேல் வரும் என்று நான் துளிகூட நினைத்துப் பார்க்கவில்லை.

உரிமை இருக்கிற இடத்தில் தான் கோபம் வரும். ஐ லைக் இட் டியர்," என்று அவள் கன்னத்தில் சட்டென உதடுகளைப் பதித்தான். பின்பு புன்முறுவல் புரிந்தான்.

ஏதுமே நடக்காதது போல் காரை மீண்டும் செலுத்தத் தொடங்கினான். அவன் செய்ததிலிருந்து மீள முடியாமல் மனம் குமுறினாள் அவள்.

ஆராதனாவிற்குத் தன் மேலேயே கோபம் வந்தது. முகேஷ் இந்த மாதிரி செய்யும் பொழுது ஏதும் செய்ய முடியாமல் திகைத்து நடுங்குகிறேனே.

சே... அவனுக்கும் அது புரிந்து இருக்குமோ? அதனால் தான் வெற்றிச் சிரிப்பு ஒன்றை உதிர்க்கிறானோ?

ஏதேதோ யோசித்தபடி காரினுள் உட்கார்ந்து இருந்தாள் அவள். முகேஷ் வீடு வந்தவுடன் காரை நிறுத்தியதை அவள் கவனிக்கவில்லை.

"என்ன ஆராதனா... என்ன யோசனை? கல்யாண தைப் பற்றி ட்ரீம் அடிக்கிறாயா..." என்று முகேஷ் கு அருகே கேட்க அவள் திடுக்கிட்டாள்.

"ஓ... வீடு வந்துவிட்டதா..." என முணுமுணுத்தாள்.

"யெஸ்... மேடம்... வீடு வந்துவிட்டது. கம்..."

காரில் இருந்து இறங்கும் பொழுது கால் மரத்துப் போயிருந்ததால் தடுமாறினாள் அவள். சட்டென அவளைத் தாங்கிப் பிடித்து விழாமல் பார்த்துக் கொண்டான் முகேஷ்.

அவன் தொட்ட இடம் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது அவளுக்கு. அவள் சரியாக நின்ற பொழுதும் முகேஷ் அவளை விலக்காமல் பிடித்துக் கொண்டு இருந்தது அவளுக்கு உறைத்தது.

சட்டென அவன் பிடியில் இருந்து தன்னை விடு வித்துக் கொண்டாள். வேக வேகமாக வீட்டினுள் நடந் தாள்.

"மெதுவாகப் போ ஆராதனா... மறுபடியும் விழப் போற..." என்று முகேஷ் கத்துவதைக் காதில் வாங்காமல் உள்ளே சென்றாள் ஆராதனா.

தன் அறைக்குள் சென்றவள் கட்டிலில் விழுந்தாள். நான் முகேஷை விரும்புகிறேன். ஆனால் அவன் என்னை விரும்பவில்லை.

தருணிற்காக அவன் என்னைத் திருமணம் செய்து கொள்கிறான். இங்கே காதல் இல்லை. அவன் சொன்னது போல் அவனுக்கு என் மேல் மதிப்பு இருக்கிறது. மரியாதை இருக்கிறது.

பட் அதைத் தாண்டி வேறு ஏதும் இல்லை. அவன் மனதில் சுந்தரியின் நினைவு இன்னும் அழியாமல் இருக் கிறது.



சே... இந்த உண்மை எல்லாம் தெரிந்தும் நான் திருமணத்திற்கு வெட்கமின்றி ஒத்துக் கொள்கிறேனே எனத் தன்னையே நொந்து கொண்டாள் அவள்.

அன்று இரவு தூக்கம் வராமல் நெடுநேரம் தவித்தாள் ஆராதனா. முகேஷுடன் தனக்குக் கல்யாணம் என்பதை அவள் மனம் நம்ப மறுத்தது.

ஏதேதோ யோசித்தவள் முந்நேரத்தில் தன்னை மறந்து அசந்து தூங்கினாள்.

சுந்தரி அவளை நோக்கி வருகிறாள். முகேஷை என்னிடம் இருந்து பிரிக்கப் பார்க்கிறாயா... அது நடக்காது. நான் உன்னை விடமாட்டேன் என்று அவளை மலை உச்சியிலிருந்து தள்ளி விடுகிறாள்.

"நோ!" என்று தூக்கத்தில் அலறினாள் ஆராதனா. அவள் உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. அது கனவு என்று அவளுக்கு மெதுவாகப் புரிந்தது.

சே... என்ன ஒரு கெட்ட கனவு. சுந்தரியின் கண்களில் ஏன் அவ்வளவு கொடூரம் தெரிந்தது. கடவுளே! அந்தக் குறி சொல்லிய பெண் வேறு என்னவோ சொன்னாளே.

அது பலித்து விடுமா... கடிகாரத்தைப் பார்த்தாள். மணி காலை ஐந்து என்று உறுதி செய்தது அது.

சே! விடிகாலையில் காணும் கனவு பலிக்கும் என்பார் களே. அப்ப இதுவும் பலிக்குமா? இந்த மாதிரி பயந்து பயந்து எத்தனை நாட்கள் ஓட்ட வேண்டி இருக்குமோ எனப் பதறினாள் ஆராதனா.

சுவரில் இருந்த சுந்தரியின் ஓவியத்தைப் பார்க்க அவளுக்குப் பயமாக இருந்தது. அந்த அறையே ஏனோ மூச்சு முட்டுவது போல் இருந்தது அவளுக்கு.

சுந்தரியின் புகைப்படத்தைக் கவரில் இருந்து எடுத்தாள். அதை எடுத்து கப்போர்டில் வைத்தாள். ஆனாலும் மனம் சமாதானம் அடையவில்லை.

திரும்பத் திரும்பக் குரங்கு போல் அந்தக் கனவையே சுற்றிச் சுற்றி வந்தது.

அறையில் அதற்கு மேல் அடைந்து கிடக்க விரும்பாத ஆராதனா... குளித்துவிட்டுக் கண்மூடிப் பிரார்த்தனை செய்தாள்.

மனம் தெளிவானது போல் உணர்ந்தாள்.

தோட்டத்தில் உட்கார்ந்து இருந்தவள் தெளிந்த ஆகாயத்தைப் பார்த்தாள். சூரியன் சிவப்புப் பந்து போல் மேலே எழும்பி வந்து கொண்டு இருந்தான்.

பூக்கள் இதழ் விரித்து மணம் பரப்பிக் கொண்டு இருந்தன. அவள் நாசியை நிறைத்தது அந்த மணம்.

"ஹாய் ஆராதனா... குட்மார்னிங்.. என்ன காலையில தோட்டத்துப் பக்கம்!" என்றான் ஜாகிங் முடித்து வந்து கொண்டு இருந்த முகேஷ்.

அவன் ரொம்ப நேரமாக ஜாகிங் செய்து இருப்பான் போல. அவன் நெற்றியில் இருந்த வியர்வைத் துளிகள் அதை உறுதி செய்தன.

அவனை அங்கு சற்றும் எதிர்பார்க்காத ஆராதனா என்ன பதில் சொல்வது என யோசித்தாள்.

"ஏய்... நான் என்ன அவ்வளவு கஷ்டமான கேள்வியா கேட்டேன்... ஏன் இவ்வளவு யோசனை?

ஜாகிங் போகலாமா ஒன் ரவுண்ட், கமான்!" என்றான் முகேஷ்.



"இ... இல்லை... வேண்டாம்..."

"ஓகோ... ஏன் முகம் வெளிறி இருக்கு? ராத்திரி சரியா தூங்கலையா?

"சரி. குட்... நானே உன்கிட்ட கல்யாணத்திற்கான ஏற்பாடுகளைப் பற்றி பேச வேண்டும் என்று இருந்தேன்.

முதலில் பத்திரிகையில் அனௌன்ஸ்மெண்ட் கொடுக்க வேண்டும். அதற்குப் பின்பு திருமணத் தேதி முடிவு செய்ய வேண்டும்.

இன்னும் இருபது நாள் கழித்து நம் திருமணம் வைத்துக் கொள்ளலாம் என நினைக்கிறேன். தேதி முடிவு செய்து விட்டு உன்னிடம் சொல்கிறேன்.

ஜோதிடர் எப்படியும் இரண்டு, மூன்று தேதி தருவார். அதில் ஒன்றைத் தேர்வு செய்யலாம். சரியா ஆராதனா..." என்றான் ஆர்வமாக அவன்.

ஏதும் பதில் சொல்லாமல் தலை குனிந்தாள் அவள்.

"ஓ... கல்யாணம் அப்படின்னு சொன்னவுடன் இப்படி மௌனம் சாதிக்கிறாயே... என்ன ஆராதனா?" என்றான் மென்மையாக.

இரவு சரியாகத் தூங்காததால் ஏற்பட்ட சோர்வு, கனவின் தாக்கம் எல்லாமே அவளைப் பாதித்து இருந்தது.

முகேஷ் பரிவாகக் கேட்டவுடன் அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.

"என்ன ஆராதனா..." என்று சட்டென அவளை அணைத்தான் முகேஷ்.

அவள் ஏதும் பேச முடியாமல் விம்மியபடியே இருந்தாள். அவன் அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தான்.

"ப்ளீஸ் அழாதே... நீ அழுதா எனக்குக் கஷ்டமா இருக்கு..." என்று அவளைச் சமாதானப்படுத்தினான்.

"நேத்திக்கு... ஸாரி இன்னிக்கு காலைல ஒரு கெட்ட கனவு... அதான்..." என்றாள் மெல்லிய குரலில்.

"கனவெல்லாம் பலிக்காது ஆராதனா. நீ அநாவசியமாகக் கவலைப்படாதே... தருணை மாதிரி நீயும் ஒரு குழந்தை தான்.

அதான் இப்படி பயப்படற... ஐயாம் ஹியர் வித் யூ. ஆல்வேஸ். டோண்ட் ஒரி மை டியர் கேர்ல்!" என்றான் முகேஷ்.

அவன் அண்மை அவளுக்குப் பாதுகாப்பைக் கொடுத்தது. ஏனோ அவன் கைச்சிறையிலிருந்து வெளியே வர மனமின்றி அவன் மார்பில் தலை சாய்த்து இருந் தாள் அவள்.

அவன் கைகள் அவளின் தலைமுடியைக் கோதின. கண் மூடித் தன்னை மறந்தாள் அவள்.

"குட்மார்னிங் சித்து..." என்று தருண் குரல் அருகே கேட்க, சட்டெனத் தன்னை விடுவித்துக் கொண்டாள் அவள்.

தருணின் பார்வை குறுகுறுவெனத் தன்மேல் படிவது போல் இருந்தது அவளுக்கு. அவள் முகத்தில் செம்மை படர்ந்தது.

ஆனால் முகேஷ் ரொம்ப சாதாரணமாக இருந்தான். ருணைத் தூக்கி ஒரு முத்தத்தை அவன் நெற்றியில் பதித் ன்.

"குட் மார்னிங் தருண் குட்டி. ஹவ் ஆர் யூ?"



"ஃபைன்... சித்து. ஹவ் ஆர் யூ? நீங்களும் ஆராதனாவும் என்ன பேசிண்டு இருந்தீங்க..."

"ம்... நீ இனிமே ஆராதனாவைச் சித்தின்னு கூப்பிடணும். சரியா..?

அப்புறம் நானும் ஆராதனாவும் கல்யாண ஏற்பாடுகளைப் பற்றிப் பேசிக்கொண்டு இருந்தோம்... உனக்கு என்ன டிரெஸ் எல்லாம் வேணும். சொல்லு. சொல்லு..."

ஆனால் தருண் முகத்தில் ஏனோ உற்சாகம் இல்லை. அவன் முகம் சட்டென வாடியது போல் உணர்ந்தாள் ஆராதனா.

"என்ன தருண்... ஏன் டல்லாயிட்ட?" என்றாள் தயக்கமாக.

"இல்லை... வந்து... நான் ஒன்று சொல்லணும்!" என்றான் தயக்கமாக.

"ஒண்ணு என்ன, நூறு சொல்லலாம். சொல்லு!" என்று அவனை ஊக்குவித்தான் முகேஷ்.

"நான்... அவங்களைச் சித்தின்னு கூப்பிட மாட்டேன். எனக்கு அப்படி கூப்பிடப் பிடிக்கலை..." என்றான் மெதுவாக.

"தருண்! ஏன்டா... அப்படிச் சொல்ற?" என்றான் ஓங்கிய குரலில் முகேஷ்.

தருண் சட்டென ஆராதனாவின் பின்னால் ஒளிந் கொண்டான்.

"என்ன தருண்... உனக்கு என்ன வேணும் சொல் என்றாள் - அவனை அணைத்தபடி ஆராதனா.

“நான்… நான்… உங்களை அம்மான்னு கூப்பிடவா… ப்ளீஸ்!” என்றான் தருண் மெல்லிய குரலில்.

அவனை இறுக அணைத்துக் கொண்டாள் ஆராதனா.

“இதுக்குப் போய் தருண்… ஏன் இவ்வளவு தயக்கம்?” என்றாள் ஆராதனா.

“தருண்! நீ ஆராதனாவை அம்மான்னு கூப்பிடலாம். ஆனால் ஒரு கண்டிஷன்…”

“என்ன சித்து… என்ன கண்டிஷன்…”

“ம்… இனிமேல் நீ என்னை அப்பான்னு கூப்பிடணும். புரிஞ்சுதா…” என்றான் அவன் தலைமுடியை ஆதரவாகக் கோதியபடியே முகேஷ்.

“அப்பா… ஐ லவ் யூ!” என்று அவனைத் தன் பிஞ்சுக் கைகளால் அணைத்துக் கொண்டான் தருண்.

“மீ… டூ தருண். யூ ஆர் மை ஸ்வீட் கிட் ஆல்வேஸ்.”

இருவரையும் பார்த்து லேசாகப் புன்முறுவல் புரிந்தாள் ஆராதனா. தருணின் மனதிற்குள் இவ்வளவு ஏக்கமா என அவனுக்காகப் பரிதாபப்பட்டாள் அவள்.

“ஸோ தருண், உனக்கு என்னென்ன வேணும் கல்யாணத்திற்கு? ஒரு லிஸ்ட் போடு.

அப்பதான் எதையும் மிஸ் செய்ய மாட்ட. டிரெஸ், ஷூ, டை, வேலட் என எல்லாம் வாங்கி அசத்திடலாம்!” என்றான் முகேஷ் உற்சாகமாக.

“ஆமாம் அப்பா… நான் இப்பவே போய் லிஸ்ட் பாடறேன்!” என்று துள்ளிக் குதித்து ஓடினான் தருண்.

“ஆராதனா… தருண் உன் மீது உயிரை வைத்து இருக்கான். உனக்கும் அவனைப் பிடிக்கும் என்று எனக்கு றாகவே தெரியும்.



கடைசி வரை நீ தருண் மேல் இதே போல் அன்பாக நடந்து கொண்டால் அதுவே எனக்குப் போதும்.

வேறு எதுவும் வேண்டாம். ப்ளீஸ்!” என்றான் கெஞ்சும் குரலில்.

“நீங்கள் கெஞ்ச வேண்டாம். நான் தருணிற்காகத் தான் கல்யாணத்திற்கு ஒத்துக் கொண்டேன்.

வேறு எதற்காகவும் இல்லை. அதை நீங்களும் புரிந்து கொள்ளுங்கள்.

என்னிடம் வேறு எதையும் எதிர்பார்க்காதீர்கள்!” என்றாள் அழுத்தமாக.

அவள் முகத்தைப் பார்த்தான் அவன். அவள் முகம் சுருங்கி, சட்டெனச் சோர்ந்து போனாற் போல் தோன்றியது அவனுக்கு.

ஏனோ ஆராதனாவின் மனதில் அவளை அறியாமல் ஒரு நிம்மதி பிறந்தது. முகேஷை ஹர்ட் செய்ததில் அவளுக்கு ஏனோ ஒரு சந்தோஷம் அலை போல் உடல் எங்கும் படர்ந்தது.

‘முகேஷ்… நீங்க என்னை எந்தக் காரணத்திற்காகத் திருமணம் செய்ய முடிவு எடுத்தீர்களோ… அதே காரணத்திற்காகத் தான் நானும் உங்களைத் திருமணம் செய்ய ஒத்துக் கொண்டேன்!’ என்று உங்களிடம் சொன்ன பிறகு எனக்குப் பெரிதாக எதையோ சாதித்து விட்டாற் போல் ஒரு உணர்வு.

நான் என்னையே ஏமாற்றிக் கொள்கிறேன். புரிகிறத ஆனால் எனக்கு உங்களிடம் அன்பு இருக்கிறது.

அது எப்பொழுது ஒரு ஊற்றாக என்னில் தோன்றியது என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதை நான் உங்களிடம் வெளிப்படுத்த மாட்டேன்.

ஒரு நாளும் வெளிப்படுத்த மாட்டேன். வெளிப்படுத்தினால் வேதனையும், அவமானமும் எனக்குத் தான் மிஞ்சும்.

அதனால் நான் அந்தத் தப்பைச் செய்ய மாட்டேன். என் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருப்பேன்.

வேறு வழி இல்லை. அதுதான் நல்லது என முடிவெடுத்தாள் ஆராதனா.

வேறு ஏதும் பேசாமல், அங்கிருந்து வேகமாக நடக்க ஆரம்பித்தாள் அவள்.

அவள் நடந்து செல்வதையே வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தான் அவன்.

ஆராதனா ஏன் இப்படிப் பேசுகிறாள்? இந்தக் கல்யாணத்தில் அவளுக்கு விருப்பம் இல்லையா? தருணிற்காகக் கல்யாணம் செய்து கொள்கிறாளா? என்ன செய்வது என யோசிக்கத் தொடங்கினான் அவன்.

## 20

பன்னீர்ப்
பூக்களைத்
தூவும்
வானம்!



பூக்களால்
செய்த
மஞ்சம்!
வானவில்லின்
வர்ணங்களால்
குழைத்த
அறை!
எதுவுமே
எனக்குப்
பிடிக்கவில்லை!
சகியே!
பிரியமானவளே!
நீ
இல்லாததால்
எதுவுமே
எனக்குப்
பிடிக்கவில்லை!
உன்
பிரிவு எனும்
வலி என்னைக்
கொல்லாமல் கொல்கிறது!
சீக்கிரம் வா!

அறையில் இருந்த ஆராதனா கப்போர்டில் இருந்த புத்தகங்களைப் பார்த்தாள். இந்தப் புத்தகங்கள் எல்லாம்

சுந்தரியோடதாக இருக்கலாம் என நினைத்தபடியே, பார்வையிட்டாள்.

கைரேகை சாஸ்திரம், மாந்திரீகம், நியூமராலஜி என்பவற்றோடு சம்பந்தப்பட்ட புத்தகங்கள் நிறைய இருந்தன. பைரனின் கவிதைகள் என்று ஒரு புத்தகம் இருந்தது.

சட்டென அதை எடுத்தாள் அவள். ஏதோ அதை எடுக்கும் பொழுது அவள் கை நடுங்கியது.

நடுங்கும் விரல்களோடு அதைப் பிரித்தாள் அவள். புத்தகத்தின் முதல் பக்கத்தில் ஏதோ எழுதியிருந்தது.

"அன்புள்ள முகேஷிற்கு சுந்தரியின் காதல் சமர்ப்பணம் பக்கம் எழுபது" என்று குண்டு குண்டான கையெழுத்தோடு எழுதி இருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

கீழே 'வித் லவ் சுந்தரி' என்று அவளின் கையொப்பம் இருந்தது. அதைப் பார்த்த அவள் மனம் பதறியது.

அவள் விரல்கள் அனிச்சையாகப் புத்தகத்தின் எழுபதாம் பக்கத்தைப் புரட்டின.

**அவள் அழகான**
**இரவைப்**
**போல்**
**நடக்கிறாள்!**
**அவளின்**
**அழகு**
**எல்லை யில்லாதது!**
**ஒளியும்**
**கருமையும்**



**சேர்ந்த**
**அழகு!**
**அவள்**
**கண்கள்**
**ஒளியைச்**
**சிந்துகிறது!**
**அந்த ஒளியின்**
**தாக்கம்**
**தாங்க முடியாமல்**
**நான்**
**மயங்கினேன்!**

என்று ஒரு கவிதை அந்தப் பக்கத்தில் இருந்தது.

அதைச் சிவப்பு இங்க்கால் கோடிட்டு இருந்தார்கள் யாரோ. அந்தப் பக்கம் மற்ற பக்கங்களைக் காட்டிலும் ரொம்ப பழசாக இருந்தது.

ஸோ சுந்தரி இதைப் படித்து இருக்கிறாள். அடிக்கடி, திரும்பத் திரும்பப் படித்து இருக்கிறாள்.

ஏன் இந்த கவிதையில் அப்படி என்ன இருக்கிறது? ஒரு வேளை அந்தக் கவிதையின் நாயகியாகத் தன்னை நினைத்துக் கொண்டாளா அவள்?

காட்... அப்படி என்றால் அவள் தன்னையே முகேஷிற்குச் சமர்ப்பித்திருக்கிறாள்... இந்தக் கவிதை வழியாக.

சே! இது என்ன ஒரு கேவலம். இது உண்மைதான். முகேஷ் கூட முன்பு ஒத்துக் கொண்டானே. இது எல்லாம்

தெரிந்த பிறகு நான் ஏன் இந்தத் திருமணத்திற்கு ஒத்துக் கொள்கிறேன்?

ஏதேதோ யோசித்தவள் அறையை விட்டு வெளியே வந்தாள்.

“ஆராதனா... எனக்கு இன்னிக்கு ஷூட்டிங் இருக்கு. தாம்பரம் கிட்டே ஒரு 'மூலிகைப் பூங்கா' மலை மேல் இருக்கு.

ரொம்ப அருமையான இடம். அங்க தான் ஷூட்டிங். நான் இப்ப கிளம்பறேன்.

நீயும் தருணும் கொஞ்ச நேரம் கழித்து அங்கே வாங்க. இட்ஸ் எ நைஸ் ப்ளேஸ்.

கண்டிப்பாகத் தருணிற்குப் பிடிக்கும். உனக்கும் பிடிக்கும் டியர்!” என்று அவள் கன்னத்தைச் செல்லமாகத் தட்டி விட்டுவிட்டு அவள் பதிலுக்குக் காத்திராமல் அங்கிருந்து வெளியேறினான்.

'சே! ரொம்ப தான் உரிமை எடுத்துக் கொள்கிறான். இப்பவே இப்படி என்றால் திருமணத்திற்குப் பின்பு, என்னவெல்லாம் நடக்குமோ' என நினைத்துப் பெருமூச்சு விட்டாள் அவள்.

“மேடம்... ஸார் உங்களை ஷூட்டிங் ஸ்பாட்டிற்கு இன்னிக்கு வரச் சொன்னாங்க.

நீங்க ரெடியானவுடன் சொல்லுங்க மேடம். நான் உங்களை அழைச்சிட்டுப் போறேன்!” என்றார் டிரைவர்.

“ஆமாம்... என்கிட்டேயும் சொன்னார். இன்னும் ஒரு அரை மணி நேரம் கழித்து ரெடியாக இருப்போம்.



நானும்... தருணும் தான் ஷூட்டிங் பார்க்க வரப் போறோம்...”

“சரிங்க மேடம்!” என்று சொல்லிவிட்டு, பவ்யமாக வெளியேறினார் டிரைவர்.

தருண் அறைக்குள் சென்றாள் அவள். தருண் நீபோர்ட் வாசித்துக் கொண்டு இருந்தான்.

“தருண்! இன்னிக்கு நாம ஷூட்டிங் பார்க்கப் போறோம். நீ கிளம்பு ஃபாஸ்டா.

என்ன டிரெஸ் போடப் போற. அந்த 'யெல்லோ ஷெர்வானி' ஓகேவா.”

“ஷூட்டிங்கா... ஜாலி. இது வரைக்கும் சித்து என்னைக் கூட்டிட்டே போனது இல்லை.

ஸாரி அப்பா... அப்படின்னு சொல்லணும்!” என்றான் நாக்கைக் கடித்தபடி.

“தட்ஸ் எ குட் பாய். வா. இந்த டிரெஸ்ஸைப் போட்டுக்கோ.

இந்த இடம் மலை மேல இருக்காம். ரொம்ப நல்லா இருக்கும். நிறைய மரங்கள், செடிகள் இருக்கும். யூ வில் என்ஜாய் தருண்.”

“ம்... ம்... ஐயாம் எக்ஸைட்டட். வாங்க... வாங்க சீக்கிரம் போகலாம்!” என்று பறந்தான் தருண்.

அவன் கிளம்புவதைப் பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொண்டாள் அவள். பரவாயில்லை. பெண் குழந்தைகள் என்றால் மேக்கப் எல்லாம் செய்து கிளம்ப நேரமாகும்.

இவன் ஆண் குழந்தை என்பதால் வேக வேகமாகக் கிளம்ப முடிகிறது என்று நினைத்துக் கொண்டாள் அவள்.

கப்போர்டில் இருந்து ஒரு ரோஜா வண்ண இதழ் நிறத்தில் இருந்த ஒரு சுடிதாரை அணிந்து கொண்டாள்.

கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். தான் மெலிந்து இருப்பது போல் தோன்றியது அவளுக்கு.

ம்... ம்... இருக்கலாம். ஏனெனில் இங்கே வந்த பிறகு நிறைய அதிர்ச்சிகள். சுந்தரி... தான் அதற்குக் காரணம்.

சுந்தரியின் நினைவு வந்ததும் அவள் மனம் மீண்டும் அந்த பைரன் கவிதைத் தொகுப்பில் மூழ்கியது. ஏனோ ஏமாற்றமும், வலியும் அவள் மனதில் படர்ந்தது.

“அம்மா... கிளம்பலாமா?” என்று தருணின் குரல் அருகே கேட்க தன் கனவு உலகில் இருந்து வெளி வந்தாள் அவள்.

“ஓ... கிளம்பலாமே... வா!” என்று அவனின் கையைப் பற்றிக் கொண்டாள்.

அவன் ‘அம்மா’ என்று அழைக்கும் பொழுது எல்லாம் தன் மனம் உருகி, கசிவதை அவளால் உணர முடிந்தது.

டிரைவர் காரில் தயாராக இருந்தார். அவர்கள் வந்தவுடன் கார் கதவைத் திறந்து விட்டார்.

காரில் ஏதும் பேசாமல் வெளியே இருந்த காட்சிகளை வேடிக்கை பார்த்தபடி இருந்தான் தருண்.

மனதை அடக்கிக் கொண்டு, சுந்தரி பற்றி நினைக்காமல் அமர்ந்து இருந்தாள் அவள்.

“அங்கிள்! இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்?”

“போயிடலாம் கண்ணா. இன்னும் பத்து நிமிஷத்தில் க போயிடுவோம்...”



மலை அடிவாரம் நெருங்க ஏதோ ஒரு அச்சம் அவள் மனதில் தோன்றியது. சுந்தரியின் கண்கள் அவள் மனக்கண் முன் நிழலாடியது.

தன்னையே நொந்து கொண்டாள் ஆராதனா. சே... நான் ஏன் இப்படிக் கோழை மாதிரி தினம் தினம் பயந்து சாகிறேன் எனத் தன்னையே கடிந்து கொண்டாள்.

மலையைக் குடைந்து அழகாகப் பாதை அமைத்து இருந்தனர். வெளியே தெரிந்த பசுமையில் கவனத்தைச் செலுத்த முயன்றாள் அவள்.

கிட்டத்தட்ட மலை உச்சியை அடைந்து விட்டனர். அங்கு இருந்து பார்க்க கீழே எல்லாமே சிறியதாகத் தெரிந்தன.

சட்டென ஒரு குலுக்கலோடு கார் நின்றது. “என்ன ஆச்சு...” என்று பதறினாள்.

“கிளட்ச் வேலை செய்யலை மேடம்... நல்ல காலம் மேல வந்திட்டோம்.

நீங்க இறங்கிக்கோங்க மேடம். நான் செக் செய்ய றேன். எப்படியும் கொஞ்ச நேரம் ஆகும்.

ஸாரி மேடம். நீங்க வேணா நடந்து போறீங்களா? ஐயாவுக்குத் தெரிஞ்சா கோபிச்சுப்பார். ப்ளீஸ் மேடம் நீங்களாக நடந்து வர மாதிரி சொல்லிடுங்க!” என்று கெஞ்சினார்.

“சரி... நீங்க செக் பண்ணுங்க. இதோ மேலே வந்தி டோமே... அதனால நாங்க நடந்தே வருகிறோம்.

இதோ தெரியுதே... இதுதானே பாதை...” என்று ஆராதனா.

"ஆமாம்... மேடம்! நான் என்ன ரிப்போர்ட், அப்படின்னு பார்த்திட்டு ஓடி வந்திடறேன் மேடம்."

"சரி... பதட்டப்படாம பாருங்க. தருண், வா. நம்ம ஜாலியா மலை மேலே ஏறலாம்... கமான் டியர்!" என்று அவன் கையைப் பற்றிக் கொண்டாள்.

சில்லென்று காற்று முகத்தில் பட்டது. அவளுக்கு அது இதமாக இருந்தது. மலையில் மூலிகை வாசனை போல் ஏதோ ஒன்று அவள் நாசியைத் தாக்கியது.

"என்ன தருண்... குளிருதா?" என்றாள்.

"இல்லை... ரொம்ப நல்லா இருக்கு. குளு குளுன்னு இருக்கு."

இருவரும் பேசியபடியே உற்சாகமாக நடந்தனர். தொலைவில் எதிர்த் திசையில் ஒரு பெண்மணியும் இரு குழந்தைகளும் வருவது தெரிந்தது.

அருகே வர வர அந்தக் குழந்தைகள் சஞ்சனாவும், தீபிகாவும் என்று அவளுக்குத் தெரிந்தது.

அதே நேரத்தில் அவர்களும் அவளைப் பார்த்து விட்டனர். சட்டெனச் சஞ்சுவும், தீபுவும் அவளை நோக்கி வேகமாக ஓடி வந்தனர்.

அப்பொழுது காற்றுப் பலமாக வீசியது. புழுதி வாரி அடித்தது. கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள் ஆராதனா.

ஒரு பெரிய கார் அவர்களை நோக்கி அதிவேகமாக வருவது தெரிந்தது. அப்பொழுதுதான் அவளுக்குப் ரிந்தது - சஞ்சுவும், தீபுவும் தவறான திசையில் ஓடி வந்து காண்டு இருக்கிறார்கள் என்று.



பதட்டத்தில் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. "தருண்! நீ இங்கேயே இரு. என் பின்னாடி வராதே!" என்று அவனைப் பாதுகாப்பாக நடப்பதற்குப் போட்டு இருந்த இரும்புக் கம்பிப் பாதை அருகே தள்ளினாள்.

குழந்தைகளை நோக்கி ஓடியவள் அவர்களை வேகமாக எதிர்த் திசையில் தள்ளினாள். அதற்குள் கார் அவள் அருகே வந்து விட்டு இருந்தது.

அதன் ஒளி அவள் மேல் பாய்ந்தது. காரை நிறுத்தும் படி கையை அவள் காட்ட முயன்றாள். மீண்டும் புழுதிக் காற்று வீசியது.

அந்த வயதான பெண்மணியின் அலறல் சத்தம் அவள் காதைத் துளைத்தது. அந்தக் கார் அவள் அருகே வந்து கொண்டு இருப்பது ஆராதனாவிற்குத் தெரிந்தது.

அவள் கால்கள் செயலற்றுப் போயின. அவள் கண்களின் முன் சுந்தரியின் முகம் தோன்றியது.

அவள் சிரிப்பது அவள் காதில் ஒலித்தது. 'அம்மா' என்று தருண் குரல் கேட்டது. 'ஆராதனா' என்று முகேஷ் அலறும் சத்தம் கேட்டது.

அதற்கு மேல் அவளுக்கு ஏதும் நினைவில் இல்லை அவள் தன் நினைவிழந்தாள்.

ஆனால் ஏதோ குரல்கள் மட்டும் அவள் காதி கேட்டன.

"காட்... நான் இருபது ஸ்பீடில்தான் வந் சட்டெனப் புழுதி பறந்ததால் எனக்கு ஒன்றுமே வில்லை."

"யாராவது கம்பளி இருக்கா பாருங்க."

"ஹலோ... வெல் ஸீன் ஹாஸ்பிடலா..."

"இன்னும் பத்து நிமிஷத்தில் சர்ஜரியா... தேங்க்ஸ்."

"நீங்கள் ஏன் அவளை இப்படி மூவ் செஞ்சீங்க... ஆனால் பல்ஸ் ரேட் நார்மலா இருக்கு."

ஏதேதோ குரல்கள் அவளுக்குக் கேட்டன. சில குரல்கள் பழக்கமானது போல் தோன்றின.

ஆனால் யார் என்று அவளுக்குத் தெரியவில்லை. யாரோ அவள் தலையை அடிப்பது போல் ஒரு வலி.

அவள் கை, கால்களை யாரோ பிடித்து இழுப்பது போல் தோன்றியது. வலியால் கத்த முயன்றாள்.

ஆனால் அவளால் முடியவில்லை. வலி அவள் உடல் முழுவதும் பரவியது.

"ஆராதனா! கண்ணைத் திற!" என்று ஒரு குரல் கேட்டது. கண்ணைத் திறந்தாள் அவள். பின் உடனே மூடிக் கொண்டாள்.

"தட்ஸ் குட். மறுபடியும் கண்ணைத் திற."

அவள் கண்களைத் திறந்தாள். ஒரு ஒளி வெள்ளம் அவள் கண்ணில் பாய்ந்தது.

"குட்... ஷி இஸ் எ லக்கி கேர்ல்."

"கண்ணைத் திறந்து திறந்து மூடு!" என்றது அந்தக் குரல் மீண்டும்.

அவள் அதே போல் கண்களைத் திறந்து திறந்து மூடினாள். அந்த அறை மங்கலாகத் தெரிந்தது. அறை சுழலுவது போல் இருந்தது அவளுக்கு.



சில நிமிடங்களில் சுழலும் அறை சரியாக நின்றது. அறையில் சோபா, நாற்காலி எல்லாம் தெரிந்தன. அந்த இடம் அவளுக்குப் பழக்கமான ஒன்றாக இருந்தது.

ஆனால் எந்த இடம் என்று அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

கையை அசைக்க முயன்றாள். ஆனால் முடியவில்லை. ரொம்ப வலித்தது.

அவள் முன்னே சட்டென ஒரு முகம் தெரிந்தது. அந்த முகத்தில் இருந்த சோகம் அவள் மனதைத் தொட்டது.

"சுந்தரி! அழாதே... தருண் பத்திரமாக இருக்கிறான்!" என்றாள் மெதுவாக.

"ஆராதனா... நீ அதிர்ச்சியில் இருக்கிறாய். நான் யார் என்று தெரியவில்லையா..."

அவள் எழுந்து உட்கார முயன்றாள். ஆனா முடியவில்லை.

"நான் எங்கே இருக்கிறேன்..."

"என்னுடைய வீட்டில். உன்னை இங்கே அழை வந்தார்கள்..."

"தா... தாரிணி மேடமா?"

"ஆமாம்... ஆராதனா."

"அது... முகேஷின் கார் தானே என்னை இடித்

"யெஸ். அது முகேஷின் மெர்ஸிடெ

தாரிணியின் முகத்தில் குற்ற உணர்ச்சி தெரிந்தது.

"நீ... என் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றி இருக்கி றாய்... ஆராதனா!" என்று சொல்லும் பொழுது அவள் குரல் உடைந்தது.

"ப்ளீஸ்... அழாதீங்க."

"தேங்க்ஸ் ஆராதனை. நான் உன்னை எப்படி எல்லாம் கொடுமைப்படுத்தி இருக்கிறேன். வார்த்தை களால் உன்னைக் காயப்படுத்தி இருக்கிறேன்.

ஆனால் நீ அதை எல்லாம் மனதில் வைத்துக் கொள்ளவில்லை. நீ சஞ்சுவையும், தீபுவையும் காப்பாற்றி இருக்கிறாய்.

உன் உயிரைப் பணையம் வைத்து இதைச் செய்து இருக்கிறாய். தேங்க்ஸ்!" என்று சொல்லிக் கொண்டே அவள் கையைப் பற்றினாள் தாரிணி.

"ஓ... எதுக்கு இதெல்லாம்... தேங்க்ஸ். ப்ளீஸ்"... என்றாள் மெதுவாக.

"இல்லை ஆராதனா. நான் உன்னிடம் இதைச் சொல்ல வேறு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது.

நல்ல காலம் உனக்கு இந்த விபத்தால் பெரிய காயங்கள் ஏதும் இல்லை. லேசான கீறல் தான். இல்லா விட்டால் குற்ற உணர்வே என்னைக் கொன்று இருக்கும்.

நானும் ராகேஷும் விவாகரத்து வாங்கிக் கொண் டோம். ஆனால் இந்தப் பிரிவில் தான் எனக்கு நான் என்னவெல்லாம் மிஸ் செய்கிறேன் என்று தெரிகிறது.

அதனால் நாங்கள் மறுபடியும் ஒன்று சேரப் போகி றோம். அதற்கு நீ தான் முக்கிய காரணம்.



கொஞ்ச மாதங்கள் மட்டுமே பார்த்துக் கொண்ட உனக்கு என் குழந்தைகளின் மேல் இவ்வளவு பாசம் இருக்கும் பொழுது எனக்கு எவ்வளவு இருக்கவேண்டும் என்று என் மனச்சாட்சியே என்னைக் குத்திக் காட்டியது..."

"ஓ... மேடம் ப்ளீஸ்... என்னிடம் ஏன் இதெல்லாம் சொல்லுகிறீர்கள். நீங்களும் ஸாரும் கல்யாணம் செய்து கொள்ளப் போவது ரொம்ப நல்ல விஷயம்.

நானும் முகேஷும் கூடத் திருமணம் செஞ்சுக்கப் போறோம்..." என்றாள் மெல்லிய குரலில்.

"எனக்குத் தெரியும் ஆராதனா..."

"ஆமாம். முகேஷ் சொல்லியிருப்பார்."

"இல்லை... முகேஷ் சொல்லவில்லை. சுந்தரி சொன் னாள்..."

"என்னது. இது... எப்படி முடியும்? சுந்தரி உயிரோடு இல்லை.

நான் இங்கே வந்த பொழுதே அவள் உயிரோடு இல்லை. அப்புறம் அவள்... எப்படி?" என்று தடுமாறினாள்

தாரிணி சட்டென எழுந்தாள்.

"இந்தக் கவிதையைக் கேள் ஆராதனா.

அவள் அழகான
இரவைப்
போல்
நடக்கிறாள்!
அவளின்

அழகு
எல்லை யில்லாதது !
ஒளியும்
கருமையும்
சேர்ந்த
அழகு !
அவள்
கண்கள்
ஒளியைச்
சிந்துகிறது !
அந்த ஒளியின்
தாக்கம்
தாங்க முடியாமல்
நான்
மயங்கினேன் !

இது பைரனின் கவிதை. சுந்தரியும் நானும் குட் ஃபிரெண்ட்ஸ்.

இந்தக் கவிதை மேல் அவளுக்குப் பைத்தியம். வெறி என்றே சொல்லலாம். அவள் எப்பவும் ஜோதிடர்கள், ஃபேஸ் ரீடிங் செய்பவர்கள், கைரேகை பார்ப்பவர்கள் என்று அவர்களோடேயே சுற்றித் திரிவாள்.

அவளுக்கு முகேஷ் மேல் காதல். அது தவறு என்று அவளுக்கும் தெரியும். பட் ஷி வாஸ் அப்ஸெஸ்ட் வித் ஹிம்.



ஆனால் அவளுக்குத் தீர்மானமாகத் தெரியும் - முகேஷ் தன்னைக் காதலிக்கவில்லை என்று.

இந்த ஜென்மத்தில் முகேஷ் தன்னைக் காதலிக்க மாட்டான் என்று அவளுக்குத் தெரியும். முகேஷிற்கு எப்படிப்பட்ட பெண் பிடிக்கும் என்று அவள் என்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறாள்.

அது... அப்படியே உன் போன்ற ஒரு பெண்தான். சுந்தரி வெண்ணெய் போன்ற நிறம். நீ அழகான சிலையில் இருக்கும் கருமையான நிறம்.

உன் கண்களின் ஒளி உன் முகத்தைப் பிரகாசமாக, அழகாகக் காட்டுகிறது.

கருமையும், ஒளியும் சேர்ந்த அழகு நீ. சுந்தரி பேசிய அந்தப் பெண் நீதான் ஆராதனா. அவளுக்கு வருங்காலம் எப்படி இருக்கும் என்று ஊகித்து, கற்பனை செய்வது பிடிக்கும்.

அவள் கற்பனையில், எதிர்காலத்தில் நீயும் முகேஷும் இணைந்து தெரிந்து இருக்கிறீர்கள்!" என்றாள் தாரிணி.

"என்னால் நம்ப... நம்ப முடியவில்லை!" என்றாள் ஆராதனா மெல்லிய குரலில்.

"நீ நம்ப வேண்டும் என்பதற்காக நான் சொல்ல வில்லை. சுந்தரியின் தோழியாக எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன்.

முகேஷ் தன்னைப் புறக்கணிப்பதை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தருண் அவள் ஜாடை இல்லை.

தினேஷின் ஜாடை அவன். தருணின் கண்கள் உன் கண்கள் போல் இருக்கும். அதனாலேயே அவளுக்குத் தருணைப் பிடிக்காது.

ஸாரி ஆராதனா... நான் உன்னைப் பயமுறுத்த இதெல்லாம் சொல்லவில்லை. கண்ணுக்குத் தெரியாத சக்திகள் நிறைய இருக்கின்றன.

விஞ்ஞானத்தின் வட்டத்தில் சிக்காத விஷயங்கள் இன்னும் நிறைய இருக்கின்றன. அதில் இதுவும் ஒன்று.

இந்தா இதைப் பார்..." என்று அவளிடம் ஒரு காகிதத்தை நீட்டினாள் தாரிணி.

மக்கிப் போய் மஞ்சள் நிறத்தில் இருந்த அந்தக் காகிதத்தைப் பார்த்தாள் ஆராதனா. அதிர்ந்தாள்.

பென்சில் - ஸ்கெட்ச்சில் இருந்த அந்த முகம் ஆராதனாவை நினைவு படுத்தியது.

"காட்... என் முகம் மாதிரியே இருக்கு!" என்று முணு முணுத்தாள்.

"என்ன ஆராதனா... ஆச்சரியமா இருக்கா. சுந்தரி என்னிடம் இந்த ஓவியத்தை வரைந்து கொடுத்தாள்.

அப்பொழுது தருணிற்கு வயது இரண்டு என நினைக்கிறேன். ஸோ ஆறு வருடங்கள் முன்பாகவே அவளுக்குத் தெரிந்து இருக்கிறது.

நீ அவள் வாழ்க்கையில் குறுக்கிடுவாய் என, முகேஷ் உன்னைத் திருமணம் செய்வான் என அவள் எல்லாவற்றையும் எதிர்பார்த்து இருக்கிறாள்!" என்றாள் பெருமூச்சோடு தாரிணி.

ஆராதனாவிற்கு அதிர்ச்சியாக இருந்தது. சுந்தரியைப் பற்றி அவள் இந்தக் கண்ணோட்டத்தில் துளிகூட நினைத்துப் பார்த்ததே இல்லை.



முகேஷும் அவளைக் காதலித்தான். இப்பொழுதும் சுந்தரியைக் காதலிக்கிறான் என்று தான் நினைத்தது எவ்வளவு பெரிய தப்பு என்று அவள் நினைத்து நொந்து போனாள்.

"ஆராதனா... நீ வாழ்க்கையில் ரொம்ப கஷ்டப்பட்டு விட்டாய். இனிமேல் உன் வாழ்க்கையில் கஷ்டம் ஏதும் இல்லை.

முகேஷ் இஸ் எ நைஸ் பெர்ஸன். ஹி இஸ் எ ஜெம்... பெண்கள் விஷயத்தில்.

திரைப்படத் துறையில் இருந்து கொண்டு இந்த மாதிரி இருப்பது ரொம்பவே கஷ்டம். பட் ஹி இஸ் ஆன் எக்ஸெப்ஷன்.

ஸோ நீங்க ரெண்டு பேரும் ரொம்ப நல்லா வாழ்வீங்க. ஐயாம் ஷ்யூர்!" என்றாள் லேசான புன்முறுவலோடு தாரிணி.

ஆராதனாவின் இதழ்களிலும் புன்முறுவல் படர்ந்தது.

# 21

உன்
கால்
கொலுசின்
சத்தத்தில்
நான்

என்னைத்
தொலைத்து
விட்டேன்!
நான்
எங்கே
இருக்கிறேன்
என்று
எனக்குத்
தெரியவில்லை!
ஆனாலும்
என்
கண்களின்
முன்
உன் முகம்
தோன்றி
இம்சை
செய்கிறது!
வா என்னிடம்
சீக்கிரம்...
பெண்ணே!

அடுத்த இரண்டு மணி நேரத்தில் ஆராதனா முகேஷின் ட்டில் இருந்தாள்.

அவள் வேறு ஒரு அறையில் இருந்தாள். கண்மூடிக் டிலில் படுத்து இருந்தாள் அவள்.



மனதின் மூலையில் ஒரு நெருடல். தன்னை அழைத்துக் கொண்டு வர ஏன் முகேஷ் வரவில்லை?

தாரிணியின் வீட்டில் இருந்து டிரைவர் ஒருவர் மட்டும் தன்னை அழைத்து வந்தது ஏன்?

முகேஷிற்கு வேலை அதிகமாக இருக்கிறதா? ஷூட்டிங்கில் ரொம்ப பிஸியாக இருக்கிறானோ?

இல்லை, என் மேல் கோபமா? அதனால் வரவில்லையா? உண்மை தெரியாமல் நான் முகேஷை ரொம்ப அவமானப்படுத்தி இருக்கிறேன்.

சே... முகேஷை நான் எவ்வளவு தவறாக நினைத்துவிட்டேன் என்று மனம் நொந்தாள் அவள்.

"அம்மா... அம்மா!" என்று தருண் குரல் கேட்க கண்களைத் திறந்தாள்.

"தருண் டியர்... ஹவ் ஆர் யூ..." என்று அவனை அணைத்தாள்.

"அம்மா... நான் நல்லா இருக்கேன். உங்க உடம்பு சரியாயிடுத்தா..."

"ம்... ஐயாம் ஆல் ரைட் தருண்!" என்றாள் தெளிவாக ஆராதனா.

"தருண்! வா இங்க. அம்மா கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்கட்டும். உன் ஃப்ரெண்ட் ஷ்யாம் வந்திருக்கிறான் உன்னைப் பார்க்க..." என்று முகேஷ் குரல் கேட்டவுடன் ஆராதனாவின் இதயத் துடிப்பு அதிகரித்தது.

முகேஷைப் பார்த்தாள் அவள். அவன் கைகள மார்பின் குறுக்கே கட்டியபடி நின்று கொண்டு இருந்தா

அவன் முகத்தில் கவலை ரேகைகள் தெரிந்தன. கண்ணுக்குக் கீழே இருந்த கருவளையம் அவன் தூங்க வில்லை என்று உறுதி செய்தது.

"ஆராதனா... நான்... எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

உன்னை நான் இரண்டு முறை என்னை அறியாமல் கொல்லப் பார்த்துவிட்டேன். காட்! நினைக்கவே பயமாக இருக்கிறது.

என் மேல் கோபம் வருகிறது. முதல் முறை நீச்சல் குளத்தில் நீ தவறி விழுந்தாய். இரண்டாம் முறை அந்த மலையில் என் கார் உன்மேல் மோதியது!" என்றான் மெதுவாக.

"ம்... இரண்டு இல்லை. மூன்று முறை. நீங்கள் யார் என்றே தெரியாது எனக்கு. அப்பொழுது ஒரு முறை உங்க கார் என் மேல் மோதுவது போல் வந்தது.

நான் பேலன்ஸ் தவறி ரோடில் விழுந்து விட்டேன். நான் கூட இதைப் பற்றி உங்களிடம் சொல்லி இருக்கி றேன்!" என்றாள் மெதுவாக ஆராதனா.

"ஓ... காட்...."

"இட்ஸ் ஆல்-ரைட். மூன்று முறை மரணம் அருகே சென்று வந்தவளுக்கு மரணம் என்பதே இல்லையாம்.

அம்மா என்னிடம் சொல்லி இருக்கிறார்கள். ஸோ... இனிமே நத்திங் டு வொரி!" என்றாள் கூலாக.

"நீ... காட்! ஆராதனா, உன்னால் எப்படி இதை இவ்வளவு சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடிகிறது?



இது எல்லாமே என்னால் நடந்தது. எனக்கு உன்னைப் பற்றிக் கவலையாக இருக்கிறது. ஏன் இந்த மாதிரி எல்லாம் நடக்க வேண்டும்."

"தே வேர் ஜஸ்ட் ஆக்ஸிடெண்ட்ஸ்."

"ஆக்ஸிடெண்ட்ஸா? இட்ஸ் லைக் எ நைட்மேர்- எத்தனை பேர்... தினேஷ், சுந்தரி, தருண் - அப்புறம் இப்பொழுது நீ."

"தருணிற்கு உடம்பு சரியாகி விட்டது. அவன் இப்பொழுது நன்றாகப் பேசுகிறான். பேசுவதை வைத்து மட்டுமே சொல்லவில்லை.

அவன் மற்ற குழந்தைகள் போல் சாதாரணமாக இருக்கிறான். ஹி இஸ் ஸேஃப்."

"ஆனால் வாட் அபௌட் யூ ஆராதனா. நீ இங்கே பத்திரமாக இருக்கிறாயா... இல்லையே..."

"ஐயாம் ஸேஃப் நவ்!" என்றாள் தீர்மானமான குரலில். அவள் குரலில் இருந்த ஏதோ ஒன்று அவனைச் சமாதானப்படுத்தியது.

"ஆராதனா... உன் காயங்கள் எல்லாம் சரியாகி விட்டதா... நான்... நான் பார்க்கவா..." என்றான்.

அவள் முகத்தில் செம்மை படர்ந்தது.

"சரியாகி விட்டது..."

"ப்ளீஸ் நான் பார்க்கிறேன்!" என்று கட்டிலில் அவள் அருகே உட்கார்ந்தான். அவள் நைட்டியை மெதுவாக கால் மேலே நீக்கினான். "முகேஷ் ப்ளீஸ்..." என்று அவ கையைப் பிடிக்க முயன்றாள்.

அவன் அதைக் கண்டு கொள்ளாமல் தொடர்ந்தான். அவள் முழங்கால் அருகே லேசாகத் தழும்பு இருந்தது. அதை அவன் விரல்கள் வருடின.

சட்டென அவள் முழங்காலில் தன் உதட்டைப் பதித்தான் முகேஷ்.

"முகேஷ்... வேண்டாம்!" என்று பதறியபடி எழுந்திருக்க முயன்றாள் அவள்.

"மை டியர் கேர்ல்... நான் எவ்வளவு பயந்து போனேன் என்று எனக்குத் தான் தெரியும். நான் ஓட்டி வந்த கார் உன் மேல் லேசாக மோதிய பொழுது நான் பதறிப் போய்விட்டேன் ஆராதனா.

என் மூளை அந்த நொடியில் மரத்துப் போய்விட்டது. அந்த அனுபவம் ரொம்ப கொடுமையானது.

அது... அது மாதிரி மீண்டும் ஏதேனும் ஆனால் என்னால் தாங்க முடியாது. அதனால் நீ போய் விடு ஆராதனா... இங்கே இருந்து போய்விடு.

எனக்கு உன்னை ரொம்ப பிடிக்கும் ஆராதனா. உன்னைப் பார்த்த முதல் நாளே என் மனதில் ஏதோ ஒரு புதிய உணர்வு தோன்றியது.

உன் வெகுளித்தனமான முகம், மருண்ட மான் போன்ற விழிகள், அழகான உதடு, என எல்லாமே என்னை ஏதோ செய்தன.

உன்னை என் உடனே வைத்துக் கொள்ள வேண்டும் என்று மனம் இப்பவும் துடிக்கிறது. பட் நீ உயிரோடு இருக்க வேண்டும் டியர்.



என்னால் உன் உயிருக்கு ஆபத்து வருமோ என எனக்குப் பயமாக இருக்கிறது. நான் நினைப்பது அபத்த மாக உனக்குத் தோன்றலாம்.

பட் என்னால் தான் நீ சாவின் விளிம்பு வரை போய் விட்டு வந்தாய். மூன்று முறை நடந்து விட்டது ஆராதனா. அதனால் என் மனம் என்னைக் குத்திக் கொல்கிறது.

ப்ளீஸ் ஆராதனா. தருணிற்காக நீ... நீ உன் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளாதே.

நீ என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டதே தப்பு. எனக்கு எந்த உரிமையும் இல்லை அதற்கு.

உன் வாழ்க்கைக்குத் தேவையான பணம் எல்லாமே நான் தருகிறேன். பட்... ப்ளீஸ் இங்கே இருந்து போய்விடு.

உனக்கு... உனக்குப் பிடித்தமான ஒருவனைத் திருமணம் செய்து கொள் ஆராதனா. யூ ஆர் எ நைஸ், பிரெட்டி கேர்ல்.

உன் மனம் முழுவதும் களங்கமில்லாத அன்பு இருக் கிறது. ஐயாம் நாட் லக்கி டு கெட் தட் லவ்!" என்றான் முகேஷ் சோர்ந்த குரலில்.

அவன் முகத்தைப் பார்த்தாள் அவள். அவன் கண்களில் வலி தெரிந்தது.

"நான் போக மாட்டேன். என்னால் முடியாது!" என்றாள் மெல்லிய குரலில்.

"ப்ளீஸ் ஆராதனா. நீ தருணிற்காக உன் வாழ்க்கை வீணாக்கிக் கொள்ளாதே..."

"நான் என் வாழ்க்கையை வீணாக்க விரும்பவில்ல அதனால்தான் இங்கேயே இருக்க விரும்புகிறேன்..."

"பட்... ஆராதனா... உனக்கென ஒரு வாழ்க்கை இருக்கிறது. யூ ஆர் யங் அண்ட் வெரி நைஸ். யூ நீட் எ லைஃப் பார்ட்னர் ஃபார் யூ."

"எனக்குப் பயமாக இருந்தது முகேஷ். நீங்கள் சுந்தரியைக் காதலித்தீர்கள் என்று நான் நினைத்தேன். என்னை நீங்கள் திருப்பி அனுப்பி விடுவீர்கள் என்று பயந்து போய் நான் என் காதலை மறைத்தேன்."

"முட்டாள் சுந்தரி என் அண்ணி. அண்ணி தாய்க்குச் சமம். பட் அவள் மனதில் என் மேல் தவறான எண்ணங்கள் இருந்தன.

அதை அவள் என்னிடம் வெளியிட்ட பொழுது நான் அதிர்ந்தேன். அன்றிலிருந்து நான் அவளைத் தவிர்த்தேன்.

அவள் ஹிஸ்டீரியா வந்ததுபோல் நடந்து கொள்வாள். அவளுக்கு எதிர்காலம், ஜோதிடம், நாடி ஜோதிடம் இவற்றின் மீதெல்லாம் ரொம்ப நம்பிக்கை.

அவள் இறந்து போன அன்று நிகழ்ந்தது எனக்கு நினைவுக்கு வருகிறது!" என்றான் முகேஷ் கவலையான குரலில்.

அவன் தலையை ஆதரவாகக் கோதினாள் அவள். "என்ன ஆச்சு முகேஷ்..."

"அவள் என்னை மகாபலிபுரத்திற்கு அழைத்தாள். அந்தக் குறி பார்க்கும் பெண்ணைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினாள்.

அவள் ஏற்கெனவே ஒரு முறை அங்கே சென்று ருக்கிறாள். அந்தப் பெண்மணியைச் சந்தித்து இருக்கி ள்.



அந்தப் பெண்மணி ஏதும் பேசவில்லை. ஆனால் சுந்தரியின் கண்களுக்கு நீ தெரிந்து இருக்கிறாய்."

"காட்... புரொஜெக்டரில் ஒரு படம் ஒரு நொடி தோன்றி மறைவது போல் தோன்றி இருக்கும் அவளுக்கு. கரெக்டா முகேஷ்..."

"முகேஷ்... ஐ லவ் யூ..." என்று சொல்லும் பொழுதே அவள் கண்களில் கண்ணீர் பெருகியது.

"ஆராதனா... ப்ளீஸ்! பொய் சொல்லாதே. உனக்கு என் மேல் காதல் இல்லை.

தருணிற்காகத் தான் நீ எல்லாவற்றுக்கும் ஒத்துக் கொண்டாய்.

என் வாழ்நாள் முழுவதும் உன்னை நினைத்தபடியே என்னால் வாழ முடியும். அதனால் உன்னைக் கஷ்டப் படுத்திக் கொள்ளாதே..."

அவள் சட்டென அவன் மடியில் தலை வைத்தாள். அவன் கையை மெதுவாகத் தன் இதழில் ஒற்றி எடுத்தாள்.

"ஆராதனா..." என்றவன் அவள் முகத்தில் தன் உதடுகளால் கோலமிட்டான்.

"யூ ஆர் மை டியர்... லிட்டில் கேர்ல்..." என்றவன் அவளை இழுத்து அணைத்தான்.

"முகேஷ்..." என்று அவன் தோள்வளைவில் தலை சாய்த்தாள் அவள்.

"நீ சொன்னது நிஜம்தானா? என்னால் நம்பவே முடியலை..."

"ம்... நிஜம் தான். என் மனதை நான் எப்பொழுதே உங்களிடம் இழந்துவிட்டேன்.

சஞ்சய் என்னைப் பற்றி உங்களிடம் சொன்னது எல்லாமே நிஜம்."

"வாட்... நிஜமா... அப்ப நீ ஏன் கேட்டபொழுது மறுத்தாய் டியர்?" என்றான் முகேஷ். அவள் கையைத் தன் கையுடன் பிணைத்தபடி.

"யெஸ்... நீயும் அந்த மாதிரி ஒரு அனுபவத்தை உணர்ந்து இருப்பாய் என நம்புகின்றேன்.

அந்த அனுபவத்தில் தோன்றிய பெண்ணின் உருவத்தைச் சுந்தரி புகைப்படமாக வரைந்தாள். என்னிடமும் காட்டினாள்.

அது உன்னைப் போலவே இருந்தது ஆராதனா."

"ம்... நானும் பார்த்தேன். தாரிணி என்னிடம் காட்டினாள். அதோடு அந்தக் குறி சொல்லும் பெண்மணியிடம் எனக்கும் ஒரு அனுபவம் ஏற்பட்டது.

என் கண்முன்னே தோன்றிய உருவம் நீங்கள்தான் முகேஷ்."

"ஐ லவ் யூ டியர்!" என்று அவளை அணைத்துக் கொண்டான்.

"இது நிஜம் தானா? ஐ காண்ட் பிலீவ்."

"நிஜம் தான் டியர்!" என்று அவளை வலிக்காதபடி கிள்ளினான் அவன்.

"அப்புறம் இன்னொரு விஷயம். அன்று சுந்தரி என்னை மகாபலிபுரம் அழைத்த பொழுது நான் போக மறுத்துவிட்டேன்.

அதனால் அவள் தினேஷையும், தருணையும் அழைத்துச் சென்றாள். ஷி வாண்டட் டு கில் மி அண்ட் ...ர்.



நான் போகாததால் தினேஷ் இறந்து போய்விட்டான். பாவம்! தருணும் ரொம்பவே கஷ்டப்பட்டான்!" என்றான் உடைந்த குரலில்.

"ம்... முகேஷ்! நீங்கள் கில்டியாக ஃபீல் செய்யாதீங்க."

"இல்லை... முதலில் குற்ற உணர்வு என் மனதைக் குடைந்தது. பட் அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக அது குறைந்தது.

அதோடு விபத்து நடப்பதற்கு இரண்டு நாட்கள் முன்பு தான் அண்ணனிடம் மனம் விட்டுப் பேசினேன். அண்ணியின் எண்ணம் அவனுக்கும் தெரிந்து இருக்கிறது.

பாவம்! எல்லாவற்றையும் மனதில் பூட்டிக் கொண்டு இருந்தான். நான் சொன்ன யோசனைப்படி அவன் சுந்தரியை சைக்கியாட்ரிஸ்ட் ஒருவரிடம் அழைத்துப் போகச் சம்மதித்தான்.

அது சம்பந்தமாகத்தான் அவன் குடும்பத்தோடு என்னைப் பார்க்க வந்தான். வந்த இடத்தில் தான் இந்த விபத்து..."

"ம்... ஆனால் சுந்தரி ஒரு 'ஆட்டோ-டிஸ்ட்ரக்ட்' என்று சஞ்சய் சொன்னார்.

அதனால் அவள் வேண்டும் என்றே விபத்தில் சிக்கி இருப்பாள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

"ஓ... சஞ்சய்தான் என்னையும், சுந்தரியையும் இணைத்து உன்னிடம் சொன்னானா?

நீ சஞ்சயிடம் பேசியது பழகியது எதுவுமே எனக்குப் பிடிக்கவில்லை. சஞ்சய் சொன்னது போல் ஒரு பொறாமை உணர்வு என்னை ஆட்டிப் படைத்தது.

கிட்... யூ ஆர் ஆன் ஏஞ்சல். லிட்டில் கிட், என்னை எப்படிப் பாடு படுத்திவிட்டாய். நீ 'கறுப்புத் தங்கம்'. அது தான் நான் உனக்கு வைத்த செல்லப் பெயர்!" என்று அவள் மூக்கைத் திருகினான் அவன்.

"ஓ... இது வேறா... அப்ப நான் கறுப்பாக இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா...?"

"ஆமாம். என்ன செய்வது... விதி..."

அவள் கண்கள் கலங்கின. அவள் உதடுகள் துடித்தன.

"அழுமூஞ்சி... உனக்காக நான் இனி கர்சீஃப் எல்லாம் வாங்க மாட்டேன். நீ அழற அழுகைக்குப் பத்தாது!" என்று சொன்னவன் அவள் கன்னத்தில் இருந்த கண்ணீரை இதழ்களால் ஒற்றி எடுத்தான்.

"உன் முகம் மட்டும் எப்படி டியர் இப்படி வெண்ணை யாக இருக்கிறது... கன்னம் சிவப்பாக மாறுகிறது... உதடு ஸ்ட்ராபெரி போல் இருக்கிறது... அப்புறம்..." என்ற அவனை முடிக்க விடாமல் அவன் நெற்றியில் இத ழ் பதித்தாள் அவள்.

வெளியே அந்திவானம் சிவப்பாக இருந்தது. நில வு அமுதைப் பொழிந்து கொண்டு இருந்தது. அவர்கள் வாழ்விலும் இனி அமுதம் தான் எப்பொழுதும்.

★★★